
மாலைப் பொழுதின்
மயக்கத்திலே
சஷி முரளி

## நூல் விவரப் பட்டியல்

| | |
|---|---|
| நூலின் பெயர் | : மாலைப் பொழுதின் மயக்கத்திலே |
| ஆசிரியர் | : சஷி முரளி |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| முதற் பதிப்பு | : டிசம்பர் 2014 |
| மொழி | : தமிழ் |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| மொத்தப் பக்கங்கள் | : 448 |
| பைண்டிங் | : சாதா அட்டை பைண்டிங் |
| தாள் | : 11.6 வெள்ளைத்தாள் |
| அச்சு எழுத்து | : 12 புள்ளிகள் |
| நூல் வெளியிடுவோர் | : பிரியா நிலையம் 53, கௌடியா மடம் சாலை, இராயப்பேட்டை, சென்னை – 14 |

**விலை ரூ. 200.00**

| | |
|---|---|
| ஒளி அச்சு | : பிரைம் பிரிண்ட் சிஸ்டம் போன் : 9080030030 |
| அச்சிட்டோர் | : உதயம் ஆப்செட் சென்னை |


## பதிப்புரை

**வ**ணக்கம், எங்களுடைய வெளியீடுகளை தொடர்ந்து வாங்கி பேராதரவு அளித்து வரும் வாசக பெருமக்களுக்கு.

எங்களுடைய புதிய எழுத்தாளர் சஷி முரளி அவர்களின் நூல்களை வாங்கி படித்து விமர்சிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறோம்.

பதிப்பகத்தார்



# மாலைப் பொழுதின் மயக்கத்திலே



# மாலைப் பொழுதின் மயக்கத்திலே

## 1

"அகந்தை எழுந்தால் சகலமும் எழும் அது ஒடுங்கினால் அனைத்தும்" ஒடுங்கும். அதை கண்டறிவதே வெற்றிக்கு வழியாகும். நான் யார்? என்று விசாரித்து இதயத்துள் நுழைய, அகந்தை வேரோடு சாயும். பின் வேறொன்று 'நான் - நான்' என்று இடைவிடாது ஸ்புரிக்கும். அது அகந்தை அன்று.

...முழுமையான ஆத்மாவாம்!

- பகவான் ரமணர்

பாண்டிச்சேரி தட்டாஞ்சாவடி இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்டில் அமைந்து இருந்தது பிரம்மாண்டமான பல

மாடி கட்டிடம் சுஷ்ருதா பார்மசுடிகல்ஸ். தென்னிந்தியா வின் முன்னணி மருந்து தயாரிக்கும் நிறுவனம். பல கிளைகளையும் உலக அளவில் தொடர்புகளையும் கொண்டிருக்கும் மிகப் பெரிய நிறுவனம்! அவர்களது அடித்தளம் இந்தியா என்றாலும் உலகம் முழுக்க சந்தையைக் கொண்டு பரந்து விரிந்த சாம்ராஜ்யம்! அவர்களின் தொழில் நேர்த்தியும் சமூக அக்கறையும் பலராலும் வியந்து பாராட்டப்பட்ட ஒன்று! சுனாமியின் போது மிக தீவிரமாக கடலூரில் மீட்புபணியில் இறங்கியவர்கள்... அதற்கு பின்னும் மறு கட்டமைப்புக் காக பெரிதும் உழைத்து அந்த மக்களுக்கு உதவியவர்கள் என்று பல முகங்களை கொண்டு அதற்காக பாராட்டை யும் அரசாங்கத்தின் கௌரவத்தையும் பெற்ற பொறுப்பு மிக்க கம்பீரமான கார்த்திகேயனின் தலைமையில் வெற்றிநடை போட்டு கொண்டிந்தது சுஷ்ருதா பார்மா!

அவனுடைய தந்தை ரங்கராஜன் தனது நண்பர் மாசிலாமணியுடன் சேர்ந்து துவங்கியது என்றாலும் மிக பெரிய வளர்ச்சி என்பது கார்த்திகேயன் நிறுவன பொறுப்பை எடுத்துக் கொண்ட இந்த எட்டு ஆண்டுகளில் தான் என்பது கண்கூடான உண்மை! இதற்காகவே பயோமெடிக்கல் என்ஜினியரிங்கில் சிறப்புப்பட்டம் பெற்று மேலும் தொழில் மேலாண்மை யிலும் பட்டம் பெற்ற பிறகே அவனது தந்தை கார்த்திகேயனை இந்த துறையில் செயல்பட அனுமதி தந்தார்... சிறுவயது முதலே பரிச்சயம் இருந்தாலும் இந்த துறையின் அறிவு இல்லாமல் இதில் ஒரு சதவீதம்



கூட முன்னேற முடியாது என்பது அவரது தீர்மானமான முடிவானது! அதனை மெய்ப்பித்தது கார்த்திகேயனின் வருகை.

அந்த துறையில் இருந்த அனைவரையும் பின்னுக்கு தள்ளிவிட்டு அவனது அதீத அறிவாலும் அதிபுத்திசாலிதனத்தாலும் எட்டு ஆண்டுகளில் முதல் இடத்தை பிடித்தான்! ஆனால் அவன் முதல் இடத்தில் இருப்பதற்கு அதுமட்டும் காரணமல்ல... அவனது இன்னொரு முகம்... புதுவையின் நிழல் அரசாங்கம் என்பது!

தந்தை மகன் என இருவரும் நேரடி அரசியலில் இல்லை என்றாலும் புதுவை அரசியல்வாதிகளுக்கு இவர்களது பணம் தேவை... ஆட்கள் தேவை...! அதை சரியாக உபயோகப்படுத்தினான் கார்த்திகேயன்... அவனது சாம்ராஜ்யம் புதுவையை தாண்டி தென்னிந்தியா முழுவதும் பரந்து விரிந்தது... அவனை பொறுத்தவரை எதிரிகளுக்கு மிக மோசமான எதிரி... நண்பர்களுக்கு மிக சிறந்த நண்பன்... அவனது தேவை வெற்றி! வெற்றி மட்டுமே! அதற்காக எந்த அளவும் இறங்கி அடிப்பதற்கும் தயாராக இருப்பவன்! ஆனால் தொழிலில் நேர்மையாளன் இல்லையென்றால் இந்த உயரத்தை அடைந்திருக்க முடியாதே!

சிறியவர்கள் உள்ளுக்குள் வந்த பிறகு பெரியவர் கள் வழிவிட்டு ஒதுங்கினர்... கார்த்திகேயனோடு மாசிலமணியின் மகன் அரவிந்தனும் தந்தையின்

வழியை பின்பற்றினான்... தொழிலில் கார்த்திகேயனோடு சேர்ந்து காலூன்றினான்.

சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருந்தது அந்த தொழிற்சாலை. எங்கும் சுத்தம் எதிலும் சுத்தம். கைக்கு கையுறையும் முகத்துக்கு தனியாக உறையும் அணிந்து கடமையே கண்ணாக மெஷினில் இருந்து விழுந்த மாத்திரை பட்டைகளை சேகரித்து கொண்டிருந்தனர் தொழிலாளர்கள். முழுவதுமாக தானியங்கி இயந்திரங்கள் என்பதால் ஆங்காங்கே நின்றிருந்த தொழிலாளர்கள் தங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்த வேலையை சரியாக பார்த்து கொண்டிருந்தனர்! அவர்களது தொழில் வெறும் மாத்திரை, ஆயின்மென்ட் மட்டுமல்ல... பெரிய பெரிய மருத்துவமனை உபகரணங்களில் இருந்து சிறிய ஊசிவரை தயாரிப்பது.

உள்ளே நுழைந்தவனை கண்டு வேலை பார்த்து கொண்டிருந்தவர்கள் பவ்யமாக வணக்கம் தெரிவித்தனர்.

அவன் கார்த்திகேயன்!

மாநிறத்தை தாண்டிய நிறம்... அனைவரும் அண்ணாந்து பார்க்கும் உயரம்... அதற்கேற்ற அளவான சதை பிடிப்பான தேகம் அவனது தினசரி உடற்பயிற்சியை கூற... பார்வையின் தீட்சண்யமும் கூர்மையும் எதையும் விட்டுவைக்கமாட்டேன் என்றது! முகம் மட்டும் கல்போல கடினமாக உள்ளே



நுழைந்தவனை பார்க்கும் போதே நடுங்கி விடுவார்கள் தவறு செய்தவர்கள்!

"மாரியப்பா... நீதான் இங்க சங்கம் வைக்க கொடி பிடிக்கிறதா?" அவனைப் பார்க்க அங்கே கூடி இருந்த பதினைந்து பேரில் ஒருவனை பார்த்து கார்த்திகேயன் கேட்க.

"நான் மட்டும் இல்லைங்கய்யா... என்னோட இவங்க எல்லாரோட எண்ணமும் அதுதாங்க..." பேசுவதற்கு தயங்கி கொண்டு பேசினாலும் தெளிவாக கூறினான் அந்த மாரியப்பன்!

"எந்த தைர்யத்துல இப்படி என் முன்னாடி நிற்கறீங்க? சங்கம் ஆரம்பிக்கணும்னு சொல்லி... யார் கொடுத்த தைரியம்..." கோபம் கொப்பளித்தாலும் அதை அடக்கி நிதானமாக கேட்டான்!

"ஐயா... நாங்க பிரச்சனை பண்ண சங்கம் ஆரம்பிக்கலை... எங்க கருத்துக்கள சொல்றதுக்கு ஒரு வழி தேவை.. அதுக்குதான்..." என்று பயந்து கொண்டே இழுத்தான்...

"இப்போ என்ன... உங்க கருத்தெல்லாம் கேட்காம இருக்கேனா? இல்ல குறைஞ்ச சம்பளம் கொடுத்து கொடுமை செய்றேனா? எல்லா சரியாதானே போயிட்டு இருக்கு... அப்புறம் எதுக்கு சங்கம்?"

"எப்படி இருந்தாலும் சங்கம்ன்னு ஒன்று இருப்பது நல்லதுக்கு தாங்க ஐயா..."

கூட்டத்தில் இருந்த மற்றவர்களும்.

"எதுக்கு? எப்ப நினைச்சாலும் ஸ்ட்ரைக் பண்ணவா?" என்று இழுத்து பிடித்த பொறுமையோடு கேட்டான் கார்த்திகேயன்!

"ஐயோ இல்லீங்கய்யா..." அந்த மணி பயந்து பதற

"எப்படி என்றாலும்... இங்க சங்கம் ஆரம்பிக்க நான் விடமாட்டேன்... முடிஞ்சா ஆரம்பிச்சுகோங்க..." என்று கூறிவிட்டு நிற்காமல் அவனுடைய அறைக்கு சென்றான்!

கோபத்தோடு போன அதே வேகத்தில் ஜிஎம்மை அழைத்தவன்...

"எல்லாருக்கும் அஞ்சு பெர்செண்ட் இன்க்ரிமெண்ட் குடுத்துடுங்க பிரகாஷ் சார்."

"சார்... ஆனா அவங்க அதுக்கு பிரச்சனை பண்ணலியே..." குழப்பமாக கேட்டார் பிரகாஷ்!

"ம்ம்ம்... தெரியும்... அந்த பசங்கள வேற கிளைக்கு மாத்திடுங்க.... ஒருத்தர் கூட ஒருத்தர பார்த்துக்கக்கூடாது... அதோட ஒருத்தரும் தமிழ்நாட்டுல இருக்கக் கூடாது... அதோட சம்பந்தமே இல்லாத வேலையா குடுங்க... ஒகேவா பிரகாஷ்?"

"ஒகே சார்" என்றவர் முகம் குழப்பத்தை சுமந்தது!

"பாஷை தெரியாத ஊருக்கு போனா அங்க பொழப்பை ஓட்றதுல தான் கவனம் போகும்... அதோட



புதுவேலைய கத்துக்கிட்டு செய்யறது கஷ்டம் இல்லையா... அதான்... அதோட குடும்பத்த பிரிஞ்சு வேற இருக்கணும்... இவ்வளவு இருக்கும் போது இந்த சங்கம் லொட்டு லொசுக்குன்னு பேசமாட்டாங்க..."

"ஆனா சார்... இந்த அளவு அவங்க மேல ஆக்ஷன் எடுக்கணுமா?"

"ம்மம்... எந்த பிரச்சனையா இருந்தாலும் முளையிலேயே கிள்ளி போட்டுடணும் பிரகாஷ் சார்... அதை கொஞ்சம் பாவம் பார்த்து வளர்த்து விட்டா நம்ம கிட்டயே விளையாட்டு காட்டிடும்... வேலைபார்த்தா பார்க்கட்டும்... இல்லைன்னா விட்டுட்டு போகட்டும்... வேலைய விடுறதுன்னா தானா அவங்களா போறமாதிரி செய்ங்க பிரகாஷ் சார்... இங்க இன்க்ரிமெண்ட் குடுக்கறதுனால இந்த பிரச்சனை இங்க காணாம போய்டும் இல்லையா?"

சுழல் நாற்காலியில் அலட்சியமாக சுழன்ற வண்ணம் மிகவும் சுலபமாக சொன்னவனை பார்த்து உள்ளுக்குள் பயம் பொங்க தலையை ஆட்டிவிட்டு சென்றார்! எப்படி பிரச்சனை வராமல் இருக்குமா என்று யோசித்தவர் பின்னர் இது போலவே கடந்து சென்ற பிரச்சனைகளை கார்த்திகேயன் சமாளித்த விதத்தை யோசித்து மனதை சமாளித்து சென்றார்!

கார்த்திகேயனின் செயல்முறை இதுதான்...

செல்பேசி இனிமையாக அழைத்தது! அதன் முகம் பார்த்தவனது முகம் மென்மையானது...

ஷாலினி!

கார்த்திகேயனுக்காகவே பிரம்மன் படைத்த ஏழாம் அதிசயம்! மீன் விழிகளும் வெண் தந்த உடலும் ஆரஞ்சு சுளை உதடுகளும் கொஞ்சி விளையாடும் பூந்தோட்டம்! அவனை துரத்தி துரத்தி காதலை சொன்னவள்! காதலில் பெரிய ஈடுபாடு இல்லாத காரணத்தாலோ நேரமின்மையாலோ அவளை சுத்தமாக திரும்பியும் பார்க்காமல் இருந்தான். ஆனால் மகன் இப்படியே இருந்து விடுவானோ என்று பயந்த ரங்கராஜனும் மங்கையர்கரசியும் தூரத்து சொந்தமான ஷாலினியை பெண் கேட்டு நிச்சயத்தையும் முடித்துவிட்டனர்!

அவன் ஷாலினியை திரும்பி பார்க்காததில் ஒரு காரணம் உண்டு... ரங்கராஜனின் வியாபாரம் ஒரு சமயம் பெரும் நஷ்டத்தை சந்திக்க அந்த நேரத்தில் பெரும் பணக்காரராக இருந்த தன் ஒன்று விட்ட மச்சினரான ஷாலினியின் தந்தை சச்சிதானந்தத்தின் உதவியை கேட்டபோது அவர் மறுத்ததோடு மிகவும் கேவலமாகவும் பேசி அவமானப்படுத்தி இருந்தார்... அப்போது கார்த்திகேயனுக்கு வயது எட்டு... சிறுவயதில் மனதில் பதிந்த சம்பவம்... திருமணம் என்று வந்தபோது அதை பற்றி எல்லாம் நினைக்காமல் தங்கசிலையாக இருந்த ஷாலினியை மிகவும் விரும்பி நிச்சயித்தார் மங்கை... எப்படியாக இருந்தாலும் ஒன்று விட்ட அண்ணன் பெண்ணாயிற்றே... ஆனால் கார்த்திகேயன்தான் மனம் ஒன்றாமல் இருந்தான்...



ஆனாலும் தனக்கென்று நிச்சயித்த பெண்ணாயிற்றே... அவளது தந்தை செய்த தவறுக்கு இவளும் பாவம் என்ன செய்வாள் என்று எண்ணிக் கொண்டு...

"ஹாய் ஷாலினி...!" புன்னகையோடே விளிக்க...

"ஹாய் அத்தான்... இன்னைக்கு மழை தான் வரப்போகுது..."

"ஏன்மா அப்படி சொல்ற?" காரணம் தெரிந்தாலும் சிரித்து கொண்டே கேட்க.

"ஆமா.. எப்போ போன் பண்ணாலும் ஒண்ணு பிசியா இருக்கேன்னு சொல்வீங்க... இல்லைன்னா மூவிங்கல இருக்கேன்னு சொல்வீங்க... என் பேர சொல்லி ஹாய் சொன்னது இதுதானே முதல் தடவை." ஆதங்கத்தை கொட்டினாள் ஷாலினி!

"ஹேய் என்னம்மா இப்படி சொல்ற... எப்படி இருந்தாலும் கல்யணத்துக்கு பின்னாடி நாமதானே பேசப்போறோம்..."

"அதுக்காக இப்போ பேசக் கூட கூடாதா அத்தான்?" என்றவளது குரலில் ஏக்கம் தொனிக்க...

"ஓ... சாரிம்மா... நான் அப்படி நினைக்கல..."

"ஒகே அத்தான்... நான் எதுக்கு கூப்பிட்டேன்னா..." என்று இழுக்க ஆரம்பிக்க,

"எதுக்கு?"

தலைக்குமேல் வேலைகள் காத்து கொண்டிருக்க ஷாலினியையும் ஒன்றும் சொல்ல முடியாத நிலையில் பொறுமையை இழுத்து பிடித்து வைத்து கொண்டு கேட்டாள்...

"இல்ல அத்தான்.. இன்னைக்கு அண்ணாமலை டைமன்ட் ஜுவல்லரி எக்ஸிபிஷன் போட்டு இருக்காங்க..."

"சரி அதுக்கு என்ன?"

"ஹய்யோ ஒண்ணுமில்ல அத்தான்... என் பிரண்ட்ஸ் எல்லாம் அவங்க அவங்க பாய்பிரெண்ட்ஸ் கூட அங்க போறாங்க... அதனால..."

"அதனால..." அவள் வரும் இடம் புரிந்ததால் பொறுமை பறக்கும் நிலையில்,

"ப்ளீஸ் அத்தான்... இதுவரைக்கும் உங்களை எங்கயுமே கூப்பிட்டது இல்ல... இப்போ இந்த ஒரு இடத்துக்கு மட்டும்... ப்ளீஸ்..."

"அம்மாவ கூப்பிட்டுகிட்டுபோம்மா... இல்லைன்னா உங்க அம்மா கூடபோ... எனக்கு இங்க நிறைய வேலை இருக்கும்மா..."

பொறுமையாக எடுத்து கூற அந்தபுறமோ அவன் தன்னை சுத்தமாக வெறுப்பதாக எண்ணி கண்ணீர் இப்பவோ அப்பவோ என அவள் கண்களில் எட்டிப்பார்க்க முயன்று கொண்டிருந்தது... குரல் கமற,



"அத்தான்... அவங்க கூடதானே எப்போவுமே போறேன்... நீங்க வந்தாதானே ஸ்பெஷல்..."

"இல்லம்மா முடியாது..." என்று இரும்பு குரலில் முடித்து விட்டவனிடம் இனிமேலும் கேட்க முடியாது என்பதை புரிந்து கொண்டாள்!

"ஏன் அத்தான் என்னை இப்படி அவாய்ட் பண்றீங்க?" தாங்க முடியாமல் கேட்டவளிடம்,

"ப்ச்... ஷாலினி... நீயும் எங்க போய்ட போற... நானும் எங்க போய்ட போறேன்... இன்னும் ஒரு மாசம் தானே இருக்கு கல்யாணத்துக்கு... கல்யாணம் பண்ணிட்டு எங்க வேணும்னாலும் போகலாம்... என்ன வேணும்னாலும் பேசலாம்.."

"வேலை, வேலை, வேலை, வேலையே கட்டிட்டு அழுங்க அத்தான்..." என்று கோபமாக பேசிவிட்டு தொடர்பை துண்டித்தவளின் நெஞ்சில் பயரேகை...

வாழ்க்கை இப்படித்தான் போகுமா? கண்ட கனவெல்லாம் கானல் நீரா? எல்லா பெண்களை போலத்தானே எனக்கும் ஆசைகள் இருக்கும்... அவையெல்லாம் பொய்யாக போய்விடுமா? என்னுடைய எதிர்காலம் தான் என்ன?

நினைத்து கொண்டிருக்கும்போதே கண்களில் இருந்து கண்ணீர் துளிகள் இரண்டு கீழ் சிந்த... பெருமூச்சை வெளியே விட்டு ஜன்னலின் வெளியே நோக்கினாள்...

ஊர் அறிந்த கார்த்திகேயனை திருமணம் செய்வது என்பதற்கு தான் குடுக்கும் விலைதான் தன்னுடைய இளமையின் ஆசைகளோ?

ஷாலினிக்கு அவனது அழகு கம்பீரம் ஆளுமை பிடித்து இருந்தது... அவனது அளவில்லாத செல்வம் அவளுக்கு கர்வத்தை தந்தது... சச்சிதானந்தத்துக்கு அவனது அதிகாரம் மிக பிடித்தமான ஒன்றானது. புதுவையில் யார் ஆட்சியில் அமர்ந்தாலும் இவர்களது குடும்பத்திற்கு நெருக்கமான ஒருவர் ஆகி விடுவர். அந்த ஆளுமை அவருக்கு தேவையாக இருந்தது. ஆனால் சம்பந்தப்பட்ட கார்த்திகேயனுக்கு?

## 2

ஒயிட் டவுனில் அமைதியாக கடலை பார்த்து வீற்று இருந்தது அந்த வெள்ளை மாளிகை...

ரங்கராஜனின் இல்லம்!

எதிரே கடல் ஆர்ப்பரித்தாலும் அதிலும் ஒரு அழகான ஆழ்ந்த அமைதி தென்பட்டது... அனைத்தையும் உள்ளடக்கிய அமைதி! வாழ்க்கையின் சிறு துளியை சுவைத்து விட்டே இத்தனை ஆட்டம் போடுகிறாயே மனிதா... என்னுடைய அளவு



என்னவென்று யோசித்தாயா?... என்று கேள்வி எழுப்பியது அந்த கடல்!

இரவு மணி பதினொன்றை தொட்ட காரணத்தால் அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆட்கள் நடந்து கொண்டிருந்தனர்... புதுவையில் இது ஒரு வசதி... பத்து மணிக்கு மேல் நகரமே அமைதியாகி விடும்! கடற்கரைக்கு பதினோரு மணிக்கு சென்றால் ஏகாந்தமாக காற்று வாங்கி விட்டு வரலாம்... சில நேரம் கவிதைகளையும் சில நேரம் வம்பையும்... அது அவரவர் அதிர்ஷ்டத்தை பொருத்தது!

சில்லென்ற காற்று இதமாக முகத்தை தடவி காதல் மொழி பேசி மயக்கி விட்டு செல்ல... உடலை வந்து முத்தமிட்டு சென்றது அலையின் தூறல்!

எப்போதும் வீடு திரும்புவதற்கு முன் கார்த்திகேயன் அந்த அலைகளோடு சிறிதாவது உரையாடாமல் வந்தது இல்லை... எந்த விஷயமாக இருந்தாலும் அவனுடைய முதல் நண்பன் இந்த கடற்கரைதான்... வந்து அமர்வதோடு இல்லாமல் பாறைகளை தாண்டிப் போய் கடலில் கால்களை நனைத்தவாறு அமர்ந்து கொண்டு சிறிது நேரம் தியானிப்பது அவனுடைய பழக்கங்களில் ஒன்று!

இன்று... ஷாலினியை பற்றி சில முடிவுகள் எடுக்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு இருந்தான் கார்த்திகேயன். காலையில் அவளிடம் கடிந்து கொண்ட பிறகு அவனது அன்னை அவனை

அழைத்து கெஞ்சியிருந்தார்... தட்டாஞ்சாவடி தொழிற்சாலையை பார்வையிட்டு முடித்துவிட்டு பின் திருபுவனை தொழிற்சாலையை பார்வையிட சென்று கொண்டிருந்தான்... திருபுவனை தொழிற்சாலையில் முக்கியமாக உயிர்காக்கும் மருந்துகள் பல தயாராகிக் கொண்டிருந்தது... அது அனைத்துமே அரவிந்தனின் பார்வையில் இருந்தது.

"சொல்லுங்கம்மா..." என்றான் அவசரமாக

"என்ன கண்ணா... எங்க இருக்க?" வாஞ்சையாக கேட்க.

"திருபுவனைல தான்ம்மா இருக்கேன்... என்ன விஷயம் சொல்லுங்க...?" குரலில் இருந்த அவசரம் மங்கையையும் பதட்டப்படுத்தியது!

"ஒண்ணும் இல்ல கார்த்தி... ஷாலு பேசினாளா?" கார்த்திகேயனுக்கு முகம் சுருங்கி நெற்றியில் ரேகைகள் தோன்றியது!

"ம்ம்ம் ஆமாம்... இப்போ அதுக்கென்ன...?" எரிச்சலோடு தொக்கி நின்றது கேள்வி.

"கண்ணா கொஞ்சம் பொறுமையா கேளுப்பா... ஷாலு பொண்ண கொஞ்சம் வெளிய கூட்டிட்டு போனாதான் என்ன கண்ணா?" தனது ஆதங்கத்தை வெளியிட

"அம்மா எனக்கு வேலை தலைக்கு மேல இருக்கு... இந்த அழகுல அந்த பொண்ணை



அண்ணாமலைஸ் கூட்டிட்டு போறதுக்கு தான் எனக்கு டைம் இருக்கா? ஏன்மா நீங்களே இப்படி புரிஞ்சுக்காம இருக்கீங்க?" கோபத்தை உள்ளடக்கிய குரலில் கூற

"என்னப்பா? அந்த பொண்ணு இந்த பொண்ணுன்னு பட்டும் படாம பேசற? நீ கல்யாணம் பண்ணிக்கப் போற பொண்ணுப்பா..." அவரது குரலில் அதிர்ச்சியோடு பயமும் தெரிந்தது!

"அது கல்யாணம் ஆனதுக்கு அப்புறம் பார்க்கலாம்" அலட்சியமாக கூற,

"ஏன் கார்த்தி... அப்பவும் இப்படியே அலட்சியமா நடந்துக்க மாட்டேன்னு என்ன நிச்சயம்?"

"அதுக்காக இப்போ என்னை என்ன பண்ண சொல்றீங்க? கல் கூட உருகும் நான் உருக மாட்டேன்" என்ற சுளீர் வார்த்தையோடு அவனது கேள்வி முன் நின்றது!

"ஷாலுவ சாயங்காலம் அண்ணாமலைஸ் கூட்டிப் போ கார்த்தி... என் செல்ல பையனில்ல... ப்ளீஸ் கண்ணா... அம்மாவுக்காக... ப்ளீஸ்" மகனை கெஞ்சும் தாயாக மாறினார்.

"இல்லம்மா எனக்கு டைம் இல்ல... வேணும்னா நீங்க கூட்டிட்டு போய் என்ன வேணும்னாலும் வாங்கி தாங்க..." அவன் குரலே 'இதற்குமேல் நான் பணிய மாட்டேன்' என்று உணர்த்த.

"ஏன் கார்த்தி... நீ வேற ஏதாவது பொண்ண பார்த்து வெச்சுட்டியா? இப்போ அம்மாவுக்காக ஷாலுவ ஒத்துகிட்டடியா?" குற்ற உணர்ச்சியோடு...

"அம்மா... அப்படி ஒரு பொண்னை பார்த்து இருந்தேன்னா முதல்ல உங்க கிட்ட தானே அழைச்சுட்டு வந்து இருப்பேன்... அப்படியெல்லாம் ஒண்ணுமில்லம்மா... நீங்க குழப்பிக்காதீங்க... என்னோட டைமையும் ஸ்பாயில் பண்ணாதீங்க... எனக்கு வேலை இருக்கு."

பட்டென முடித்தான்... கார்த்திகேயன் அப்படிப் பட்டவன் தான். எதற்கும் தயங்கியது இல்லை... தனக்கு சரி என்று பட்டதை செய்து விட்டு போய் கொண்டே இருப்பான்... மற்றவர்களுக்காக என்று என்றுமே பார்த்தது இல்லை... ஆனால் தனது தாயிடம் அதீத அன்பும் மதிப்பும் வைத்து இருந்தாலும் அவ்வப்போது இப்படி கடிக்க தயங்க மாட்டான்!

"உனக்கு எப்போதான் தம்பி வேலை இல்ல... அது எப்போவுமே இருக்கறதுதானே... சரி அதை விடு... நாளைக்கு ஷாலுவோட நம்ம வைஷ்ணவி.. பசங்க... எல்லாரும் தேங்கா திட்டு போறாங்க... நீயும் வாயேன் கண்ணா..." ஷாலுவுடன் எப்படியாவது பழக வைக்க முடியுமா என்று அந்த தாய் மனம் தலைகீழாக நின்று பார்த்தது!

"அம்மா... பணம் வேணுமா... வாங்கிக்கோங்க... என்னை கூப்பிடாதீங்க..." இறுதியாக முடித்து விட்டவனிடம் என்ன பேசி?



"கார்த்தி... இது நல்லதுக்கே இல்ல.. கொஞ்சமாவது குடும்பத்த பாரு... என் தங்கம் இல்ல.. உன் முசுட்டு தனத்தை மூட்டை கட்டி வெச்சுட்டு ஷாலு கூட கொஞ்சம் பழகு கண்ணா... உன்னோட கவலையே எனக்கு பெருங்கவலையா இருக்கு..."

மிகுந்த கவலையோடு அவர் கூறி முடிக்க... "பார்க்கலாம்" என்று கார்த்திகேயன் செல்பேசியை வைப்பதற்குள் அவனிடம் ஒரு வழியாக விட்டார் அவன் அன்னை.

அதற்கு பின் திருபுவனையில் வேலைகளை முடித்து விட்டு மற்ற வேலைகளை எல்லாம் முடித்து விட்டு வருவதற்கு இரவு மணி பதினொன்றாகி விட கடற்கரையின் அவனது ஆஸ்தான இடத்திற்கு வந்து அமர்ந்தான். அந்த குளிர்ந்த காற்று மனதை அமைதி படுத்த எப்போதும் போல அவனது குரு ரமணரை நினைத்து தியானம் செய்து விட்டு மனதை நிர்மலமாக்கினான். அமைதி சிறிது சிறிதாக வசப்பட்டது... எம்பி 3 யை ஆன் செய்து விட்டு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்து கொண்டான். இரண்டு முறை புகையை இழுத்து விட்டவன் கண்களை மூடி பாடல்களை ரசிக்க முயன்றான்... ஆனால் ரசிக்க விடாமல் ஷாலினி வந்து தொல்லை செய்ய ஆரம்பித்தாள் எண்ண சிதறல்களில்!

தன்னை துரத்தி துரத்தி காதலை சொன்னதை தவிர அவள் செய்த தவறுதான் என்ன? தன்னால் ஏன்

அவளுடன் பொருந்தி போக முடியவில்லை? தான் மிகவும் அதிகமாக வேலை என்று குடும்பத்தை கவனிக்காமல் தான் இருக்கிறோமா... தாய் கூறுவது போல!

இன்னும் ஒரு மாதத்தில் திருமணத்தை வைத்து கொண்டு அந்த பெண்ணுக்கு எவ்வளவோ மனச்சுமைகள் இருக்கலாம்... அதை நான் தானே பார்க்க வேண்டும்... இது வரை எப்படியோ... இனி ஷாலினியிடம் சற்று நிதானமாகவே பேச வேண்டும் என்று எண்ணி கொண்டிருந்தவனின் முதுகில் ஒரு அடி விழ... திரும்பி பார்த்தால் அரவிந்தன்!

"என்னடா அரவிந்தா.... நீ இன்னும் வீட்டுக்கு போகல?" வியப்பாக வினவினான் கார்த்திகேயன்!

"இன்னும் இல்ல... சரி நீ என்ன இங்க இன்னும் பண்ற? இலவு காத்த கிளி மாதிரி?" கேலி வழிந்தது! வியாபார கூட்டாளி என்றாலும் நெருங்கிய நண்பன்... அனைத்து ரகசியங்களும் அறிந்தவன்!

"ம்ம்ம்..." பெருமூச்சு ஒன்று புறப்பட்டது!

"ஏன் கார்த்தி... என்ன ஆச்சு?" கவலையாக விசாரிக்க,

"ஒண்ணுமில்லடா ஷாலினிய பத்தித்தான்..." என்றவுடன் அரவிந்தனின் நெற்றி சுருங்கியது.

"என்னடா?"



"இல்ல.. கல்யாணத்துக்கு இன்னும் ஒரு மாசம் தான் இருக்கு... ஆனா அந்த பொண்ணு கூட எனக்கு மனசு பொருந்தி வரவே மாட்டேங்குதுடா... நானும் அந்த வேலை இந்த வேலைன்னு சொல்லி தட்டி கழிச்சுகிட்டே இருக்கேன்.. ஆனா எனக்கு என்னவோ அந்த பொண்ணுக்கு தப்பு செய்கிறோமோன்னு கவலையா இருக்கு..."

"என்ன... திடீர்ன்னு கார்த்தி இப்படி ஒரு எண்ணம்" கையில் இருந்த பீரை பாட்டிலோடு சிறிது அருந்தியவன் அதை கார்த்தியிடம் தந்தான். அந்த நேரத்தில் அவனுக்கும் அது தேவையாக இருந்தது.

"இல்ல அரவிந்தா... முதல்ல இருந்தே மனசு பொருந்தவே இல்ல... அப்படி இருக்கறப்போ எப்படிடா அவளை கல்யாணம்... ஹூம்ம்ம் எப்படின்னே தெரில..." என்றான் தவிப்பாக

"ஏன்டா... எல்லாரும் இப்படியா பேசிட்டு இருக்காங்க? அப்படீன்னா ஒரு பொண்ண பார்த்து லவ் பண்ணிட்டு கல்யாணம் பண்ண வேண்டியது தானே... ஏன் ஷாலினிய கட்டிக்க ஒத்துகிட்ட? இப்போ இப்படி பேசுனா அந்த பொண்ணோட வாழ்க்கை என்ன ஆகுறது? அதை பற்றி யோசிச்சியா?" கேட்ட கேள்விகளின் நியாயத்தை உணர்ந்தவனால் மறுதலிக்க முடியவில்லை!

"லவ்வா..." அவனது முகம் விளக்கெண்ணை குடித்தது போலானது!

"அப்படீன்னா கண்ணை மூடிட்டு கல்யாணத்தை பண்ணிக்கோ... அப்புறம் எல்லாம் சரியாகிடும்... அப்புறம் இப்படியெல்லாம் பேசினது நாமான்னு நீயே நினைப்ப..."

"ம்ம்ம்... அதைதான் நானும் இப்போ நினைச்சுட்டு இருக்கேன்..."

"ஓகே மாப்ள... ஹோட்டல் மாஸ்ல நல்ல ஐட்டம் வந்து இருக்காம்... நீ எப்படி வர்றியா?" என்றவனை பார்த்து முறைத்தான் கார்த்திகேயன்!

"இந்த விஷயத்துக்கு எல்லாம் என்னை கூப்பிடாத... இந்த பழக்கத்தை எல்லாம் உன்னோட நிறுத்திக்க அரவிந்தா..." கறாராக சொன்னவனை எப்போதும் போல பார்த்து வியந்தான்.

"எப்படிடா நீ இப்படி இருக்க சாமியாரா?" நையாண்டி கலந்து கேட்டவனை பார்த்து,

இந்த விஷயத்துல என்னால உன்னோட ஒத்து போக முடியாது மச்சான்... மனசும் உடம்பும் ஒருத்திக்கு மட்டும் தான் சொந்தமா இருக்கணும்.. என்னோட மனைவிய தவிர வேற யாரையும் தொடர மாதிரி ஐடியா இல்ல எனக்கு..." கறாராக சொல்லி முடித்தான்.

"இதெல்லாம் எனக்கு ஒத்து வராது... நமக்கு பிசினஸ்ல ஆயிரம் டென்ஷன்... இதெல்லாம் கொஞ்சம் நேர ரிலாக்சேஷன்..." அரவிந்தன் அலட்டிக் கொள்ளாமல் பதில் கூற,



"அப்படீன்னா நீயும் ஒரு கல்யாணம் கட்டிக்கோ சீக்கிரமா!" குரலில் கோபம் மிகுந்து இருந்தது!

"எனக்கு ஒரு டீ குடிக்க டீ எஸ்டேட்டயே வாங்க இஷ்டம் இல்ல? ஆள விடு சாமி... அந்த கமிட்மென்ட்ஸ் எல்லாம் நமக்கு ஒத்துவராது..." தப்பிக்க பார்த்தான் அரவிந்தன்.

"இதே மாதிரி பொண்ணுங்களும் நினைச்சா விளங்கிடும்..." இப்போ கிண்டல் செய்வது கார்த்திகேயனின் முறையானது!

"சரி நான் கிளம்பறேன்... நீயும் ஷாலினிகிட்ட எதாச்சும் பேசி சரி பண்ணிக்கடா... இப்படியே திங்க் பண்ணிட்டு இருக்காத..."

சொல்லிவிட்டு சென்று விட்டான்... ஆனால் கார்த்திகேயனுக்கு தான் அவளிடம் என்ன பேசுவது எப்படி பேசுவது என்பது புரியாமல் தவித்தான்.... ஒரு வழியாக முடிவு செய்து செல்பேசியில் அவளது எண்ணை அழுத்தினான். அந்த புறம் பெல் போக மணியை பார்த்து விட்டு அழைப்பதை பற்றி யோசித்தான்.. இந்த நேரத்தில் அழைக்க வேண்டுமா? நினைத்து கொண்டிருக்கும் போதே செல்பேசி உயிர் பெற.

"ஹாய் அத்தான்... வாட் எ சர்ப்ரைஸ்..." குரலில் டன் கணக்கில் வியப்பு தெரிந்தது!

"என்னம்மா தூங்கிட்டியா... டிஸ்டர்ப் பண்ணிட்டேனா?" குரலில் குற்ற உணர்வு!

"ஹய்யோ நீங்க பேசுவீங்கன்னா நான் நைட் முழுக்க உக்கார்ந்து இருப்பேன்..." மகிழ்ச்சி தளும்ப சொன்னவனை நினைத்து தன்னை கடிந்து கொண்டான்!

"நான் காலைல டென்ஷன்ல இருந்தேன் ஷாலினி.... அதான் கொஞ்சம் கோபமா பேசிட்டேன் மனசுல வைச்சுக்காதம்மா..."

"இதுக்கு போய் நீங்க சொல்லி தான் தெரியணுமா அத்தான்... எனக்கே தெரிஞ்ச விஷயம் தானே அதெல்லாம் நான் ஒண்ணும் நினைக்கில..."

அது வரையில் மனதில் இதை வைத்தே எல்லாரிடமும் காய்ந்து கொண்டிருந்தவள் இப்போது அவனே பேசவும் குளிர்ந்து உருகிப் போனாள்!

"ஓகே ஷாலினி... நீ தூங்கு... அப்புறமா பார்க்கலாம்..." அதற்கு மேல் பேச்சை வளர்த்தாமல் முடித்து விட்டான்!

"ஓகே அத்தான்... பை குட் நைட்..." என்றாள் ஏமாற்றம் தொனிக்க!

பேசி விட்டு வைத்தவன் மூச்சை இழுத்து விட்டபடி வீட்டை நோக்கி போக ஆரம்பித்தான்!

✤ ✤ ✤



மணி பதினொன்றை தாண்டி இருந்தது... ஊரே அமைதியாக இருக்க வீட்டில் எரிந்த விளக்குகளும் வந்து குட்டீஸ் சத்தமும் அனைவரும் உறங்காமல் இருப்பதை அறிவித்தது... வைஷ்ணவி வந்திருந்தாள்.. கார்த்திகேயனின் உடன் பிறந்த தங்கை... திருமணம் முடிந்து சென்னையில் இருப்பவள்... இரண்டு வாண்டுகள் அதுவும் இரட்டை மனிஷா, கனிஷ்கர்... அறுந்த வால் வானரங்கள்... கார்த்திகேயன் உள்ளே நுழைந்த சமயம் இரண்டும் சண்டையில் இறங்கி இருக்க அவர்களை சமாளிக்கும் வழி தெரியாமல் விழி பிதுங்கி கொண்டிருந்தனர் வைஷ்ணவியும் மங்கையும்...

"டேய் பிசாசு... என்னை விடுடா..." என்ற மனிஷாவின் தலைமுடியை பற்றி இழுத்து அவளிடம் சண்டை பிடித்து கொண்டிருந்தான் ஐந்து வயது கனிஷ்கர்!

"அப்படீன்னா என்கிட்டே அந்த ப்ளே ஸ்டேஷன் சிடிய குடு..." கனிஷ்கர் அவனது வயதுக்கு தன் சகோதரியை மிரட்டி கொண்டிருந்தான்!

நோ... முடியாது... நீ சீட்... பிராட்... இவ்வளவு நேரம் நீ தானே விளையாண்ட... இப்போ எனக்கு குடுடா..." மனிஷாவோ விடுவேனா என்று மல்லுகட்ட,

"அதெல்லாம் முடியாது... திவிக்கா எனக்கு வாங்கி தந்தது... நான் யாருக்கும் தர மாட்டேன்... ஒழுங்கா குடுடி..." என்று அடிக்க,

"அம்மா..." என்று அலறினாள் மனிஷா!

"ஏய் பிசாசுங்களா... பன்னிரண்டு மணி ஆகப் போகுது... இப்போ ஏன்டா என் உயிரை வாங்குறீங்க? போய் படுத்து தொலைங்களேன்..." வைஷ்ணவி சமாதானப்படுத்தும் வழி தெரியாமல் கத்த,

"அப்படீன்னா ஒழுங்கா சிடிய குடுக்க சொல்லும்மா... திவிக்கா குடுத்தது..." கனிஷ்கர் ஒரு பக்கம் இடித்தான்!

"அம்மா... ரெண்டு பேருக்கும் சேர்த்துதானே குடுத்தா அக்கா... இவன் என்னம்மா எனக்கு குடுக்கவே மாட்டேங்கறான்..." மனிஷா ஒரு பக்கம் இடிக்க அவளுக்கோ என்ன செய்வதென்று புரியவில்லை... தலையில் கை வைத்து அமர்ந்தபோதே வாண்டுகள் இரண்டும் உள்ளே நுழைந்த தங்களது மாமனை பார்த்தன!

"ஹய் மாமா..." இரண்டும் கோரசாக கத்த... வேகமாக வந்த கார்த்திகேயன் இருவரையும் தூக்கி தட்டாமாலை சுற்றினான்!

"ஹேய்.... எப்போடா வந்தீங்க குட்டி செல்லம்ஸ்..."

"காலைலேயே வந்துட்டோம் மாமா... ஒண்ணு தெரியுமா... நாங்க ஊசுட்டேரி போனோமே" மனிஷா துள்ளிக் கொண்டு கூற.



"அப்படியா தங்க குட்டி..." என்று சிறுபிள்ளையாக மனிஷாவிடம் கதை கேட்டான் கார்த்திகேயன்!

ஆமா மாமா... இன்னைக்கு முழுசா நாங்க சம்பூர் ணால தான் விளையாண்டோம்... அது தெரியுமா?" என்று கனிஷ்கர் கூற.

"அச்சோ... மாமாவ விட்டுட்டே போயிட்டீங்களா? மாமா பாவம்தானே... போ உங்க ரெண்டு பேர் கூடவும் டு..." விளையாட்டாக வாண்டுகளிடம் கூற அதைக் கேட்ட மனிஷா.

"ஏன் மாமா... கூப்பிட்டா மட்டும் நீ வந்துட போறியா? ஏன் இப்படி ரீல் சுத்தற?" என்று கேலியாக கேட்டு விட்டு சிரிக்க.

"ஆஹா... என் பட்டு தங்கத்துக்கு தெரிஞ்சு போச்சா..." என்று கூறி சிரித்துவிட்டு இரண்டு வாண்டுகளையும் அணைத்து முத்தம் தர.

"ச்சீ போ மாமா எச்சி..." என்று துடைத்துவிட்டு ஓடினான் கனிஷ்கர்!

அவன் ஓடுவதை பார்த்து சிரித்த கார்த்தி கேயன்... மனிஷாவை பார்த்து,

"ஏன்டா குட்டி... நீ ஓடலியா?" கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்து கொண்டே கேட்ட மாமனின் கழுத்தை கட்டிக் கொண்டு.

"ஐலவ் மை மாமா..." என்று மனிஷா குட்டி கொஞ்ச அந்த மழலையில் மயங்கிய அண்ணனை பார்த்து,

"அண்ணா மயங்கிடாத... அந்த குட்டி பிசாசுக்கு எதாச்சும் காரியம் ஆகணும்னாதான் இப்படி கொஞ்சும்..." என்று சிரித்த தங்கையை பார்த்து,

"என் செல்லத்துக்கு நான் என்ன வேணும்னாலும் செய்வேன்... உனக்கு என்ன போச்சு வைஷு நீ சொல்லுடா கண்ணா... உனக்கு என்ன வேணும்?" என்று தன் கழுத்தை கட்டிக்கொண்டிருந்த மனிஷாவை பார்த்து கேட்க.

"ஒண்ணுமில்ல மாமா... அந்த கூஸ்தான் திவிக்கா குடுத்த ப்ளே ஸ்டேஷன் சிடிய தர மாட்டேங் கறான்.. எனக்கு அது திரி... டூ... ம்ஹூம்... இல்ல... இல்ல... டென் வாங்கித்தா மாமா..."

"இவ்வளவுதானா... நாளைக்கு நாம சன்டே மார்க்கெட் போலாம்... அப்போ செல்லம் என்ன வெல்லாம் கேக்கறீங்களோ எல்லாமே வாங்கி தருவேணாம்... ஒகே வா." என்று கொஞ்சிக்கொண்டே சொன்ன மாமனை பார்த்து கனிஷ்கர் கோபமாக.

"மாமா... எனக்கு..." கோபமாகக் கேட்க ஆரம்பித்தவன் அழுவது போல் முடிக்க,

"உனக்கும்தான் செல்லம்..." என்று சிரித்து கொண்டே

"ஓகே." என்று கோரசாக கூறிவிட்டு மாற்றி மாற்றி முத்தம் குடுக்க சிரித்துக் கொண்டே பெற்று கொண்டான் கார்த்திகேயன்! முத்தம் குடுத்து விட்டு யோசித்த கனிஷ்கர்,



"மாமா அப்படீன்னா திவிக்காவுக்கு..." வேண்டு கோளை வைத்தான்.

"ஓகே. திவிக்காவுக்கும் சேர்த்தே வாங்கிடலம்... ஓகேவா.

"ஹய்ய்ய்யய்யி... தேங்க்ஸ் மாமா..." என்று இன்னும் ரெண்டு முத்தத்தை பதிக்க,

"ஓகே ஓகே மணி பன்னிரெண்டாக போகுது... ரெண்டு பேரும் போய் சீக்கிரம் படுங்க... யார் முதல்ல தூங்குறீங்களோ அவங்களுக்கு நாளைக்கு ஸ்பெஷல் ப்ரைஸ்..." கார்த்திகேயன் ஆசைகாட்ட,

"ஹாய்ய்ய்ய்யய்யி ஜாலி ஜாலி..." வாண்டுகள் இரண்டும் கத்திக்கொண்டு அவர்களது அறைக்கு சென்று போட்டிப் போட்டுக்கொண்டு இழுத்து போர்த்தி கொண்டு.

"மாமா... நான் தான் பர்ஸ்ட்..." கனிஷ் கத்த,

"இல்ல மாமா... நான்தான் பர்ஸ்ட்..." மனிஷா பதிலுக்கு கத்தினாள்!

அதைக்கேட்டு சிரித்து விட்டு.

"யார் பேசாம தூங்கறீங்களோ அவங்களுக்கு தான்..." பதிலுக்கு வெளியில் இருந்து சத்தம் குடுக்க.

"ஓகே ஓகே" என்று கத்திவிட்டு நிஜமாகவே உறங்க தொடங்கினார்கள் இருவரும்! இரண்டு குழந்தைகளும் ஒருவர் மேல் ஒருவர் கால் போட்டு

கொண்டு உறங்குவதை சிறிது நேரம் கண்கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்த கார்த்திகேயன் லைட்டை நிறுத்தி விட்டு ஏசி அளவை குறைத்து வைத்துவிட்டு கதவை சாத்திவிட்டு வெளியே வந்தான்! வந்தவன் வைஷ்ணவியை பார்த்து,

"நல்லா இருக்கியாடா..." என்று வாஞ்சையுடன் கேட்க.

"ஹாஹா... அண்ணா இப்போதான் என்னை தெரியுதா? பாரும்மா அண்ணன..." என்று சிரித்து விட்டு,

"ஆமா வைஷு இனிமே எங்களுக்கு இந்த குட்டீஸ்தானே முக்கியம்..." என்று சிரித்து விட்டு.

"மாப்பிள்ளை எப்படிம்மா இருக்கார்? வீட்ல எல்லாரும் சௌக்கியமா?"

"நல்லா இருக்காங்கண்ணா... அதிசயமா இருக்கேண்ணா... எங்களையெல்லாம் ஞாபகம் வெச்சுட்டு கேக்கற?"

"உங்களையெல்லாம் கேக்காம வேற யார கேப்பேனாம்..." செல்லமாக அவளது தலையை பிடித்து ஆட்டினான்.

"உனக்கு தான் உன்னோட மில் அதை விட்டா ஆபீஸ் இதை தவிர வேற ஒண்ணுமே கண்ணுக்கு படாதே..." கண்களை உருட்டி கொண்டு அவள் கிண்டலடிக்க,



"சரி சரி... ரொம்ப வாராத... நாளைக்கு வெளியே போகலாம்... சரியா?"

"ஓகே ஓகே சரி உன் பேச்சுவார்த்தை எல்லாம் எந்த அளவு இருக்கு?" குறும்பான புன்னகையை முகத்தில் தேக்கி அவள் கேட்க.

"எது...?" என்றாள் குழப்பமாக,

"நான் என்ன அமெரிக்க பொருளாதாரத்தை பத்தியா கேக்க போறேன்... ஷாலு கூட உன்னோட பேச்சுவார்த்தை எப்படி போகுதுன்னு கேட்டா... சரியான டியுப் லைட்டா இருக்கியேண்ணா..."

அவள் அப்படி கேட்கவும் மங்கை புலம்ப ஆரம்பித்தார்.

"வைஷு அதை பத்தி இவன் கிட்ட கேட்டா உனக்கு முதல்ல பதில் சொல்லிட்டு தான் மறுவேலை பார்ப்பான்... அந்த பொண்ணு ஒரு பக்கம் புலம்புது... இவன் இந்த பக்கம் அதை கண்டுக்கவே மாட்டேங்கறான்... என்னதான் பண்ண போறேனோ? ஆண்டவா..."

"அம்மா... நைட் பன்னிரண்டு மணிக்கு கூட புலம்ப ஆரம்பிச்சுட்டியா... ஏன்ம்மா..." கடுப்பாக கேட்டான் கார்த்தி.

"பின்ன... காலைல எங்க நீ என்கிட்டே நின்னு பேசற... ஓடுறதே உன் வேலையா போச்சு..." அவர் பாய்ண்டாக அவனை பிடித்தார்.

"சரி சரி. இப்போ உன் எப்எம்மை ஸ்டார்ட் பண்ணாத... ஆளை விடும்மா... ரொம்ப டயர்டா இருக்கேன்..." விழிகள் உறக்கத்திற்கு கெஞ்ச மங்கையிடம் கெஞ்சினான் கார்த்திகேயன்.

"உனக்கெல்லாம் ஷாலு மாதிரி அமைதியா இருக்க பொண்ணுங்கள்லாம் லாயக்கில்ல... அதிரடியா கத்தறவங்க தான் லாயக்கு... திவிய விட்டு ஷாலுவுக்கு கிளாஸ் எடுக்க சொல்லணும்.. அப்போ தான் நீயும் உருப்படுவ அண்ணா..." அதுவரை தாயின் புலம்பலை கேட்டுக் கொண்டிருந்த வைஷுவும் அண்ணனை நோக்கி ஏவுகணை வீசினாள்.

"ஐயோ ஆத்தா... ஆளை விடு... தூக்கம் கண்ணை சுழட்டுது..." அவளது தலையை தட்டி சிரித்துவிட்டு போனான்.

விதியும் பார்த்து சிரித்தது!

## 3

"ஹாய் வைஷு... காலை வணக்கம்..." என்று ஆங்கிலம் பாதி தமிழ் பாதி என சிரித்து கொண்டே வந்து டைனிங் டேபிளில் அமர்ந்து கொண்டு அன்றைய செய்தித்தாளை புரட்டினான் கார்த்திகேயன்!



"அண்ணா... என்ன இன்னைக்கு செம மூட்ல இருக்க... எது கேட்டாலும் கிடைக்கும் போல" என்று வைஷ்ணவி அவனுக்கு கலக்கிய காபியை கொடுத்து கொண்டே அவனை கிண்டலடிக்கும் வேளையில் இறங்கினாள்!

" ஹாஹா அப்படி என்ன ஆத்தா கேக்கப் போற? ஹவாய்ல தீவா கேட்டுற போற?" பதிலுக்கு நடிக்கலடித்தவனை பார்த்து சிரித்து விட்டு,

"இப்படி எல்லாம் சொல்லி தப்பிச்சுக்காத அண்ணா..." என்று சொலலி கொண்டிருக்கும் போதே குழந்தைகள் இரண்டும்...

"அம்மா ஆஆஆ... இங்க வா..."

கேட்டு பதறி அவர்களிடம் ஓடிய வைஷ்ணவியும் கார்த்திகேயனையும் பார்த்து... குதித்த கனிஷ்கர்.

"அம்மா... திவிக்காமா..." என்று கூறியவுடன் தான் அவளுக்கு உயிரே வந்தது!

"குட்டி பிசாசுங்களா... இதுக்கு தான் இந்த கத்து கத்துனீங்களா? இவ தினமும் தானே டிவில வர்றா... இப்போ என்ன புதுசா வர்ற மாதிரி... ஒரு நிமிஷம் ஹார்ட்டே நிக்கற மாதிரி வைஷு அவளது தினசரி லட்சார்ச்சனையை ஆரம்பித்தாள்!

"ஏய் வைஷு... என்ன செல்லம்ஸ் போய் பிசாசுன்னு சொல்ற? உன்னை அடி பிச்சுடுவேனாக்கும்..."

"ம்ம்ம்... நீ தான் மெச்சிக்கணும் இந்த வானரங்கள... இந்த திவி வந்ததுக்கு எப்படி கத்துதுங்க, குதிக்குதுங்க பாரு அண்ணா..." என்று குற்ற பத்திரிக்கை வாசிக்க.

"அந்த திவி எங்க வந்து இருக்கா?" புரியாமல் கேட்ட கார்த்திகேயனை பார்த்து

"இதோ அண்ணா... இவ தான் திவி.. இதுங்க ளோட பிரண்டு..." என்று தொலைக்காட்சியை காட்டி விட்டு பிறாண்டுவது போல நடித்த வைஷ்ணவியை பார்த்து சிரித்தான் கார்த்திகேயன்.

"ஏன் ரொம்ப பிறாண்டிட்டாளோ? ஹஹா... இப்படி நீயே அரிச்சுக்கற?"

"பின்ன... சுவரேறி குதிக்கறது... பைப் பிடிச்சுகிட்டு மாடிக்கு போறது... நடு ராத்திரி பன்னிரண்டு மணிக்கு சுடுகாட்டுல போய் தேவுடு காக்கிறது... இதெல்லாம் தான் இவவேலை. இதை இப்போவே இதுங்களுக்கும் சொல்லி குடுத்தா எனக்கு கோபம் வராதா அண்ணா?" என்று சொல்லவும் கார்த்திகேயனால் சிரிப்பை அடக்க முடியவில்லை...

"அப்படீன்னா அது ஒரு வடி கட்டுன கிராக்னு சொல்லு..." நக்கலடிக்கவும்

"இல்லண்ணா... நிறைய மூளை இருக்கு... அதே சமயம் அதே அளவு லூசுதனமும் இருக்கு... இன்வெஸ்ட்டிகேட் பண்றேன்னு ஏதாவது லூசுதனம் பண்ணிட்டு இருப்பா... நிஜம் என்ன அப்படீங்கற இந்த ப்ரோக்ராம இது தான் பண்ணுது..."



"அப்படீன்னா ஆம்பிளையா பிறக்க வேண்டியது தப்பி தவறி பொண்ணா பிறந்துட்டா... ரைட்டா?...." என்று கார்த்தி சிரிக்கவும்...

"ஹய்யோ... இதே மாதிரி அவ இருக்கும் போது சொல்லிடாதன்னா.. அவ்வளவு தான்... காதுல ரத்தமே வந்துடும்... அந்த அளவு சண்டை போட்டு உயிரை வாங்கிடுவா..."

"ரொம்ப பாதிக்கப்பட்டு இருப்ப போல இருக்கு... ஹஹஹா..." என்று கார்த்திகேயன் சிரிக்க.

"ஆமாண்ணா.. கொஞ்ச நாள் முன்னாடிதான் பக்கத்து வீட்ட விலைக்கு வாங்கிட்டு வந்தாங்க... இவ அப்பா சாப்ட்வேர் கம்பெனி வெச்சுருக்காங்க அண்ணா.. டிவி டெக்னாலஜிஸ்."

"ஓ... அதோட எம்டி விகாஷ் தானே..."

"ஆமாண்ணா... இவ அண்ணன் தான்..."

"அவனை எனக்கு நல்லா தெரியுமே... அவனுக்கு இப்படி ஒரு லூசு தங்கச்சியா?"

"இதை மட்டும் அவ கேக்கணும்... அப்புறம் இருக்கு உனக்கு கச்சேரி... அதுவும் இதோட டெயில் பீஸ் ஒண்ணு இருக்கு... ரெண்டும் தான் அறுந்த வாலுங்க..."

"டெயில்பீஸா? ஹாஹா யாரும்மா?"

"இதோட அத்தை பையன்... ஸ்ரீராம்... ரெண்டு பேருக்கும் தான் கல்யாணம் பண்ற ஐடியால இருக்காங்க... ஆனா ரெண்டும் ஒரு இடத்துல இருந்தா... அவ்வளவுதான்.. அந்த இடமே உருப்பட்டாப்பல தான்... இவ வேலை பாக்குறான்னு சொல்லியே அந்த நிலா டிவில அவனும் போய் ஜாயின் பண்ணி ரெண்டு சேர்ந்து இன்வெஸ்டிகேட் பண்றோம்னு அலையுதுங்க..."

"ஆஹா கூடவே இன்னொரு லூஸா... சூப்பர் போ..."

"இந்த பீல்ட்ல ஏதாவது சாதிச்சே ஆகணும்னு ஒத்தை கால்ல நிக்கறா... அப்புறம் தான் கல்யாணமாம்... தினம் அவங்க அம்மா வந்து புலம்பி தீர்த்துருவாங்க..." என்று கூறி விட்டு அந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கவனம் செலுத்த, அது ஒரு செய்தி சேனல்.. திவி என்று இந்நேரம் வரை வைஷ்ணவியால் லட்சார்ச்சனை செய்யப்பட்ட அந்த மிக அழகான லூசு தொலைகாட்சியில் ஒருவரை பேட்டி எடுத்து கொண்டிருந்தாள்!

ஒரு துளி ஒப்பனையில்லாமல் ஸ்டோன் வாஷ் ஜீன், டாப்ஸ் என்று மிகவும் சாதாரணமாக இருந்தவள் வித்யாசமாக தனது வெகு நீளமான முடியை ஒரு பட்டர்பளை க்ளிப்பில் அடக்கி கீழே வழிய விட்டு இருந்தாள்! அதுவும் அவளுக்கு வித்யாசமான தோற்றத்தை அள்ளித் தெளித்து இருந்தது!



"இத்தனை நாட்கள் கழித்து இப்போது கூடங்குளத்தில் போராட வேண்டிய தேவை என்ன அய்யா? இதுக்கு என்ன அவசியம் இருக்கு?" கேள்விகள் வரிசையாக அவளிடம் இருந்துவர அந்த மனிதர் பொறுமையாக விடை அளிக்க ஆரம்பித்தார்!

"ஏனம்மா உங்கள் மகளுக்கு மாப்பிள்ளை பார்த்து... திருமணம் பண்ண முடிவு செய்துவிட்டீர்கள்... திருமண நாள் குறித்தாகிவிட்டது... மண்டபத்திற்குப் பணம் கொடுத்தாகி விட்டது... சொந்தக்காரர்கள் எல்லாருக்கும் அழைப்பிதழும். அனுப்பி விட்டீர்கள்... நாளை காலை திருமணம்... இன்று இரவு தான் உங்களுக்கு அதிர்ச்சியான ஒரு செய்தி தெரிய வருகிறது... நீங்கள் பார்த்திருக்கும் மாப்பிள்ளைக்கு எயிட்ஸ் நோய் இருக்கிறது என்று! இப்போது சொல்லுங்கள்! திருமணம் நடக்கட்டும்னு விடுவீங்களா? இல்லை நிறுத்தி விடுவீர்களா?" கேட்டவரை பார்த்து சிரித்து விட்டு....

"அதற்காகப் பதிமூன்றாயிரம் கோடி ரூபாய் போட்ட பிறகு இன்று வந்து போராடுவது என்பதை எப்படி ஏற்றுக்கொள்வது?"

"பொண்ணே இந்தப் போராட்டம் ஒன்றும் நேற்றோ இல்லை இன்றோ தொடங்கியதில்லை. இப்போராட்டத்திற்கு 1987ல் மீனவ கிராமங்களில் தொடங்கிய எதிர்ப்பில் ஆரம்பித்து இருபத்தைந்து ஆண்டு வரலாறு இருக்கிறது!!"

"ஏன் அவ்வளவு உறுதியாக வேண்டாம் என்கிறீர்கள்?"

"கூடங்குளம் அணு உலை அமைந்துள்ள இடம் எரிமலைக் குழம்புகளால் ஆனது... கூடங்குளத்தில் இருக்கும் 'உருகிய பாறைப் பிதுங்கல்கள்' நேரடியாக அணு உலையின் நிலைத்த தன்மையைக் குலைத்து விடும் வாய்ப்பு மிக அதிகம். அதோடு யாரும் வசிக்காத பகுதியில் தான் அணு மின் நிலையம் அமைக்க வேண்டும். ஆனால் அணுமின் நிலையத்திலிருந்து பத்து கி.மீ தொலைவிற்குள்ளேயே கூடங்குளம் கிராமத்தில் இருபதாயிரம் மக்களும், இடிந்தகரை கிராமத்தில் பன்னிரண்டாயிரம் பேரும் காசா நகரில் நானூற்று ஐம்பது குடும்பங்களும் மாநில சராசரியை விட அதிகம் வசிக்கிறார்கள் பெண்ணே... இது நமது மக்களை அழிக்க நாமே வழிவகை செய்வது போல் அல்லவா..."

"ஏற்கெனவே ஒரு நாளைக்குக் குறைந்தது ஆறுமணி நேரம் மின்வெட்டு இருக்கிறது. இப்போது இந்தத் திட்டத்தின் மூலம் மலிவான விலையில் மின்சாரம் கிடைக்கும் என்கிறார்கள். அதையும் போராடி நிறுத்தி விட்டீர்கள் என்றால் மின்சாரத்திற்கு என்ன செய்வது?"

"அப்படி இல்லையம்மா... இந்தத் திட்டத்தால் மலிவு விலையில் மின்சாரம் கிடைக்கும் என்பதெல்லாம் வெற்றுக் கட்டுக் கதைகள்! வரும் 20 ஆண்டுகளில்



அணு மின்னாற்றலின் அளவை 6 விழுக்காடாகக் கூட்ட வேண்டுமானால் அதற்கு தேவைப்படும் முதலீடு மட்டும் ஐம்பதாயிரம் கோடி ரூபாய் ஆகும். இப்போது சூரிய ஆற்றல், காற்றாலை போன்ற முறைகளுக்கு அரசு ஒதுக்கும் தொகை வெறும் அறுநூறு கோடி ரூபாய் தான். அதிலேயே அவை ஐந்து விழுக்காட்டு அளவு மின்சாரத்தைத் தந்து விடுகின்றன. இப்போது அணு ஆற்றலுக்கு அரசு ஒதுக்கும் தொகை 3897 கோடி ரூபாய். ஆனால் அவை தருவது 2.5 விழுக்காட்டு அளவு மின்சாரம் தான். ஒரு மெகா வாட் மின்சாரத்தை அணு ஆற்றலின் மூலம் உருவாக்க ஏறத்தாழ இருபத்திரண்டு கோடி ரூபாய் செலவாகும். ஆனால் சூரிய ஒளி மூலம் அதே அளவு மின்சாரத்தைப் பதினைந்து கோடியில் உருவாக்கிவிடலாம். சுற்றுப் புறத்துக்கும் கேடில்லாத முறை அதுதானே..."

"வெளிநாட்டுடன் ஒப்பந்தம் போட்டு வரும் திட்டத்தில் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதைக் கெடுக்கப் பார்க்கிறீர்களே!"

"நாலு பேருக்கு வேலை கிடைக்க, நானூறு பேர் தங்கள் வேலையை இழப்பார்கள். அப்படிப்பட்ட திட்டம் நமக்குத் தேவையா?"

"எப்படி நானூறு பேர் வேலை இழப்பார்கள் எனச் சொல்கிறீர்கள்?"

"தாராப்பூர் அணு உலை தொடங்கிய போது அந்தக் கிராமத்தில் மொத்தம் எழுநூறு மீன்பிடி படகுகள்

இருந்தன. இன்று அங்கு வெறும் இருபது படகுகள் தாம் இருக்கின்றன. மீன்பிடித் தொழில் அழிந்து போனதால் அங்கிருந்த மீனவர்கள் அனைவரும் தினக்கூலிகளாக வேறு தொழில் பார்த்துப் போய்விட்டார்கள். கல்பாக்கம் அணு உலை கடலில் கலக்கவிடும் 'குளோரினால்' மீன்வளம் வெகுவாகக் குறைந்து வருகிறது. 'சிங்க இறால்' போன்ற மீன் வகைகள் வேகமாக அழிந்து வருகின்றன. இதே நிலை தான் நாளை கூடங்குளத்திலும் நடக்கும். மிகப்பெரிய மீன் பிடி மையமாகத் திகழும் தமிழகத்தின் தென்பகுதியில் பல்லாயிரக்கணக்கான கோடிகளில் மீன்கள், கடல் உயிரினங்கள் ஆகியவற்றால் வணிகம் நடந்து வருகிறது. இது அப்படியே நசிந்து போகும். பேச்சிப்பாறை அணையை நம்பி வேளாண் தொழிலில் ஈடுபட்டிருக்கும் ஆயிரக்கணக்கான வேளாண் குடும்பங்கள் நடுத்தெருவுக்கு வந்து விடும். இப்போது சொல்லுங்கள்... சிலர் வாழ, பல்லாயிரக்கணக்கான தமிழர்கள் வாழ்க்கையையே இழந்து நாடோடி வாழ்க்கை நடத்த வேண்டி வரும். இது தேவையா?"

"அய்யா... முன்னாள் ஜனாதிபதி கலாம் கூட அணு உலைகள் நூறு சதவிதம் பாதுகாப்பானது என்றும் அணு கழிவுகளை எட்டாண்டுகள் வரை மிகவும் பாதுகாப்பாக வைக்க முடியும் என்றும் அணு மின்சாரம் தான் மிகவும் மலிவானது என்றும் கூறுகிறாரே? அதற்கு என்ன சொல்கிறீர்கள்?"



"இக்கருத்தை அப்படியே ஏற்றுக்கொள்வதாக வைத்துக் கொள்ளுங்கள்... இந்திய அரசு ரஷ்ய அரசுடன் சிறப்பு ஒப்பந்தம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளது. இவ்வொப்பந்தத்தின் படி, கூடங்குளம் அணு உலையில் நேர்ச்சி ஏதும் ஏற்பட்டால் இந்த அணு உலையை நிறுவியிருக்கின்ற ("Atomstroyeksport") நிறுவனத்தின் மீது யாராலும் வழக்குத் தொடர முடியாது. இந்த ஒப்பந்தத்தின் பெயர் தான் 'அணு உலை நேர்ச்சி இழப்பீட்டு ஒப்பந்தம்' அணு உலை நூறு விழுக்காடு பாதுகாப்பானது என்றால் இந்த ஒப்பந்தம் எதற்கு? அணு உலைகள் பாதுகாப்பானவை என்றால், பெரும்பாலான தனியார் காப்பீட்டு நிறுவனங்கள் ஏன் அணு உலைகளைக் காப்பீடு செய்ய முன்வருவதில்லை? மற்ற எரிபொருள் ஆற்றல் தொழில்களைக் காட்டிலும் அணு ஆற்றல் தொழிலுக்கு 'wall street' வங்கிகள் ஏன் கூடுதல் வட்டி வாங்குகின்றன? அடுத்து கழிவுகளைப் பாதுகாக்க முடியும் என்பதை ஏற்றுக் கொள்வோம். அப்படியானால் ரஷ்யா ஒப்புக் கொண்டதற்கு மாறாகக் கழிவுகளை எடுத்துச் செல்ல முடியாது என ஏன் கைவிரிக்கிறது? அணுக் கழிவுகள் என்று சொல்வது ஏதோ நம்முடைய வீட்டில் இருந்து கொட்டும் சமையல் கழிவுகளைப் போல என எண்ணி விடாதீர்கள். அணுக்கதிர் தனிமமான புளூட்டோனியத்தின் ஒரு கிராமில் பத்து இலட்சத்தில் ஒரு பகுதியே புற்றுநோயை ஏற்படுத்தும் ஆற்றல் கொண்டது. இந்தக் கழிவு இரண்டு இலட்சம் ஆண்டுகளுக்குக் கதிரியக்கத்தை

வெளிப்படுத்தும்... இருபத்தி ஐந்தாயிரம் ஆண்டுகள் வரையிலாவது பாதுகாக்க வேண்டிய ஒரு பொருளை வெறும் எட்டு ஆண்டுகள் பாதுகாத்து விட்டு அதை நாம் என்ன செய்ய போகிறோம் பெண்ணே? கழிவை நிலநடுக்கமும் நீர் ஒட்டும் வாய்ப்பும் அறவே இல்லாத யூக்கா மலையில் ஆழப் புதைக்கும் திட்டத்திற்குப் பல்லாயிரம் கோடிச் செலவழித்த பிறகு, அதுவும் பெரிய தீங்கு விளைவிப்பது தான் என அமெரிக்கா அந்தத் திட்டத்தைக் கைவிட்டது ஏன்?"

"நீங்கள் சொல்வது எல்லாம் உண்மை என்றால் கல்பாக்கம் அணுமின்நிலையத்தைச் சுற்றி உள்ள மக்களுக்கு உடல் நலத்தில் பாதிப்பு வந்திருக்க வேண்டுமே?"

"நல்ல கேள்வி! கல்பாக்கம் அணுமின் நிலைய ஊழியர்களுடைய குடும்பத்தினருக்கு 'மல்டிபிள் மைலோமோ' என்னும் எலும்பு மச்சைப் புற்றுநோய் இறப்புவீதம் அதிகம் இருக்கிறது. அப்பகுதியில் உள்ள மீனவப் பெண்கள் 'ஆட்டோ இம்யூன் தைராய்டு' என்னும் தைராய்டு சுரப்பியைப் பாதிக்கும் நோய் பற்றிய புள்ளி விவரங்கள் வெளிவந்திருக்கின்றன. அணு உலையைச் சுற்றி ஐந்து கி.மீ. சுற்றளவுப் பகுதிகளில் அதாவது சதுரங்கப் பட்டினம் போன்ற பகுதிகளில்... தைராய்டு புற்று நோய் இறப்பு வீதம் பற்றிய புள்ளி விவரங்கள் ஆகியன அதிர்ச்சியான உண்மைகளை வெளிக்கொண்டு வந்தன தைராய்டு புற்றுநோய்க்கு அணு உலையில் இருந்து வெளியேற்றப்படும்



அயோடின் 131 என்னும் வாயுக்கழிவே காரணம். இப்புள்ளிவிவரங்கள் அனைத்தும் மருத்துவர் புகழேந்தி 2003, 2008, 2010 ஆகிய ஆண்டுகளில் மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவுகள் ஆகும். இவற்றில் எந்த அறிக்கையையும் கல்பாக்கம் அணு உலை நிர்வாகம் மறுக்கவில்லை பெண்ணே"

"இது ஒரு தொழில்நுட்பம். அதை எதிர்ப்பது என்பது நம்மைப் பழைய காலத்திற்குத் தள்ளிவிடாதா?"

"ஒரு தொழில் நுட்பத்தையே எதிர்ப்பது என்பது நம்மைப் பழைய காலத்திற்குத் தள்ளிவிடும் தான்! அதே வேளை அத்தொழில் நுட்பத்தால் ஏற்படும் பின்விளைவுகள் மனித குலத்தையே அழித்து விடும் என்றால் அப்படி ஒரு தொழில் நுட்பம் நமக்குத் தேவையா எனச் சிந்திக்க வேண்டும் அல்லவா? எனவே, அத்தொழில் நுட்பத்தால் ஏற்படும் பின்விளைவுகளை எதிர்கொண்டு மக்களைக் காப்பாற்றுவது எப்படி என்பதைக் கண்டறிந்த பிறகு அதைப் பயன்படுத்தலாம் என்று தான் சொல்கிறோம்.!"

"கூடங்குளம் அணு உலை கூடவே கூடாது என்னும் உங்கள் கருத்துடன் உடன்படுகிறேன். அப்படியானால் மின்வெட்டைத் தீர்க்க என்ன தான் வழி?"

"மின்வெட்டை ஒரு நாளும் அணு மின்சாரம் தீர்த்துவிடாது. 1962ஆம் ஆண்டே, 'இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளில் நாங்கள் 20,000 மெவா.

மின்சாரத்தை அணு உலைகள் வழியாக உற்பத்தி செய்து விடுவோம்' என்று சொன்னார்கள் ஆனால் 1987 ஆம் ஆண்டு ஆயிரம் மெ.வா கூடக்கிடைக்க வில்லை. அதன்பின் இரண்டாயிரமாவது ஆண்டில் நாங்கள் மொத்தத் தேவையில் பத்து விழுக்காட்டு அளவுக்கு மின்சாரம் உருவாக்கி விடுவோம் என்றார்கள். ஆனால் மூன்று விழுக்காட்டைக் கூட எட்டவில்லை. எனவே கூடங்குளம் அணு உலை நமக்கு மின் தட்டுப்பாட்டைத் தீர்க்கும் என்பது ஏட்டுச் சுரைக்காய் தான்! அது கறிக்கு உதவாதும்மா!"

"சரி மாற்று தான் என்ன? அதற்கு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறீர்களா?"

"தமிழகத்தில் குண்டு விளக்குகளுக்கு மாற்றாக சி.எப்.எல் விளக்குகளைப் பொருத்தினால் ஒரே நொடியில் 18,000 மெ.வா. மின்சாரம் மிச்சமாகும். தமிழ்நாட்டில் கயத்தாற்றில் இருந்து கன்னியாகுமரி வரை நிறுவப்பட்டுள்ள காற்றாலைகள் மூலம் நாம் நாள் ஒன்றுக்கு 3200 மெ.வா மின்சாரம் பெறுகிறோம். இந்தியாவில் இது போல் காற்றடிக்கும் கடற்கரை குஜராத் முதல் வடகிழக்கு வரை ஏழாயிரத்து ஐந்நூறு கி.மீ. நீளத்திற்கு உள்ளது. அங்கும் காற்றாலைகள் நிறுவினால் பல்லாயிரக்கணக்கான மெ.வா. மின்சாரம் பெற முடியும். இன்றுள்ள காற்றாலைகள் 11-14 கி.மீ வேகத்தில் காற்றடித்தால் சுழல்கின்றன. இவற்றை 4-5 கி.மீ வேகத்தில் காற்றடித்தாலே இயங்கும் வகையில் காற்றாலைகள் அமைக்கலாம் என்று பல ஆய்வுகள்



கூறுகின்றன. ஒரு ச.கி.மீ. பரப்பளவில் சூரியத் தகடுகளைப் பொருத்தினால் நாள் ஒன்றுக்கு 35 மெ.வா. மின்சாரம் பெற முடியும். நம் நாட்டில் உள்ள தார் பாலைவனத்தில் 5000 ச.கி.மீ பரப்பளவில் அதாவது 1,75,000 மெ.வா சூரிய ஒளி மூலம் மின்சாரம் பெற முடியும். இன்னும் குஜராத்தில் நீர் கால்வாய்களுக்கு மேல் சூரிய மின்சாரம் தயாரிக்க தகடுகள் பொருத்தப்படுகிறது... அதை நாமும் செயல்படுத்தலாமே... நீரும் ஆவியாகி வீணாகாது அதே சமயம் நமக்கும் மின்சாரம்... இது தானே புத்திசாலித்தனம்..."

"மிகவும் நன்றி அய்யா... உங்களது போராட்டம் வெற்றி பெற வாழ்த்துக்கள்!"

"இது எங்களது போராட்டம் இல்லை பெண்ணே... நமது போராட்டம்... நமக்கான போராட்டம்... நமது வாழ்வாதாரத்தை காப்பாற்றி கொள்ள நாம் போராட வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டு இருக்கிறோம்! அதை புரிந்து கொள்ளாத நமது மக்களே இந்த போராட்டத்தை எதிர்ப்பது தான் வேதனையம்மா...?"

அவரது கேள்விக்கு பதில் கூற முடியாமல் ஒரு நிமிடம் தாமதித்த திவி,

"அய்யா... தர்மத்தை சூது கவ்வலாம் ஆனால் மீண்டும் தர்மமே வெல்லும்..." நிகழ்ச்சியை முடிக்கும் வரை அமர்ந்து பார்த்து கொண்டிருந்த கார்த்திகேயன்,

"இதோட வேலையே இப்படி உளறிக்கிட்டு இருக்கறது தானா வைஷு?"

"இதை மட்டும் அவ கேட்கணும்... அவ்வளவு தான்... சாமியாடிடுவா..." என்று கூறிவிட்டு சிரித்தாள்!

"வைஷு... அது எப்படி வேணும்னாலும் ஆடட்டும்... இதெல்லாம் வேலை இல்லாதவங்க பண்ற வேலை... நமக்கெல்லாம் தலைக்கு மேல வேலை இருக்குடா... இந்த மாதிரி ஆளுங்கள முதல்ல நாடு கடத்தணும்... அப்போ தான் நாம உருப்படுவோம்..." என்று சொல்லி கொண்டிருக்கும் போதே செல்பேசி அழைக்க

"சொல்லு அரவிந்த்..."

"கார்த்தி... நம்ம எத்தனால் லோட் விழுப்புரம் செக் போஸ்ட்ல சீஸ் பண்ணி வெச்சு இருக்காங்களாம்..."

"வாட்... என்ன தைர்யம்? யார் சீஸ் பண்ணது?"

"சீஸ் பண்ணது விழுப்புரம் சர்கிள் கார்த்தி... ஆனா மதகடிப்பட்டு சர்க்கிள் தான் சேஸ் பண்ணி இருக்காப்ல... அதுல பயந்துகிட்டு நம்ம டிரைவர் விட்டுவிட்டு ஓடிட்டான்..."

"வாட் சேஸா? ஹொவ் டேர்? ஸ்பிரிட் லாரி தானே டெஸ்டிநேஷன் எது?"

"நம்ம கொச்சி பாக்டரிக்கு போன லாரிதான் கார்த்தி..."



"ம்ம்ம்... இரு நான் பேசறேன்... இவனுங்களுக்கு எல்லாம் துளிர் விட்டுடுச்சு... நம்ம மேல கை வைக்க எவ்வளவு தைரியம் இருக்கணும்.. காசு காசுன்னு மட்டும் அலையுவானுங்க.... ஆனா குடுத்த காசுக்கு கொஞ்சமாவது நன்றி இருக்குதான்னா கிடையவே கிடையாது..." வேறென்ன குடுத்த லஞ்சத்தை பற்றி தான் கூறி கொண்டிருந்தான் கார்த்திகேயன்! கோபம் கொப்பளிக்க மதகடிபட்டி சர்க்கிள் இன்ஸ்பெக்டருக்கு அழைத்தான்!

"சார். நான் விநாயகம் பேசறேன்..." பவ்யமாக வந்தது பதில்!

"என்ன விநாயகம்... புது புது வேலை எல்லாம் செய்துட்டு இருக்கீங்க? ம்ம்ம்... என்ன விஷயம்?" உறுமினான் கார்த்திகேயன்!

"சார்.... ஒண்ணுமில்ல... அனுமதி இல்லாம..." அவர் சொல்ல வருவதற்குள் மறித்த கார்த்திகேயன்

"அனுமதி பற்றி எனக்கு நீங்க சொல்லி தரீங்களா?" உறுமல் அதிகமானது!

"சார் அப்படி எல்லாம் இல்லை... அதுவும் இல்லாம மருந்தெல்லாம்..."

"விநாயகம் இதுக்கு மேல என்ன பேச வைக்காதீங்க.... லாரிய ரிலீஸ் பண்ணுங்க..."

"அப்படீன்னா சார்... இது எல்லாமே உங்க ரிஸ்க் தானா..." அந்த விநாயகத்தின் குரலில் இருந்த அதிர்ச்சியை புரிந்து கொள்ளவில்லை கார்த்திகேயன்!

"யோவ் ரிலீஸ் பண்ணுங்கறேன்ல... என்ன வந்தாலும் எனக்கு பார்த்துக்க தெரியாதா உன் வேலைய பாரு..."

"ஓகே சார்..." சொங்கிப் போன குரலில் அவர் செல்பேசியை வைக்க... அத்தனையும் உள்வாங்கி கொண்டிருந்தது கேமரா கண்கள்!

## 4

"ஏய் அறிவு கெட்ட முண்டம்... இங்க ஷூட் பண்ண சொன்னா எங்கடா பண்ணிட்டு இருக்க? ச்சே போயும் போயும் உன்னை கூட்டிட்டு வந்தேன் பாரு.... என் புத்திய..." ஸ்ரீராமிடம் பொரிந்து கொண்டிருந்தாள் திவ்யதாஷினி!

"இது வேண்டுமா திவி?" என்று தான் அணிந்திருந்த ஷூவை காட்டிய ஸ்ரீராமை பார்த்து "நீ இவ்வளவு பரந்த மனசோட இருப்பன்னு நான் நினைக்கில... குடு... குடு... என்னோடத நான் எதுக்கு வேஸ்ட் பண்ணனும்..." என்று வாங்க போக "விட்டா பண்ணிடுவ ராட்சசி..." என்று அவளது தலையில் நங்கென்று கொட்டினான் ஸ்ரீராம்!

"எருமை மாடு ஏன்டா கொட்டி தொலையற... வலிக்குது..." என்று தலையை தடவி கொண்டே



இருட்டில் தேட அவளது கைக்கு கிடைத்தது ஒரு குச்சி... எடுத்து படீரென்று ஸ்ரீராமை ஒரு அடி அடிக்க துள்ளி கொண்டு திரும்பியவன்...

"பிசாசு அறிவே இல்லையா உனக்கு... ஏன்டி டிஸ்டர்ப் பண்ணி தொலையற... நான் வீக்என்ட்ட சூப்பரா அத்தையோட சாப்பாட்டோட கொண்டாடி இருப்பேன்... பாண்டிச்சேரின்னு சொல்லவும் கொஞ்சம் ஜொள்ளு விட்டுவிட்டு வந்துட்டேன்... இப்போ இப்படி தனியா புலம்ப விட்டுட்டாளே!" புலம்ப ஆரம்பிக்கவும்

"டேய் ஸ்ரீராமா சாப்பாட்டு ராமா... உன்னை யார்டா இங்க அழைச்சாங்களாம்... நீயா என் கூட தொத்திகிட்ட... பிரெஞ்சு பீச் ஆசைல... இப்ப புலம்பி புண்ணியமில்ல அசட்டு ராமா" என்று சிரிக்கவும்.

"சொல்லுவடி... இன்னமும் சொல்லுவ... பிசாசு... சென்னைல இருந்து பாண்டிச்சேரிக்கு இன்வெஸ்டிகேஷன் மண்ணாங்கட்டிபிகேஷன்னு கடத்திட்டு வந்துட்டு..."

"ஆமா நீ பெரிய மன்மதனாக்கும்... உன்னை போய் கடத்தி நான் என்னடா பண்ணப்போறேன்... அட்லீஸ்ட் இந்த கம்பெனி ஓனர கரெக்ட் பண்ணினாலும் பரவால்ல... ச்சே ச்சே.... ஓவரா திங்க் பண்ணாத... இருக்கற ரெண்டு கிராம் மூளையும் உருகிடும்..." என்று தலையை சிலுப்பி கொண்டு சொல்லவும் அவளை ஒரு அடி வைத்த ஸ்ரீராம்,

"உனக்கு ஒன் கிராம் மூளை கூட இல்ல ஆத்தா... மூளையே இல்லாத ஒரு மனிதப்பிறவின்னா நீ தான்! இங்க பாரு திவி... மச்சான பகைச்சுக்காத... அய்யாவோட வால்யு உனக்கு இன்னும் தெரியல..." என்று ஸ்ரீராம் காலரை தூக்கி விடவும் முதுகை தடவி கொண்டே சுற்றி முற்றி பார்த்தாள் திவி.

"என்ன பார்க்கற?"

"இல்ல யாராச்சும் வேலிடேட்டோர் இருக்காங்களான்னு தான்... உன்னோட வால்யுவ அளக்க தான் ஸ்ரீ...." என்று சிரிக்காமல் நக்கலடித்து அவனது முதுகில் மறுபடி அடிக்கவும் திரும்பிய ஸ்ரீராம்...

"நம்ம வால்யு எல்லாம் அளக்க ஆளே கிடையாது.. இதெல்லாம் எப்படி உனக்கு தெரிய போகுது? நீ தான் ஒரு தத்தி ஆச்சே!" வலுவாக அவளது தலையில் கொட்டினான்.

"சனியனே... ஏன்டா இப்படி கொட்டி தொலைக்கற... எருமை எருமை... உயிரே போகுது..." தலையைத் தடவிக் கொண்டே கொஞ்சம் சத்தமாக கூறியவளை முறைத்து பார்த்தான் ஸ்ரீ!

"இப்படியே உன் செங்கல் கால வாயை ஓபன் பண்ணிவை.. சொன்னாலும் சொல்லாட்டாலும் நம்ம ரெண்டு பேரோட உயிர் போய்டும்... அறிவு கெட்ட கூமுட்டை... வாயை மூடி தொலை... இல்லைன்னா நாம இப்ப பண்ணிட்டு இருக்கற வேலைக்கு மாட்டினா அவ்வளவுதான்! இது தி கிரேட் கார்த்திகேயனோட



கோட்டை... அதை ஞாபகம் வெச்சுக்கோ..." அது தனி அலுவல் அறை... உயர்திரு கார்த்திகேயனின் தனிப்பட்ட அலுவல் அறையை குடைந்து கொண்டிருந்தனர் நமது துப்பறியும் சாம்புவின் வாரிசுகள்!

"ஆமாம்ல..." என்று அப்போதுதான் உணர்ந்தது போல தலையை தட்டி கொண்டு தேடவந்ததை தேட ஆரம்பித்தாள்! செய்ய வந்த வேலையை சரியாக பார்க்க ஆரம்பித்தாள்...

"ஸ்ரீஈஈஈஈஈஈஈ..." எதையோ பார்த்தவள் ஸ்ரீராமை பார்த்து கத்த

"என்ன திவி..." அவசரமாக திரும்பினான்!

"ஐ காட் இட் மேன்!" அவளது கண்களில் தெரிந்த ஒளி பெருமையாய் ஒளிர்ந்தது! திவ்யாவின் கைகளில் ஒரு டைரி! புரட்டியவர்கள் வயிற்றை கலக்கியது! ஏனென்றால் கார்த்திகேயன் இன்னின்ன தேதிகளில் இன்னாருக்கு எல்லாம் எவ்வளவு பணம் லஞ்சமாக கொடுத்தான் என்பதை அக்குவேறு ஆணிவேறாக எழுதி இருந்தான்! பார்த்ததும் இருவருமே துள்ளி குதித்தனர்!

"ஹே மக்கு... செமமாட்டு மாட்டி இருக்கு... சூப்பர் ஸ்கூப் செல்லம்... அசத்திரலாம்ல..." ஸ்ரீராம் சந்தோஷத்தில் குதித்தான்!

"பின்ன... யாரோட கைங்கர்யம் இது... தி கிரேட் திவ்யா... அதை ஞாபகம் வெச்சுக்கோ மக்கு மாமா..."

"ஓகே ஓகே. வெயிட்... யாரே வர்ற மாதிரி தெரியுது திவி... சைலன்ஸ் பா..."

சொன்ன மாதிரி இருவர் ஒரு பார்சலை சுமந்து கொண்டு உள்ளே வந்து கொண்டிருந்தனர்! வைத்து விட்டு சுற்றிலும் பார்த்தவர்கள் பிரித்து சிறு சிறு பையில் அடுக்க ஆரம்பித்தனர்! இந்த இரவில் இவர்களுக்கு என்ன வேலை... இங்கே? என்று புரியாமல் திவ்யாவும் ஸ்ரீராமும் அவர்களை சத்தம் போடாமல் கவனித்து கொண்டிருந்தனர்! திடீரென்று பூனை கத்தும் சத்தம் கேட்க என்னவென்று பார்ப்பதற்கு ஒருவன் எழுந்து போக பின்னர் இன்னொருவனின் செல்பேசி அழைக்க அவனும் போக அவசரமாக அந்த பார்சல் இருக்கும் இடத்திற்கு ஓடிய ஸ்ரீராம் அதில் இருந்து இரண்டு வேறு வேறு பொட்டலங்களை எடுத்து கொண்டு வந்து அவசரமாக ஒளிந்திருந்த இடத்துக்கு வந்து நின்று கொண்டான்! குண்டூசி விழும் சப்தம் கூட கேட்கும் போல இருந்தது அந்த இடத்தின் அமைதி! நேரம் போய் கொண்டிருக்க அந்த இருவரும் அவர்களது வேலையை பார்த்து கொண்டிருந்தனர்! விடிவதற்கு சிறிது நேரம் இருக்கும் போது வந்தவர்கள் விட்ட வேலையை தொடர்ந்து சிறு சிறு பைகள் ஆக்கினர்... அதை ஒரு பெரிய பையில் போட்டு கொண்டு வெளியே இருந்த ஒரு கண்டைனர் லாரியில் ஏற்றி கொண்டனர்! இப்போது ஸ்ரீராம் கையில் அந்த இரண்டு பொட்டலங்களும் இருக்க.



"ஹே ஸ்ரீ... சீக்கிரம் வா..." திவ்யா அவனை அவசரப்படுத்தினாள்! அவசரமாக வேறு வழியாக வெளியே வந்த இருவரும் மறைவாக நிறுத்தியிருந்த பைக்கில் ஏறி அந்த லாரியை தொடர்ந்தனர்! வெளியே விடிந்து கொண்டிருந்தது! இரவு முழுவதும் சிறிது கூட தூக்கம் இல்லாமல் அங்கே ஆராய்ந்த களைப்பே இல்லாமல் இரண்டு ஜீவன்களும் அந்த லாரியை துரத்தி கொண்டு சென்றனர்!

மதகடிப்பட்டு வழியாக ஹைவேவில் பறந்தது அந்த லாரி! விடாமல் துரத்தி கொண்டு ஓட்டினான் ஸ்ரீராம்! பின்னால் அமர்ந்து இருந்த திவ்யா அதை அப்படியே கேமராவில் சுருட்டி கொண்டிருந்தாள்!

வேகமான குளிர்காற்று முகத்தில் அறைய ஒட்டிகொண்டிருந்த ஸ்ரீராமின் மனதிலும் திவ்யாவின் மனதிலும் ஒரே எண்ணம் தான்... "நாம் தேடி வந்த பிரச்சனை மிகப் பெரியது."

விழுப்புர செக்போஸ்ட் நெருங்கி கொண்டிருந் தது! மதகடிபட்டில் இருந்தே இன்னொரு ஜீப்பும் அந்த லாரியை தொடர்ந்து கொண்டிருந்தது! கண்டிப்பாக அது ரோந்து வாகனம் தான் என்பது இருவருமே அறிந்தது தான் பின்னால் தொடர்ந்து போனால் கண்டிபாக ஏதாவது விஷயம் கிடைக்கலாம் என்பது உறுதியாகியது இருவருக்குமே!

திடீரென்று விழுப்புர செக் போஸ்ட்டில் அந்த லாரியை தடுத்து நிறுத்த முயன்றனர் அந்த சரக

போலீஸ்! ரோந்து வாகனங்களும் முன் காலை நேரத்தில் அந்த இடத்தை கடக்கும் வாகனங்களும் மட்டுமே இருக்க இன்ஸ்பெக்டர் அந்த லாரியை நிறுத்த சொல்லி கையை காட்ட... யாருமே எதிர்பார்க்காத நேரத்தில் அந்த லாரியில் இருந்தவன் குதித்து தப்ப முயல... அவனை இரண்டு பேர் துரத்தில் கொண்டு சென்றனர்!

லாரியை சோதனையிடுவது ஆரம்பித்தது! இவற்றையெல்லாம் சற்று தூரம் தள்ளி நின்று கொண்டு க்யூவில் இருந்த வாகனங்களுக்கிடையே இருந்து படமாக்கி கொண்டிருந்தாள் திவி! இருவருக்கும் உச்சபட்ச பதட்டம்! உண்மையில் அவர்கள் தேடி வந்த பிரச்சனை வேறு! இங்கே நடந்து கொண்டிருக்கும் வேறாக அவர்களுக்கு தோன்றியது! ஹெல்மெட்டை எடுத்து அணிந்து கொண்ட திவி...

"ஸ்ரீ முன்னாடி போ... அந்த இன்ஸ்பெக்டர் கிட்ட போ..."

"வேணாம் திவி... பார்த்துடுவாங்க..." என்று சொல்லி கொண்டு திரும்பிய ஸ்ரீராம் அவள் ஹெல்மெட் அணிந்து இருப்பதை பார்த்து புன்னகைத்து கொண்டு முன்னே சென்றான்! அது வெறும் ஹெல்மெட் இல்லை... ஸ்பை கேமரா பொருத்துத்தபட்ட ஹெல்மெட். அதற்கான விசை அவளது கையில் இருந்தது... உடனடியாக ப்ளூடூத் மூலமாக எந்த படிவத்திற்கும் மாற்றிக் கொள்ள கூடியது! அதை



அணிந்து கொண்டு முன்னே சென்றால் அவர்கள் பேசுவதையும் பதிவு செய்யலாம் அல்லவா... திவியின் இந்த யோசனை வெற்றிகரமாக செயல்பட கார்த்திகேயன் அந்த இன்ஸ்பெக்டரிடம் பேசிய அனைத்தையும் பதிவு செய்தாள்! அவனிடம் பேசிவிட்டு வைத்த இன்ஸ்பெக்டர் உடனே இன்னொரு போன் செய்தார்!

"சார் நான் விநாயகம் பேசறேன்..."

"சொல்லுங்க விநாயகம்..."

"சார்... இங்க கார்த்திகேயன் சார் லாரி ஒண்ணு... செக்போஸ்ட்ல நிற்குது..."

"ஏன் நிற்குது விநாயகம்... அனுப்ப வேண்டியதுதானே?"

"சார்... இல்ல..." என்று தயங்கி விட்டு "ஸ்பிரிட் கண்டைனர செக் பண்ணினதுல கொஞ்சம் நார் கொடிக்ஸ் கிடைச்சு இருக்கு!" "வாட்... என்ன கிடைச்சு இருக்கு?" அந்த குரலில் அதீத அதிர்ச்சி!

"எல்எஸ்டி, ரோஃபினால், அப்புறம் ஜிஎச்பி சார்... எதுக்குமே சிபோரம் கூட இல்ல.. பெர்மிஷன் லெட்டரும் இல்ல... கார்த்திகேயன் சார் கிட்ட சொல்ல ஆரம்பிக்கும்போதே குதிக்கறார்... ஆனா இது சின்ன பிரச்சனை இல்லையே... அதனால தான் சார் உங்க கிட்ட ஒபினியன் கேக்கலாம்னு போன் பண்ணினேன்!"

சிறிது நேரம் யோசித்த கமிஷனர், "விட்டுடுங்க விநாயகம்... சப்போஸ் நாம கைய வெச்சா சிஎம்ல இருந்து எல்லாரும் தலையிடுவாங்க... இது பெரிய இடத்து விவகாரம்... வேணாம்... விட்டுடுங்க..."

"ஆனா ஏதாவது பிரச்சனை வந்தா?"

"அப்போ பார்த்துக்கலாம் விநாயகம்..."

"ஒகே சார்..." போனை வைத்து விட்டு சிறிது நேரம் யோசித்த விநாயகம்.

"ச்சே... எதுக்கு தான் இந்த வேலைக்கு வந்தேனோ? இந்த கார்த்திகேயன் மாதிரி மொள்ள மாரிங்களுக்கு சேவகம் செய்ய வேண்டி இருக்குதே... இவனுங்களுக்கு தேவை பணம்... இந்த போதை மாத்திரை எத்தனை பேரோட வாழ்க்கைய நாசம் செய்றதுக்கோ? கடவுள் தான் காப்பாத்தணும்..." புலம்பி கொண்டே அந்த கண்டைனர் லாரியை விடுவித்தார்!

இவை அத்தனையும் தனது ஹெல்மெட் கேமரா மூலம் படமாக்கி கொண்டிருந்த திவிக்கு மனம் கொதித்தது! வைஷ்ணவி அண்ணிக்கு இப்படி ஒரு அண்ணனா?

"கார்த்திகேயா உன்னுடைய வண்டவாளம் எல்லாம் தண்டவாளம் ஏற போகிறது!" மனதிற்குள் சூளுரைத்து கொண்டாள்!

"ஸ்ரீ... அப்படீன்னா நம்ம கைல இருக்கற அந்த ரெண்டு பேக்கட்டும் அந்த போலீஸ்காரர் சொன்ன



மாதிரி எல்எஸ்டி அண்ட் அதர் நார்கொடிக்ஸா?" வண்டியை ஒட்டி கொண்டிருந்த ஸ்ரீராமிடம் கேட்க

"கண்டிப்பா அப்படித்தான் இருக்கும் திவி! என்னன்னு முழுசா இறங்கி பார்த்துடலாம்..." அவனது வண்டி மறுபடியும் பாண்டியை நோக்கி சென்று கொண்டிருந்தது!

"ஏன்டா மறுபடி பாண்டி போற? இப்ப இந்த வீடியோவ டெலிகாஸ்ட் பண்ண வேண்டாமா? நாம சென்னை போகணும் ஸ்ரீ..."

"இல்ல திவி... இப்போதைக்கு இந்த வீடியோவ இப்போ ரிலீஸ் பண்ணா உஷார் ஆய்ட மாட்டாங்களா அந்த க்ரூப்?"

"ம்ம்ம் ஆமா..."

"அதனால முழுசா, அப்படி முடியலைன்னா இன்னும் கொஞ்சமாவது இன்வெஸ்ட்டிகேட் பண்ணிட்டு ஆதாரங்கள சேகரிச்சிட்டுதான் இதை வெளியிடனும் திவி!"

"அதுவும் கரெக்ட்தான் ஸ்ரீ... அப்படியே பண்ணிடலாம்..."

"அதிசயம் தான் போ... என்னோட கருத்த நீ ஒப்புக்கற? எங்க இருந்து மழை வரப் போகுதுன்னு தெரியலியே?" என்று கூறியவனை தலையை பிடித்து மாவாட்டுவது போல் ஆட்ட.

"ஏய்... சனியனே... முடிவை விட்டு தொலை... நீ ஆட்டுற ஆட்டுல என் முடி எல்லாம் உன் கைக்கு வந்திடும் போல இருக்கே.. அப்புறம் நான் கல்யாணத்துல சொட்டை தலையோட தான்டி நிற்கணும்..." வண்டியை ஓட்டிகொண்டே அலறினான்!

"எனக்கு ஓகே தான்டா மாமா... டோன்ட் ஒர்ரி... நீ சொட்டை மண்டையா இருந்தாலும் உன்னை நான் காலம் முழுக்க கண்கலங்காம வைச்சுக்கறேன்!" என்று நக்கலாக கூறி விட்டு சிரித்தவளை கண்ணாடி வழியாக பார்த்து சிரித்தவன்,

"சாஹித்யாக்கு ஓகேன்னா எனக்கும் ஓகே தானப்பா... என்ஜாய் ஸ்ரீராம் என்ஜாய்... கண்ணா ரெண்டு லட்டு திங்க ஆசையா?" என்று ஏற்ற இறக்கத்தோடு கூறிவிட்டு சிரிக்க.

"படவா... உனக்கு இப்படி வேற ஆசை இருக்கா... மவனே நீ இன்னைக்கு தொலைஞ்சடா..." என்று நமுட்டு சிரிப்பு சிரித்து கொண்டு

"இந்தா பிடி... யாரோ உன்கிட்ட பேசணுமாம்..." ஓட்டி கொண்டிருந்தவனிடம் செல்பேசியை குடுக்க திரையை பார்த்தால் சாஹித்யா சிரித்து கொண்டிருந்தாள்!

"ஹாய் சகி... சொல்லுடா..." வண்டியை ஓட்டி கொண்டே காதுக்கு கொடுத்தவன்,

"மவனே... ரெண்டு லட்டு திங்க ஆசையா இருக்கா?" கேள்வி வந்து விழுந்து வேகத்தில்



அரண்டவன் அப்படியே அவனது வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு கெஞ்ச ஆரம்பித்தான்!

"ஹய்யோ சகி... நீ அரையும் குறையுமா கேட்டு இருக்கடா... அது இல்ல அர்த்தம்..."

"அப்புறம் வேற என்னவாம்? அதுல மாடுலேஷன் வேறயா? உனக்கு அவ்வளவு கொழுப்பு ஏறி போச்சா? உன் முகரைக்கு நானே அதிகம்... உனக்கு இன்னொன்னு கேக்குதா?"

"டேய் சகி... இந்த லூசு ஏதாவது சிண்டு முடிஞ்சு விட்டுட்டான்னு காலங்கார்த்தால நீயும் இப்படி சண்டை போடுற? இங்க அந்த எருமை ஜாலியா உக்கார்ந்துட்டு இருக்கா... ஏய் பிசாசு... எப்போ போன் பண்ணி தொலைச்ச?" அவளிடம் கெஞ்சி கொண்டே திவியை பார்த்து கடித்தான்!

"ஏன் அவனை திட்ற? நீ பண்ற லொள்ளுதனத்துக்கு அவ பாவம் என்ன பண்ணுவா?" தனது தோழியை விட்டு கொடுக்காமல் அதற்கும் சண்டை போட

"என்னது இந்த எருமை பாவமா? சகி... வேணாம்... உனக்கு நேரம் சரி இல்லை... இது தான் என்னை இங்க இழுத்துட்டு வந்து இப்போ உன் கிட்டயும் மாட்டி விட்டுவிட்டு அப்பாவி ரேஞ்சுக்கு ஒரு லுக் விட்டுட்டு இருக்காடா... நாம நேர்ல பேசிக்கலாம் சகி..."

"நேர்ல என்ன பேச போற? என்னமோ பிரெஞ்சு பீச் போக போறேன்னு சொன்னியாம்ல... அங்கேயே போய் இருந்துக்கோ... சென்னை பக்கம் அதுவும் நிலா டிவி பக்கம் வந்துடாத..."

"ஐயோ. இந்த கொள்ளிவாய் பிசாசு இப்படி எல்லாம் வேற போட்டு குடுத்து இருக்காளா? சகி... என்னை பத்தி உனக்கு தெரியாதா? நீ இருந்தா உலக அழகி பக்கத்துல இருந்தா கூட நான் திரும்பவே மாட்டேன்..."

"நான் இல்லாததுனாலதான் அங்க கண்டபடி சைட் அடிச்சுட்டு இருக்கியா?"

"ஐயோ. நானா சைட்டா... சைட் அடிக்க இங்க யாருடா இருக்கா?"

"டேய் என்னை கடுப்பேத்தாத... வளைச்சு வளைச்சு திவிய சைட் அடிச்சியாம்ல... அதையும் பண்ணிட்டு இப்படி வேற பேசறியா?"

"யார? போயும் போயும் இந்த பிசாசையா? சகி... சொல்றதே சொல்ற ஒரு பொண்ணா பார்த்து சொல்ல கூடாது?" என்று அவளிடம் நொந்து போய் கூறவும் அது வரை சிரித்து கொண்டே அவனது கெஞ்சல்களை பார்த்து கொண்டிருந்த திவி...

"ஏன்டா கோட்டான்... என்னை பார்த்தா பொண்ணு மாதிரி தெரியலியா? உனக்கு எவ்வளவு கொழுப்பு இருக்கும்?" அவனது தலை முடியை பற்றி



மாவாட்டியவள் முடியை பிடித்து இழுத்து கொண்டே கேட்க.

"ஐயோ என்னை காப்பாத்த யாருமே இல்லையா? தனியா இருக்கற ஒரு கன்னி பையன இப்படி ரெண்டு மோகினி பிசாசுங்க கொடுமை பண்ணறாலுங்களே..."

அதைக் கேட்டு சிரித்த திவி கொஞ்சம் சத்தமாக,

"சகி... போதும்... இன்னிக்கு கோட்டா ஓவர்... பாவம் பையன் அழுகிறான்... நாளைக்கு மிச்சத்த வெச்சுக்கலாம்..." என்று கூறவும் அந்த பக்கம் சாஹித்யா சிரிப்பதை கேட்டு,

"அடப்பாவிகளா! ரெண்டு பேரும் சேர்ந்து கலாய்ச்சுட்டு இருக்கீங்களா? ச்சே ச்சே பசங்கள ரேக் பண்ற பொண்ணுங்கள எங்க போய் கம்ப்ளைன்ட் பண்றது? ஆண்களுக்கு கண்டிப்பா ஒரு சங்கம் வைக்கணும்..."

"ஓகே நல்லா வை... ஆனா ஒண்ணே ஒண்ணு சகின்னு பக்கத்துல வந்துர மாட்டில்ல... அப்போ பார்த்துக்கறேன்..." சாஹித்யா அவனது வீக் பாயிண்ட்டை தொட.

"ஹய்யோ... செல்லம்... பட்டு... குட்டி... நான் எப்படா குட்டி அப்படி சொன்னேன்... சும்மா லுலுளாய்கி..." என்று சொல்லி கொண்டிருக்கும் போதே,

"டேய் நல்லவனே... உன்னோட மிட்நைட் மசாலாவ ஸ்டாப் பண்ணு... இங்க ஒரு பச்ச புள்ள

இருக்கறத மறந்துருவீங்களே ரெண்டு பேரும்..." என்று கூறவும் சிரித்துக் கொண்டே செல்பேசியை வைத்தான் ஸ்ரீராம்!

இவர்கள் மூவரும் இப்படித்தான்! தன்னுடனே வளர்ந்த காரணத்தால் அவளை தனது அத்தை மகள் என்பதை தாண்டி மிக நெருங்கிய சிநேகிதியாகத்தான் பார்த்தான் ஸ்ரீராம்! அதைவிட அவளை பெண்ணாக பார்த்ததே இலலை என்று தான் கூற வேண்டும்! ஒருவருக்கு தெரியாமல் இன்னொருவர் யோசிக்க கூட மாட்டார்கள்... அவளது தோழி ஸ்ரீராமை காதலிப்பதை அறிந்து அவனிடம் முதலில் கூறியவளும் திவ்யாதான்! திவ்யாவின் எண்ணங்களும் ஸ்ரீராமின் எண்ணங்களும் மிக சரியாக ஒரே கோட்டில் தான் இருக்கும். அவள் நிலா டிவியில் சேர்ந்த போது அவளுக்கு பாதுகாப்புக்கு மட்டுமில்லாமல் அவனுக்கும் மிகவும் பிடித்தே இந்த துறைக்கு வந்தான்! இவர்கள் இப்போதைய குறிக்கோள் அவர்களது நிகழ்ச்சியை முதலிடத்தில் தக்க வைப்பதோடு மட்டுமில்லாமல் வருங்காலத்தில் ஒரு செய்தி நிறுவனம் ஆரம்பிப்பது தான். இவர்களின் தோழமையை உயிருக்கு உயிரான சிநேகிதத்தை முழுமையாக புரிந்து அங்கீகரித்து அதனாலேயே ஸ்ரீராம் மேல் உயிரானவள் சாஹித்யா... திவ்யாவின் இன்னொரு உயிர் தோழி!

யோசனையாக இருந்த திவ்யாவை பார்த்து ஸ்ரீராம்,



"என்னடா... என்ன யோசனை?"

"இல்ல ஸ்ரீ... ஒரு ஐடியா..." தயங்கினாள்!

"ம்ம்ம்... சொல்லுடா..."

"நாம கார்த்திகேயன நேர்ல பார்த்தா என்ன?"

"வாட்..." அவனது குரலில் இருந்த அதிர்ச்சி அவன் இதை எதிர்பார்க்கவில்லை என்பதை தெரிவித்தது!

"ஆமாம் ஸ்ரீ... அவன் அப்படி அவன் இப்படின்னு மற்றவங்க சொல்றத நாம ப்ரோக்ராம்ல சொல்றதுக்கு பதிலா அவனை நேர்லயே பார்த்தா என்ன ஸ்ரீ?"

"சொல்றது கரெக்ட் தான்டா... ஆனா அவன் ரொம்ப டேஞ்சர்ப்பா... கிட்டத்தட்ட இங்க தாதா மாதிரியாம் திவி... நம்ம நோக்கம் தெரிஞ்சா நாம அவ்வளவுதான்... அதை புரிஞ்சுக்கோ..."

"புரியுது ஸ்ரீ... ஆனா நம்ம வைஷ்ணவி அண்ணி இருக்காங்களே... அவங்களை பார்க்க போற மாதிரி போலாம்... போனதுக்கப்புறம் ஏதாவது ஸ்கூப் கிடைக்குதான்னு பார்க்கலாம் ஸ்ரீ... எப்படி இது ஓகே வா?"

"வாவ்... ஆமாம்ல... வைஷுக்கா அண்ணன் தானே கார்த்திகேயன்... ச்சே அதை நான் மறந்துட்டேன்..."

"இதுக்கு தான் ஸ்ரீ கிட்னி இங்க இருக்கணும்..." என்று தலையை காட்டவும் "ஹாஹா... நிஜமாவே உனக்கு அங்க கிட்னி தான் இருக்கு.... பிரைன் கிடையவே கிடையாது..." என்று தலையில் தட்டி விட்டு சிரித்தான்!

"ஆமா நீ என் கூட இருக்கும் போது எனக்கு எப்படிடா இருக்கும்..."

"ஆமாம்டி... அதான் உனக்கும் சேர்த்து ஆண்டவன் எனக்கு அதிகமா பிரைன வச்சு படைச்சுட்டானே..."

"டேய் ஓவரா ஆடாத... அடங்கிடுவ...

- The Argument continuessssss.........



## 5

பிள்ளைகள் இருவரும் தொலைக்காட்சி பார்த்து கொண்டிருக்க வைஷு அவர்களுக்கு உணவு ஊட்டி கொண்டிருந்தாள்... என்றுமே மங்கைக்கு குழந்தைகளை வேலை செய்பவர்களின் பொறுப்பில் விடுவது பிடிக்காத ஒன்று... அவர்களுக்கான எந்த வேலையாக இருந்தாலும் ஒன்று மங்கையோ அல்லது வைஷ்ணவியோ தான் செய்து பழக்கம்! வெட்டியாக



அழகு நிலையத்துக்கும் நண்பர்களுடன் அரட்டை அடிக்கவும் குழந்தைகளை வேலைக்காரர்களின் பொறுப்பில் விடும் பெண்களை கண்டாலே வெறுப்பவர் மங்கை... அதே பழக்கம் தான் அவரது பிள்ளைகளுக்கும்.

வைஷ்ணவியின் செல்பேசி இனிமையாக கூவியது!

"ஹாய் அண்ணி... எப்படி இருக்கீங்க?"

"ஹே வாலு... என்ன அதிசயம்? இந்நேரத்துக்கு அதுவும் சன்டே... படுக்கை அவ்வளவு சீக்கிரமா விட்டுடுச்சா உனக்கு?"

"ஹலோ... என்ன... நீங்க தான் சீக்கிரம் எழுந்துப்பீங்களா? நாங்க என்ன அவ்வளவு சோம்பேறியா?"

"சரி சரி... காலையிலேயே உன் கிட்ட வம்பு வேணாம்... சொல்லுடா... என்ன விஷயம்?" தானாக சரண்டர் ஆனாள் வைஷ்ணவி... தன்னை விட வயதில் சிறு பிள்ளையிடம் எதற்கு வாக்குவாதம் என்று!

"உங்க ஊர்ல மணக்குள விநாயகர் கோயிலுக்கு எப்படி போறது? நாங்க இப்போ இந்திரா காந்தி சிலை கிட்ட இருக்கோம்... ரூட் தெரியல அண்ணி..." இப்படி கேட்கவும்... அடப்பாவி என்பதை போல் பார்த்தான் ஸ்ரீராம்! இப்படி ஒரு ரூட் இருக்கா அவங்க வாயாலேயே வீட்டுக்கு கூப்பிட வைக்க என்று ஆச்சரியமாக பார்த்து கொண்டிருக்க.

"அட திவி... பாண்டிலையா இருக்க? நானும் இங்க தாண்டா இருக்கேன்..." சந்தோஷமாக அப்பாவியாக வைஷ்ணவி கூற.

"அதுதான் எனக்கு தெரியுமே..." என்று மனதில் நினைத்தவாறு,

"ஹை அண்ணி... நீங்களும் இங்க தான் இருக்கீங்களா? அண்ணன் அழைச்சுட்டு வந்தாங்களா?" ஒன்றுமே தெரியாதவள் போல விசாரிக்க.

"அடங்கொக்கா மக்கா... இது உலக மகா நடிப்புடா சாமீ..." என்று ஸ்ரீராம் நக்கலாக சிரித்து கொண்டே வாயசைத்து திவியை பார்த்து கண்ணடிக்க அவளும் ஒன்றுமே தெரியாதவள் போல ஒரு லுக் விட்டு விட்டு வைஷ்ணவியிடம் பேச்சை தொடர்ந்தாள்!

"இல்லடா இங்க ஒரு விசேஷம்... அண்ணனுக்கு கல்யாணம் பிக்ஸ் ஆகி இருக்கு... அதுக்கு சேலை எடுக்கற பங்கஷனுக்கு வந்தேன்... நீ அங்கேயே வெயிட் பண்ணு... டிரைவர அனுப்பறேன் திவி..." அவளுக்கு சந்தோஷத்தில் குதிக்க தோன்றியது! ஆஹா பழம் நழுவி பால்ல விழுதுடா... என்று நினைத்தவாறே

"ஹய்யோ அண்ணி... வீட்டுக்கு இன்னொரு நாள் வரேன் அண்ணி... இப்போ நானும் ஸ்ரீயும் வேலை விஷயமா வந்து இருக்கோம்..."

"மூச்... ஒண்ணும் சொல்லாத... ஒழுங்கா வீட்டுக்கு வந்துட்டு நீ எந்த வேலையா இருந்தாலும்



பார்க்க போகலாம்... மீறி பேசுன அத்தைக்கு தான் போன் பண்ண போறேன்..."

"ஹய்யோ... வேணாம் வேணாம்... சரி அண்ணி நாங்க வரோம்... ஆனா டிரைவர் எல்லாம் வேணாம்... வீடு எங்க இருக்குன்னு சொல்லுங்க... நாங்களே வந்துக்கறோம்..." என்று கூறி முகவரியை வாங்கி கொண்டு செல்பேசியை வைத்தாள்!

"உப்ப்ப்ப்..." இல்லாத காலரை தூக்கி விட்டு திவி சிரிக்க

"மகராசி... உனக்கு ஆஸ்கார் அவார்டே தரலாம்... என்ன நடிப்பு... கமல் தோத்துடுவார் போல இருக்கே..." ஸ்ரீ நக்கலடிக்க.

"எப்பூடி..." என்று சிரித்தாள் திவி!

❖ ❖ ❖

"யார் கண்ணா போன்ல?" மங்கை கேட்க,

"திவிதாம்மா... பாண்டி வந்திருக்காளாம்... மணக்குள விநாயகர் கோயில் போகணுமாம்... வழி கேட்டா... நான் தான் வீட்டுக்கு வான்னு சொன்னேன் மா..." அப்பாவியாக சொன்ன வைஷுவை பார்த்து கார்த்திகேயன்,

"சென்னைல இருந்து பாண்டி வர தெரியுது... மணக்குள விநாயகர் கோயிலுக்கு வழி தெரியலையா? என்று நக்கலாக கேட்ட அண்ணனை பார்த்து முறைத்து,

"அண்ணா ப்ளீஸ்... மாமாக்கு குளோஸ் ரிலேடிவ்ஸ் அண்ணா... அதோட அந்த அங்கிள் மாமாவோட க்ளோஸ் பிரெண்டும் கூட... தயவு செஞ்சு எக்குதப்பா எதுவும் பேசி வச்சுடாத... ப்ளீஸ்"

"ஹேய் வைஷு... நான் எதுக்கு எக்குதப்பா பேச போறேன்? இந்த மாதிரி ஆளுங்களோட சகவாசமே எனக்கு வேண்டாம்... எனக்கு கொஞ்சம் வேலை இருக்கு... ரூமுக்கு போறேன்... நீ சீக்கிரம் கிளம்பு... பசங்களையும் கிளப்பு..."

"எங்கண்ணா போறோம்?" ஆர்வமாக கேட்டாள் வைஷ்ணவி!

"நேத்தே பசங்க கிட்ட சொல்லி இருந்தேன்ல.. இன்னைக்கு சன்டே மார்க்கெட் அழைச்சுட்டு போறேன்னு... அப்படியே ஒரு ரவுண்டு போயிடு வரலாம்டா.... ஓகேவா..."

அண்ணா... ப்ளீஸ்... அப்படீன்னா ஒரு ரெக்வெஸ்ட்..." வைஷு தயங்கவும்..

"ம்ம்ம்.. சொல்லுடா..." புன்னகைத்து கொண்டே,

"ஷாலினியை கூப்பிடலாமா? நல்லா பழகிட்டா நமக்கு நல்லதுதானேண்ணா..." கண்களில் ஆசையோடு கூறவும்,

"ம்ம்ம்... ஓகேடா... நீ பேசி வர சொல்லு..." என்று அனுமதி அளித்து விட்டு அவனது அறைக்கு சென்றான்!



விதி என்பது தனியாக வருவதல்ல... நம்மிடையே உலவி கொண்டிருப்பதுதான்... அது தான் நமது வார்த்தைகள்... நம்முடைய எண்ணங்களே வார்த்தை களாகின்றன... வார்த்தைகளே செயல்களாகின்றன... செயல்களே ஒருவனை நல்லவன் என்று கெட்டவன் என்று நிர்ணயிக்க உதவுகின்றன... அத்தகைய எண்ணங்களில் நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்... இல்லையென்றால் விதி நமது வார்த்தைகளில் விளையாடி விடும்...

திவ்யா வருவது நிச்சயமாக கார்த்திகேயனின் விதியை நிர்ணயிக்க தான் என்பது அவனது தங்கைக்கு தெரியுமா? தெரிந்தால் தான் விட்டு விடுவாளா? அது தான் இயற்கையின் சூத்திரம்! ஒவ்வொருவருக்கும் நாடகத்தில் ஒவ்வொரு பாத்திரம் கொடுத்து விட்டு நாடகத்தின் இயக்குனரான இயற்கை எவரும் அறியாத இடத்தில் மறைந்து கொள்கிறாள்... திவ்யா, ஷாலினி, கார்த்திகேயனின் வாழ்க்கை இனி அந்த இயற்கையாகிய விதியின் கைகளில்... என்ன நடக்கிறது என்பது தான் பார்ப்போமே!

✣ ✣ ✣

"ஹய்ய்யி.... திவிக்கா ஆஆஆ..." கனிஷும் மனிஷும் ஆர்ப்பாட்டமாக வரவேற்றனர்!

பைக்கை நிறுத்தி விட்டு உள்ளே நுழைந்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்தவாறு வியந்து

கொண்டே சென்றனர்... இருக்காதா பின்னே! வீடா அது?... மினி சொர்கமல்லவா!

புதுவையின் ஒரு சில பகுதிகள் கட்டட கலைக்கு பெயர் பெற்றவை! அதில் ஒயிட்டவுனும் ஒன்று... அழகுணர்ச்சி மிகுந்த பிரெஞ்சு கட்டட கலை கொஞ்சும் இடம்... கடைல பார்த்தவாறு அமைந்திருந்தது அந்த பிரெஞ்சு மாடல் பிரம்மாண்ட பங்களா... மிக அழகான தோட்டமும் சில்லென்று வீசும் கடற்கரை காற்றும் இருவரையும் மயக்கியது... காற்றிலே மிதந்து வந்த சுகந்தமான வாசம் அதோடு சேர்ந்த சில்லென்ற காற்று... இருவரையும் வேறு உலகத்திற்கு கொண்டு சென்றது!

"ஸ்ரீ... செம லொகேஷன் இல்ல..."

"ம்ம்ம் ஆமா திவி... விட்டா இங்கேயே படுத்து தூங்கிடுவேன்... இந்த காத்துக்கே கண்ணு சொக்குதுடா..."

"உஷ்... நீ தூங்கறதுலேயே இரு... வந்த வேலைய முதல்ல பாரு... அப்புறமா தூங்கலாம்..." என்று அவனிடம் ரகசியம் பேசியவளை பார்த்துதான் அந்த வரவேற்பு! அந்த குழந்தைகளை பார்த்த திவி அடுத்த நிமிடம் குழந்தையாகி போனாள்!

"ஹேய்ய்யி செல்லம்ஸ்..."

பெரியதாக புன்னகைத்து கொண்டே கையை நீட்ட கனிஷ்கர் ஒடி வந்து கட்டி கொண்டான்!



மனிஷா, பின் பக்கத்தை அணைத்து கொள்ள மாடியிலிருந்து எதேச்சையாக கவனித்த கார்த்திகேயனின் புருவங்கள் உயர்ந்தன!

தொலைகாட்சியில் பார்ப்பதை விட நேரில் பார்க்க மெழுகு பொம்மையாக இருந்தாலும் அழுக்கு ஜீன்ஸ் அணிந்து தூக்கம் தொலைந்த கண்களோடு அலைந்து திரிந்த அசதியோடு இருந்தாள்! தனது நீண்ட முடியை சுருட்டி தலையில் ஒரு க்ளிப்பில் அடக்கி... பார்க்க இருவருமே மிகுந்த சோர்வாக நலுங்கிய நிலையில் இருந்தனர்!

"என் கிட்ட சொல்லாம இங்க வந்துட்டீங்க இல்ல... ரெண்டு பேர் கூடவும் கா..." என்று சிரித்து கொண்டே சொல்லவும்.

"அக்கா... அப்போ நீ இல்ல... ஷூட்டிங் போயிட்டான்னு பாட்டி சொன்னாங்களே..." கனிஷ்கர் பொறுப்பாக பதில் கூறி கொண்டே வர உள்ளே சென்றனர்!

"ஆமா திவி... இல்லைன்னா உன் கிட்ட சொல்லாம வருவமா?" இந்த நல்லவள் மனிஷா தான்!

"அச்சோ செல்ல குட்டீஸ்... நான் சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்டா..." என்று இருவரையும் கட்டி பிடித்து முத்தம் கொடுத்தாள் திவி!

"என்ன கொஞ்சல்ஸ் ஆப் இந்தியா எல்லாம் முடிஞ்சுதா... இல்ல ஏதாவது பாக்கி இருக்கா?" வைஷ்ணவி கேலியாக கேட்டு கொண்டு வர.

"ஏன் நாங்க கொஞ்சிகிட்டா உங்களுக்கு என்ன வலிக்குது?" அவளை குறும்பாக பார்த்து கொண்டே திவி கேட்க.

"அக்கா... வந்ததுல இருந்து அந்த லூசத்தான் கவனிக்கிறீங்க... என்னை கண்டுக்கவே இல்ல..." ஸ்ரீராம் குற்றபத்திரிக்கை படித்தான்!

"எப்படி ஸ்ரீ கண்டுக்கறது உன்னை?" என்று கூறி விட்டு தள்ளி நின்று அவனை மேலிருந்து கீழ் வரை பார்க்க.

"ஆஹா வைஷு கொஞ்சம் அக்கான்னு மரியாதையா கூப்பிட்டா என்னையவே கலாய்க் கிறீங்களே... திஸ் இஸ் டூ மச்..." சிரித்து கொண்டே ஸ்ரீராம்!

"ஓகே ஓகே ரெண்டு பேரும் ஃப்ரெஷ் பண்ணிட்டு வாங்க... டிபன் சாப்பிடலாம்..." சொல்லி முடிப்பதற்குள் திவி.

"வைஷ் வேர் இஸ் தி ரெஸ்ட் ரூம்..." பறந்தாள்! அவ்வளவு பசி! அப்போதுதான் தெரிந்தது!

"திவி... ரெஸ்ட்ரூம் போயா சாப்பிட போற?" கண்சிமிட்டி கொண்டே ஸ்ரீராம் கேட்க... வைஷ்ணவி அதை கேட்டு சிரித்தாள்!

"டேய் எருமை மாடு... அது எல்லாம் நீ தான் செய்வ... உனக்கு தான் பல்லு விளக்கறதுனாலே என்னன்னு தெரியாது... நானும் அப்படியா?"



"ஏன்டி பசுமாடு... ஆடு மாடு கோழி எல்லாம் பல்லு விளக்கிட்டா சாப்பிடுது... நான் இயற்கையா இருக்கேன்... அது ஏன் உனக்கு பொறுக்கல?"

"உவ்வே கருமம்... பசங்களா இவனுக்கு ஷேம் சொல்லுங்கடா..." என்று சொல்லவும் மனிஷாவும் கனிஷும்...

"ஸ்ரீராம் ஷேம் ஷேம்... ஸ்ரீராம் ஷேம் ஷேம்..." என்று குதிக்க வைஷ்ணவி வந்து,

"பசங்களா ஓடி போய்டுங்க... அப்புறம் சென்னை போனா மாமா உங்களை கிரிக்கெட்ல சேர்த்துக்க மாட்டாங்க..." என்று பயம் காட்டவும் இரண்டும் பதுங்கின!

"ஹப்பா இப்போ தான் முதல் முறையா வைஷ் எனக்கு சப்போர்ட் பண்ணி இருக்காங்க போல. ஸ்ரீராம் சிரிக்க.

"அது நீ அவங்க அம்மா வீட்ல இருக்கறதுனால ஸ்ரீ... ரொம்ப சந்தோஷ படாதே..." என்று கூறி விட்டு வைஷ்ணவியை பார்த்து,

"வைஷ் ரெஸ்ட்ரூம்..."

"ஏய் பறக்காதடி... கண்டிப்பா உனக்கு புவா உண்டு..."

"போடா இவேன... நைட் எல்லாம் கண் முழுச்சு இப்போ எனக்கு இருக்கற அகோர பசிக்கு விட்டா கல்யாண சமையல் சாதம் பாடிடுவேன்... என்னை டிஸ்டர்ப் பண்ணாத..."

"ஹாஹா... என்னமோ புதுசா அந்த பாட்ட பாட போற மாதிரி இல்ல பீலா விடறா பாருங்க வைஷு... அங்க தினமும் இந்த கச்சேரி தான..." சந்தடி சாக்கில் பிட்டு போட்ட ஸ்ரீராமை முறைத்து விட்டு முகம் கழுவி மற்ற வேலைகளை முடித்து விட்டு ஓரளவு தெளிவான முகத்தோடு டைனிங் டேபிள் டேபிள் வரும்போதே கார்த்திகேயன் வருவதற்கும் சரியாக இருந்தது! வேலையாட்கள் இருந்தாலும் மங்கையே உணவு பரிமாறும் வேலையை செய்து கொண்டிருந்தார்!

"வாடாம்மா... இந்த பக்கம் வந்து உட்க்காருடா" வைஷ்ணவி சாப்பிட அமர்ந்து இருந்த நாற்காலிக்கு பக்கத்தில் உட்கார சொன்னார்! கார்த்திகேயன் வந்தவன் ஸ்ரீராமை பார்த்து வீட்டு தலைவனாக,

"வாங்க வாங்க..." என்று கூறி புன்னகையோடு முழுக்கை போலோ ஷர்ட்டை இழுத்து விட்டு கொண்டு அமர்ந்தான்! மாநிறத்திற்கு சற்று மேலே.... ஆறடியில் கட்டுகோப்பாக இருக்கும் கம்பீரமான இந்த உருவத்திற்கும் போதை மருந்து கடத்தலுக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்குமா? ஆனால் இந்த கண்களில் கண்டிப்பு தெரிகிறதே தவிர கள்ளம் தெரியவில்லையே! வந்து உட்கார்ந்தவனையே வைத்த கண் வாங்காமல் ஆராய்ந்து கொண்டிருந்தாள் திவ்யா!

"திவி... ஏய்.. தவி..." வைஷ்ணவி உலுக்கவுமே இவ்வுலகத்திற்கு வந்தாள்!



"என்னண்ணி...?" ஒன்றும் புரியாமல் கேட்டவளை பார்த்து சிரித்த வைஷ்ணவி

"இல்ல உக்கார்ந்து கிட்டே தூங்கறியான்னு பார்த்தேன்... அம்மா ராட்டு தொக்கு வைக்கட்டான்னு கேக்கறாங்க... நீ பாட்டுக்கு கண்ண திறந்து வைச்சு கிட்டே தூங்கற? இல்ல எப்பவும் போல சைவம் தானா?" என்று கேட்கவும் அவளை நினைத்தே அவளுக்கு வெட்கமாக போனது! என்னதான் ஆராய்வது என்றாலும் இப்படியா... உலகத்தை மறந்து ஒரு ஆடவனை உற்று பார்ப்பது? தலையில் அடித்து கொள்ளலாம் போல இருந்தது!

"வைஷு... உலகமே அழிந்தாலும் அது அசைவம் சாப்பிடாதுப்பா... கழனி தண்ணிய ஊத்துங்க... அதுக்கு அது போதும்..." சொன்ன ஸ்ரீராமை பார்க்கும் போதே பற்றி கொண்டு வந்தது! கடுப்பாக அவனை பார்த்து விட்டு

"டேய் பிசாசு... அது நீ குடிக்கறது! நீயே குடிச்சிக்க... ஆன்ட்டி... எனக்கு இட்லி சட்னி போதும்..." என்று மங்கையை பார்த்து

"சார் முன்னாடி என் மானத்த வாங்காதடி..." கொஞ்சம் கீழிறங்கிய குரலில் கெஞ்சினான்!

"அப்படீன்னா... எனக்கு நீ கழனி தண்ணி குடுக்க சொன்னப்போவே யோசிச்சிசு இருக்கணும்டா மடையா..."

"ஓகே ஓகே. டீல் பேசிக்கலாம்..." சமாதான கொடி தூக்கினான் ஸ்ரீராம்!

"என்ன டீலா நோ டீலா வா?" சிரித்து கொண்டே ஸ்ரீராமை பார்த்து கார்த்திகேயன் கேட்க

"ஹிஹி... இல்ல சார்..." ஸ்ரீராம் மழுப்பினான்!

"அதென்ன ஸ்ரீராம்? வைஷு மட்டும் அக்கா... நான் சாரா?" மிகவும் சாதாரணமாக உரையாடியவனை பார்த்து ஸ்ரீராம் மலைத்து போனான்! இவனா கடத்தல் காரன்? இவனா புதுவையின் நிழல் அரசாங்கம்? இவனை கண்டா அத்தனை பேரும் நடுங்குகிறார்கள்? உலகம் முழுக்க பரந்து விரிந்த தொழில் சாம்ராஜ்யத்தின் அதிபதி இவனா?

"ஹாஹா.... நீங்க எனக்கு அண்ணன்... ஓகேவா?" ஸ்ரீராம் சிரிக்க

"ஓகே. சரி என்ன செய்றீங்க ஸ்ரீராம்?" என்று ஆரம்பித்தவன் சுவாரசியமாக அவனிடம் பலபல விஷயங்களை பேசி கொண்டே சாப்பிட அவ்வப்போது அவர்களின் பேச்சில் வைஷ்ணவியும் மங்கையும் ஆர்வமாக கலந்து கொண்டனர்! மறந்தும் திவி பக்கம் ஒரு நொடியும் திரும்பினான் இல்லை! திவியும் அதை பெரிதாக எடுத்து கொள்ளவில்லை... சாப்பிட்டு முடிந்த பின் குழந்தைகளோடு திவ்யா அவ்வப்போது செல்பேசியில் உரையாடி கொண்டே விளையாடி கொண்டிருக்க அப்போது! மட்டும் ஆச்சரியமாக ஒரு



பார்வை பார்த்து விட்டு ஹாலில் ஸ்ரீராமோடு அமர்ந்து மறுபடி உரையாடி கொண்டிருந்தான்! ஷாலினி வந்தாள்!

"வாம்மா... எப்படி இருக்கடா?" இளம் புன்னகையோடு வந்தவள் மங்கைக்கு வணக்கம் தெரிவித்து விட்டு நேராக கார்த்திகேயனின் அருகில் போய் உட்கார்ந்தாள்!

"நான் நல்லா இருக்கேன் அத்தை... ஆனா கார்த்தி அத்தான் பண்றது கொஞ்சம் கூட சரி இல்ல..." முகத்தில் ஆற்றாமை! அதற்கும் கார்த்திகேயன் எதுவும் பேசாமல அமர்ந்து இருக்க,

"ஏன்டா... என்ன ஆச்சு? புதுசா என்ன பிரச்சனை பண்ணி வெச்சு கார்த்தி?" மங்கையின் குரலில் நிஜமான பயம் கலந்த தவிப்பு!

"ஏன்... என்கிட்டே ஒரு வார்த்தை பேசினா என்ன? தேங்கா திட்டு போலாம்ன்னு இவரா கூப்பிட கூடாதா அத்தை?"

"இல்லம்மா... அவனுக்கு கொஞ்சம் வேலை இருந்தது... வைஷு உன் கிட்ட பேச போறதா சொன்னா... அதனாலத்தான் அவளையே சொல்ல சொன்னாப்ல... கார்த்தியே தானம்மா உன்னை கூப்பிட சொன்னாப்ல..." என்று அவர் உண்மை பாதி பொய் பாதி என வருங்கால மருமகளிடம் சமாளிக்க அவனே தான் அழைக்க சொன்னான் என்ற அவரது பொய் நன்றாக வேலை செய்தது! சிரித்து கொண்டே,

"தேங்க்ஸ் அத்தான்!" என்று புன்னகைத்து கொஞ்சம் நெருங்கி உட்கார்ந்தாள்... பதிலுக்கு சிறிய புன்னகை மட்டுமே பதிலாக கிடைத்தது! கொஞ்சம் சிரிச்சு பேசிட்டா என்னவாம் என்று ஷாலினியால் எண்ணாமல் இருக்க முடியவில்லை... அவள் நெருங்கி உட்காரவும் மற்றவர்கள் கவனிக்கும் முன்னர் சோபாவில் கொஞ்சம் தள்ளி உட்கார்ந்தான்... உள்ளே கடுகடுத்தது ஷாலினிக்கு! அவனாகவும் நெருங்குவ தில்லை, அதை மீறி நாமாக நெருங்கினாலும் இப்படி... ச்சே! என்றாகிவிட்டது அவளுக்கு! ஆனால் அவளால் அப்படியே விட்டுவிடவும் முடியாதே... விஷயம் நடக்க வேண்டுமே!

"அத்தான்..." மறுபடி நெருங்கி வந்தாள். கார்த்திகேயனோ சங்கடத்தில் நெளிந்தான்... ச்சே! என்ன பெண் இவள்? எல்லோர் முன்னரே இப்படி பக்கத்தில் வந்து உட்கார்ந்து குழைகிறாளே! என்ன தான் செய்வது என்று தெரியாமல்.

"சொல்லும்மா...!" வலுக்கட்டாயமாக புன்னகையை வரவழைத்து பொறுமையை இழுத்து பிடித்து கேட்டான்!

"என் பிரெண்ட்ஸ் எல்லாம் பார்ட்டி கேக்கறாங்க அத்தான்... இரண்டு பேரும் ஹோஸ்ட் பண்ணி... ப்ளீஸ் அத்தான் அரேஞ்ச் பண்ணுங்களேன்..." எந்த அளவு குழைய முடியுமோ அந்த அளவு குழைந்து கேட்க அதை எல்லாவற்றையும் ஓரக்கண்ணில் பார்த்து சிரித்தபடியே குழந்தைகளிடம் விடையாடி கொண்டிருந்தாள் திவி! சட்டென்று எழுந்து நின்ற கார்த்திகேயன்,



"இல்லம்மா... எனக்கு இதெல்லாம் பிடிக்காது... இந்த விஷயத்துக்கு எல்லாம் என்னை கேட்க்காதம்மா..." நறுக்கு தெறித்தாற் போல அவன் சொல்லவும் அவளது முகம் சுண்டி போனது!

"ஏன் அத்தான்? இதுல என்ன தப்பு? கல்யாணத்துக்கு முன்னாடி ஒரு பார்ட்டி கேக்கறாங்க... அதை நீங்களும் சேர்ந்து ஹோஸ்ட் பண்ணனும்ன்னு... இதுல என்ன குற்றம் இருக்குன்னு எனக்கு தெரியலியே..." ஆற்றாமையோடு அவள் கேட்க

"சாரிம்மா... எனக்கு இதில விருப்பம் இல்ல... கல்யாணத்துக்கு முன்னாடி மட்டும் இல்ல... கல்யாணத்துக்கு அப்புறமும் தான்... இது மாதிரி பார்ட்டி அது இது எல்லாம்... கண்டிப்பா நோ தான்..." அதோடு முடிக்க எண்ணி மிக கண்டிப்பாக வந்து விழுந்தன வார்த்தைகள்! ஷாலினிக்கு கண்களில் குளம் தேங்கின!

"நீங்க பார்ட்டி போறதே இல்லையா... இல்ல ஹோஸ்ட் பண்றது இல்லையா? ஏன் அத்தான் இப்படி சொல்றீங்க..." இப்போவோ அப்போவோ என கண்ணீர் எட்டி பார்க்க தனது மருமகளின் நிலை புரிந்த மங்கை

"ஏன் கண்ணா... ஷாலினி ஆசைப்படறா இல்லையா... உன்னோட பிடிவாதத்த விட்டுட்டு அவளுக்காக..." என்று சொல்லி கொண்டிருக்கும் போதே குறுக்கிட்ட கார்த்திகேயன்,

"அம்மா அவ சொல்ற பார்ட்டி எல்லாம் பிசினெஸ் பார்ட்டிஸ்... அது இருந்து கிட்டே தான் இருக்கும்... ஆனா வீட்டு பொண்ணுங்க இந்த மாதிரி எல்லாம்... ச்சே... எனக்கு சுத்தமா பிடிக்கல... இதுல அந்த பொண்ணுக்கு நீங்க சப்போர்ட் பண்றதுன்னா பண்ணிக்கங்க... ஆனா என்னோட கொள்கைய விட்டு தர முடியாது..." சொல்லி கொண்டிருக்கும் போதே செல்பேசி அழைப்பு வர யார் என்ன நினைத்தால் என்னவென்று செல்பேச தனியாக சென்று விட்டான்... மங்கைதான் தவித்து வருங்கால மருமகளை சமாதானப்படுத்த முயற்சித்தார்... ஒரு வழியாக ஷாலினி சமாதானமாகி அமர்ந்து இருந்த ஸ்ரீராமை அப்போது தான் கவனித்தாள்... திவியையும்! மங்கை கைவேலையாக சமையலறைக்கு விரைய, குழந்தைகள் இருவரும் விளையாடி கொண்டிருந்தார்கள்.

"ஹாய்... நீங்க திவ்யா தானே... டிவி ஹோஸ்ட் தானே" அந்த புன்னகையை பார்த்து கொண்டே இருக்கலாம் போல இருந்தது திவ்யாவுக்கு... அவ்வளவு அழகு!

"ஆமாம் ஷாலினி... அறிமுகப்படுத்தவே மறந்துட்டேன்... இது திவ்யா தான்.. இது ஸ்ரீராம்..." வைஷ்ணவி அறிமுகப்படுத்தினாள்!

இருவரையும் பார்த்து கை குவித்த ஷாலினி

"உங்களுக்கு பழக்கமா அண்ணி? நேர்ல பார்க்க இன்னும் ரொம்ப அழகு அண்ணி இவங்க!"



வெளிப்படையாக சொன்னவளை உடனே பிடித்து விட்டது திவ்யாவுக்கு! அவளுக்கு உறவுமுறையை கூறி புரியவைத்தாள் வைஷ்ணவி!

"நீங்களும் ரொம்ப அழகு தான் ஷாலினி... பார்த்துகிட்டே இருக்கலாம் போல இருக்கு..." மனதார கூறினாள் திவ்யா!

"ஆஹா என்னென்னமோ நடக்குதே... பொண்ணுங்க ரெண்டு பேரும் பாராட்டிக்கறாங்களே! பாண்டில சுனாமி தான் வரப்போகுது..."

"அந்த சுனாமிய உன் வாய்க்கு திருப்பி விட்றலாம் ஸ்ரீ... டோன்ட் ஒர்ரி!" என்று சிரித்தவளை பார்த்து ஷாலினியை காட்டி,

"ஏன் திவி... இவங்கள பாரு... எப்படி அத்தான்னு அழகா கூப்பிடறாங்க... நீயும்தான் இருக்கியே தத்தி... என்னைக்காவது அப்படி கூப்ட்டு இருக்கியா?" சிரித்து கொண்டே கூற,

"நான் யாரடா கூப்பிடறது லூசு..." புரியாமல் கேட்டவளை பார்த்து,

"ஏய் பிசாசு... என்னை பார்த்தா அத்தான் மாதிரி தெரியலியா?"

"உன்னை பார்த்தா... அடப்பாவி... இரு இரு..." என்று சொல்லிவிட்டு செல்பேசியை எடுக்க,

"இரு ஆத்தா... யாருக்கு பண்ற?"

"சகிக்கு தான்... உன்னோட லீலைய சொல்லத்தான்..."

"அடிப்பாவிகளா... இப்படித்தான் ரெண்டு பேரும் சேர்ந்து என்னை பேயோட்டறீங்களா?" நொந்து போய் கேட்டவனை பார்த்து வாய் விட்டு சிரித்த திவியை இடையிட்டாள் வைஷ்ணவி!

"ஸ்டாப் ஸ்டாப்... ஏய் இது என்ன புது கதாபாத்திர என்ட்ரி? சகி?" புரியாமல் கேட்டவளிடம் சிறிது தயக்கத்தோடு ஸ்ரீராம்

"அது நான் லவ் பண்ற பொண்ணு வைஷு... வீட்ல யார்கிட்டயும் இப்போ சொல்லிடாதீங்க..." நேரடியாகவே சொல்லி முடித்தான்! கார்த்திகேயன் செல்பேசியை வைத்து விட்டு வந்து அமர்ந்தான்!

"ஆனா உங்க ரெண்டு பேருக்கும் இல்ல வீட்ல..." வைஷ்ணவி தயங்க

"ஹய்யோ... இவளே போயா. இது வரைக்கும் அப்படி ஒரு நினைப்பு கூட எனக்கு வந்தது இல்ல... இவளுக்கும் தான் வைஷு... அதோட..." தயங்கி

"பொண்ணா இது? பேய்... பிசாசு... ஆம்பிளையா பிறக்க வேண்டிய ஜட்டம்... தப்பி தவறி பொண்ணா பிறந்துட்டு என்னை கொடுமை படுத்திட்டு இருக்கா... இந்த எருமைய ப்ரீயா குடுத்தா கூட எனக்கு வேணாம்..." அனைவரும் வாய் விட்டு சிரிக்க, திவி



கையில் கிடைத்த சோபா குஷனை எடுத்து அவனை அடித்தாள்!

"எருமை மாடு... காட்டேரி... உனக்கு எவ்வளவு லொள்ளு இருக்கும்... ப்ரீயா குடுத்தா கூட வேணாமா கொழுப்புடா உனக்கு... இரு மவனே உனக்கு இருக்கு..."

"கார்த்தி அண்ணா... என்னை இப்போவே பார்த்துக்கோங்க... ரெண்டு குட்டி சாத்தான்களும் சேர்ந்து என்னை ஒரு வழி பண்ணப் போதுங்க..." அவனது தலை முடியை பற்றி எப்போதும் போல மாவாட்ட

"ஒண்ணு இங்க இருக்கு... இன்னொன்னு எங்க ஸ்ரீராம்?" சிரிக்காமல் வாழை பழத்தை கேட்டது போல கேட்ட கார்த்தியை பார்த்து,

"ஆஹா அண்ணா... அந்த இன்னொண்ணும் இதுதான்..." என்று சொல்ல.

"இல்ல ஸ்ரீராம்... ஒண்ணு இங்க இருக்கு... அந்த இன்னொன்னு எங்க இருக்கு?" புன்னகையோடு கேட்ட கார்த்திகேயனை பார்த்து ஸ்ரீராம் வாய் திறக்க முயல அவனது வாயை கை வைத்து மூடிய திவி,

"அந்த இன்னொண்ணு சென்னைல நிலா டிவில வேலை செய்யுதுங்க... பேர் சாஹித்யா... ரெண்டும் ஒரு வருஷமா லவ் பண்றேன்னு என்னை தான் கொடுமை பண்ணுதுங்க..." என்று சொல்லவும் மற்ற அனைவரும் சிரித்தார்கள்!

"ஏன்டி... நாங்க என்ன உன்னை கொடுமை பண்ணினோம்?" வீ......." கொண்டு எழுந்தான் ஸ்ரீராம்! திவ்யா அவனை பார்த்து சிரித்து விட்டு வைஷ்ணவியிடம் சொல்வது போல,

"வைஷு அண்ணி... யார்க்கு நடுவுல வேணும்னாலும் போய்டலாம் ஆனா லவ் பண்ற ரெண்டு பேர் நடுவுல போய்ட்டா அவ்வளவுதான்... ரெண்டு மாத்தி மாத்தி அதுங்க லவ் ஸ்டோரிய சொல்லி சொல்லி நம்ம காத தீய்ச்சு ஒரு வழி பண்ணிடுவாங்க... பிவேர் ஆப் லவர்ஸ் அண்ணி..." என்று

"ஏன்மா லவ் பண்றவர்களுக்கு நடுவில நீங்க எதுக்கு போறீங்க... தேவை இல்லாம?" சட்டென்று கார்த்திகேயன் கேட்க ஒரு நிமிடம் அனைவரின் முகமும் விழுந்து எழுந்தது! ஆனால் திவியோ,

"அது எப்படிங்க அய்யா... நம்மால முடிஞ்ச வரைக்கும் அவங்களை டிஸ்டர்ப் பண்ணனுமே அய்யா... இல்லைன்னா அய்யா என்று வார்த்தைக்கொரு அய்யா போட்டு பேசி அவனுக்கும் தக்க பதிலாக குடுக்க

"என்ன அய்யாவா?" அதை கேட்டு சிரிப்பதா இல்லை கோபப்படுவதா என்றே புரியவில்லை அவனுக்கு!

"ஆமாங்க அய்யா..." அவள் சொன்ன தோரணையை பார்த்து வைஷ்ணவிக்கும் ஸ்ரீராமுக்கும் புரிந்தது... அவளது கிண்டல்!



"சரி சரி... நான் அம்மான்னு சொன்னதுக்காக நீங்க அய்யான்னு சொல்றீங்க..." என்று சொல்லி சிரித்தவனை பார்த்து

"அட ஆமாங்க அய்யா... நீங்க ரொம்ப ஆஆஆஆஆ புத்த்த்தத்த்திசாலி..." என்று நீட்டி முழக்கியவளை பார்த்து மனம் விட்டு சிரித்தான்... எல்லோரும் தான்!

"உன்னை பத்தி வைஷு சொன்னப்போ பெருசா எடுத்துக்கல... ஆனா இப்போ பார்க்கும் போதுதான் எனக்கே புரியுது..." ஒருமையில் தாவி பேசியவனிடம்..

"ஆஹா... யானை வரும் பின்னே மணி ஓசை வரும் முன்னேவா... என்னை பத்தி ரொம்ப பெருமையா சொல்லி இருப்பாங்களே அண்ணி..."

தனது சட்டையில் இல்லாத காலரை தூக்கி விட்டு கொண்டாள்! ஆஹா இத்தனை நாளாக நம்மால் முடியாத ஒன்றை திவ்யா நிமிடங்களில் சாதித்து விட்டாளே என்றே எண்ணத்தோன்றியது ஷாலினிக்கு! அநியாயத்திற்கு நிச்சயமான பெண்ணை அம்மா என்ற அழைப்பவன் இவன் ஒருவனாகத்தான் இருப்பான் என்று நினைத்துக் கொண்டாள்!

"ம்ம்ம் சொன்னா! கொஞ்சம் கிராக்... கொஞ்சம் மெண்டல்... கொஞ்சம் லூசுன்னு..." சிரிக்காமல் அவளை வாரினான் கார்த்திகேயன்! வைஷ்ணவியை கடுப்பாக பார்த்து கொண்டே,

"அண்ணியீஈஈ..."

"ஐயோ இல்ல திவி... அண்ணா சும்மா சொல்றாங்க..." சொல்லி கொண்டிருக்கும் போதே திவியின் செல்பேசி அழைக்க,

"ஹலோ திவ்யா ஹியர்... நீங்க யார் பேசுறது?"

"...."

"தேங்க்ஸ் சார்... ரொம்ப சந்தோஷம்..."

"..."

"தேங்க்ஸ் பார் யுவர் காப்ளிமென்ட்ஸ் சார்..."

"..."

"ம்ம்ம்... கண்டிப்பா... வரேன்... ஓகே சார் தேங்க்ஸ்..."

"..."

"ஓகே நான் கொஞ்சம் பிசியா இருக்கேன்...."

"..."

"ஓகே ஓகே என்று ஒரு வழியாக செல்பேசியை வைத்து பார்த்து நமுட்டு சிரிப்பு சிரித்து விட்டு விட்டு ஸ்ரீராமை பார்த்து காலரை ஏற்றி விடுவது போல செய்து...."

"நம்ம அருமை பெருமை எல்லாம் மத்தவங்களுக்கு தெரியுது... உனக்கு எங்க ஸ்ரீ தெரியுது?" என்று நக்கலாக ஸ்ரீராமை பார்த்து கேட்க.



"நம்ம அருமை பெருமையா? இங்க நீ மட்டும் தானே இருக்க?" கார்த்திகேயன் கேட்க.

"சார்... நமக்கு நாமே மரியாதை குடுக்கலைன்னா எப்படி... எப்போவும் நம்மள நாங்க நாங்கன்னு தான் கூப்டுக்கறது... இதுக்கு பேர் தான் சார் நமக்கு நாமே திட்டம்..." என்று கிண்டலாகவே கூற.

"அட கடவுளே... ஸ்ரீராம்... நீ சொன்னது நூறு சதவித உண்மை... கஷ்டம்..." என்று கார்த்தி பெருமூச்சு விட

"என்னங்க... எது கஷ்டம்" கேட்ட திவ்யாவை பார்த்து,

"இல்ல ப்ரீயா குடுத்தா கூட வேண்டாம்ன்னு ஸ்ரீராம் சொன்னாப்லையே... அது தான் உண்மைன்னு சொன்னேன்.... பாவம் அந்த ஜீவன்..."

"எந்த ஜீவன் அண்ணா..." ஸ்ரீராம் கேட்டு சிரிக்க.

"இந்த லூச கட்டிக்கப் போற பாவப்பட்ட ஜீவன் தான் ஸ்ரீராம்... ப்ச் ரொம்ப பாவம்..." இப்போது ஸ்ரீராமின் செல்பேசி அழைக்க சகி என்று திவ்யாவிடம் உதட்டை குவித்து சொல்லி காட்டி விட்டு வெளியே சென்றான்... எப்படி இருந்தாலும் கெஞ்சலும் மிஞ்சலும் இருக்குமல்லவா... ஆனால் இங்கே ஒரு புயல் உருவாக போவதை அவள் அறியவில்லை!

"நாங்க ஷாலினிய பார்த்து பாவபடற மாதிரிங்களா சார்?" கிண்டலாகவே கேட்டாள் திவி!

ஷாலினியின் முகத்தில் பயம் படர்ந்தது! ஏதாவது சொல்லி கார்த்திக்கை கோபப்படுத்தி விட போகிறாளோ என்று உள்ளுக்குள் ஏதோ நெருடியாது!

"கரெக்டா சொல்ற திவி... சூப்பர்..." வேறு யார் வைஷ்ணவி தான், திவ்யாவுக்கு ஆதரவாக ஷாலினிக்காக களம் இறங்கினாள்!

"ஆஹா மகளிர் அணி கூட்டணியா? சரி சரி." கார்த்திகேயன் சிரிக்க,

"சார் சிரிச்சு மழுப்பாதீங்க... நீங்க ஒரு மேல் ஷாவனிஸ்ட்ன்னு நான் சொல்றேன்..." அதிரடியாக அவன் மேல் அவள் குற்றம் சுமத்த.

"மேல் ஷவனிஸ்ட்டோ கீழ் ஷாவனிஸ்ட்டோ... என்னோட கொள்கை எனக்கு பெருசு தான்... அதுல மற்றவங்க தலையிட முடியாதில்ல... உனக்கு கூட தான் இந்த அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு எல்லாம் என்னன்னே தெரியமாட்டேங்குது... அதை பற்றி நான் ஏதாவது சொன்னேனா?" விடுவேனா என்று விவாதத்தில் இறங்கினான்!

"சார் முதல்ல அச்சம் மடம் நாணம் பருப்பு... ச்சே பயிர்ப்பு இதுக்கெல்லாம் விளக்கம் சொல்லுங்க..."

"ஏன் நீயே தான் ரொம்ப புத்திசாலி ஆச்சே... நீ சொல்லு..."

"அச்சம்னா தயக்கம் பயப்படறது, மடம் அப்படீன்னா ஒரு விஷயத்தையும் தெரிஞ்சுக்காம



மடத்தனமா இருக்கறது, நாணம் அப்படீன்னா ஜென்ஸ் பார்த்தா அப்படியே உருகி போய் கன்னங்கள் சிவந்தாள் ரேஞ்சுக்கு வெட்கபடறது... இன்னும் ஒண்ணு இருக்கே பயிர்ப்புன்னு ஒண்ணு அது இன்னும் மோசம்... ஆண்கள் தொட்டா அப்படியே புல்லரிச்சு போறது... இதையெல்லாம் எதுக்கு பெண்கள் கிட்ட எதிர்பார்க் கறீங்க? மிரண்டா ஒண்ணும் தெரியாத பெண்களை தான் ஆண்களுக்கு பிடிக்கும்... அதனால ஏற்படுத்தப்பட்ட, பெண்கள் மேல திணிக்கப்பட்ட ஒரு விஷயம் தான் பெண்களுக்கான இந்த குணங்கள்..."

"திவ்யா... ஆத்மார்த்தமா குடும்பம் நடத்தறவங் களுக்கு அவங்க மேல இதெல்லாம் திணிக்கபடறதா உணர்வு வர சான்சே இல்ல... இயற்கையா இருக்கற உணர்வுகள் தான்... நீ சொல்றது எல்லாம் வேலை இல்லாம பொழுது போகாம கிளப் மண்ணாங்கட்டின்னு அலையற பெண்கள் சொல்ற தத்துவ முத்துக்கள்.... ஏன் நீங்க குடும்ப பெண்களா இருங்கன்னு சொல்றது தப்பா? இல்ல அடக்கமா இருங்கன்னு சொல்றது தான் தப்பா?" கார்த்திகேயனுக்கு கோபம் வர பார்த்தது... ஆனால் திவ்யாதான் விட்டு விடுவாளா? விட்டு கூடிய ஆளா?

"ஏன் இதுல நாங்க என்ன குடும்ப பெண்களா இல்லாதத கண்டுட்டுட்டீங்க? அந்த காலத்துல பெண்கள் வெறுமனே பிள்ளை பெத்து தர்ற மெஷினாவும் ஆண்களுக்கு சுகம் தர்ற மெஷினாவும் தான் நடத்தப் பட்டாங்க... ஒண்ணுமே தெரியாம இருக்கறதுதான்

அழகுன்னும் ஆயகலைகள் அறுபத்து நான்கும் தெரிஞ்சிக்க வேண்டியது ஒரு பரத்தை தான்னும்... அதனால வீட்டு பெண்கள் படிக்க கூட கூடாதுன்னும் சொன்னாங்க..."

"அட கன்றாவியே... இப்படி கூடவா சொல்லி இருங்காங்க திவி?" வைஷ்ணவிக்கு எரிச்சலாக இருந்தது! அவளது உணர்வை வெளிப்படுத்தினாள்!

"ஆமா அண்ணி... அதுவும் இல்லாம இந்த நூற்றாண்டுக்கு முன்பு வரை பெண்கள் மேலாடை அணியவே அனுமதி இல்லாமதான் இருந்தது... அது தெரியுமா? அரச குடும்பம் ப்ரோகித குடும்பம் தவிர மற்ற பெண்கள் மேலாடை அணிய முடியாது வைஷு அண்ணி... கோயிலுக்கு போய் கவனிச்சு பாருங்க.... சிலைகளுக்கு மேல மாராப்பு இருக்காது... நம்ம பாட்டிங்களும் மேலே மாராப்பு போட மாட்டாங்க... அதை கவனிச்சு இருப்பீங்களே...."

"ஆமாம் கவனிச்சு இருக்கேன் திவி... ஆனா இதெல்லாம் நிஜமா?" ஆச்சரியப்பட்டாள் வைஷ்ணவி! மங்கை சமையலறையில் இருக்க ஸ்ரீராம் சகியிடம் கொஞ்சி கொண்டிருக்க வைஷ்ணவி, ஷாலினி மட்டும் இருவரின் இந்த சொற்போரை பார்த்து கொண்டிருந்தனர்!

"ஆமா... இந்த நூற்றாண்டுல தான் பெண்கள் கொஞ்சம் சுதந்திரமா இருக்க முடியுது.... சொத்துரிமை இருக்கு... ஆனா இதெல்லாம் சுலபமா வந்துடல... பாருங்க உங்க அண்ணன் மாதிரி இன்னமும்



ஷாவனிசம் பேசற ஆளுங்க இருக்கத்தான் செய்யறாங்க..." அது வரை பொறுமையாக கேட்டு கொண்டிருந்த கார்த்திகேயன்,

"அப்படீன்னா சுதந்திரம் அப்படீங்கற பேர்ல நீங்க செய்ய விரும்பறது என்ன? குடிச்சிட்டு கூத்தடிக்கறதா இல்ல நினைச்சவன் கூட எல்லாம் போறதா? நீ இந்த அளவு விவாதம் பண்றதால கேக்கறேன்... இப்போ பப்ல ஹோட்டல்ல பாரு... ஆண்களை விடவும் பெண்கள் கூட்டம் தான் அதிகம்.. கண்றாவியா அப்படி அலையறதுக்கு பேர் தான் பெண் சுதந்திரமா?"

"காமாலை கண்ணுக்கு எல்லாமே மஞ்சளாகத் தான் தெரியும் கார்த்திகேயன் சார்... சாதிக்கற எத்தனையோ பெண்கள் இருக்க உங்களுக்கு ஏன் ஒரு சிறு வட்டம் மட்டும் தெரியுது? அப்படீன்னா உங்க கண்ணுல தானே கோளாறு? என்னையே எடுத்துகோங்க... நானும் இந்த துறைல ஏதாவது சாதிக்கணும்ன்னு நினைக்கிறேன்... இன்னைக்கு காலைல ஒரு பேட்டி ஒளிபரப்பாகி இருக்குமே... அதுக்கு அவ்வளவு ரெஸ்பான்ஸ் கிடைச்சு இருக்கு தெரியுமா?... ஆனா உங்க மாதிரி ஆளுங்க தான் ஸ்பீட் பிரேக்கரே..." இப்படி அவனை நேரடியாக தாக்கவும் அவனது ஈகோ விழித்து கொண்டது!

"எது? கேனத்தனமா அணு மின்சாரம் வேண்டாம்னு ஒரு பேட்டி எடுத்தியே அதுவா?"

"அண்ணா... சீரியஸா பேசாத. அவ சின்ன பொண்ணு..." வைஷ்ணவி பயந்து அவனது கோபத்திற்கு அணை போட நினைக்க

"விவாதம்ன்னு வந்துட்டதுக்கப்புறம் சின்ன பொண்ணு என்ன... பெரிய பொண்ணு என்ன வைஷு" அவனால் பின்வாங்க முடியாது என்பதை அறிவித்தான்!

"அண்ணி... கொஞ்ச நேரம் இருங்க... தப்பு இல்ல... கருத்து ஒத்து போகலைன்னா இந்த மாதிரி விவாதம் வர்றது இயற்கைதானே..." என்று வைஷ்ணவியிடம் கூறி விட்டு கார்த்திகேயனிடம் திரும்பி

"எதை கேனத்தனம்ன்னு சொல்றீங்க?" என்று தானும் விவாதத்திற்கு தயார் என்பதை அறிவிக்க,

"நீ எடுத்த பேட்டிய தான்..." திவியின் முகத்தில் கோபம் கனன்றது!

"எப்பிடி நீங்க அப்படி சொல்றீங்க? ஒரே ஒரு கேள்வி... உங்களால அணு கழிவுக்கு ஒரு விடை சொல்ல முடியுமா?"

"ஏம்மா... நீயே இந்த அளவு யோசிக்கும் போது விஞ்ஞானிகள் எல்லாம் யோசிக்க மாட்டாங்களா? Nuclear Criticality Safety, Radiation Safety, Thermal Hydraulic safety, Structural integrity Safety ன்னு எவ்வளவோ இருக்கு... அதுவும் இல்லாம நியூகிளியர் வேஸ்ட் மேனேஜ்மென்ட் தனியா இருக்கு... நீங்க



இப்படி பண்றது எல்லாம் நாடு உருப்படாம போறதுக்கு துணை போறதுதான்! இவ்வளவு சொல்றியே பிளாஸ்டிக்க டிஸ்போஸ் பண்ண உருப்படியா ஏதாவது வழி இருக்கா? நீ சொல்ற அணு உலைய விட ஆபத்தானது இந்த பிளாஸ்டிக்... அதை யூஸ் பண்ணாம இருக்காங்களா? இல்ல அதை எரிக்காம தான் இருக்காங்களா? ஒண்ணு தெரியுமா... பிளாஸ்டிக்க எரிக்கும் போது வெளிப்படா டை ஆக்சேன் ஆயிரத்து ஐநூறு கிலோ மீட்டர் டிராவல் பண்ணும்... அதாவது கன்னியாகுமரியில் எரிச்சா சென்னைல இருக்கவங்க ளுக்கு புற்றுநோய் வரலாம்... அது தெரியுமா? ஒரு விஷயம், அந்த அணு உலைக்கு எதிர்ப்பு தெரிவிக்கறவங்க பேனர் கட்டறாங்களா இல்லையா?"

"ம்ம்ம் அதுக்கு..." முறைத்து கொண்டே கூற,

"அந்த பேனர்ல தாலியம்ன்னு ஒரு கெமிக்கல் கலந்து இருக்கு தெரியுமா? அதை சுவாசிச்சுகிட்டே இருக்கவங்க சீக்கிரம் பரலோகம் போக வேண்டியது தான்... ஸ்லோ பாய்சன்... ஓர் ஊர்ன்னு எடுத்துகிட்டா கல்யாணத்துக்கு பேனர் கருமாதிக்கும் பேனர்... எம்எல்ஏ தும்மினா கூட பேனர் கட்டுறாங்க... இதுல எல்லாம் சீர்கேடாத சுற்றுபுறம் தான் அணு உலைனால சீர்கெடுதா?...."

"இதெல்லாம் வெற்று விவாதம்... தலைமுறை எல்லாத்தையும் பாதிக்கற விஷயம் அணு உலை. அந்த ரேடியேஷன் புற்றுநோயை உண்டாக்க கூடியது

கார்த்திகேயன் சார்... அவன் கொஞ்சம் ஊர கெடுத்தான் நான் என் பங்குக்கு நாசம் செய்ய வேண்டாமான்னு சொல்ல வரீங்க... அதுதானே?"

"இது தான் கேனத்தனம்ன்னு சொன்னேன்... ஒரு சின்ன எக்சாம்பில் சொல்றேன்... நாலாயிரம் எக்ஸ்ரே மெஷின், முன்னூறு செல்போன் டவர் சேர்ந்தா ஒரு சின்ன அணு உலைக்கு சமம் அது தெரியுமா உனக்கு? உன்னால முதல்ல செல்போன் யூஸ் பண்ணாம இருக்க முடியுமா? ரேடியேஷன் பத்தி நீ பேசறியா? அணு உலை, அணு குண்டு ரெண்டையும் குழப்பிக்கறவங்க தான் இந்த வேலைய பண்ணிட்டு இருக்காங்க... அணு உலைக்கு யுரேனியம் 2-3% செறிவு இருந்தா போதும்... ஆனா அணு குண்டு செய்ய தொண்ணூறு சதவித செறிவு வேணும் திவ்யா... இப்போ இருக்கற நிலக்கரி, டீசல் எல்லாம் இன்னும் அறுபது வருஷத்துக்கு தான் வரும்... அதுக்கப்புறம் கரண்ட்டுக்கு என்ன பண்ண போறோம்? அதுவும் இல்லாம அணு உலைங்கறது செயின் ரியாக்ஷன்... ஆரம்பிச்சாச்சு... அதை நிறுத்த முடியாது... அதுனால நமக்கு நன்மைதான்.. எந்த இடத்தில தான் ரிஸ்க் இல்ல.. அது மாதிரியான ரிஸ்க் தான் இங்கயும் இருக்கறது!"

"இன்னொருத்தனுக்குப் புற்று நோய் வந்தாலும் பரவாயில்லை நான் ஏசி காற்றில் குளிர்கிறேன் என்பது ஈனத்தனம்... இப்படி சொல்றவங்கள கொண்டு போய் கூடங்குளத்துல உக்கார வைக்கணும்... அப்போ எப்பிடி



இப்படி சொல்வீங்கன்னு பார்க்கலாம்!" கடுப்பாகி கூறினாள் திவி!

"ஏன் திவ்யா... கல்பாக்கம் என்ன ஆயிரம் மைல் தள்ளியா இருக்கு? பக்கத்துல தானே. எங்களை விட சென்னை மக்கள் இன்னும் பக்கத்துல இருக்காங்க... இத்தன வருஷமா கல்பாக்கத்துக்கு பக்கத்துல நாங்க குப்பை கொட்டலியா... சுனாமி வந்தப்போ கூட ஒரு சின்ன டேமேஜ் கூட ஏற்படல. அது தெரியுமா உனக்கு?"

"சரி இப்போ என்ன சொல்ல வரீங்க கார்த்திகேயன் சார்?" கோபம் அதிகமாகி ஒரு புள்ளிக்கு வந்து சேர்ந்தாள் திவி! வைஷ்ணவி தடுத்து கொண்டே இருக்க ஷாலினியோ இவர்கள் இருவரும் என்ன பேசிக் கொண்டு இருக்கிறார்கள் என்பது கூட புரியாமல் இருந்தாள்... அவளை சொல்லியும் தவறில்லை... அவளுக்கு தெரிந்தது எல்லாம் எப்படி அழகான பணக்கார பெண்ணாக இருப்பது எப்படி என்பது மட்டும் தான்! அவளுக்கு போதிக்கப்பட்டதும் அவைதான்!

"மீடியால பேமஸ் ஆகணும்னா இப்படி எல்லாம் பேசனும்ன்னு ஒரு எழுதப்படாத விதி இருக்கு... உன்னை மாதிரி உப்புக்கு ஆகாத பெமினிசம் பேசணும், இந்த மாதிரி விஷயங்களை ஊதி பெருசாக்கி நாட்டோட முன்னேற்றத்த தடுக்கணும்... சுதந்திரம்ன்னு சொல்லிக்கிட்டு குடிச்சிட்டு ஊர் சுத்தணும்! இதுதானே நீங்க எல்லாரும் பண்றது?"

"ஏன்? நான் குடிச்சத நீங்க பார்த்தீங்களா?" சூடாக வந்து விழுந்தது நறுக்கென்ற கேள்வி! அப்போதுதான் உள்ளே நுழைந்தான் ஸ்ரீராம்!

"உன்னைன்னு சொல்லல... பொதுவா சொல்றேன்..." அலட்சியமாக கார்த்திகேயன் கூற.

"அண்ணா... வீட்டுக்கு வந்த பொண்ணு கிட்ட என்ன அண்ணா இப்படி பேசற? நீ பேசறது சரி கிடையாதுண்ணா..." அவளது வயிற்றில் பூச்சி பறந்தது! திவியோ பிடிவாதக்காரி! இது எதில் போய் முடியுமே என்று இருந்தது! திவ்யா அவளை கையமர்த்தி விட்டு,

"பொதுவா சொல்றத பொது மேடையல போய் சொல்லுங்க.... என்னை பத்தி என்ன தெரியும்ன்னு நீங்க இப்படி சொல்லலாம்?" சூடாகவே கேட்டாள்!

ஹே திவி... என்னடா நடக்குது இங்க?" அவனுக்கு இருவருக்குள் நடந்த விவாதம் பற்றி தெரியாததால் தலையும் புரியாமல் வாலும் புரியாமல் விழித்தான்! ஆனால் அதை பற்றி கவலை படாமல் கார்த்திகேயன்,

"சரி சொல்லு... நான் தெரிஞ்சுக்கறேன்... உன்னை பத்தி..." நக்கலாகவே கூற

"கண்டவங்க கிட்ட எல்லாம் நான் என்னை பத்தி சொல்லிக்கனும்ன்னு அவசியம் இல்ல..." கொதித்தது அவளது வார்த்தைகள்!



"திவி... என்ன பேசற நீ..." அதிர்ச்சியாக ஸ்ரீராம் அவளை அடக்க பார்க்க

"ஸ்ரீ... நீ பேசாத பொதுவா பேசறேன்னு கண்டபடி பேறவங்க கண்டவங்க இல்லாம வேற யாராம்?" கோத்தில் வெடித்தாள்! ஸ்ரீராம் இருதலைக் கொள்ளி எறும்பாக,

"அண்ணா என்ன அண்ணா? நான் ஒரு போன் பேசிட்டு வர்றதுக்குள்ள என்ன ஆச்சு? திவி இப்படி பேசறவ கிடையாதே... ஆனா ஏன் இப்படி இப்போ...." தோழியின் கோபம் புரியாமல் கோபத்துக்கு காரணமானவனிடமே முறையிட்டான்! அந்த நேரத்திலும், இப்படி விட்டு தராத சிநேகமா என்று கார்த்திகேயனால் வியக்கத்தான் முடிந்தது!

"ஒரு சாதாரணமான பேச்சு இந்த அளவு சீரியஸா எடுத்துகிட்டு வெடிக்கறது; அவங்க தான் ஸ்ரீராம்... அதுக்கு நான் என்ன பண்றது?" திவ்யாவிடம் காட்டிய அலட்சியத்தை இவனிடம் காட்ட முடியவில்லை கார்த்திகேயனால்!

"நானும் வேணாம் வேணாம்ன்னு சொல்லிகிட்டே தான் இருக்கேன் ஸ்ரீ... ரெண்டு பேரும் கேக்கவே மாட்டேங்கறாங்க.... நீயாவது சொல்லு ஸ்ரீ..." இருவராலும் கைவிடப்பட்ட நிலையில் ஸ்ரீயிடம் உதவி கேட்டாள் வைஷ்ணவி!

"வந்த இடத்துல என்னடா குட்டி இது.. காம் டௌன்டா... தங்கம்ல..." திவ்யாவை சமாதானபடுத்த

ஸ்ரீராம் முயல... மறுபடி கார்த்திகேயனுக்கு செல்பேசி அழைப்பு வர அதை எடுத்து அவன் பேசிக்கொண்டு ஓரக்கண்ணால் பார்த்து கொண்டிருந்தான்!

எங்கோ பாாத்தவள்... கார்த்திகேயனை திரும்பியும் பார்க்காமல்,

"கிளம்பலாம் ஸ்ரீ..." வந்த வேலையை மறந்து விட்டு பிடிவாதம் பிடித்தாள்.

"ஹேய் கண்ணா... என்னடா இது... சண்டை போட்டுக்கிட்டு என்னப்பா சின்ன பிள்ளையா நீ?" ஸ்ரீராம் சமாதானப்படுத்த முடியாமல் கார்த்திகேயனை உள்ளுக்குள் கோபத்துடன் பார்த்தவாறு திவ்யாவிடம் கெஞ்சி கொண்டிருந்தான்! வைஷ்ணவியும் உள்ளே இருந்து பரபரத்து வந்த மங்கையும் நொந்து போய் அவனை முறைத்தவாறே திவியை எப்படியாவது தடுத்து நிறுத்த முயல அனைத்தையும் தவிர்த்து விட்டு சென்றாள்!

கடைசியாக ஒரு முறை திவ்யா திரும்பி கார்த்திகேயனை பார்க்க அதே நேரம் அவனும் அவளையே பார்த்து கொண்டிருக்க... அப்போது அவன் அவள் கண்களில் பார்த்தது என்ன? வஞ்சமா? கோபமா? ஆற்றாமையா? வலியா? எதுவென்று பகுத்தறிய முடியாத ஒன்று அவனை தாக்கியது! உயிர் வரை ஊடுருவிய அந்த பார்வை கார்த்திகேயனுக்கு எதையோ உணர்த்தியது!



விதியின் வசப்பட்ட வழி.. திரும்ப இயலாத ஒரு வழி பாதை...

# 6

"அம்மா... நான் ஒத்துக்க மாட்டேன்... நான் இந்த பீல்ட்ல ஏதாவது சாதிக்கணும்மா... அம்மா ப்ளீஸ்... அப்பா கிட்ட சொல்லுங்க..." குணவதியிடம் கெஞ்சி கொண்டிருந்தாள் திவ்யா!

"எப்படியா இருந்தாலும் கல்யாணம்ன்னு ஒன்னு நீ பண்ணி தான் ஆகணும் திவி.. இப்போவே உனக்கு இருபத்து மூணு வயசு... உன் வயசுல எனக்கு கல்யாணமாகி விகாஷும் நீயும் பிறந்துட்டீங்க... சொன்னா புரிஞ்சுக்கோ கண்ணா..." குணவதியும் அவளை சம்மதிக்க வைக்க வழி தெரியாமல் விழித்து கொண்டிருந்தாள்!

"அம்மா அதெல்லாம் அந்த காலம்! இப்போ, பெண்ணுங்க எல்லாம் இருபத்து எட்டு ஒன்பதுல தான் கல்யாணத்த பத்தி நினைக்கறாங்க... என்னோட இப்போதைய குறிக்கோள் எல்லாம் நியூஸ் ஏஜென்சி ஒண்ணு தொடங்கணும்... இந்த நேரத்துல டைவர்ட் பண்ணாதீங்க... ப்ளீஸ்..." வீட்டில் அனைவரும் அமர்ந்து எப்படியாவது இந்த கல்லை கரைத்து

திருமணத்திற்கு ஒப்ப வைக்க முடியுமா என்று தலையை பிய்த்து கொண்டிருந்தனர்!

"சரி நீ வெளியே போனா டைவர்ட் ஆகும்ன்னு நினைச்சா ஸ்ரீராம் இருக்கவே இருக்கான்... அவனையே கல்யாணம் பண்ணிக்கோ... உன்னை நல்லா புரிஞ்சவன் தங்கம்... கண்டிப்பா உனக்கு அவன் ஹெல்ப்பா தான் இருப்பான்! ஆனா நீ தான் இல்லாத செண்டிமெண்ட் எல்லாம் பேசற!" குணவதி இப்படி கூறவும்... ங்கே என்று விழித்தான் ஸ்ரீராம்!

"மா... அவனை நான் என்னைக்குமே அப்படி நினைச்சதே இல்லை.. ஏம்மா இப்படி அசிங்கபடுத்தற?" திவ்யாவின் குரலில் டன் கணக்கில் எரிச்சல் இருந்தது!

"அத்தை... ப்ளீஸ்... உங்களுக்கு புரியற மாதிரி சொல்லணும்னா அவ எனக்கு தங்கை மாதிரி அவளை பார்க்க வர்றதா சொன்ன வரனையே வர சொல்லுங்க... இவளை நான் பேசி கரெக்ட் பண்றேன்..." அவளிடம் மற்றவர்கள் அறியாதவாறு கண்ணை சிமிட்டி விட்டு அவனது அத்தையிடம் கூறினான்! அதுவரை மௌனமாக கேட்டுக் கொண்டிருந்த ராமகிருஷ்ணன், திவ்யாவின் தந்தை,

"எது எப்படியோ ஸ்ரீராம்... வர்ற மாப்பிள்ளை ஓகே ஆகிட்டதுன்னா உடனே கல்யாணம்தான்... இதுல எந்த விதமான மாற்று கருத்துக்கும் இடமில்ல..." வேறு பேச்சுவார்த்தைக்கு தான் தயார் இல்லை என்பதை முடிவாக அறிவித்து விட்டு அவரது வேலையை பார்க்க



சென்றுவிட்டார்! ராமகிருஷ்ணன் பேசுவது குறைவு தான் என்றாலும் முடிவுகள் தீர்க்கமானதாகவே இருக்கும்... வீட்டில் குழந்தைகளுக்கு செல்லம் கொடுத்து பேசுவதோ அநாவசியமாக குழைவதோ அவருக்கு சரி வராது... கருத்துக்கள் வெட்டு ஒன்று துண்டு இரண்டு தான்... கண்டிப்பும் சேர்ந்து கொண்டதால் விகாஷும், திவ்யாவும் அவர்களது தந்தையிடம் பேசவே அஞ்சுவார்கள்... ஸ்ரீராம் கொஞ்சம் செல்லம்... பெற்றோர் அதாவது ராமகிருஷ்ணனின் தங்கையும் தங்கை கணவரும் இறந்து குழந்தையிலேயே மாமனின் மார்பை தஞ்சமடைந்த காரணமும் கூட... அப்போதிலிருந்து திவ்யாவின் உடன்பிறவாத சகோதரனாகிவிட்டான்! தோழமையும் சேர இணை பிரியாத பிணைப்பு அவர்களிடம்!

"மாமா சொல்லிட்டாங்க ஸ்ரீ... இவளை சம்மதிக்க வைக்க வேண்டியது உன் பொறுப்பு தான் கண்ணா... ப்ளீஸ் மா..." குணவதி அவரது பங்குக்கு கெஞ்சிவிட்டு போனார்! ஒப்புக்கு சப்பாணியாக இருந்த ரக்ஷிதா திவ்யாவை உணர்ச்சியற்ற பார்வை பார்த்தவாறே அவளது அறைக்கு சென்றாள்... விகாஷை சீக்கிரம் அறைக்கு வரும்படி பார்வையால் உத்தரவிட்டு விட்டு!

அவளும் போன பின்னரே விகாஷ் அவனது திருவாய் மலர்ந்து அருளினான்! அவனுக்கு அவனது மனைவி ரக்ஷிதாவிடம் கொஞ்சம்... இல்லை இல்லை அதிகமாகவே பயம்! ரக்ஷிதா, அவனது பெற்றோர் இருக்கும் போதோ திவ்யா இருக்கும் போதோ எதுவும்

பேசவே மாட்டாள் ஆனால் அவர்கள் இல்லாத நேரமாக பார்த்து கணவனை உண்டு இல்லையென்று செய்து விடுவான்! அதனால் அவன் எப்போதும் அவள் இருக்கிறாளா என்பதை பார்த்து விட்டே பேசுவது... அவளும் என்றைக்கும் புகுந்த வீட்டு சொந்தங்களோடு கலந்து போனதுமில்லை பேசியதுமிலலை! அவளுக்கு அவள் உலகம்... தனி உலகம்... அவளது தோழிகள், அவளது பெற்றோர், கடைசியாக விகாஷ்!

திருமணமாகி நான்கு ஆண்டுகள் முடிந்து இருந்தாலும் தாமரை இலை தண்ணீர் போல ஒட்டாமலே இருந்து வருபவள்! ஆனால் பக்கத்து வீட்டில் வசிக்கும் ராமகிருஷ்ணனின் நெருங்கிய நண்பரான ராஜகோபாலின் மருமகள் வைஷ்ணவி, ரக்ஷிதாவுக்கு நேர் எதிர்! சொந்தங்களை அரவணைத்து போவதிலும் யாருக்கும் விரோதமில்லாமல் உறவு முறைகளை நிர்வகித்து செல்வதிலும் அவளுக்கு நிகர் அவள் தான் என்று அவ்வப்போது குணவதி மனமுவந்து பாராட்டுவார்... அப்போதெல்லாம் தன் மகனிடம் அவர் சொல்வதும் ஒன்று தான்!

"குழந்தை பிறந்து ஐந்து வருடமாகி விட்டால் பாசம் தானாக வந்து விடும் விகாஷ்... கவலைப்படாதே" என்பது தான் அது!

ஆனாலும் வைஷ்ணவியை திருமணம் செய்து கொடுத்த நாளில் இருந்தே அவளை அறிந்து இருப்பவரால் எப்படி இந்த பெண் இந்தளவு



மென்மையாக இருக்கிறாள் என்று வியக்காமல் இருந்தது இல்லை! திவ்யாவிடம் கூறுவதும் வைஷ்ணவியை ஒப்புமைப்படுத்திதான்! அதனாலேயே ரக்ஷிதாவை விடவும் வைஷ்ணவியிடம் ஒட்டுதல் அதிகம் திவ்யாவுக்கு!

"ஏன்டா குட்டி கல்யாணம் வேண்டாம்ன்னு சொல்ற? யாரையாச்சும் மனசுல நினைச்சுட்டு இருக்கியா? என் கிட்ட சொல்லு குட்டி... நான் பார்த்துக்கறேன்... பயப்படாதே..." ஆதூரமாக விகாஷ் சொல்ல

"இல்லண்ணா... அப்படியெல்லாம் ஒண்ணும் இல்ல... வேணும்னா இவனை கேட்டு பார்த்துகோங்க..." என்று ஸ்ரீராமை கை காட்டி விட்டாள் திவ்யா!

"ஏன்டா உன்னை பத்தி தெரிஞ்சுக்க இந்த மடையன் கிட்ட தான் கேக்கணுமா? நீ என் தங்கை இல்லையா?"

"அப்படியா... ஆஹா ஸ்ரீ... விக்கிக்கு புதுசா நினைப்பு வந்துடுச்சு... அண்ணன்னு... எப்படி விக்கிண்ணா இந்த நினைப்பு வந்துச்சு.... இதுக்கு உங்க அருமை மனைவியார் மேதகு ரக்ஷிதாம்பாள் கிட்ட அனுமதி வாங்கீட்டீங்களா?" நக்கலாக திவ்யா கேட்கவும் அவனுக்கும் மனது உறுத்தவே செய்தது!

ஏனென்றால் அவள் கல்லூரி செல்லும் போது ஒரு நாள் ஸ்ரீராம் உடல்நிலை சரி இல்லாததால் விடுப்பு எடுத்துக்கொள்ள அவளை கல்லூரிக்கு அழைத்து

சென்ற ஒரே காரணத்தால் 'நீ என்ன டிரைவரா' என்று கூறி வீட்டில் பெரிய சண்டைக்கு வித்திட்டவள் ரக்ஷிதா! அவளை பொறுத்தவரை அவளது கணவன் அவளுக்கு மட்டுமே உரியவன்! அவளது சிறுபிள்ளைத்தனமான வாதங்களுக்கு குணவதி செவி சாய்க்க மாட்டாள் ஆனால் திவ்யாவுக்கும் ரக்ஷிதாவுக்கும் எப்போதும் முட்டிக் கொள்ளும்! தவறுகளை தட்டி கேட்கும் திவ்யாவின் குணமும் திவ்யாவின் அழகை, திறமையை, புகழை பார்த்து பொறாமை கொள்ளும் அண்ணியின் குணமும் ஒத்து போகாதல்லவா!

"குட்டி ப்ளீஸ்... என்னோட நிலைமை உனக்கு புரியறது இல்லடா...கொஞ்சம் புரிஞ்சுக்கோடா..."

"என்னண்ணா எனக்கு புரியறது இல்ல.. உன் மனைவியா இருந்தாலும் அவங்க தப்பு பண்ணினா கண்டிக்கணும்... அதை விட்டுட்டு செல்லம் கொஞ்சிகிட்டு அவங்க முந்தானை பின்னால மறைஞ்சுகிட்டு... ச்சே... அம்மா பாவம்ண்ணா..."

"என்னை என்னடா குட்டி பண்ண சொல்ற? ஏதாவது சொன்னா பெரிய சண்டைதான் வரும்... அப்புறம் கோபிச்சுகிட்டு அவங்க அம்மா வீட்டுக்கு போய்டுவா.. அம்மா சும்மா இருப்பாங்களா? போய் கூட்டிகிட்டு வான்னு என்னை உயிரை வாங்கிடுவாங்க... அவ பாதி உயிரை வாங்குறா நீங்க பாதி உயிரை வாங்குறீங்க... நானும் என்னதான் பண்றது?" நொந்து போய் கூறியவனை பார்த்து அவளால் இன்னமும் கோபப்பட முடியவில்லை! ஸ்ரீராம் இடையிட்டு,



"திவிக்குட்டி... மேரேஜ்னா அப்படித்தான்டா... கொஞ்ச நாளைக்கு யாராச்சும் ஒருத்தர் அட்ஜஸ்ட் பண்ணிதான் போயாகணும்... இங்க விக்கி அட்ஜஸ்ட் பண்றான்... இதுல என்ன இருக்கு... கொஞ்ச நாள் போனா சரியா போய்டும்... அப்புறம் பாரு ரக்ஷிதா உன் மேல காட்டுற பாசத்த உன்னாலேயே தாங்க முடியாது... போதும் போதும்னு சொல்ல போற..." என்று கூறி சிரிக்கவும்.

"போடா. உனக்கு எப்பவும் ஜோக் தான்..." என்று அவனை தலையணையால் அடித்தாள் திவ்யா!"

"சரி மச்சான்.. அந்த பாவப்பட்ட பிறவி யாரு? என்ன? ஒண்ணுமே சொல்லல..." ஸ்ரீ இப்போதாவது உனக்கு கேட்க தோன்றியதே!

"சுஷ்ருதா..." என்று விகாஷ் ஆரம்பித்தபோதே இருவருக்கும் தூக்கி வாரி போட்டது! அவர்கள் பாண்டி போய் விட்டு வந்து ஒரு வாரமாகி இருந்தது! கார்த்திகேயனை பற்றி... சுஷ்ருதா பற்றி இருவரும் சேகரித்த தகவல்கள் ஆதாரங்கள்... இருவரையும் பெரும் பீதியில் ஆழ்த்தி இருந்தது! வெளியிடலாமா வேண்டாமா என்று தவித்து கொண்டிருந்தனர்! சுஷ்ருதா என்ற பெயரே இருவருக்கும் அலர்ஜியாக இருக்க..

"என்னது...!!!" இருவரும் ஒரே குரலில் கத்த,

"ஹே. என்னப்பா... ரெண்டு பேரும் ஒரே மாதிரி எக்ஸ்ப்ரஷன் குடுக்கிறீங்க? சுஷ்ருதா பார்ட்னர்

மாசிலாமணியோட சன் அரவிந்தன் தான் பையன்..." என்று கூறவும் அந்த அதிர்ச்சி குறைந்தபாடில்லை!

"விக்கி... முதல்லயே சொல்லி இருக்கலாம்ல..."

"இதுல என்னடா சொல்றதுக்கு இருக்கு? ஒரு வாரமா ப்ரோசெஸ் போயிட்டு இருந்துச்சு... ஜாதகம் எல்லாம் பார்த்து பொருந்தி வந்தாதானே சொல்ல முடியும்! அரவிந்தன் ஜாதகம் தான் பக்கா மேட்சிங்கா இருக்குதாம் ஸ்ரீ..." என்று சொல்லவும் திவ்யாவுக்கு ஏனோ அந்த பேச்சே பிடிக்கவில்லை!

"பொண்ணு பார்க்க வீட்டுக்கு எப்போ வர்றாங்க விக்கி?" ஸ்ரீராம் வினவினான்!

"வீட்டுக்கு வரல ஸ்ரீ... ராஜகோபால் மாமாவுக்கு இன்னைக்கு தான் சஷ்டியப்த பூர்த்தி... தெரியும்ல..."

"ஆமாம்... வைஷு அத்தனை தடவை வந்து திவிய கொஞ்சிட்டு சொல்லிட்டு போனாங்களே..." அவளை ஓரக்கண்ணில் பார்த்து கொண்டே குறும்பாக அவன் கூற திவ்யாவின் முகமோ கடுத்தது!

"அந்த பங்க்ஷனுக்கு அவங்க வர்றாங்க... அப்படியே அங்க வச்சு பார்த்துக்கலாம்ன்னு வைஷு தான் ஐடியா குடுத்தாப்ல..." இது வைஷு அண்ணியின் வேலைதானா என்று மனம் குமுறினாள் திவ்யா!

"ரொம்ப முக்கியம்..." என்று கடுத்து விட்டு,



"அண்ணா எனக்கு மாப்பிள்ளைய பிடிக்க லைன்னா கல்யாணத்துக்கு ஒப்புக்க மாட்டேன்..." என்று அறிவிக்க

"பிடிக்கலைன்னாவா... சான்சே இல்ல... அரவிந்தன் எனக்கு நல்லா தெரிந்தவர்... கார்த்திக் அளவுக்கு பிரெண்ட் இல்லைன்னாலும் அரவிந்தன் கிட்ட நல்ல அறிமுகம் இருக்கு திவிக்குட்டி... வெரி ஹேன்சம்... எவ்வளவு பெரிய இடம் தெரியுமா? சுஷ்ருதால பார்ட் னர்னா சும்மாவா? கல்யாணத்த பத்தி நினைச்சு கூட பார்க்கலைன்னு சொல்லிட்டு இருந்தாப்ல... பொண்ணு நீ தான்னு சொன்னவுடனே ஓகே சொல்லிட்டாப்ல திவிக்குட்டி... யு ஆர் வெரி லக்கி யு நோ..." என்று சொல்லிவிட்டு அவனது அறைக்கு போக முயல

"அண்ணா... எனக்கு பிடிக்கலைன்னா நோ தான்.." கொஞ்சம் குரலை அதிகப்படுத்தி கத்த அவளது வாயை அடைத்தான் ஸ்ரீ!

"இதையெல்லாம் சொல்லிட்டு இருக்காத எருமை... பிடிக்கலைன்னா அப்புறம் இதை பேசிக் கலாம்.. எப்படியா இருந்தாலும் நான் இருக்கேன்... பார்த்துக்கலாம்... ஓகேவா."

"எப்போ பார்ப்ப ஸ்ரீ... அந்த அரவிந்தன் மடையன் என்னை கல்யாணம் பண்ணி கூட்டிட்டு போனதுக்கு அப்புறமா?" அவனது தலையில் குஷனை போட்டுவிட்டு சலித்து கொண்டாள்!

"டோன்ட் ஒர்ரி!... அப்படீன்னா ஒரு ஐடியா..." ஸ்ரீயின் தலையில் பல்பு எரிந்தது!

"என்ன சொல்லு என்ன சொல்லு..." அவசரமாக திவ்யா கேட்க,

"நீ என்னையே கல்யாணம் பண்ணிக்கோ... இந்த பக்கம் வள்ளி... அந்த பக்கம் தேவயானி... எப்படி சூப்பர் ஐடியால்ல..." என்று குறும்பாக கண்ணை சிமிட்டி கூறி விட்டு சிரிக்க,

"சனியனே... உனக்கு இப்படி வேற நினைப்பு இருக்கா? இரு மவனே இரு... சாஹித்யாக்கு போன் பண்றேன்..." என்று செல்பேசியை எடுக்க முயல,

"ஆத்தா ஆஆஆஆ எஸ்கேப்ப்ப்ப்ப்ப்..." என்று கூறி விட்டு தப்பித்து ஓடினான்! திவ்யாவின் முகத்தில் மென்புன்னகை....

✣ ✣ ✣

**வை**ஷ்ணவியே வலுகட்டாயமாக திவ்யாவை அலங்கரித்தாள், வைஷ்ணவியின் அறையிலே பத்து நாளில் வைஷ்ணவிடம் அவள் சமாதானமாகி இருந்தாலும் உள்ளுக்குள் கார்த்திகேயனை நினைத்து கொதிக்காமல் இருக்க முடியவில்லை! அவன் பேசிய விதம் மட்டும் காரணமல்ல... அவனது செயல்களும் தான்! கிடைத்த ஆதாரங்கள் எப்போது என்னை உலகத்திற்கு பிரசவம் செய்யப் போகிறாய் என்று கேட்டு கொண்டிருந்தது! இந்த நிலையில் இந்த பெண்



பார்க்கும் படலம் தேவையா என்று உள்ளுக்குள் கோபம் கனன்று கொண்டிருந்தது!

நீளமான தலைமுடி இருந்தாலும் அதை எப்போதும் விரும்பியதில்லை திவ்யா... ஆனால் குணவதியின் மிரட்டலுக்கு பயந்து அதை மட்டும் தொடாமல் இருந்தாள்! இல்லையென்றால் அது எப்போதோ கத்திரிக்கு இரையாகி இருக்கும்! இப்போது வைஷ்ணவி அவளை பார்த்து அயர்ந்து போனாள்! என்ன அழகு! எங்கே மறைத்து ஒளித்து வைத்திருந்தாய் பெண்ணே இவ்வளவு அழகையும் என்று மனதிற்குள் மலைத்தாள்! திவ்யா பார்க்க முன்னமே மெழுகு பொம்மை போல இருப்பாள்! இப்போதோ டிசைனர் புடவையில் அளவாக சிறு நகைகளே அணிந்து முடியை தளர பின்னி மல்லிகை சரத்தை வழிய விட்டிருந்தவளை பார்க்க இரு கண்ணும் போதாமல் பார்த்தாள் வைஷ்ணவி!

"திவி... எனக்கே ஆசையா இருக்குடா... உன்னை பார்த்தா... ச்சே நான் ஆம்பளையா பிறக்காம போயிட்டேனே!" என்று விளையாட்டாக கூறி பெருமூச்சு விட்டவளை பார்த்து சிரித்து,

"போங்க அண்ணி... உங்களுக்கு வேற வேலை இல்ல..."

"ஹே. எங்க ஊர்க்கு தான் போக போற! அரவிந்த் அண்ணாக்கிட்ட... பார்த்து என்னை தாஜா பண்ணி வெச்சுக்கோ திவி..." என்று வேடிக்கையாக கூறியவளை உள்ளுக்குள் வருத்தத்துடன் பார்த்தாள்!

"அண்ணி... உங்க அண்ணன் பண்ற அநியாயத்தை எல்லாம் நான் எக்போஸ் பண்ண போறேனே அதுக்கப்புறமும் இந்த பாசம் எனக்கு உங்க கிட்ட இருந்து கிடைக்குமா?" உள்ளுக்குள் மருகினாள் திவ்யா! வைஷ்ணவியின் செல்பேசி அழைக்க

"ஹலோ... சொல்லுண்ணா..."

"......"

"ம்ம்ம்... காலைலேயே நல்லபடியா ஹோமம் முடிஞ்சுது."

"......"

"இங்க எல்லாம் ரெடி அண்ணா... மோஸ்ட்லி எல்லாரும் வந்துட்டாங்க... மாமா அத்தை எல்லாம் கோயிலுக்கு போய் இருக்காங்க... வந்தவுடனே கேக் கட் பண்ணிடலாம் அண்ணா..."

"....."

"ஓகேண்ணா.. வச்சுடறேன்..."

செல்பேசியை வைத்து விட்டு திவ்யாவை பார்த்து புன்னகைத்து கொண்டே

"அரவிந்த் அண்ணா வந்துட்டு இருக்காங்க திவி!" அதை கேட்டு பெரிய உற்சாகம் எதுவும் வரவில்லை!



"ஓஓஓ..." சுரத்தே இல்லாமல் வந்தது வார்த்தைகள்!

"கார்த்தி அண்ணா கூட தான் வர்றாப்ல திவி... கார்த்தி அண்ணா தான் சொன்னாங்க..." சாதாரணமாக கூறி விட்டு வைஷ்ணவி திவ்யாவின் சேலை கொசுவங்களை சரி செய்ய

கார்த்திகேயன் வருகிறானா? மனம் பரபரத்தது! திமிர் பிடித்த வில்லன் இங்கேயும் வருகிறானா? எதற்காக அவன் வர வேண்டும்? அவன் தங்கை வீட்டு விசேஷத்திற்கு வருகிறான்... இது என்ன கேள்வி... அடங்கு மகளே அடங்கு என்றது மனது.

"இது வரைக்கும் கார்த்தி அண்ணா அதிகம் இங்க வந்தது இல்ல திவி... எந்த பங்க்ஷன்னாலும் அம்மா தான்... அப்பா இருந்த வரைக்குமாவது அண்ணா கொஞ்சம் ப்ரீயா வருவாங்க திவி... அப்பா நாலு வருஷத்துக்கு முன்னால ஹார்ட் அட்டாக்ல போனதுக்கு அப்புறம் அண்ணன ப்ரீயா பார்க்கவே முடியல திவி... எப்போ பாரு ஓட்டம் தான்... அம்மா தான் நொந்து போய்ட்டாங்க..." வைஷ்ணவி அவளது அண்ணனின் புராணத்தை பாடிக் கொண்டிருக்க அவனை பற்றி செய்திகளே அவளது கோபத்தை மேலும் வளர்க்க எண்ணெய் ஆனது!

'நொந்து போக வேண்டியதுதான்... இப்படி ஒரு ஆள பெற்றதுக்காக! ஆனால் பாவம் அந்த ஆண்ட்டி என்ன பண்ணுவாங்க... இவங்களுக்கெல்லாம்

ஒன்றுமே தெரியாத போது... அவன் எங்கே சொல்ல போகிறான்? அவனது வியாபாரம் என்னவென்று இவர்கள் அறிவார்களா? அறிந்தால் ஆன்ட்டியின் மனம் என்னவாகும்? பாவம் வைஷு அண்ணி...' மனதுக்குள் வருத்தப்பட்ட திவ்யா,

"அண்ணி... போதும் போதும்... இப்படி ஒரு பையன் இருந்தா எந்த அம்மா தான் நொந்து போக மாட்டாங்க..." என்று கிண்டலாக கூறுவது போலவே கூற அதை கேட்டு சிரித்த வைஷ்ணவி,

"போக்கிரி... ஆனா அண்ணா தொழில்ல எங்கயோ போய்ட்டாங்க... அத்தனைக்கும் காரணம் அண்ணாவோட டெடிகேஷன் அப்புறம் அரவிந்த் அண்ணாவும் தான் திவி..." அர்விந்தையும் விட்டு கொடுக்காமல் பேசினாள் வைஷ்ணவி!

"ஐயோ அண்ணா அண்ணான்னு... எனக்கு காது வலிக்குது.... சரியான பீத்தல் பீதாம்பரமப்பா..." என்று சிரிக்க அவசரமாக உள்ளே வந்த குணவதி,

"வைஷு... அண்ணா அண்ணி கோயில்ல இருந்து வந்துட்டாங்க,... உன்னை தான்டா கேக்கறாங்க... அப்புறம் மைசூர் பா பதம் வந்துடுச்சு... அது போதுமான்னு பாரு கண்ணா... அப்புறம்..." மூச்சு விடாமல் பேசியவரை பார்த்து சிரித்து வைஷ்ணவி,

"ஹய்யோ அத்தை... பார்த்து பார்த்து கொஞ்சம் மூச்சு விடுங்க... இதோ நான் வந்துடறேன்..." என்று அவருடன் விரைந்தாள்!



அவள் போன இரண்டு நிமிடங்களுக்குள் கதவு திறக்கும் ஓசை திவ்யா திரும்பாமல்,

"மறுபடியும் பீத்தல் பீதாம்பரத்த ஆரம்பிக்காதீங்க அண்ணி... மீ ரொம்ப பாவம்... அண்ணன் ஒரு கோயில்... அண்ணன் ஒரு ஆலயம்... அண்ணன் ஒரு மாக்கான்ன்னு... எப்பா முடியல..." புன்னகையுடன் சொல்லி கொண்டே திரும்ப,

கதவில் சாய்ந்து கொண்டு கைகளை கட்டியபடி கண்களில் மின்னலான புன்னகையுடன் கார்த்திகேயன்! மூச்சு விட மறந்தாள் திவ்யா!

## 7

"ஹாய் திவ்யா!"

புன்னகையோடு விளித்தவனை பார்த்து அவளால் புன்னகைக்க முடியவில்லை! மனதில் அவன் பொதுவாக கூறுகிறேன் என்று கூறிய வார்த்தைகளை விட அவனது சட்டத்திற்கு புறம்பான செயல்பாடுகளே நினைவுக்கு வந்து அவனை கடுகடுக்க வைத்தது!

"அண்ணி வெளிய இருக்காங்க..." அவனது முகத்தை பார்க்காமல் எங்கோ முறைத்து பார்த்தவாறே வெளியே செல்ல எத்தனிக்க... வழியை அடைத்து கொண்டு அவள் போவதை தடுத்தான்.

"ம்ம்ம்... தெரியும் வைஷூவ பார்த்துட்டு தான் வர்றேன்..." என்றும் கூறி புன்னகைக்கவும்... பின் இவனுக்கு இங்கே என்ன வேலை என்று மனம் கடுகடுத்தது.

"ஏன் திவ்யா... இன்னும் கோபம் போகவில்லையா?" ஒரு கையால் வழியை மறுத்து கேட்டவனை பார்த்து

"அதெல்லாம் ஒண்ணும் இல்ல..." அவள் கூறுவதில் இருந்தே அவளது கோபத்தையும் ஒட்டாமல் பதிலளிக்கும் விதத்தையும் புரிந்து கொண்டான்.

"அப்போ என்கிட்ட பேசு..." குறும்பாக சிரித்து கொண்டே அவன் கேட்க,

"உங்க கிட்ட..." உதட்டை சுளித்து கொண்டு அவள் முகத்தை திருப்ப,

"சரி பேச வேணாம்... சண்டை போடு.."

"போற வர்றவங்க கிட்டவெல்லாம் சண்டை போடுற சண்டைக்காரின்னு சொல்றீங்களா?" கடுப்பானாள்!

"ஹே திவ்யா... டோன்ட் பி சீரியஸ்... கேசுவலா எடுத்துக்க..."

"யார்... நான் சீரியஸா எடுத்துகறனா... இல்ல நீங்க கண்டபடி பேசினீங்களா கார்த்திகேயன் சார்..."

"ஷப்பா... அனல் பறக்குது... ஓகே ஓகே நான் தான் எப்படி கன்வே பண்றதுன்னு தெரியாம பேசிட்டேன்... சாரி போதுமா?"



சட்டென்று சரணடைந்தவனை அதற்கும் மேல் எப்படி காய்ச்சுவது? ஆனாலும் அவளால் சட்டென்று அவன் வழிக்கு இறங்க முடியவில்லை. நிமிர்ந்து அவனை நேராக பார்த்தாள்... புன்னகை மட்டுமே ஏந்தி கொண்டிருந்த அந்த விழிகளில் பொய்மையோ கள்ளத் தனத்தையோ கண்டுபிடிக்க முடியவில்லை... வெளித் தோற்றம் தான் இப்படியா? உள்ளுக்குள் அத்தனை அநியாயங்களும் உள்ளதா? அவளால் ஒரு முடிவிற்கு வர முடியவில்லை!

"வழிய விடுங்க சார்... எனக்கு வேலை இருக்கு. போகணும் நான்..."

"ஆமாம்... ஆமாம்... நிறைய வேலை இருக்கு... குனிஞ்சு நிமிர்ந்து ஆசீர்வாதம் வாங்கணும்... அர்விந்த் கிட்ட வெட்கப்படனும்... பஜ்ஜி சொஜ்ஜி செர்வ் பண்ண னும்... எவ்ளோ வேலை இருக்கு... வா ஹாலுக்கு போகலாம்..." குறும்பாக கூறி விட்டு புன்னகைத்த போது அவளால் வெட்கப்பட முடியவில்லை... முகத்தைத் திருப்பிக் கொண்டு வெளியேறினாள்!

✤ ✤ ✤

**வீ**டு விழா கோலம் பூண்டு இருந்தது! விளையாடி கொண்டிருக்கும் குழந்தைகளும் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த பெரியவர்களுமாக... பெரியவர் ராஜகோபாலுக்கு அறுபது வயது நிறைந்த விழா என்பதால் மிக முக்கியமானவர்கள் மட்டுமே

வந்திருந்தனர்! வந்திருந்த அனைவரும் கார்த்திகேயனை மரியாதையுடன் பார்த்ததை வைத்தே அவனுக்கான முக்கியத்துவம் தெரிந்தது!

அரவிந்தனுக்கு அவனது தந்தை மாசிலாமணி மட்டும் தான்! மாசிலாமணிக்கோ அரவிந்தனை கார்த்திகேயனிடம் ஒப்படைத்து விட்ட திருப்தி! எப்போதும் கார்த்திகேயனை பெருமை பொங்க பார்ப்பவருக்கு வேறு என்ன வேண்டும்... அதுவும் சிறு வயது முதலே தனக்கு அடங்காத பிள்ளை கார்த்திகேயனுக்காவது அடங்குகிறானே என்று அவ்வப்போது சந்தோஷப்பட்டு கொள்வார்! அதுவும் இந்த திருமணத்தை அவனே பேசி முடிக்கும் போது அவரது மனம் நிம்மதியில் ஆழ்ந்து இருந்தது! இனியாவது அர்விந்த் நல்ல விதமாக இருந்தால் போதும் என்பதே அவரது வேண்டுதலானது!

வைஷ்ணவியின் வீட்டில்... ஹாலை தாண்டி ஒரு சிறு ஹால் இருக்கும்... ஆண்கள் ஹாலில் அமர்ந்து இருக்கும் போது பெண்கள் கூட்டம் அந்த சிறு ஹாலில் அமர்ந்து பேசி கொண்டிருப்பார்! அதற்கு பக்கத்தில் ஒரு பெரிய டைனிங் ஹால்... அதை தாண்டி சமையலறை என்று போகும்! மாடியில் வைஷ்ணவியின் அறையிலிருந்து வந்தவள் அந்த சிறு ஹால் வழியாக சமையலறை போய் வைஷ்ணவிக்கு உதவ ஆரம்பித்தாள்! உடன் மங்கை, குணவதி என்று இருந்ததால் அவளுக்கு எதுவும் வேலை இல்லாமல்



போகவே வெறுமனே அவர்கள் வேலை செய்வதை வேடிக்கை பார்க்கத்தான் முடிந்தது!

"காத்தாட உக்கார் கண்ணா... பாரு வேர்க்குது..." மங்கை ஆதராவாக கூறவும்

"இல்ல ஆன்ட்டி... போர் அடிக்குது.. வைஷு அண்ணி இல்லாம..."

"ஏய் வாலு... ரக்ஷிதா ஹால்ல இருப்பா இல்ல.. போய் அங்க உட்காரு..." என்று கூறிய குணவதியை பார்த்து முறைத்தாள்!

"திவி... அண்ணா உன்கிட்ட என்னமோ பேசணும்ன்னு வந்தாங்க.... பேசிட்டியா?" வைஷ்ணவி சாதாரணமாக கேட்க... திவ்யா மௌனமாக நின்றாள்! அதை பார்த்த மங்கை

"கண்ணா... ஏன்டா இன்னமுமா சண்டை?" கேட்டது மங்கை!

"இல்ல ஆன்ட்டி... அதெல்லாம் ஒண்ணு மில்லையே..." என்று சமாளிக்கவும்... குணவதியோ,

"என்னம்மா என்ன ஆச்சு? தம்பி கிட்ட என்ன பிணக்கு?" ஒன்றும் அறியாமல் கேட்டார்! ஸ்ரீ ராமும் சரி திவ்யாவும் எப்போதுமே வெளியில் சந்திக்கும் பிரச்சனைகளை வீட்டிற்கு எடுத்து வர மாட்டார்கள்! எதுவாக இருந்தாலும் அவர்களுக்குள்ளாக தீர்த்து கொள்வதே வழமையாக இருந்தது!

"அதெல்லாம் ஒண்ணுமில்லம்மா... சும்மா..." தாயை சமாளிக்க முயன்று தோற்றாள்! தாய் அறியாத சூளா? ஆயினும் தோண்டி துருவாமல் சாதாரணமாக விட்டார்! இதுதான் குணவதி! தனது பிள்ளைகளின் மேல் அவர் வைத்த முழு நம்பிக்கை! அதை உணர்ந்து அவரது பிள்ளைகள்! பேசிக்கொண்டிருக்கும் போது வந்த கனிஷ்கர் திவ்யாவிடம் வந்து...

"திவிக்கா... கார்த்தி மாமா உங்களை தண்ணி கொண்டு வர சொன்னாங்க..." என்று கூற வைஷ்ணவி சிரித்து கொண்டாள்! தண்ணீரை எடுத்து அவளிடம் கொடுத்து,

"அரவிந்த் அண்ணா கேட்டு இருப்பாங்க... கொண்டு போம்மா தாயே... போய் குடு..." அவளை விரட்டினாள்! திவ்யா இன்னமும் கோபம் குறையாத நிலையில்... மற்றவர்கள் முன்னர் வேறு வழியில்லாமல் தண்ணீரை எடுத்து கொண்டு பெரிய ஹாலுக்கு போனாள்! கண்களால் கார்த்திக்கை துழாவியவள், அவன் இன்னொரு நெடுமரத்தோடு பேசிக் கொண்டிருக்க ஒன்றும் பேசாமல் அவனிடம் கொண்டு போய் தண்ணீரை கொடுத்தாள்! புன்னகையோடு வாங்கியவன்,

"தேங்க்ஸ் திவ்யா... ஒரு நிமிஷம்..." என்று கூறியவன் அந்த ஒரு சொம்பு தண்ணீரை குடித்து விட்டு.

"சுடுது திவ்யா.. கொஞ்சம் சில்லுன்னு எடுத்துட்டு வாயேன்..." ஓரக்கண்ணால் பார்த்து



குறும்பாக சிரித்துவிட்டு மறுபடி அவளை அனுப்ப அவனுக்கு மட்டும் புரியுமாறு வாய்க்குள் திட்டி கொண்டே போனாள்! சமையலறைக்கு போனவள்,

"அண்ணி... உங்க அண்ணனுக்கு சில்லுன்னு தண்ணி வேணுமாம்..." என்று கடுப்பாக கூற அதை கேட்டு சிரித்தவள்

"நீ என்ன முறைச்சுகிட்டே கொடுத்தியா? அதான் அப்படி சொல்லி இருப்பாங்க... அரவிந்த் அண்ணா எப்படி... பார்த்தியா?"

"அண்ணி என்னோட பொறுமைய சோதிக்கா தீங்க... நான் எந்த நெடுமரத்தையும் பார்க்கல..." கோபத்தில் கொதித்தாள்!

"பார்க்கலைன்னு சொல்ற... நெடுமரம்ன்னு சொல்ற... ரெண்டும் ஒத்து போகலியே..." சிரித்து கொண்டே திவ்யாவை வாரினாள்! முறைத்து கொண்டே மறுபடியும் தண்ணீரை எடுத்து கொண்டு ஹாலுக்கு போனாள்!

"தேங்க்ஸ் திவ்யா... ரொம்ப ஹாட் இல்லையா இன்னைக்கு சென்னை..."

"ம்ம்ம்ம்ம்ம்... ஆமாம்..." வேறு வழியில்லாமல் பதில் கொடுக்க பின்னால் ஒரு பிஜிஎம் சத்தமில்லாமல் ஒடிக் கொண்டிருந்தது!

பார்த்தவிழி பார்த்தபடி பூத்து இருக்க,

காத்திருந்த காட்சி இன்று காண கிடைக்க,

வேறு யார் அரவிந்த் தான்!

பார்த்தான்.. பார்த்தான்... பார்த்து கொண்டே இருந்தான்... அவன் இப்படி பார்ப்பதை பார்த்த திவ்யாவுக்கோ அனல் மேல் நிற்கும் உணர்வு... கார்த்திகேயனோ அர்விந்த் பார்ப்பதற்காகவே.... விடுவேனா என்று பேச்சை வளர்த்த... திவ்யாவுக்கு உள்ளே எரிச்சல் கனன்றது! சட்டென்று பேச்சை முடித்து கொண்டு உள்ளே செல்ல முனைய... மீண்டும் அழைத்த கார்த்தி,

"திவ்யா... கொஞ்சம் லெமன் சோடா வித் பெப்பர் கிடைக்குமா? செம ஹாட்டா இருக்குல்ல..." உள்ளுக்குள் லட்சார்ச்சனை செய்த திவ்யா ஸ்ரீராம் அழைக்கவும் திரும்பினாள்!

"திவி... அப்படியே எனக்கும்டா..." அவனை முறைத்து விட்டு உள்ளே சென்றாள்! இவள் ஏன் இப்படி முறைக்கிறாள் என்று அவனுக்கு அவனே கேள்வி கேட்டுக் கொண்டான்... நேராக சமையலறையில் லேண்ட் ஆனவள் வைஷ்ணவியை...

"அண்ணிஈஈஈ..." எரிச்சலாக அழைத்தாள்!

"என்ன திவி?"

"ம்ம்ம்... உங்க அண்ணனுக்கு லெமன் சோடா வேணுமாம்..." சொல்லி விட்டு கடுப்படிக்க,



"ஆஹா... இன்னைக்கு நீ செம ஆள் கிட்ட தான் மாட்டி இருக்க... கவலையே படாத... கல்யாணம் வரைக்கும் ஒட்டி எடுத்துருவாங்க..." அவளை வாரிக்கொண்டே லெமன் சோடா கலக்கினாள்... அங்கே இருந்த அனைவருக்கும்...

"அண்ணி... அண்ணன் கூப்பிடறாங்க போல இருக்கே..." வைஷுவை அனுப்பியவள் கார்த்திக்கு மட்டும் உப்பை கொஞ்சம் அதிகமாக அள்ளி போட்டு கொண்டாள்!

வரிசையாக கொடுத்தவள் கார்த்திக்கு மட்டும் அவளே எடுத்து,

"இது உங்களுக்கு" என்று குறும்பான வார்த்தை களோடு கண்களின் ஓரத்தில் தெரிந்த சிரிப்போடு கொடுக்கவும் ஒரு நிமிடம் கார்த்தி ஏமாந்து போகவே நினைத்தான்!

"ஆஹா இதுல ஏதோ இருக்குடா..." என்று நினைத்து கொண்டே,

"டேய் மாப்ஸ்... இந்தா பிடி..." என்று அவனது கப்பை அரவிந்தனுக்கு கொடுத்து விட்டு அவன் இன்னொன்றை எடுக்க திவ்யாவுக்கு உள்ளே பற்றி கொண்டு வந்தது!

"அடப்பாவி... தப்பிச்சுட்டானே..." கடுப்பாக பார்த்தாள்! அரவிந்தனோ இந்த உலகத்தையே மறந்து திவ்யாவிடம் ஐக்கியமாகி அந்த லெமன் சோடாவை

பருகி கொண்டிருந்தான்! திவ்யாவையே பருகுவதாக நினைத்து... அந்த பர்வை வேறு அவளை கொதிப்படைய செய்ய

"எருமை எருமை.. அப்படி பார்த்து தொலையாத..." உள்ளுக்குள் மட்டுமே திட்ட முடிந்தது! கார்த்திக்கோ அந்த கப்பில் ஏதோ உள்ளது என்ற சந்தேகம் வந்தது!

"மாப்ஸ் ஒரு நிமிஷம்..." என்று அவனது கப்பை வாங்கி சிறிது டேஸ்ட் செய்தவன் முகம் சிரிப்பில் மலர்ந்தது! ஆஹா... இதையும் இப்படி உலகத்தை மறந்து குடிக்கிறானே என்று நினைத்து கொண்டு... ஸ்ரீராமிடம் திரும்பியவன்...

"ஸ்ரீ... லெமன் சோடா சூப்பர் இல்லையா?"

"ஆமாண்ணா... சூப்பர்... திவி... எப்ப நீ இப்படி கலக்க கத்துகிட்ட?"

"எப்போ மாப்ஸ் இப்படி உலகத்தை மறந்து குடிக்க கத்துகிட்டானோ... அப்பவே தான் ஸ்ரீ..." நக்கலாக அவன் கூறியது ஸ்ரீக்கு புரியவில்லை!

"அண்ணா..." என்று சிரிக்க,

"இல்ல ஸ்ரீ... உப்பிட்டவரை உள்ளளவும் நினைக்கணுமாம்ல... அப்படியா?" என்று கூறவும் அவனது நக்கல் புரிந்தது! ஆஹா எனக்கு சொல்லாம இந்த வேலையா என்று நினைத்து கொண்டே,

"அடப்பாவி..." என்று திவியை ஒரு பார்வை பார்த்தான்! அவளோ உள்ளே கடுகடுத்து



கொண்டிருந்தது தெரிந்தது! அவளது அந்த கடுப்பெல்லாம் கார்த்திக்கு சிரிப்பாக மாற

"மாப்ஸ்.. டேய் போதும்டா... அங்கே கப்புல சோடா தீர்ந்து போய்டுச்சு.. இன்னும் எதைடா குடிக்கற..." என்று கூறியபோதே ஸ்மரனை வந்து கப்பை அசட்டு சிரிப்பு சிரித்தவாறே திவியிடம் கொடுத்தான்! சபை சிரிப்பால் நிறைய,

"மாப்ஸ்... லெமன் சோடா எப்படி இருந்தது...???" குறும்பாக அரவிந்தனிடம் கேட்க,

"டேய் கார்த்தி... அது லெமன் சோடாவா? காபின்னு இல்ல நினைத்தேன்..." என்று அப்பாவியாக கூறவும் குபீரென்று சிரிப்பு எழுந்தது அனைவருக்கும்! கலாட்டாவும் சிரிப்புமாகவே பெண் பார்க்கும் படலமும் பெரியர்களின் பிறந்த நாள் வைபவமும் நடக்க கார்த்தி,

"திவ்யா... பொரியல்..."

"திவ்யா... கூட்டு..."

"திவ்யா... சாம்பார்..."

ஒவ்வொன்றுக்கும் அவளையே அழைத்து வேலை வாங்கி, முடிந்த வரையில் அவளின் கோபத்தை எகிற வைத்து கொண்டிருந்தான்! ஏதோ அவனால் ஆன சேவை!

✤ ✤ ✤

**தோ**ட்டத்தில் திவ்யா ஸ்ரீராமிடம் பொரிந்து கொண்டிருந்தாள்! அவளுக்கு இந்த திருமண ஏற்பாடு முதலிலேயே பிடிக்கவில்லை என்பதோடு அரவிந்தனை சுத்தமாக பிடிக்கவில்லை! அவனைப் பார்க்கும் போதே கிளர்ந்து எழ வேண்டிய காதல் உணர்வுகளோ பரஸ்பர ஈர்ப்போ தனக்கு சுத்தமாகவே இல்லை என்பதை அவளது மனம் நன்கு தெளிவாக அறிந்து இருந்தது! இதை ஸ்ரீராமிடம் கூறி கொண்டு கோபத்தில் உச்சியில் இருந்தாள்... கார்த்தி வந்தது அறியாமல்!

"ஏன் ஸ்ரீ... என்னை தள்ளி விட்டே ஆகணும்னு நினைச்சுட்டு இருக்கீங்க? எனக்கு சுத்தமா பிடிக்கலடா..."

"திவி... எனக்கு தெரியாம யாரையாவது லவ் பண்றியா?" நேரடியாகவே கேட்டான்.

"உனக்கு தெரியாம யார்கிடவாவது பேசியாச்சும் இருக்கேனா? மரமண்டை... லூசு மாதிரி உளறாத..."

"அப்புறம் என்னடா உனக்கு கஷ்டம்? இப்போது வரைக்கும் நீ இங்க செல்லமா பையனாட்டம் இருந்துட்ட... அதுவும் என் கூடவே சுத்திகிட்டு அதனால தான் உனக்கு அந்த மாதிரி தோணுது... கல்யாணமாகிட்டா சரியா போய்டும் திவிக்குட்டி..." பொறுமையாக அவன் எடுத்து கூற

"நான் இப்படியே இருந்துடறேன் ஸ்ரீ... எனக்கு கல்யாணம் வேண்டாம்... நீ அப்பா கிட்ட சொல்லேன்... நீ சொன்னதாங்க.... கேப்பாங்க... ப்ளீஸ் டா..."



"ஆத்தா... வேற வினையே வேண்டாம்... உன்னால தான் இப்படி இருக்கான்னு என்னை பிடிச்சு உலுப்பிடுவாங்க..."

"எதாச்சும் பண்ணி தப்பிச்சுக்கலாம்னு நீ சொன்னதுனால தான் நான் இந்த பங்க்ஷனுக்கு ஒத்துகிட்டேன்... இப்போ நீ இப்படி ஜகா வாங்கற..." கிட்டத்தட்ட அழும் நிலைக்கு சென்று விட்டவளை என்ன சொல்லி மாற்றுவது என்று அவனுக்கு தெரியவில்லை... இந்த அளவு பிடிவாதமாக அவள் இருக்கும் போது என்ன செய்வது என்றும் அவனுக்கு புரியாமல்... அடுத்தது என்ன என்று தீவிரமாக யோசித்து கொண்டிருந்தான்...

"நான் வேணும்னா ஒரு ஐடியா சொல்லப்பட்டா?" குரல் கேட்க பதட்டமாக தூக்கி வாரிப் போட திரும்பினாள் திவ்யா! கார்த்திகேயன் தான் நின்று கொண்டிருந்தது!

"இன்ஸ்டன்ட்டா யாரையாச்சும் லவ் பண்ணிடு... ஒகேவா..." நக்கலாக கூறியவனை பார்த்து முறைத்தாள் திவ்யா!

"முறைக்காத திவ்யா... நல்ல ஐடியா இல்லையா?" மேலும் எரிகிற தீயில் எண்ணெய் வார்த்தான்!

"என்னை எங்க வீட்ல அப்படி வளர்கல... உங்க வேலைய பாருங்க!" சட்டென்று அவள் அப்படி கூறினாலும் அன்றைக்கு நல்ல மனநிலையில் இருந்த

கார்த்தி அதை பெரியதாக எடுத்துக் கொள்ளவில்லை! அளை சமாதானப்படுத்துவே முயற்சித்தான்!

"ஏன் என் கிட்ட முறைச்சுகிட்டே இருக்க திவ்யா?" நேரடியாக கேள்வி வர திவ்யாவுடன் சேர்ந்து ஸ்ரீயும் அதிர்ந்தான்!

"நீங்க தான் வம்பு பண்ணிட்டே இருக்கீங்க கார்த்தி சார்... பொதுவாக பேசுறேன்... அதுவா பேசுறேன்னு கண்டபடி சொன்னது யாராம்?"

"திவ்யா... அன்னைக்கு உன்னை நான் பார்டிகுலரா சொல்லவே இல்லை... நிஜமா என்னோட பொதுவான கருத்தை நான் சொன்னேன்!... நீ ஆரோக்கியமான விவாதத்த ஆரோக்கியமா எடுத்துக்கலாமே... இதை ஏன்ப்பா சீரியஸா எடுத்துக்கற?" நேரடியாக கேட்டபோது அவளால் இன்னமும் முகத்தை திருப்பிக் கொண்டு இருக்க முடியவில்லை! அனைத்தையும் கடந்த சிநேகபூர்வமான பேச்சில் கள்ளம் இருப்பதாகவும் அவளுக்கு தோன்ற வில்லை! முகத்தை திருப்பி கொண்டிருந்தவள்... இப்போது அவனை பார்த்து,

"நான் எப்பவுமே விவாதத்த சீரியஸா எடுத்துக்கறது இல்லை கார்த்தி சார்... அன்னைக்கு நீங்க பேசின விதம் காயப்படுத்திடுச்சு... அவ்வளவு தான்..." சமரசமாக கூறியபோது,

"சாரிப்பா... காயப்படுத்த நான் நினைக்கல... எப்படியோ பேச்சு போய்டுச்சு... அதை மறந்துடேன்.



ப்ளீஸ்..." என்று கூறி புன்னகைக்க அவளால் அந்த புன்னகையை ஒதுக்க முடியவில்லை! ஆனால் உங்களுக்குள்ளே நெருஞ்சி முள்ளாக உறுத்தி கொண்டிருப்பதையும் அவளால் தவிர்க்க முடியவில்லை! ஸ்ரீராமையும் பார்த்தவாறே ஒருவாறு சமாளித்து மென்புன்னகையை சிந்தியவளிடம்,

"ஒகே. இனிமே பிரெண்ட்ஸ்..." என்று அவன் கையை கொடுக்க சட்டென்று அவனது நட்பை அவளால் ஏற்க முடியாமல்... ஒப்புக்கொள்ள முடியாமல் தவித்து கொண்டிருக்க

"ஏன் திவ்யா? தயக்கமா இருக்கா? எனக்கு பொண்ணுங்க பிரெண்ட்ஸ் ரொம்பவுமே குறைச்சல் தான்... சுத்தமா பிடிக்காது... அவாய்ட் பண்ணிடுவேன்... படிக்கும்போது கூட யார்கிட்டயும் ரொம்ப க்ளோசா பேசினது இல்ல... அதுல ஒண்ணு ரெண்டு பேர் தான் கொஞ்சம் பிரெண்ட்ஸ்... ஷாலினி கிட்ட கூட நான் திட்டு வாங்கிட்டுத்தான் இருப்பேன்... பேசறது இல்லைன்னு.... நீயே பார்த்து இருப்ப இல்லையா?" அவன் விளக்கவும் அவளும் தலையசைத்தாள்! பார்த்தது தானே!

"நீயும் ஸ்ரீயும் என்னோட வேல்லெந்த்ல இருக்கீங்க... உங்க ரெண்டு பேரையும் ரொம்பப் பிடிச்சு இருக்கு... உனக்கும் ஏதோ கொஞ்சூண்டு தலைல சரக்கு இருக்கு.... அதோட...." சிரித்துக் கொண்டே அவளது தலையை சுட்டி காட்ட அந்த நக்கலை ரசித்து புன்னகைத்து கொண்டே முறைத்தாள்!

"ம்ம்ம்... அதோட..."

"அதோட எங்க அரவிந்த கல்யாணம் பண்ணிக்கப் போற... அதான்.. சமாதானக் கொடிய பறக்க விட்டுடலாம்ன்னு நானே வந்துட்டேன்..." என்று முடிக்கவும்

"ஓ... கல்யாணம் பண்ணிக்கப் போறேன்னு முடிவே பண்ணிட்டீங்களா?"

"ஏன் அவனுக்கு என்ன குறை? பெருமைக்காக சொல்லல.. சுஷ்ருதாவோட வால்யு தெரியுமா? அதோட பார்ட்னர் மா..."

"ஆஹா இப்போ நீங்க உங்க பீத்தல் பீதாம்பரத்த ஸ்டார்ட் பண்ணீட்டீங்களா?" என்று வாரவும் சிரித்த கார்த்திகேயன்,

"இருக்கட்டும் இருக்கட்டும்... ஆனா ஒரு ரிக்வஸ்ட்..."

"என்ன கார்த்தி சார்..."

"நான் இப்படி சமாதான கொடி பிடிக்க காரணமே, கல்யாணத்துக்கு அப்புறம் வீட்டுக்கு வரும் போது லெமன் சோடால உப்பை அள்ளி கொட்டின மாதிரி காபில உப்பை போட்டு தந்துடுவியோனு பயந்து தான்... அதுல மட்டும் கருணை காட்டு தாயே!" கைகளை குவித்து அவன் கூறியதை பார்த்து ஸ்ரீராம் திவ்யா இருவருக்குமே சிரிப்பு வந்தது அவன் சொன்ன விதத்தை பார்த்து!



"அதான் விஷயமா? என்னடா எலி ஏன் ஹாப் பேண்ட் போட்டுட்டு ஓடுதுன்னு நினைச்சேன்..." என்று குறும்பாக முறைத்தாள்!

"ஏன் திவ்யா... அந்த எலிக்கு ஹாப் பேண்ட் தைத்த டெயிலர் நீ தான..." என்று கண் சிமிட்டி விட்டு சிரிக்க ஒரு கணம் யோசித்த திவி,

"லொள்ளுதான்... ஆமா இந்த லொள்ளை எல்லாம் எப்படி ஸ்க்ரீன் பண்ணிட்டு இருக்கீங்க? கஷ்டமாச்சே..."

"ம்ம்ம்... நிறைய டென்ஷன்ஸ்... எல்லா பக்கமும் இருந்து ப்ராப்ளம்ஸ் வரும் போது சிரிச்சுட்டு இருக்க முடியாது திவி..." ஏனோ அவனது அந்த திவி என்ற அழைப்பு மயிலிறகாய் வருடியது!

"ஷாலினி கூட டைம் ஸ்பெண்ட் பண்ணுங்க கார்த்தி சார்... அவங்களை அழைச்சுட்டு அங்கங்க போயிட்டு வாங்க... டென்ஷன் எல்லாம் பறந்து போய்டும்..." பெரிய மனுஷியாக அட்வைசினாள்!

"ஓகே பெரிய மனுஷி... பண்ணிடலாம்... ஆனா அது என்ன கார்த்தி சார்...?" குறும்பாகவே அவன் கேட்க அதை கேட்ட ஸ்ரீ,

"ஆஹா தவளை தான் வாயாலேயே கெடுமாம்.. அது மாதிரி இருக்கு அண்ணா..." சிரித்து கொண்டே சொன்னவனை பார்த்து புரியாமல்,

"ஏன் ஸ்ரீ? என்னாச்சு?"

"அண்ணா... பிரெண்ட்டுன்னு வேற சொல்லி இருக்கீங்க... அவளா குடுக்கற மரியாதையை வேண்டாம்ன்னு வேற சொல்றீங்க... பின்விளைவை பத்தி யோசிங்கண்ணா..." சீரியசாக கூறுவது போலவே கூறியவனை பார்த்து,

"டேய் எருமை... உன்னோட பிஆர்ஒ வேலைய கரக்ட்டா பார்க்குற.. இப்படித்தான் புகழை பரப்பணும்... ஒகே" நக்கலாக கூறி விட்டு சிரிக்க அவளை முதுகில் ஒரு அடி வைத்த ஸ்ரீயும் சிரிக்க உடன் கார்த்தியும் இணைந்து கொள்ள...

விதியோ சிரிக்க நானும் இருக்கிறேன் என்று கூறியது!

## 8

"ஸ்ரீ... மினிஸ்டர் பேட்டிக்கு ஒப்புக்கணுமே... கொஞ்சம் டென்ஷனா இருக்குடா..." அவனிடம் புலம்பியபடி கிளம்பினாள் திவ்யா.

"எப்படியாச்சும் ஒப்புக்க வெச்சுடலாம்டா... பார்த்துக்கலாம்..." அவளுக்கு தெம்பளிக்கும் வார்த்தைகளை கூறினாலும் மத்திய அமைச்சர்



விநாயகமூர்த்தியின் பேட்டி கிடைப்பது குதிரை கொம்பு தான் என்று புரிந்திருந்தது. ஏனென்றால் மீடியா வெளிச்சம் அந்த அமைச்சருக்கு பிடிக்காத ஒன்று என்றும் சந்திப்பது கடினம் என்றும் நிறைய பேர் இருவரிடமும் பயமுறுத்தி இருந்தனர். எப்படியோ பத்து நிமிடம் அடித்து பிடித்து வாங்கியிருந்தனர்.

கேட் உள்ளே நுழைந்தபோதே எக்கச்சக்க பாதுகாப்பு சோதனைகள்... அவற்றை எல்லாம் கடந்து உள்ளே சென்று பிஆர்ஒ வை சந்தித்து பேட்டிக்காக வந்திருப்பதை சொல்வதற்குள் போதும் போதுமென்றாகி விட்டது.

"ரொம்ப ஈசியா வந்திருக்கலாம்... ச்சே உன்னால கெட்டுச்சு... திவி..." ஸ்ரீ அங்கலாய்க்க... அவள் என்ன வென்று புரியாமல் விழித்தாள்...

"எப்படிடா சொல்ற?"

"பின்ன விநாயகமூர்த்தி சாரோட பையன் திருவாளர் விக்னேஷ் தங்களுடைய மிக தீவிர விசிறி இல்லையா மதர் சுப்பீரியர்? அவரிடம் ஒரு வார்த்தை கேட்டிருந்தால் அவருடைய அப்பாவுடைய அப்பாயின் மெண்ட்டை இந்தா வெச்சுக்கோ என்று தூக்கி கொடுத்திருப்பாரே யுவர் ஆனர்..." அந்த விக்னேஷ் இவளிடம் வழிந்த வழியலை சொல்லி அவளை கலாய்த்து அவளது முறைப்பை பரிசாக பெற்று கொண்டிருந்தான் ஸ்ரீ.

"டேய் அறிவு கெட்ட முண்டம்... நீ வெளிய வாடி... உனக்கு இருக்கு மய்யார் பூஜை..." கிசுகிசுப்பாக அவள் மிரட்ட அவன் பீதியான எபெக்ட்டை காட்டி இன்னொரு முறைப்பை பெற்று கொண்டிருந்தான்...

✤ ✤ ✤

"ரொம்ப நாளாச்சுல்ல கார்த்தி... இப்படி நீ ரிலாக்ஸ்ட்டா லஞ்ச்சுக்கு வந்தது... பிடிக்கவே முடியலையே உன்னை..." விநாயகமூர்த்தி கார்த்திகேயனிடம் குறைபட்டு கொண்டார்.

"வர கூடாதுன்னு இல்லை அங்கிள்... வேலை கழுத்தை நெறிக்குது... நேத்து அரவிந்த்க்கு பொண்ணு பார்க்க சென்னை வந்தோம்... அப்படியே உங்களை பார்த்துட்டு... இந்த புது ப்ரொஜெக்ட்ட உங்க கிட்ட டிஸ்கஸ் பண்ணிட்டு போலாம்ன்னு தோணுச்சு... அப்படியே விக்கிய பார்த்தும் ரொம்ப நாளாச்சே... அதான்..." வந்திருந்த கார்த்திகேயன் அவரிடம் கூற,

"இந்த புது பேக்டரில எப்போ ப்ரொடக்ஷன் ஸ்டார்ட் பண்ண போறப்பா?"

"எப்படியும் சிக்ஸ் மந்த்ஸ் ஆகிடும் அங்கிள்... ஸ்டார்ட் ஆகிடுச்சுன்னா சவுத் ஈஸ்ட் ஏசியன் கண்ட்ரிஸ் மார்கெட் ஷேர்ல நம்ம கம்பெனிய நல்ல பொசிஷனுக்கு கொண்டு வந்துரலாம்... லெட் மீ ஹோப் தி பெஸ்ட்..."



"எஸ் சியூர்... யூ வில் ஹேவ் பெஸ்ட் இன்டீட் கார்த்தி..." விக்னேஷ் மனதார வாழ்த்தினான்.

"தேங்க்ஸ் விக்கி... உனக்கு எப்படி போகுது..."

"ம்ம்ம்... நல்லாவே போகுது... என்ன இந்த அஞ்சு வருஷத்துல முடியற வரைக்கும் சம்பாரிக்க வேண்டியது தான்.." என்று சொல்லி விட்டு சிரிக்க கார்த்திகேயனோடு விநாயகமூர்த்தியும் சிரித்தார். பேசிக்கொண்டிருக்கும் போது அவரது பிஏ அருகில் வந்து

"சார்... உங்க பேட்டிக்காக டிவில இருந்து வந்திருக்காங்க... உள்ள வர சொல்லட்டா?"

"எந்த டிவி... ஞாபகம் இல்லையே ஸ்ரீநிவாசன்?"

"நிலா டிவி சார்... நேத்து நீங்க தான் அப்பாயின்ட்மென்ட் ஓகே பண்ணீங்க..."

"ஓகே வர சொல்லுங்க..." என்று அவரை அனுப்ப... பார்த்துக்கொண்டிருந்த விக்னேஷ்,

"ஸ்ரீநிவாசன்... பேட்டி எடுக்க நிலா டிவில இருந்து யார் வந்திருக்கறது?" ஆர்வமாக கேட்டான்... அவனது ஆர்வம் கார்த்திகேயனுக்கு வித்யாசமாக இருக்க.. நிலா டிவி என்றதும் ரெண்டு லூசும் அங்க தானே இருக்கு என்பது நினைவுக்கு வந்தது!

"திவ்யதர்ஷினின்னு ஒரு பொண்ணு ஸ்ரீராம்ன்னு ஒரு பையன்... கேமராமேன் சார்... ரெண்டு பேர் மட்டும் தான் வந்திருக்காங்க..."

"திவ்யாவா..." ஒரு நிமிடம் ஜெர்க்கான விக்னேஷ் தனது தந்தை அருகில் இருப்பதை கருத்தில் கொண்டு அடக்கி வாசித்தான். கார்த்திகேயனுக்கோ நிகழ்வது சுவாரசியமாக இருந்தது... ரெண்டு பிசாசும் இங்க தான் வந்திருக்குதுங்க என்று நினைத்து கொண்டான்... அருகில் அமர்ந்திருந்த விக்னேஷ் இவன் புறம் குனிந்து....

"செம்ம பிகர் மச்சி..." கார்த்திகேயன் ஒன்றும் புரியாமல்,

"யார் விக்கி?"

"அந்த திவ்யா தான்..."

"வாட்ட்டடட்ட்..." அவனுக்கு புரையேறியது!

"ஆமா கார்த்தி... நான் ட்ரை பண்ணி பார்த்தேன்... படியல.. ப்ச்..." மிகவும் சோகமாக அவன் கூறவும் சிரிப்பை அடக்க முடியாமல் தத்தளித்தான்.

"அப்படியா..."

"ஆமா... ஆனாலும் விட மாட்டேன்... பேட்டிய முடிக்கட்டும்... அப்புறம் நாம தனியா டீல் பண்ணிக்கலாம்.. ஆனா எதையும் நீ கண்டுக்காத..." மிகவும் சீரியசாக அவன் கூறி கொண்டிருக்க அவனால் சிரிப்பை அடக்கிக் கொள்ளவே முடியாமல் தத்தளித்தான்.

'செத்தடா மகனே...' மனதிற்குள் கூறி கொண்டிருக்க யாரை பற்றி பேசி கொண்டிருந்தனரோ



அந்த மகானுபாவர்களே உள்ளே வந்தனர். விநாயகமூர்த்திக்கு வணக்கம் தெரிவித்து விட்டு திரும்பியவர்கள் கார்த்திகேயனை பார்த்து ஒரு நிமிடம் அரண்டனர். அவன் அவர்களை காட்டிகொள்ளாமல் புன்னகையோடு அமர்ந்திருக்க, ஸ்ரீராம் அண்ணா என்று அழைக்க வாயெடுத்தான்... அதற்குள் அவனை பார்வையால் அடக்கியவள்,

"காட்டிக்காத ஸ்ரீ... அவனும் கண்டுக்கல..."

கேமராவை ஸ்ரீராம் இயக்க துவங்க... திவி கேள்வி கேட்க துவங்கினாள். முதலில் பொதுப்படையாக சில கேள்விகளை கேட்டவள் பிறகு மருந்து கம்பெனி களை பற்றி கேட்க துவங்கினாள்...

"சார்... சில பார்மா கம்பெனிஸ் சரியான அனுமதி இல்லாம சில மருந்துகளை புழக்கத்துல விடறதா ஒரு குற்றச்சாட்டு இருக்கே... அதை பற்றி என்ன நினைக்கிறீங்க?"

ஒரு நிமிடம் யோசித்த விநாயகமூர்த்தி கார்த்திகேயனை ஓரப்பார்வை பார்த்து,

"அப்படி எதுவும் எங்களுக்கு கம்ப்ளைன்ட் வரலையே... வந்தா கண்டிப்பா ஆக்ஷன் எடுப்போம்..."

"ஆனா இந்த விஷயம் ரொம்ப நாளா நடந்துட்டு இருக்கே..." அவளது பார்வையும் ஒரு நிமிடம் கார்த்திகேயனை தொட்டு வந்தது... அவன் அவளது கேள்விகளை முழுதாக கவனிக்காமல் விக்கியின் புலம்பல்களை கேட்டு கொண்டிருந்தான்.

"அதான் சொல்றனேம்மா... அப்படி செய்யறதா தெரிய வந்தா கண்டிப்பா ஆக்ஷன் எடுப்போம்..."

"சார்... இன்னொரு குற்றச்சாட்டு... காலாவதி யான மருந்துகள் மறுபுழக்கத்துக்கு விடறதா..." என்று கேட்டுக்கொண்டிருக்கும் போதே... சங்கடமாக விநாயமூர்த்தி கார்த்திகேயனை பார்த்தான்.

"ஒரு கேமராவ ஆப் பண்ணுப்பா தம்பி..." என்று சொல்லி விட்டு சிரித்தவர்

"ரிஸ்கான கேள்வியாவே கேக்கறியேம்மா... இந்த பிரச்சனை பற்றி இப்போ பேச வேணாம்.. விசாரணை நடக்குது... யார் இதுல இன்வால்வ் ஆகி இருந்தாலும் சட்டபடி நடவடிக்கை எடுப்போம்..." என்று அவர் கூறவும் ஸ்ரீராமும் திவியும் சிரித்து கொண்டார்கள்...

"நீங்க இந்த அளவு சொன்னதே போதும் சார்..."

"நீங்க கேட்டீங்க இல்லையா... தம்பியே இங்க தான் இருக்கார்... அவர் கிட்டவே கேளுங்க அவருக்கு தெரியாததா இருக்கப் போகுது..." விநாயகமூர்த்தி கார்த்திகேயனை சாட்டி விடவும் அவன் புறம் திரும்பிய திவ்யா...

"சார் யாருன்னு தெரியலையேங்க..." சிரிக்காமல் கேட்டுவைத்தாள்... ஸ்ரீராம் சிரிப்பை அடக்கி கொண்டு அவளையும் கார்த்தியையும் மாற்றி மாற்றி பார்த்து கொண்டிருந்தான்.



அடிப்பாவி என்று மனதுக்குள் நினைத்து கொண்டு...

"ஆமா ஆமா தெரியவே தெரியாது... டேய் ஸ்ரீ... மொதல்ல உனக்கு இருக்கு... அவளுக்கு ஜால்ராவா தட்டிட்டு இருக்க?"

"அய்யோ அண்ணா... இவளுக்கும் எனக்குமே சம்பந்தம் இல்ல... நான் இந்த விளையாட்டுக்கு வரலை..." ஸ்ரீ வெற்றிகரமாக திவ்யாவை கார்த்தியிடம் போட்டு கொடுத்து எஸ்கேப் ஆக பார்க்க இருவரையும் முறைத்தாள் திவ்யா, இங்கே வைத்து தான் இதுங்க இப்படி கலாய்க்கணுமா என்ற கடுப்பில்... விக்னேஷ் ஒன்றும் புரியாமல் பார்த்துக்கொண்டிருக்க விநாயகமூர்த்தி சிரித்து கொண்டார்.

"உனக்கு தெரிஞ்சவங்களா கார்த்தி?" வியந்த பார்வையோடு அவர் கேட்க.

ரெண்டு பேரும் ரிலேடிவ்ஸ் அங்கிள்... அதுவும் இந்த லூசு ரொம்ப க்ளோஓஸ் ரிலேடிவ் ஆகப் போகுது... அதுவும் இல்லாம நல்ல ப்ரெண்ட்ஸ் கூட..." என்று திவ்யாவை காட்டி கூறினான். அவளும் விநாயகமூர்த்தியை பார்த்து சிரித்து வைத்தாள்..

"மொதல்லையே சொல்லி இருக்கலாம்ல... ரெண்டு பேரையும் முதல்லையே கூப்டு இருப்பேனே..." அவர் குறைபட

"ஆமா ஆமா மொதல்லையே சொல்லி இருக்கலாம்ல மச்சான்..." விக்னேஷின் கவலையை பார்த்து கார்த்தி சிரித்தான்...

"ஓகே ஓகே மாப்ள... லீவ் இட்..." தட்டி கொடுத்து விட்டு கிளம்ப ஆயத்தமானான்.

"ஸ்ரீ... இப்போ நேரா ஸ்டுடியோ தானே..." கார்த்தி கேட்க

"இல்லண்ணா... ஆபீஸ் வேலை ரெண்டு பேருக்குமே முடிஞ்சுது... எனக்கு வெளிய கொஞ்சம் வேலை இருக்கு... சகிக்கு ஹாஸ்டல் பார்க்கணும்... திவ்யாவை கொண்டு போய் ஸ்டுடியோல விட்டுவிட்டு நான் போய்ப்பேன் ண்ணா..."

"சரி திவிய நான் அழைச்சுட்டு வீட்டுக்கு போறேன் ஸ்ரீ... நீ கிளம்பிக்கோ..." கார்த்தி முடிக்க

"ஹலோ ஹலோ... வர்றதா வேணாமான்னு நான் முடிவு பண்ணனும்... அவனுக்கு வேலை இல்லன்னா எனக்கும் இருக்காதா?"

"அடச்சீ கிளம்பு... வெட்டியா ஊர் சுத்தறதுக்கு இப்படி ஒரு பில்ட் அப்பா? கொஞ்சம் ஷாப்பிங் பண்ணிட்டு வீட்டுக்கு போலாம்... கிளம்பு..." அவள் முதுகில் ஒரு அடி வைக்க... முதுகை தேய்த்து விட்டு கொண்டே அவனை முறைத்தாள்... விக்னேஷுக்கு கார்த்தியை பார்க்க ஆச்சரியமாக இருந்தது.... இந்த அளவு எந்த பெண்ணிடமும் நெருக்கம் காட்டியவ



னில்லை அவன்... பெண்கள் விஷயத்தில் நேர்மையை கடைபிடித்த ஒரே நண்பன் இவன் தான் என்பதால் அவனது தந்தைக்கு கார்த்தி என்றால் மிகவும் இஷ்டம்...

"கார்த்தி... ஒரு நிமிஷம்..." விக்னேஷ் அவனிடம் கிசுகிசுப்பாக

"என்ன விக்கி?"

"திவ்யாவை பத்தி சொன்னதையெல்லாம் மனசுல வெச்சுக்காத கார்த்தி..." சங்கடமாக கூற

"ஹேய் இதுக்கு போயா இவ்ளோ பீல் பண்ற? நத்திங் மேன்... லீவ் இட்..." சிரித்து கொண்டே அவனை தட்டி கொடுத்தான்...

"ஆனா நம்ம புகழை அவ கிட்ட அப்போ அப்போ எடுத்து விடு மச்சி..."

"எதுக்கு டா..."

"அப்போவாச்சும் நமக்கு ஒர்க் அவுட் ஆகுதான்னு பார்க்கத்தான்..." எதிர்பார்ப்போடு கார்த்தியிடம் கிசுகிசுத்தான் விக்னேஷ் ஒரு கணம் நிதானித்த கார்த்திகேயன்... அவனை தீர்க்கமாக பார்த்து விட்டு,

"திவிய பத்தி நினைக்காத விக்கி... ஷி இஸ் கமிட்டட்..." என்று முடிக்க,

"ஓ... சாரி கார்த்தி... ஓகே ஓகே."

"ஓகே அங்கிள்... கிளம்பறேன்... விக்கி பைடா..."

விக்னேஷின் சோக முகத்தை பார்த்து மெலிதாக சிரித்து கொண்டவன் அவளை அழைத்து கொண்டு கிளம்பினான்...

✤ ✤ ✤

"அந்த மூதேவி உங்க கிட்ட தனியா என்ன சொல்லுச்சு?" காரில் அமர்ந்தவுடன் அவள் கேட்ட முதல் கேள்வியே கார்த்திக்கு புரிய சிறிது நேரம் பிடித்தது... அதை கேட்டு மனம் விட்டு சிரித்தவன்...

'நீ எந்த மூதேவிய சொல்ற? தெளிவா சொல்லு...'

"ம்ம்ம்... அந்த கேன விக்னேஷ் தான்..." கடுப்பில் வெளிவந்தன வார்த்தைகள்.

"ஹாஹாஹா... மரியாதைன்னா கிலோ என்ன விலைன்னு கேப்ப போல இருக்கே திவி... என் ப்ரெண்ட பத்தி என் கிட்டவே இப்படி சொல்ல உனக்கு எவ்வளவு தைர்யம்?" அவனால் சிரிப்பை அடக்கி கொண்டு இருக்கவே முடியவில்லை!

"சோ வாட்... அவனும் அவன் மூஞ்சியும் அவன் விடற ஜொள்ளும்... இன்னைக்கு மினிஸ்டர் இருந்ததால தப்பிச்சேன்... இல்லைன்னா அவனோட அலப்பறை உங்களுக்கு தெரியாது... கடுப்ப கிளப்பாம என்ன சொன்னான்னு சொல்லுங்க கார்த்திக்..." மிக இயல்பாக ஆனால் கோபத்தோடு கேட்ட அவளது முறை அவனுக்கு மிகவும் பிடித்தது... போலித்தனம்



இல்லாமல் சுற்றி வளைக்காமல் நேரடியாக செயல்படும் அவளது செயல்பாட்டை கண்டு மனதினுள் வியந்தான்!

"ஒண்ணுமில்ல... உன்னை அவனுக்கு செட் பண்ணி விட சொன்னான்..." அவனும் மிகவும் இயல்பாகவே போட்டு உடைக்க அவளது முகம் ஜிவுஜிவு என சிவந்தது... சரமாரியாக தமிழிலும் ஆங்கிலத்திலுமாக அவனை திட்டி தீர்த்தாள்...

"பாஸ்டர்ட்... ஸ்கௌன்ட்ரல்... அவன் அப்படி சொன்னா... நீங்க ஈன்னு கேட்டுட்டு வந்தீங்களா? அதான் நீங்கல்லாம் ஒரே வர்க்கமாச்சே... ஆண்கள் வார்க்கம்... நீங்க வேற எப்படி சிந்திப்பீங்க?" பிலுபிலுவென்று பிடித்து கொண்டவளை என்ன சொல்லி ஆப் செய்வது என்று புரியவில்லை அவனுக்கு!

"ஸ்டாப்... ஸ்டாப்... எதுக்கு நீ இப்படி பொறியா? அது பாக்கத்தான் சுமாரா இருக்கும் ஆனா வாய திறந்தா கூவம் மணக்கும்ன்னு சொல்லிட்டு தான் வந்தேன் திவி... அதனால அவன் இனிமே ரிஸ்க் எடுக்க மாட்டான்..." தீவிரமாக சொல்வது போலவே அவன் சொல்லிவைக்க கொலைவெறியானாள் திவி...

"யூ...யூ... நான் வாய திறந்தா... வேணாம் என்கிட்ட திட்டு வாங்காதீங்க கார்த்திக்.... செம கடுப்புல இருக்கேன் ஆல்ரெடி..."

"ஓகே ஓகே கூல் மேன் கூல்... சரி எங்க போகலாம் சொல்லு..." காரை ஓட்டி கொண்டிருந்தவன் சரணடைய ஒரு வழியாக சமாதானமாகினாள்!

"எதுக்கு போகணும்?" புரியாமல் அவனை கேட்க.

"ஷாப்பிங் தான்..."

"நான் எங்கயும் வரலை..."

காரை ஓரமாக நிறுத்தியவன் அவள் புறமாக திரும்பினான்...

"ஏன் இவ்வளவு டென்ஷனாகறடா? உனக்கு என்னதான் இப்போ ப்ராப்ளம்... என்கிட்டே சொல்லு... நான் உனக்கு சொல்யுஷன் சொல்றேன்..." கனிவாக அவன் சொல்வதை கேட்டு மென்மையடைந்தாள்...

"இல்ல... கார்த்திக்... அதாவது..." குரல் நகுணனமன போட

"ம்ம்ம்... சொல்லுடா..." ஊக்குவித்தான்!

"நீங்க கூட சொன்னீங்க..."

"என்னன்னு?"

"க்ளோஸ் ரிலேடிவ் ஆக போறேன்னு..." கிட்டத் தட்ட அழும் நிலைக்கு சென்றவளை விஷயம் புரியாமல் பார்த்தான்.

"சரி அதுக்கு ஏன் இவ்ளோ பீல் பண்ற..."

"என்னைய யாருமே புரிஞ்சுக்க மாட்டேன்கறீங்க கார்த்திக்... உங்களுக்கு அரவிந்த் முக்கியம்னா எனக்கு என்னோட லட்சியம் முக்கியம்... வீட்ல அம்மா அப்பா யாருமே காது குடுக்கவே மாட்டேங்கறாங்க...



என்னால கல்யாணத்தை ஏத்துக்கவே முடியல கார்த்திக்... ப்ளீஸ் அன்டர்ஸ்டேன்ட்..." கிட்டத்தட்ட அழும் நிலையில் அவள் கூற அவளது கைகளை பற்றியவன்...

"திவி... எடுத்தோம் கவிழ்தோம்ன்னு பேசாதடா... திங்க் பண்ணு... அர்விந்த் கிட்ட பேசு... உன்னோட லட்சியத்தை பத்தி... கனவை பத்தி... எல்லாம் டிஸ்கஸ் பண்ணு.... அப்புறமா டிசைட் பண்ணு...."

"கல்யாணம் பண்ணினா அவங்க என்னை வேலை பார்க்க அனுமதிப்பாங்களா இல்ல மாட்டாங்களான்னு கூட நான் யோசிக்கல... அந்த கல்யாணம்ங்கற கான்செப்ட்டுக்கே நான் இன்னும் மனசளவுல ரெடி ஆகல...."

இப்படியும் ஒரு பெண் இருப்பாளா என்று ஆயாசமாக இருந்தது கார்த்திக்கு! எப்படிப்பட்ட வாழ்க்கை கிடைத்தாலும் தன்னுடைய லட்சியம் தான் முக்கியம் என்று சொல்பவளை பார்த்து ஒரு கணம் மனம் தடு மாறியது!

"ம்ம்ம் புரியுதுடா... யோசிக்கலாம்... கொஞ்சம் பொறுமையா இரு... என்ன பண்றதுன்னு பார்க்கறேன்... சரி இப்போ அந்த விஷயத்தை விடு... இப்போ பீனிக்ஸ் மால் போகலாம்...வர்றியா இல்லையா?" என்று கார்த்தி அரட்ட திவி சிரிக்க ஆரம்பித்தாள்...

"ஷாலினிய கூட்டிகிட்டு போனாலாவது பியுச்சர்ல உங்களுக்கு யூஸ் ஆகும்... என்னை போய் கூட்டிகிட்டு

போய்... கார்த்திக்... இப்படி ஜோக் பண்ண கூடாது..." மனம் விட்டு சிரித்தவளை ஏனோ பார்த்துக் கொண்டே இருக்க தோன்றியது...

"அட நீ வேற பொடிசுங்க ரெண்டுக்கும் புதுசா வந்த ப்ளே ஸ்டேஷன் வேணுமாம்... அது என்னன்னு கேட்டா திவிக்கா கிட்ட கேளுங்கன்னு சொல்லுதுங்க... உன் ரேஞ்சுக்கு தான் வேலை இருக்கு... சோ சிரிக்காம வர்றியா..."

"ஓ... அதான் மேட்டரா!!! ஓகே ஓகே அப்படீன்னா எனக்கு ஒரு ஐஸ்க்ரீம் வாங்கி தந்தா வர்றேன்... எப்படி வசதி?" என்று சிரிக்க

"அட பக்கி... சரி சரி வாங்கி தர்றேன்... நல்லா கவுத்து வெச்சிருக்க அந்த ரெண்டையும்..."

"குழந்தைகளுக்கு எப்போவுமே நல்லவங்களை தான் பிடிக்கும் கார்த்திக்..." கண்ணை உருட்டி கொண்டு அப்பாவி போல சொன்னவளை காதை பிடித்து திருகியவன்

"அது ஒண்ணுமில்ல... அதுங்க ரேஞ்சுக்கு லூசுத்தனம் பண்ணிட்டுத் திரியற கேசுன்னு தான் உன்னை அதுங்களுக்கு பிடிக்குது..."

ஃபீனிக்ஸ் மால் நான்கு மணி நேரம் சுற்றி ஐஸ்க்ரீம், பிரெஞ்ச் பிரைஸ், பாப்கார்ன், சாக்கோடிப் என்று தின்பண்டங்களை காலி செய்து ஐம்பது முறை சண்டைபோட்டு ஒரு வழியாக ப்ளே ஸ்டேஷனையும் வாங்கி திரும்புவதற்குள்... ஷப்பா... முடில...



## 9

**நா**ட்கள் கடந்து கொண்டு இருந்தது! நடுவில் அனாமதேயமாக கிடைத்த ஆதாரங்களை வைத்து இருவரும் தலையை பியைத்து கொள்ளாதது தான் மிச்சமானது! வீட்டிலோ இந்த திருமணம் வேண்டாம் என்றாலும் ஒருவரும் கேட்பதாக இல்லை... அவளை எப்படியாவது சரி கட்டவே பார்த்தனர்! தப்பி தவறி ஸ்ரீ ஏதாவது திவிக்கு ஆதரவாக கருத்து தெரிவிக்க வந்தாலே அவனை எல்லோருமாக முறைத்து அமர வைப்பதே வேலையாகி போனது! உனக்கு என்ன தெரியும் என்ற ரீதியில் இருந்தன அவர்களது பேச்சு! இருவருமே பேசி சலித்து போயிருந்தனர்!

இதற்கு நடுவில் மாப்பிள்ளை வீட்டின் சார்பாக வைஷூவே அவ்வப்போது பேசி அனைத்து ஏற்பாடுகளையும் நடத்தி கொண்டிருந்தாள்! தன் அண்ணனின் திருமணம், அரவிந்தனுக்கும் திவ்யாவுக்கும் திருமணம் என்று இரட்டை சந்தோஷத்தில் ஷாப்பிங்கில் அசத்தி கொண்டிருந்தாள் வைஷ்ணவி! என்ன செய்வது என்று யோசிக்கலாம் என்று வாக்குறுதி கொடுத்திருந்த கார்த்திகேயன் அதை பற்றி வாயையே திறக்கவில்லை என்று கருவி கொண்டிருந்தாள் திவ்யா.

அவ்வப்போது கார்த்திகேயனும் செல்பேசியில் அழைத்து பேசினான்... கருத்து பரிமாற்றங்களும்... கருத்து மோதல்களும் தொடர்ந்து கொண்டே தான் இருந்தன... சமூகம் சார்ந்த பிரச்சனைகள் பலவற்றை இருவருமாக அலசும் போது திவ்யாவுக்கு உண்மையாகவே சந்தேகம் வந்தது... இந்த அளவு சமூக பார்வை உள்ளவன் தவறு செய்வானா என்பதே அது!

ஸ்ரீராமும் இதே கருத்தை தெரிவிக்கவும் இந்த விஷயத்தில் என்ன செய்வது என்று இருவருக்கும் பெரும் குழப்பமே நேரிட்டது... ஏனென்றால் அன்று அவர்கள் எடுத்து வந்த சாம்பிளை லேபில் குடுத்து பார்க்கும் அது ரோபினால் மற்றும் எல்எஸ்டி என்பது தெளிவாகியது! அவற்றை ஒரு கிராம் இரண்டு கிராம் வைத்து இருப்பதே சட்டபூர்வமாக தவறு என்னும் போது எப்படி இவ்வளவு தைர்யம்? அன்றைக்கு அந்த போலீசிடம் பேசியவனும் அவனே என்பது ஊர்ஜிதம்! நட்பை தாண்டி அவன் மேல் கோபம் எழுந்தது! இப்போது அவர்களுக்கு எழுந்த சந்தேகம் இந்த விஷயங்களில் அரவிந்தனின் பங்கு என்ன என்பது தான்!

"பேசாம கார்த்தி அண்ணா கிட்ட கேட்டுடலாம் திவி?" ஸ்ரீராம் யோசனை குடுக்க,

"எப்படி ஸ்ரீ? கேட்டா உஷார் ஆகிட மாட்டாங்களா? அவங்க இதை பண்றாங்கன்னு நமக்கு



நல்லாவே தெரியுது... இப்போ கிடைத்து இருக்கற ஸ்கூப்ஸ நினைச்சு பாரு... எனக்கு வயில கலக்குது..."

அவள் சொல்வதும் உண்மைதான்... போதை மருந்து என்பது சிறியதாகிவிட்ட பிரச்சனை போல தோற்றம் செய்யக்கூடிய பிரச்சனை... காலாவதியான மருந்துகளை மருந்து கடைகளில் பெற்று அதை திரும்பவும் புழக்கத்திற்கு விடுவதாக கிடைத்த ஆதாரம்... பார்க்க போனால் இதற்கான ஆதாரங்களை தேடி தான் இருவரும் பாண்டிச்சேரி சென்றதே... ஆனால் இதை விழுங்கும் இன்னொரு ஆதாரமான போதை மருந்து கிடைக்க... இருவரும் தலை சுற்றித்தான் போயிருந்தனர்!

இதையெல்லாம் நேரடியாக கார்த்தியிடம் கேட்டால் அவன் சுதாரித்து கொண்டு ஆதாரங்களை அழிக்க பார்த்தால் என்ன செய்வது என்ற திவ்யாவின் கவலையிலும் பொருள் இல்லாமல் இல்லை... இந்த காலாவதியான மருந்துகள் விஷயத்தில் வலுவான ஆதாரம் ஏதாவது ஒன்று கிடைத்தாலும் அதை நூல் போல் பற்றி கொண்டு மேலே சென்று விடலாம்! அதற்கா மொத்த மருந்து கடைகளிலும் ஸ்டாக்கிஸ்ட் களிடமும் சேகரித்த செய்திகளில் ஒன்று தெளிவானது! சுஷ்ருதா என்றாலே கார்த்திகேயன் மட்டும்தான் என்று! பின்னர் எதற்காக அரவிந்தன் என்று இருவரும் யோசிக்கும் போது,

"ஏதாவது பிரச்சனை வந்தா அவனை கை காட்டி விட்றலாம் இல்லையா ஸ்ரீ... அதுக்காகத்தான் இருக்கும்..." என்று திவி ஒரு யோசனையை குடுக்க,

"கண்டிப்பா இருக்காது திவி... கார்த்தி அண்ணாவ பார்த்தா எனக்கு என்னமோ தப்பு பண்றவங்க மாதிரி தோன்றலை... ஏன் அரவிந்தன் இதுல சம்பந்த பட்டு இருக்க கூடாதா?"

"எந்த இடத்திலையும் அரவிந்தன் வரலப்பா... போலீஸ் கிட்ட கார்த்தி தான் பேசராப்ல, சூப்பர் ஸ்டாக்கிஸ்ட கேட்டா எல்லாத்தையும் கார்த்தி கிட்ட தான் கேக்கணும்ன்னு சொல்றாங்க... இன்னும் எத்தனை எத்தனை பேர் கிட்ட பேசி இருக்கோம்... எல்லாருமே கை காட்றது கார்த்திய மட்டும் தானே..." அவளது இயல்பான சந்தேகங்களை அடுக்க,

"1 think you are rushing up with the judgement dhivi... but I dont think karthy would have done this kinda act... may be a propanganda..."

"அப்படீன்னா நானா சொல்லி சொல்லி அவனை குற்றவாளி ஆக்குறேன்னு சொல்லவர்றியா ஸ்ரீ?... இந்த ஆதாரத்த எல்லாம் பார்த்து கூட உன்னால முடிவு பண்ண முடியலையா?" கோபம் கலந்திருந்ததோ!

"நாம ஒரு முடிவ நோக்கி ஓட வேண்டாம்ன்னு சொல்ல வரேன் திவி... கொஞ்சம் பொறுமையா பார்க்கலாம்!"

"எவ்ளோ பொறுமை ஸ்ரீ? எனக்கு அந்த அரவிந்தனோட கல்யாணம் நடந்ததுக்கு அப்புறமாவா?"



"ஏன் அதையும் இதையும் முடிச்சு போடற திவி?" கோபமாகவே கேட்டான்!

"பின்ன எப்பிடி சொல்ல சொல்ற? கல்யாண ஏற்பாடு அடுத்த ஸ்டெப் போறதுக்குள்ள இந்த விஷயம் வெளிய வரணும் ஸ்ரீ... அப்போதான் இந்த கல்யாணமும் நிற்கும் அதோட விஷயமும் வெளிய வந்த மாதிரி இருக்கும்... புரியாம பேசற ஸ்ரீ!"

"ஹா... பூனை குட்டி வெளிய வந்துடுச்சு... ஆக மொத்ததுல உனக்கு பிடிக்காத இந்த கல்யாணம் நிற்கணும்... அதுக்காகத்தான் இப்படி பறக்கற..." கண்டிக்கும் தொனியில் பேசியவனை முறைத்த திவி,

"லூசு... என்னடா பேசற நீ? பாண்டி போனப்போ எனக்கு இந்த கல்யாண ஏற்பாடே நடக்கல... அது உனக்கு தெரியாதா? அப்போ எல்லாம் நீ இப்படி பேசலியே... இப்போ ஏன் உனக்கு பைத்தியம் பிடிச்சுருச்சா?"

"அப்போ கார்த்தி அண்ணன பார்க்கலடி... இப்போ அவரோட பழகும் போது உன்னால புரிஞ்சுக்க முடியலையா? கண்டிப்பா அவர் இப்படி பண்ண மாட்டார் திவி... இதுல வேற எதோ இருக்கு..."

"அப்போ உன்னோட ப்ராப்ளம் கார்த்திய இதுல இழுக்கறதுதான் இல்லையா? இது சுயநலமில்லையா? எத்தனையோ மக்கள் இந்த காலாவதியான மருந்தை சாப்பிட்டு உயிரை விடுறாங்களே அதை பத்தி உனக்கு கவலை இல்லை... கார்த்திய பற்றி மட்டும் தான்

கவலை... இல்லையா... சபாஷ்..." வெறுப்பாய் அவள் கூறி கொண்டிருக்கும் போதே அவளது செல்பேசி அழைக்க... பார்த்தான்.. புதிய எண்!

"ஹலோ... திவ்யாதர்ஷினி ஹியர்..."

"ஹாய்... யார்ன்னு கண்டுபிடி பார்க்கலாம்..." கரகரப்பான அவளுக்கு பரிச்சயமில்லாத ஆண் குரல்!

"ஹலோ.... போன பண்ணினா ஒழுங்கா பேசணும்... இப்படி கேனத்தனமா பேச கூடாது... இங்க என்ன வீடியோ கேமராவா இருக்கு? ஒழுங்கா யார்ன்னு சொல்லுங்க... இல்லைன்னா வையுங்க..." ஸ்ரீராமிடம் பேசிய காரமும் கோபமும் இன்னமும் தீராமல் மாட்டியவனை வதக்கி கொண்டிருந்தாள் திவி!

"ஹே ஹே. வைச்சுடாத... எப்பா எப்படி பொரியற... கல்யாணத்துக்கு அப்புறம் கொஞ்சம் கஷ்டம் தான் போல இருக்கு..." என்று கூறிய போதே சந்தேகம் எழுந்தது! அரவிந்தனோ? அவன் இது வரை பேசியதில்லையே!

"அரவிந்த்...?" கேள்வியாக கேட்க.

"ஹப்பா... இப்போவாச்சும் ஞாபகம் வந்துதா? அந்த பாவப்பட்ட ஜீவன்தான் செல்லம்..." செல்லம் கொஞ்சியவனை நினைக்கையில் பற்றி கொண்டு வந்தது! மண்ணாங்கட்டி என்று நினைத்து கொண்டே,

"சொல்லுங்க என்ன விஷயம்?" கத்தரித்து விடுவது போல பேச,



"நேர்ல பார்க்கணுமே..."

"சாரி முடியாது..."

"ஏன்?"

"கல்யாணத்துக்கு முன்னாடி இப்படி எல்லாம் ஊர் சுத்தறது எனக்கு பிடிக்காது..."

"யார் கூட சுத்தற? உன்னை கட்டிக்க போறவன் கூட தானே... தி கிரேட் அரவிந்த்மா..." பெருமை பேசியவனின் வாயிலேயே ஒரு குத்து விட தோன்றியது திவ்யாவுக்கு!

"அப்பா கிட்ட பேசுங்க..." என்று கூறி விட்டு சட்டென்று செல்பேசியை அணைத்தாள்!

சிறிது நேரம் ஸ்ரீயிடம் பேசிக் கொண்டிருந்து விட்டு இருவருமாக அலுவலகத்தில் இருந்து புறப்படும் வேளையில் மறுபடி செல்பேசி அழைக்க எடுத்து பார்த்தால் கார்த்தி! அவளை பொறுத்தவரை கார்த்திக்குடனான நட்பு என்பது வேறு... அவளது புலன் விசாரணையில் கார்த்திகேயன் பற்றிய முடிவுகள் என்பது வேறு! உள பூர்வமாக பார்க்கும் போது அவனது நட்பை அவள் மதித்தாள்! அவனுடனான நட்பை பெரிதும் விரும்பினாள்! அவனுடன் எப்போதும் நடக்கும் கருத்து மோதல்களை வரவேற்றாள்! கருத்து பரிமாற்றங்கள் இருந்தால் தானே நமது அறிவும் விரிவடையும் என்பதே அவளது கருத்தாக இருந்தது!

"ஹாய் கார்த்திக்..."

"ஹாய் டா.. என்ன பண்ணிட்டு இருக்க?"

"இப்போதான் ஸ்டுடியோல இருந்து வெளியே வர்றேன்... சொல்லுங்கப்பா!"

"அரவிந்த் பேசினானா திவி?"

"ம்ம்ம் ஆமாம்... பார்க்கனும்ன்னு சொன்னாப்ல... நான் முடியாதுன்னு சொல்லிட்டேன்... ஏன்? என்னாச்சு?"

"நான் மாமா கிட்ட பேசிட்டேன்... நானும் கூட வர்றேன்டா... ஈவினிங் நானே பிக் அப் பண்ணிக்கறேன்..."

"இல்ல கார்த்திக்... வேணாம்... நான் வரலை... எனக்கு இதெல்லாம் சரி வராது" அவசரமாக அவள் கூற,

"அட பயப்படாதப்பா... நான் தான் கூட இருக்கேன்னு சொல்றேன்ல... ஓகே சரி... நீ வரும் போது ஸ்ரீய கூட்டிட்டு வந்துடு..."

"எதுக்கு ஸ்ரீ?"

"அடப்பாவிகளா... நீங்க ரெண்டு பேரும் கடலை வறுத்துட்டு இருப்பீங்க... நான் என்ன உங்க கடலை பேக்டரில வாட்ச்மேன் வேலை பார்க்கணுமா? ஸ்ரீ இருந்தா எனக்கும் பொழுது போகும்..."

கார்த்திக்... பொழுது போக பையன கூப்பிடற ஒரே ஆள் நீங்களா தான் இருப்பீங்க..." என்று கூறியவுடன் சிரித்தவன்.



"ஓகேடா பை." என்று கூறி விட்டு செல்பேசியை வைத்தான்!

✤ ✤ ✤

மயக்கும் மஞ்சள் வெளிச்சம்! உடலை தாக்காமல் குளிர்வித்த இதமான ஏசி... உணவின் மணத்தோடு இனிய வாசமும் நாசியை தாக்க... மனமோ மயங்கியது! ஒவ்வொரு மேஜையிலும் மெழுகுவர்த்தி வெளிச்சத்தில் ஜோடிகள் தங்களது உலகத்தை மறந்து பேசி கொண்டிருந்தனர்! அப்படி எதை தான் பேசிக் கொண்டே இருப்பார்களோ என்று திவ்யாவுக்கு சந்தேகமே வந்தது! கார்த்தியிடம் கிசுகிசுப்பாக கேட்க அவனோ அவளை வேற்று கிரகவாசியை பார்ப்பது போல் பார்த்தான்!

"ஸ்வீட் நத்திங்க்ஸ் திவி..." என்று கூறி புன்னகைக்க

"என்ன நத்திங்கோ... நீங்க பேசாம ஷாலினியை கூட்டிட்டு வந்திருக்கலாம்."

"கல்யாணத்துக்கு முன்னாடியே பாண்டில இருந்து சென்னைக்கு... ஹும்... விளையாடாத திவி!

"ஏன் இப்போ என்னை பிடிவாதமா இழுத்துட்டு வரலையா நீங்க..."

"அரவிந்த் ஆசைப்பட்டான்... அதான்... அதுவும் இல்லாம ஒரே ஊர்ல தானே..."

"ஷாலுவ இந்த மாதிரி கேண்டில் லைட் டின்னருக்கு கூட்டிட்டு போய் இருக்கீங்களா கார்த்திக்?" என்று அவள் கேட்கவும் அவன் புன்னகைத்து கொண்டே

"இப்போ உன் கிட்ட யார் கம்ப்ளைன்ட் பண்ணது?"

"யாரும் இல்ல... நானே தான் கேக்கறேன்..."

"சரி... இனிமே அழைச்சுட்டு போறேன்... விடு..." என்று முடிக்க பார்க்கவும்

"நீங்க மட்டும் ஒரு கொள்கையோட இருக்கேன்னு சொல்லலாம்... ஆனா நாங்க சொன்னா அப்பா கிட்ட சொல்லி இழுத்துட்டு வருவீங்க... அப்படித்தானே..." வம்புக்கே அலைந்தாள் திவ்யா!"

"சரி சரி. எல்லாம் சரி... ஸ்ரீ எங்க?" டாப்பிக் மாத்து என்று மாற்றினான்!

"அவன் சாஹித்யாவுக்கு உடம்பு சரி இல்லைன்னு ஹாஸ்பிட்டல் அழைச்சுட்டு போய்ட்டான்!"

"சாஹித்யாவுக்கு இங்க யாரும் இல்லையா திவி?"

"ம்ம்ம்... ஆமாம் கார்த்திக்... ஹாஸ்டல்ல தான் இருக்கா... " பேசி கொண்டிருக்கும் போதே அரவிந்தன் வர அவர்களது பேச்சு தடைப்பட்டது! வரும்போதே புன்னகை மன்னனாக வந்தவன் திவ்யாவுக்கு பக்கத்தில் சென்று அமர்ந்தான்!



"ஹாய்... வந்து ரொம்ப நேரம் ஆச்சா?"

"ம்ஹூம்... இல்ல... இப்போ தான் வந்தோம் அரவிந்த்" பதில் கூறியது கார்த்திகேயன் தான்!

திவ்யாவுக்கோ அவனை பார்க்கும் போதே கூசியது! ஏன் இப்படி பார்த்து வைக்கிறான்? கார்த்திகேயனோடு இவ்வளவு நேரம் பேசி கொண்டிருக்கையில வராத ஒரு சங்கடம், அரவிந்தனை பார்த்த நொடியே வருகிறதே... ஏன் என்று புரிந்தது திவ்யாவுக்கு! கார்த்திகேயனது கண்ணியமான சிநேகமான பார்வை! அது இவனிடம் சுத்தமாக இல்லை என்பதை உணர்ந்தாள்... ஒரு வேளை திருமணம் செய்ய போகும் பெண் என்பதால் பார்க்கும் பார்வையா? ஆனால் இன்னமும் எதுவும் முடிவு செய்யாத நிலையில் அவளுக்கு வெறுப்பையே தந்தது!

அவளின் முகச்சுளிப்பை கண்ட கார்த்திகேயன், சட்டென்று உணர்ந்து உணவு பற்றி இருவரிடமும் கருத்து கேட்க, அதையெல்லாம் சிறிது கண்டு கொள்ளாத அரவிந்த் திவ்யாவையே விழுங்குவது போல பார்த்து கொண்டு,

"எதுவா இருந்தாலும் ஒகே கார்த்தி... திவ்யா என்ன சாப்பிடறாளோ அதுவே எனக்கும் ஒகே" என்று கூறவும் திவிக்கு தலையில் அடித்து கொள்ளவே தோன்றியது!

"திவ்யா... யூ லுக் கார்ஜியஸ்..." அரவிந்தன் தன்னை மறந்து கூற அப்போதுதான் கார்த்திகேயனும் அவளை அந்த நோக்கில் பார்த்தான்! கடல் நீல டிசைனர் சேலையில்... தனது நீளமான முடியை தளர பின்னி... அதற்கு தகுந்த மெல்லிய நகைகள் அணிந்து அந்த வெண்பளிங்கு முகத்தில் சிறு பொட்டும் மிக மெல்லிய லிப்ஸ்டிக் தீற்றலுமாக வெண்ணிலவே அமர்ந்து இருப்பதை போல இருந்தவளை ஏன் இவ்வளவு நேரம் கவனிக்கவே இல்லை? உடையவன் வந்தால் தான் பொருளுக்கு மதிப்பிருக்கும் போல! என்று எண்ணி கொண்டான் கார்த்திகேயன்!

"உனக்கு என்னப்பா ஆர்டர் பண்ணலாம்? நீ என்ன சாப்பிட்டாலும் சார் சாப்பிடுவாராம்!" சிரித்து கொண்டே அவன் கேட்க.

"அப்படியா... நான் வைக்கோல் சாப்பிட போறேன்... ஓகேவா... உங்க பிரெண்ட சாப்பிட சொல்லுங்க..." உள்ளுக்குள் இருந்த கடுப்பில் வெளியே சிரித்து கொண்டே வந்து விழுந்தன வார்த்தைகள்!

"நீ சாப்பிடறத இப்படி பப்ளிக்கா சொல்லுவேன்னு நான் எதிர்ப்பார்க்கவே இல்லை திவி... எப்போவுமேவா... இல்ல எப்படியாவதுதானா?" சிரிக்காமல் அவளை பார்த்து கேட்ட போதே அவளுக்கு உரைத்தது! ஆஹா மாட்டிக் கொண்டோமே!

"இல்ல கார்த்திக்... எப்போவாச்சும் உங்களை மாதிரி இரண்டு கால் பிராணிங்களோட சாப்பிட



போறப்போ மட்டும் தான்! என்ன பண்றது... உங்க மெனுவ அடாப்ட் பண்ணி தானே ஆகணும்..." என்று அவளும் மிக சீரியசாகவே கூறுவது போல நடிக்க,

"ஏய் வாலு..." என்று சிரித்து கொண்டே அவளை அடிக்க வருவது போல் பாவனை செய்ய அவளும் சேர்ந்து சிரித்தாள்! ஒவ்வொரு உணவாக ஆர்டர் செய்ய இது கனிஷ்கருக்கு பிடித்தது, இது விக்கி அண்ணாவுக்கு பிடித்தது, இது வைஷு அண்ணிக்கு பிடித்தது, இது ஸ்ரீராமுக்கு பிடித்தது, இது மனிஷாவுக்கு பிடித்தது என்று சைட் கமெண்ட் கொடுத்து கொண்டே வர...

"பேசாம உன் கூட மனிஷா, கனிஷ்கர அழைச்சுட்டு வந்து இருக்கலாம் போல இருக்கே..." கார்த்திகேயனுக்கு ஒரு புறம் ஆச்சரியமாக இருந்தாலும் சலிப்பாக கூறுவது போல் கூறினான்!

"ஆமா கார்த்திக்... அப்போவாவது என்ஜாய் பண்ணியிருப்பேன்..." என்று சோக கீதம் வாசிக்க

"அடிங்க... உனக்கு உன் உட் பீ கூட சாப்பிட வர்றது அவ்வளவு போர் அடிக்குதா?" என்று கூற அரவிந்தனும் சேர்ந்து சிரித்தான்! பேசிகொண்டிருக்கும் போதே அருகில் வந்த ஒருவர்,

"ஹே கார்த்திக்.. வாட் எ சர்ப்ரைஸ் மேன்... நீ ஒரு பொண்ணோட... ரியல் சர்ப்ரைஸ்..."

"ஹலோ செந்தில் சார்... வாங்க வாங்க... நான் மட்டும் தனியா வரலை.. அரவிந்த் கூட தான் வந்து

இருக்கேன்... பார்க்கலியா நீங்க?" என்று சிரித்து கொண்டே கேட்கவும்,

"ஹாஹாஹா... ஆமாம் ஹாய் அர்விந்த்" என்று முகமன் கூறிவிட்டு கார்த்திக்கேயனோடு பேச்சில் ஆழ்ந்தார்! அவ்வப்போது வெடி சிரிப்பு சிரித்தபடி!

"திவி... இது செந்தில்முருகன் சார்... தெரியும் தானே... தமிழ்நாட்டு கல்வி அமைச்சர்... நமக்கு ரொம்ப வேண்டியபட்டவர்..." என்று சிரித்தவாறே கூறி விட்டு அவரிடம் திரும்பி பேச

"ஏன்ப்பா... நீ தான் பாண்டிச்சேரிகாரனாச்சே... எங்களை எல்லாம் கண்டுக்க மாட்டியே?" அவர் சிரித்து கொண்டே... எப்போதும் நகைச்சுவையாகவே பேசுவார்... கார்த்திகேயனின் நலம் விரும்பி!

"சார்... நான் எந்த ஊரா இருந்தாலும் நீங்க எனக்கு வேண்டப்பட்டவர்தான் போதுமா?" புன்னகையோடே கூறிவிட்டு திவி பக்கம் திரும்பி,

"சார்... இது திவ்யா... என் கசின்..." நீட்டி முழக்காமல் சுருக்கமாக முடித்தான்... அவரிடம் சிறிது நேரம் பேசி கொண்டிருந்து விட்டு, அவரை தனியாக அழைத்து செல்ல... இருவரும் தனிமையில் விட பட்டனர்!

அரவிந்தனுக்கு கை கால் ஒன்றுமே ஓடவில்லை! தன்னுடைய தேவதையுடன் இருக்கிறோமா என்ற உணர்வே அவனுக்கு மயக்கத்தை தர கண்கள்



சொக்கி போய் இருந்தான்... அவனும் எத்தனையோ பெண்களிடம் பழகி உள்ளவன்தான்! படுக்கையை பகிர்ந்து கொண்டு வாழ்ந்தவன் தான்... ஆனால் திவ்யாவிடம் தோன்றிய மயக்கம் வேறு யாரிடமும்... ம்ஹூம்... கிடையவே கிடையாது என்று அவனது மனது சத்தியம் செய்தது!

"திவ்யா... ஷால் வி டான்ஸ்?" பால்ரூம் டான்ஸ் ஆரம்பித்து கொண்டிருந்தது!

"நோ அரவிந்த்... ஐ டோன்ட் ஹவ் இன்ட்ரெஸ்ட்!"

"ப்ளீஸ் திவ்யா..." அவன் கெஞ்ச சரி நடனம் தானே என்று அவனுடன் நடனமாட சென்றவள், பார்த்து அதிர்ந்தாள்... அப்போதுதான் சல்சா ஆரம்பமாகி இருந்தது.. சல்சா என்பது ஆண்களும் பெண்களும் மிக நெருக்கமாக ஆடப்படும் நடனம்... பொதுவான நடன அமைப்பே மிகவும் சூடேற்றுவதாக இருக்கும்!

"நோ அரவிந்த்... ஐம் நாட் கம்பார்ட்டபில் வித் சல்சா!"

"ஹே. ஜஸ்ட் எ கப்பில் ஆப் ஸ்டெப்ஸ் டியுட்... காமான்..."

நடனமாட அழைத்து சென்று ஆரம்பத்தில் சற்று ஒழுங்காக ஆடியவன், போக போக அத்துமீற துவங்கினான்! அதுவும் இல்லாமல் அன்று உடுத்தி இருந்த சேலை வேறு அவனது அத்துமீறல்களுக்கு

ஒத்துழைக்க... திவியால் ஒன்றும் செய்ய முடியாமல் சுற்றி இருந்தவர்களை பார்த்து தவித்தாள்! கண்களில் கண்ணீர் சூழ பார்த்தது!

"அரவிந்த்... போதும்... ஐம் கோயிங்..." கடுமையாக கூற பார்த்து... சுற்றுப்புறம் உணர்ந்து... மெல்லிய குரலில் ஆனால் அதே கடுமையோடு கூற அவளை அணைத்து ஆடி கொண்டிருந்தவனுக்கு அவை காதில் விழுந்தால் தானே? உலகத்தை மறந்து கண்களில் ஆசை மின்ன,

"ஜஸ்ட் பைவ் மினிட்ஸ் பேபி... கூல்..."

"அரவிந்த் என்னை விடுங்க... இங்க சீன் க்ரியேட் பண்ணாதீங்க... ஜஸ்ட் லீவ் மீ...!" கண்களில் கோபத்தோடு கூற அவனோ விடுவேனா என்று இன்னும் நெருங்னான்! கண்களில் கோபமும் அவனை எரித்து விடுவது போல பர்த்த பார்வையுடன் அவனை விட்டு விலக முடியாமல் போராடி கொண்டிருக்க, சட்டென்று அவளின் கையை பற்றியது வலிய கரம்...

கார்த்திகேயன்!

நிம்மதி சூழ்ந்தது திவ்யாவின் நெஞ்சில்!

அவளின் கையை பற்றி வெளியே அழைத்து போனவனை பார்த்து அரவிந்துக்கு கோபமே வந்தது! இவன் யார் என்னுடைய விஷயத்தில் தலையிட? எனக்கு பார்த்த பெண்ணுடன் நடனமாட யாரை கேட்க வேண்டும்?



"கார்த்தி.. அவளை விடு..." அவளது கையை பற்றியிருந்தவன், அர்விந்தை பார்த்து முறைத்தான்!

"அரவிந்த்... திவியை இப்போ என்னை நம்பி அனுப்பி வைச்சு இருக்காங்க... நீ இப்படி பண்றது நல்லா இல்ல..."

"டான்ஸ் பண்றது தப்புன்னு எங்கயுமே சொல்லலையே... அதோட ஷி இஸ் மை கேர்ள்..." அரவிந்தின் கோபமும் உச்சியை தொட்டு கொண்டிருந்தது! இருவரின் கோபத்தையும் செயலிழந்து பார்த்து கொண்டிருந்தாள் திவ்யா!

"விருப்பம் இருந்தா தப்பு கிடையாது... விருப்பம் இல்லாத பொண்ண மனைவியா இருந்தாலும் தொடறது தப்பு தான்... வேணாம் அரவிந்த் தப்பு பண்ற?" உஷ்ணமாக வார்த்தைகளை வீச,"

"அவ இருக்கற மீடியால இதெல்லாம் சகஜம் இல்லையா? எத்தனை பேர் கூட டேட் பண்ணாளோ? எத்தனை பேர் கூட போனாளோ.. என்னமோ நான் தான் முதல்ல அவளை தொட்டுட்ட மாதிரி இல்ல நீ சிலிர்த்துகற... நான் என்ன அவளை படுக்கைக்கா கூப்பிட்டேன்?" என்று வார்த்தைகளை கொட்ட அதை கேட்டு அதிர்ச்சியடைந்த திவி அடிக்க கையை ஓங்கினாள்!

இடியென இறங்கியது கார்த்திகேயனின் கை... அரவிந்தனின் கன்னத்தில்!

"இன்னொரு வார்த்தை திவ்யாவை பத்தி பேசுன... கொலை விழும் ராஸ்கல்... யார பத்தி என்ன பேசுற? உனக்கு அந்த தகுதி இருக்கா? எங்க வீட்டு பொண்ண பத்தி பேசிட்டு நீ உயிரோட போய்டலாம்ன்னு நினைக்காத... அங்கிளுக்காக பார்க்கறேன்... தப்பு பண்ணிட்டேன்... சாக்கடைக்கு சந்தனத்தை இணை சேர்க்கலாம்ன்னு நினைச்சது தப்பு..." கோபத்தின் உச்சியில் கொதித்தான்!

"கார்த்தி... இது சரி இல்ல... ஒரு பொண்ணுக்காக நாம பகைச்சுக்கறது!" அரவிந்தன் மிரட்ட... திவ்யாவுக்கோ அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக வாய் பேசவே முடியாமல் இருந்தாள்! அவளுக்கு கார்த்திகேயனின் முகத்தை தவிர வேறொன்றும் தெரியவில்லை!

"என்னடா நினைச்சுட்டு இருக்க? உன் மிரட்டல என் கிட்டவே காட்டுறியா நீ... பொறுக்கித்தனமா சுத்திட்டு இருக்கியேன்னு உங்க அப்பா ரொம்ப வருத்தப் பட்டார் என்கிட்ட... நான் தான் திவிய பார்க்கலாம்ன்னு சொன்னேன்... அப்பாவாவது நீ திருந்த மாட்டியான்னு தான்... ஆனா எப்ப நீ அப்படி ஒரு வார்த்தைய சொல்லிட்டியோ... அதோட இந்த மேட்டர் ஓவர்.. நமக்குள்ள இருக்கற ரிலேஷன்ஷிப் பத்தி பாண்டி போய் நான் தான் முடிவு பண்ணனும்... என் முகத்துல விழிக்காத... போய்டு..." என்று கொதித்து கொட்டிவிட்டு திவ்யாவை அழைத்து காரில் ஏறி அமர்ந்தவன் உடனடியாக கிளம்பினான்!



பார்த்து கொண்டிருந்த அரவிந்தனின் மனமோ உலைகளனாக கொதித்து கொண்டிருந்தது!

## 10

**கா**ர் அமைதியாக கிழக்கு கடற்கரை சாலையில் பயணித்து கொண்டிருந்தாலும் இருவரின் மனமும் கொதித்துக் கொண்டிருந்தது! அரவிந்தனின் செய்கை திவ்யாவுக்கு அவன் மேல் கோபத்தை ஏற்படுத்துவதற்கு பதிலாக கார்த்திகேயன் மேல் ஆத்திரத்தையே வரவழைத்தது! கார்த்திகேயனுக்கோ அரவிந்தனை பற்றி தெரிந்தும் இந்த வேலையில் இறங்கி விட்டோமே என்று மனதிற்குள் வருத்தம் கரை கடந்தது! அவனது அழுத்தம் மிகவும் அதிகமாக சாலையின் ஓரத்தில் நிறுத்தியவன், தானும் இறங்கினான்... பகலும் இரவும் சங்கமிக்கும் அந்த மாலை வேளையின் சூன்யத்தை வெறித்து பார்த்து கொண்டிருந்தவன் ஒரு சிகரெட்டை எடுத்து பற்ற வைத்தான்... அந்த நேரத்தில் அவனுக்கு அது தேவைப்பட்டது அவனது அழுத்தத்தை குறைக்க... இந்த மாலை பொழுதின் சங்கடத்தை மறக்கவே முடியாதோ?

மனிதர்கள் சில நேரம் நிறம் மாறலாம்
மனங்களும் அவர் குணங்களும் தடம் மாறலாம்!

"சாரிடா நீ வரலைன்னு தான் சொன்ன.... நான் தான்... ஷிட்... இப்படி ஆகும்ன்னு நினைக்கவே இல்லை..." மௌனத்தை உடைத்தான் கார்த்திகேயன்... அவனை நிமிர்ந்து கூட பார்க்காத திவ்யா கையை காட்டி அவன் பேசுவதை நிறுத்த சொன்னாள்!

"திவி... ப்ளீஸ்..."

"வேணாம் கார்த்திக்... பேசாதீங்க..."

"இல்லடா... அவன் இப்படி உன்கிட்டயே மிஸ்பிஹேவ் பண்ணுவான்னு நினைக்கில்... உன்னை கல்யாணம் பண்ணிகிட்டாவாச்சும் அவன் திருந்து வான்னு நினைச்சேன் திவி..." என்று வெறுமையாக கூறி கொண்டிருக்கும் போதே அவளது முகம் கோபத்தில் சிவந்தது,

"ஸ்டாப் இட் கார்த்திக்... ஊர்ல தறுதலையா இருக்கறவனை எல்லாம் திருத்த நான் என்ன மடமா வெச்சு நடத்தறேன்? இல்ல என்னோட வாழ்க்கைய பணயம் வைத்து அந்த தறுதலைய திருத்த நான் என்ன அன்னை தெரெசாவா? எந்த தைர்யத்துல நீங்க இப்படி ஒரு முடிவு எடுத்தீங்க? உங்க தங்கைய இப்படி ஒரு பொறுக்கிக்கு குடுத்து நீ திருத்தும்மான்னு சொல்லுவீங்களா? டோன்ட் டேக் திவ்யா பார் கிரான்ட்டட்...." உள்ள கொதிப்பு வெளிப்பட,

"ஐம் நாட் டேக்கிங் யூ பார் கிரான்ட்டட் திவி... நான் உன்னை அவன் கிட்ட விட்டு கொடுத்து பேசலையேடா!" சமாதானப்படுத்த முயன்றான்!



"ஆரம்பத்துலையே அவன் கிட்ட என்னை விட்டு கொடுத்துட்டீங்க கார்த்திக்... அந்த நேரத்துல பால்ரூம்ல நான் ஹார்ஷா ரியாக்ட் பண்ணி இருந்தா என்னோட பேர் எவ்வளவு டேமேஜ் ஆகி இருக்கும்... நினைச்சு பார்த்தீங்களா?"

"இல்லடா.. உன்னோட நேர்மையான இந்த கேரக்டர் பிடிச்சுது... உன் கிட்ட பிராங்கா சொல்றேன்... அவனுக்கு வியாபாரத்த விட ஜாலியா பொழுதை கழிக்கணும்... அதுல தான் இன்ட்ரெஸ்ட்... அங்கிள் ரொம்பவே கவலை படுவார்பா...ஆபீஸ் பக்கமும் ரொம்ப வர மாட்டான்... அதுக்காகவே ஒரு பேக்டரிய அவனோட கண்ட்ரோல்ல விட்டேன்... ஆனாலும் பிசினெஸ் பக்கம் ஒழுங்கா வர மாட்டேங்கறான்... நீ எப்படியும் அவனை இந்த மாதிரி விஷயங்கள்ல இருந்து திருந்த வைப்பன்னு தான் நான் நினைத்தேன்..." ஆக அரவிந்தன் வியாபாரத்தில் ஒட்டுவதில்லை... கார்த்திகேயன் தான் முழு பொறுப்பு என்பதை அவனது வாயாலேயே கேட்க பெற்றாயிற்று... திவ்யாவின் மனதில் ஓடி கொண்டிருந்தது!

"மறுபடியும் இதையே சொல்லாதீங்க... இந்த மாதிரி பொறுக்கித்தனம் பண்றவங்களை திருத்த தான் பொண்ணுங்க பிறப்பெடுத்து வந்திருக்கோமா? எப்படி நீங்க அப்படி நினைக்கலாம்? சரி இதே கல்யாணம் முடிஞ்சு அவன் இந்த மாதிரி ஒரு கேள்வி கேட்டு இருந்தா அப்போ என் நிலைமை என்ன கார்த்திக்?" அவன் மேலும் தவறிருந்ததால் அவனால் அதற்கும்

மேல் பேச முடியவில்லை ஆனால் நடனமாட அவன் அழைத்த போதே இவள் மறுத்திருக்க வேண்டுமல்லவா?

"அவன் கூப்பிட்டபோவே நீ போய் இருக்க கூடாது திவி..."

"தப்புதான்... அந்த இடத்துல சீன் க்ரியேட் பண்ண வேணாமேன்னு நினைத்தேன்... அதுதான் தப்பா போய்டுச்சு...."

"ம்ம்ம் ஆமாம்... சரிடா... ப்ளீஸ் அதை மறந்துடு... நான் பார்த்துக்கறேன்..." வெள்ளை கொடி பிடித்தவனை மேலும் திட்ட முடியவில்லை!

"எனக்குன்னு நிறைய குறிக்கோள்கள் இருக்கு கார்த்திக்... சாதிக்கணும்ன்னு ஆசை மட்டும் இல்ல வெறியே இருக்கு... என்னோட லட்சியம் தான் எனக்கு ரொம்பவே பெரிசு..." மௌனமாகவே கேட்டு கொண்டு வந்தான்! தொடர்ந்தாள்....

"ஆனா எங்க வீட்டில தான் இதை புரிஞ்சுக்காம கல்யாணம் அது இதுன்னு... ச்சே... அரவிந்துக்கு அவங்க சொல்ற ரீசன் பெரிய இடமாம்.... போய் குப்பைல போடணும் அவனோட பணத்த... யாருக்கு வேணும் அவன் பணம்..." கார்த்திகேயன் ஆச்சரியமாக திரும்பினான்! அவனது மனதில் உயர்ந்து கொண்டே போனாள் திவ்யா!

"அப்படின்னா வாழ்க்கைய வாழறதுக்கு பணமே தேவை இல்லைன்னு சொல்றியா... இங்க எல்லாமே



பணத்த வெச்சு தான் மதிப்பிடப்படுது... அது தெரியாதா திவி?"

"இருக்கலாம் கார்த்திக்... எனக்கும் பணம் தேவை தான் ஆனா பணமே வாழ்க்கை கிடையாது... அதை தாண்டி எவ்வளவோ விஷயம் இருக்கு... என்னை பொறுத்தவரை லட்சியம் முக்கியமா? பணம் முக்கியமான்னு? கேட்டா எனக்கு என்னோட லட்சியம் தான் முக்கியம்ன்னு சொல்லுவேன்..."

"ம்ம்ம் பரவாயில்ல... பைத்தியம் கொஞ்சம் அதிகமா தான் இருக்கு..." வேண்டுமென்றே உசுப்பேத்தினாலும் அவளது இந்த குணம் அவனை மிகவும் வசீகரித்தது! அவனது உணர்வுகளின் பிரதிபிம்பமாகவே திவ்யா தோன்றினாள்! வெறும் அலங்கார பொம்மையாக வலம் வரும் ஷாலினியின் செய்கை பிடிக்காததினால் தானே அவளிடம் மனம் ஒட்டாமல் தவிக்கிறது என்று அவனால் நினைக்காமல் இருக்க முடியவில்லை!

"பைத்தியமா? ம்ம்ம் சொல்லிகோங்க... ஆனா இது தான் நான்... நானாகிய நான்... இதுதான் என்னோட சுயம்... இதை என்னால கல்யாணம்ன்னு ஒரு பேர சொல்லிட்டு மாத்திக்க முடியாது..." தான் எப்போதும் நினைக்கும் சுயமும் இதுதானே!

**"காதலித்து பார்!"**

**இந்த உலகம் தலைகீழாக சுற்றும்**

**இதயம் வெளியில் துடிக்கும்**

**காற்று வெளியில் கதைகள் மலரும்**
**கூட்டத்தின் நடுவிலோ மௌனம் பேசும்"**

வைர முத்துவை போல பேசி அவளை கிண்டல் செய்ய கடுப்பான திவ்யா,

"ஆஹா கவிதை கவிதை.... இப்படி ஒரு மொக்கைய ஷாலினி கிட்ட சொன்னா தெரியும்... நீங்க வாங்கற அடி..." என்று அவள் கூறிய போதே அவனுக்கு உரைத்தது! இது வரை ஷாலினியிடம் இந்த மாதிரி எல்லாம் பேசியதே இல்லை என்று! திவ்யாவை சிறிது நாட்கள் தான் தெரியும் ஆனால் இவளிடம் என்னால் பேச முடிந்த அளவு ஷாலினியிடம் பேச முடிந்ததே இல்லையே! அவனது மனம் கேள்வி மேல் கேள்வி கேட்டுக் கொண்டிருக்க திவ்யாவோ தொடர்ந்தாள்!

"முதல்ல இருந்தே அவனை பிடிக்கல பிடிக்கலன்னு ஆயிரம் தடவை சொல்லிட்டேன்... யாரும் என் பேச்சை கேக்கவே இல்லை..." என்று நொந்து போய் கூறியவளை பார்க்கையில் அவனது முகம் கனிந்தது!

"ஏன் அப்படி சொன்ன திவி... நீ வேற யாரையவாது லவ் பண்றியா?" என்னவோ அவளை கேட்டுக் தெரிந்து கொண்டே ஆக வேண்டும் என்று தோன்ற

"ம்ம்ம் மண்ணாங்கட்டி... நான் எந்த கூமுட்டை யையும் லவ் பண்ணல... அவனோட பார்வையே சரி இல்ல... அதனால தான் சொன்னேன்..." என்று கூறவும் அவனது இறுக்கமான மனநிலை மாறி சிரித்தான்!



"அடப்பாவி... உன்னை லவ் பண்றவன் கூமுட்டையா?" என்று மறுபடி சிரிக்கவும்...

"சிரிக்காதீங்க கார்த்திக்... பேச்சு மாத்தாதீங்க..." ஒற்றை விரலை காட்டி மிரட்ட, அந்த விரலை பிடித்தவன் தன் விரல்களோடு சேர்த்து வைத்து கொண்டு,

"ஹே. சும்மா விளையாட்டுக்கு சொன்னேன்... உன்னை சின்ன பொண்ணுன்னு நினைச்சேன்... ஆனா..." கைகளை மென்மையாக விடுவித்து கொண்டவள்,

"என்ன ஆனா?"

"பொண்ணுங்களுக்கு இன்டியுஷன் கொஞ்சம் அதிகமாத்தான் வேலை செய்யும் போல... உனக்கு கூட தோன்றி இருக்க பார்த்தியா?" என்று சிரித்து கொண்டே அவளை வாரினாலும் அவளது புத்திசாலித் தனம் அவனை மிகவும் ஈர்த்தது! அரவிந்தனை சரியாக கணக்கிட்டு இருக்கிறாளே என்று!

"அதென்ன எனக்கு கூட? எங்களுக்கு வேலை செய்தா உங்களுக்கு என்ன போச்சாம்?" என்று சிலிர்த்து கொண்டு மல்லுக்கு நின்றவளை பார்த்து புன்னகைத்து கொண்டே

இந்த இன்டியுஷன் எதுக்குன்னா அச்சம் மடம்... லொட்டு லொசுக்கு எக்ஸ்ட்ரா எல்லாம் இருக்கற பொண்ணுங்களுக்கு இயற்கையே குடுத்து இருக்கற

மனசோட விழிப்பு நிலை.. எந்த மனநிலைலையும் சுத்தி நடக்கறத இன்னொரு ஆங்கிள்ல பார்க்குற தன்மை... அதே இந்த தியரிய கன்வர்ஸா பார்த்தா என்ன அர்த்தம்?" சிரித்து கொண்டே கேட்டவனை பார்த்து,

"ம்ம்ம் என்ன அர்த்தம்...?" முறைத்தான்!

"பொண்ணுன்னா அச்சம் மடம் எல்லாம் இருக்கணும்ன்னு அர்த்தம்... அது தான் இது கிட்ட இல்லையே அப்புறம் எப்படி இந்த இன்டியுஷன் வேலை செய்ததுன்னு தான் எனக்கு சந்தேகமே..." என்று கூறி பாதுகாப்பான தூரத்தில் நின்று கொண்டு சிரிக்க, அவளும் தன் கோபத்தை மறந்து சிரித்து, அவனை அடிக்க கை ஓங்கி,

"யூ... யூ வேண்டாம்... மறுபடி சண்டை வந்துரும்... இந்த டாப்பிக் வேண்டாம்..."

"என்ன வேண்டாம்... உண்மைய தானே சொல்றேன்..." குறும்பான சிரிப்போடு,

"உங்களுக்கு எல்லாம் பொண்ணுங்கன்னா கிள்ளுக்கீரையா இருக்கு கார்த்திக்... ஆண்களா போட்ட வரைமுறை தான் இந்த கான்செப்ட்... பொண்ணுங்க இப்படி இருந்தாதான் உங்களுக்கு பிடிக்கும்... அதையே நீங்க எல்லாரும் ஸ்கேல் ஆப் ரெபரன்ஸா வெச்சுட்டீங்க..." சண்டை போடுவதற்காகவே ஆரம்பித்தவளை புன்னகையோடு பார்த்து,



"ம்ம்ம்... ஸ்கேல் ஆப் ரெபரன்ஸா.. நானும் பார்க்க தானே போறேன்.. இப்படி பேசற வாய் எப்படி பேச போகுதுன்னு..."

"கண்டிப்பா நான் மாற மாட்டேன் கார்த்திக்..."

"இல்லடா... கண்டிப்பா நீ மாறிடுவ..." அவனுடைய குரலின் உறுதி அவளை ஏதோ செய்தது! சொல்லி கொண்டே காரில் ஏறி அமர்ந்தவன் அவளுக்கு திறந்து விட்டு அவள் அமர்ந்தவுடன்,

"தேங்க்ஸ் திவி..."

"எதுக்கு..." புரியாமல் கேட்டாள்!

"அரவிந்த் கிட்ட பேசுனப்போ இருந்த டென்ஷனுக்கு ஒரு ரெண்டு பாக்கெட் சிகரெட்டாவது காலி ஆகி இருக்கும்... இப்போ ஒண்ணே ஒண்ணு தானே! உன் கிட்ட பேசிட்டு இருந்ததிலேயே டென்ஷன் போய்டுச்சு... அதுக்கு தான் தேங்க்ஸ்..." என்று சிரிக்க

"ஹலோ... அதுல டென்ஷன் ஆக வேண்டியது நான்!... அப்படீன்னா எனக்கும் ஒரு சிகரெட் குடுங்க..." மிகவும் சீரியசாக கேட்பது போலவே கேட்க

"ஆத்தா... நீ சிகரெட்டு மட்டும் கேக்கற ஆத்தா இல்ல... குடிக்க விஸ்கியும் கேக்கற ஆத்தான்னு எனக்கு நல்லாவே தெரியுமே ஆத்தா..." சிரிக்காமல் சொன்னவனை முதுகிலேயே நாலு அடி வைத்தாள்!

"இந்த வாய் கொழுப்பு கொஞ்சம் நஞ்சம் இல்லை... கடவுளே ஷாலினி எப்படி தான் சமாளிக்க போறாளோ?" கேட்டவளிடம் கேட்க தோன்றியது,

"நீ ஏன் அவளை நினைவுப்படுத்தி கொண்டே இருக்கிறாய் பெண்ணே!" என்று! தனது உணர்வுகள் புரியாமல் மௌனமாய் வண்டியை செலுத்தியவன் திவ்யாவின் வீடு வரவும் காரை மெதுவாக செலுத்தினான்! அவளுக்குமே மனதில் அலையடித்து கொண்டிருந்தது! இவன் தவறு செய்பவன் இல்லை என்று மனது கூறினாலும் புத்தி அதை ஏற்க மறுத்து வாதம் புரிந்து கொண்டிருந்தது!

"கார்த்திக்..."

"ம்ம்ம்..."

"உங்களை ஒண்ணு கேக்கலாமா?" அவள் புறம் திரும்பியவன் பார்த்த பார்வையில் ஏதோ வித்தியாசம் இருப்பதாக திவ்யாவுக்கு தோன்றியது! ஆனால் என்னவென்று வரையறுக்க முடியாமல்...

"ம்ம்ம் கேளு திவி..."

"நீங்க ஏதும் தப்பு செய்யலியே..." திக்கி திணறி கேட்டவளை விசித்திரமாக பார்த்து விட்டு காரை நிறுத்தி இருந்தாள்!

"எதுக்கு திவி இப்படி ஒரு கேள்வி?"

"இல்ல கார்த்திக்... கேக்கணும்னு நினைச்சேன்.. கேட்டேன்.. தப்பா?"

"ம்ம்ம் இல்லடா... இதுக்கு என்ன பதில் சொல்றதுன்னு தான் எனக்கு தெரியல..."



"ஏன்?"

"ஆல் இஸ் ஃபேர் இன் லவ் அண்ட் வார்... அது தெரியுமா திவி?"

"ம்ம்ம்."

"அதோட நம்ம பிசினெசையும் சேர்த்துக்கலாம்... சில நேரங்கள்ல சிலதை செய்தாகணும்... பல நேரங்கள்ல அது நமக்கு மனசுக்கு ஒவ்வாம இருக்கலாம்... ஆனா ஜெய்க்கணும்ன்னு வந்துட்டதுக்கு அப்புறம் வேற வழி இல்ல... நோ கோயிங் பேக்..."

"அதுவே சட்டப்படி தவறா இருந்தா என்ன பண்ணுவீங்க கார்த்தி..." மனம் படபடக்கவே கேட்டாள்! மறுத்து கூற மாட்டானா? ஏங்கியது நெஞ்சம்!

"ம்ம்ம்... கண்டிப்பா சிலது உண்டு... ஆனா என்னோட இமேஜ் என்னன்னு தெரியும்ல?" கொஞ்சம் கொஞ்சமாக அதிர்ச்சியின் விளிம்பு நிலைக்கு சென்று வந்தாள் திவ்யா! என்னதான் தெரியும் என்றாலும் அவனாக கூறுகிறானே! தான் கேட்டபோது கூட மறுக்க மாட்டானா என்று மனதில் எழுந்த ஏக்கம் இப்போது வருத்தமாக மாறியது!

"ம்ம்ம்... பாண்டில ரொம்ப பவர்புல் ஆள்ன்னு கேள்வி பட்டிருக்கேன்!" கேட்டவன் சிரித்தான்!

"பாண்டில மட்டும் இல்ல திவி... தமிழ்நாடு, கேரளா, கர்நாடகா.. எல்லாம் தான்... சுஷ்ருதா சவுத் இந்தியால நம்பர் ஒன் பார்மாவா கொண்டு வர்றதுக்கு

நான் எல்லா வழியையும் கடைப்பிடிக்கத்தான் செய்தேன்..."

"ஆனா அந்த வழி யாருக்காச்சும் கஷ்டத்துல முடிஞ்சா என்ன பண்ணுவீங்க?"

"அதுக்கெல்லாம் நாம கவலை பட்டுட்டு இருக்க முடியாதே... எனக்கு சக்சஸ் ஒண்ணு தான் குறிக்கோள்... என்னோட வழியையும் மாத்திக்க முடியாது என்னோட கொள்கைகளையும் விட்டு தர முடியாதே திவி!" ஐயோ என்றிருந்தது!

"இது சரியான கொள்கையா எனக்கு தெரியல..." என்று கூறியவளின் கையை பிடித்த கார்த்திகேயன்,

"சரியோ தப்போ... இதை இந்த அளவு ஓபனா சொன்னதும் உன் கிட்டதான் திவி... ஏன்னா என்னோட க்ளோஸ் பிரெண்டா உன்னை நினைக்கிறேன்... அதனால உன்னோட குட்டி மண்டைல இதையெல்லாம் போட்டு குழப்பிக்காத... ஓகே." ஆனால் அவனது சமாதானத்தை ஏற்று கொண்டால் அவள் திவ்யா இல்லையே!

"கார்த்திக்... நீங்க நல்லவரா கொட்டவரா?" என்று அவள் கேட்கவும் அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை!

"ஹே இதென்ன... நாயகன் மாதிரி பிஜிஎம் இல்லையா?"



"விளையாடாதீங்க... நான் சீரியஸா கேக்கறேன்... ப்ளீஸ் கார்த்திக்."

"நல்லவன் கெட்டவன்னு எதை வைத்து சொல்ல முடியும் திவி? வாட் இஸ் த ஸ்கேல் ஆப் ரெபரன்ஸ்?" கேள்வி கேட்டவனுக்கு அவளால் பதில் கொடுக்க முடியவில்லை! அவேன தொடர்ந்தான்!

"சொல்ல முடியாதில்ல... எல்லா நேரத்திலும் எல்லாருக்கும் நாம நல்லவங்களா இருக்கவே முடியாது திவி! அது நமக்கு அவசியமும் இல்லாதது... என்னை சுற்றி நிறைய வட்டம் இருக்கு... பிசினெஸ், அரசியல், சமூகம், எக்ஸ்ட்ரா எக்ஸ்ட்ரா... இந்த வட்டத்தை எல்லாம் தாண்டின ஒரு மைய புள்ளி இருக்கும் திவி! அது எனக்கே எனக்கான புள்ளி... அது நான் மட்டும் தான்... என்னோட தனிப்பட்ட வாழ்க்கை மட்டும் தான்... அது என்னோட கொள்கை, ஆசை விருப்பம், பாசம் அப்படீன்னு நிறைய விஷயங்களால சூழப் பட்ட ஒரு புள்ளி... அந்த புள்ளி நிச்சயமா மனசாட்சிக்கு பதில் சொல்ற இடம்... ஆனா சுற்றி இருக்கற வட்டத்தில இருக்கற என்னோட முகம் வேற தான்... விரோதிகள நான் விட்டு வைக்கறது கண்டிப்பா இல்ல... அதுக்கு பேர் வேற தான்... இது தான் நான்.. நீ சொன்ன மாதிரி நானாகிய நான்... என்னோட சுயம்..." நீளமாக தெளிவாக முடித்தவனை கண்கொட்டாமல் பார்த்து கொண்டிருந்தாள் திவ்யா! பெருமூச்சு ஒன்றை விட்டவள்,

"கார்த்திக்... மனசெல்லாம் குழப்பமா இருக்கு..."

"ஏன்டா... பயமா இருக்கா? உனக்கு என்னடா பயம்..."

"இல்ல கார்த்திக் வேலைல கொஞ்சம் குழப்பம்... மனசு ஒண்ணு சொல்லுது அறிவு ஒண்ணு சொல்லுது... என்ன பண்றதுன்னே ஒண்ணும் புரியல..." மன குழப்பத்தை கூற

"மனசு ஒண்ணு அறிவு ஒண்ணுன்னு சொல்ல கூடாதுப்பா... ரெண்டுமே ஒன்றைத்தான் சொல்லணும்... என்ன அப்படி குழப்பம்?"

"இல்ல... என்னோட கடமைன்னு ஒண்ணு இருக்கில்லையா? அதுல தான் குழப்பமே..."

"திவி... நீ பாரதம் படிச்சு இருக்கியா?"

"ம்ம்ம்... படிச்சு இருக்கேன்..."

"அதுல கீதா உபதேசம் எப்போ வரும்?"

"அர்ஜுனன் போர் முனைல இருக்கும் போது..."

"அதாவது குறிப்பா சொல்ல போனா, போர்ல தன்னோட சொந்தக்காரர் எல்லாரையும் பார்த்துட்டு அம்பு விட முடியாம கலங்கி நிற்பார் அர்ஜுனன்... அப்போ அவருக்கு தைர்யத்த சொல்லி... கடமை தான் முக்கியம்னு புரிய வைப்பார் கிருஷ்ண பரமாத்மா... எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது... எது நடக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கிறது... எது



நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்... எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு... எதை நீ படைத்தாய் அது வீணாவதற்கு... எது இன்று உன்னுடையதாக உள்ளதோ அது நாளை மற்றொருவருடையதாகும்.... இந்த மாற்றம் உலக நியதியாகும்... இது தான் என்னோட தினசரி ஜெபம் திவி... கண்டிப்பா எது உன்னோட கடமையில் குறுக்க வந்தாலும் கவலைபடாத... கடமை தான் முக்கியம்மா..." அவனுக்கு எதிராகவே அவனே சொல்கிறான் என்பது புரியாமல் அவன் கூற... விழி எடுக்காமல் அவனை பார்த்து கொண்டிருந்து விட்டு மௌனமாக இறங்கினாள்! காரிலிருந்து இறங்கியவளை அழைத்த கார்த்திகேயன்,

"திவி... எதை பற்றியும் நீ கவலை படாத... நான் இருக்கேன்... கல்யாண விஷயத்துல இனிமே யாரும் உன்னை கம்பெல் பண்ண மாட்டாங்க... அதுக்கு நான் கேரண்டி... ஓகேவா..." தலையசைத்து சரியென்று விட்டு வீட்டிற்குள் செல்ல இருந்தவளை மீண்டும் அழைத்து,

"உன்னோட லட்சியம் என்னடா? என்னமோ சொன்னியே... அன்னைக்கும் சொல்லிட்டு இருந்த..." அவன் சொன்னது அவள் காதில் விழுந்தால் தானே? சூழ்ந்து இருந்த குழப்பம் அவளை தின்று தீர்த்தது!

"ஓகே ரொம்ப குழப்பத்துல இருக்க போலிருக்கு... சரி நீ போ விடை கொடுத்து அனுப்பினான்! உள்ளே

செல்ல எட்டு வைத்தவள் கட்டியிருந்த சேலை தடுத்து தடுமாறி விழ பார்க்க, சட்டென்று கார்த்திக் கை கொடுத்து அவளை தாங்கி பிடிக்க, அவனது கை அவளது வழுவழுப்பான இடுப்பு பிரதேசத்தில் படிந்தது! சில்லென்ற அவளது இடை அவனது கையை காந்தமென ஈர்க்க ஒரு கணம் ஒன்றும் புரியாமல் நின்றான்! அவளோ சொல்லவே முடியாத அளவு தத்தளித்தாள்!!!

இந்த நிமிடம் இந்த நிமிடம் இப்படியே உறையாதா?
இந்த நெருக்கம் இந்த நெருக்கம் இப்படியே தொடாரதா?
இந்த மௌனம் இந்த மௌனம் இப்படியே உடையாதா?
இந்த மயக்கம் இந்த மயக்கம் இப்படியே நீளாதா?

பாய்ந்த அந்த மின்சாரம் இருவரையும் தாக்க, சட்டென்று கையை எடுத்தான்! அவளும் தன்னை சட்டென மீட்டு கொண்டு அவனை திரும்பியும் பார்க்காமல் கேட்டை திறந்து உள்ளே சென்றாள்!

அவள் போய் சிறிது நேரம் வரை அந்த கைகளையே பார்த்து தடவி கொண்டிருந்தான்! மனம் முழுக்க சந்தோஷம்... தடுமாறினாலும் பிடிக்காமல் இல்லையே? எந்த பெண்ணிடமும் இந்த அளவு மனம் திறந்து பேசியதில்லை தனக்காக நிச்சயிக்கப் பட்ட ஷாலினி உட்பட... அவளை தொட்ட இந்த ஒரு நிமிடமே அவனது சந்தோஷ ஊற்று அனைத்தையும் மீறுகிறதே! இந்த உணர்ச்சிக்கு பெயர் தான் என்ன?

"காதல்."



நான் காதல் வயப்பட்டு விட்டேனா? திருமணத்திற்கு முன் காதலிப்பது எல்லாம் போலித்தனம் என்று மூச்சுக்கு முன்னூறு தடவை கூறிய எனக்கு காதலா? ஆமாம்... நான் காதலிக்கிறேன்! உரக்க கத்த தோன்றியது! கல்லூரி மாணவனை போல குதித்து ஆட தோன்றியது! எல்லையில்லா சந்தோஷத்தில் கும்மாளமிட்டது மனது! திவ்யா... சொல்லி பார்த்தது மனம்... இனித்தது! மனம் நிறைய இனிப்புடன் வைஷ்ணவியின் வீடு நோக்கி போனான்!

✣ ✣ ✣

பித்து பிடித்தாற் போல யார் கேட்ட கேள்விக்கும் பதில் கூறாமல் அறைக்கு சென்று முடங்கினாள் திவ்யா! அவளது மனமோ குரங்காக கார்த்திகேயனையே பற்றி கொண்டு தொங்கியது! கடவுளே என்னை காப்பாற்று! என்னுடைய மனதிடம் இருந்து என்னை காப்பாற்று! கார்த்திகேயன் இன்னொரு பெண்ணுக்கு நிச்சயம் செய்யப்பட்டவன்... அவை இப்படி நினைப்பது அந்த பெண்ணுக்கு செய்யும் துரோகம்... வேண்டாம் என்று ஒரு மனம் கூறினாலும் மறுமனமோ அவன் தனக்கு வேண்டும்... தனக்கு மட்டுமே வேண்டும் என்று கூப்பாடு போட்டது! அடங்கு மனமே அடங்கு! கடமையை பார் என்று கடிவாளமிட்டது அறிவு!

செல்பேசி அழைத்தது! பேசியது நிலா தொலைக்காட்சி நிகழ்ச்சி இயக்குனர்!

"என்னம்மா... பெரிய ஸ்கூப் ஒண்ணு கொண்டு வரேன்னு போனீங்க... என்ன ஆச்சு?"

"ஆச்சு சார்... நாளைக்கு பிளாஷ் பண்ணிடலாம்..."

"ரொம்ப கான்ட்ரவர்சியா இருக்கணும் திவ்யா! டி ஆர் பிரேட்டிங் எகிறணும்... சரியாம்மா?"

"ஓகே சார்... கண்டிப்பா..."

சொல்லி விட்டு செல்பேசியை வைத்து விட்டு மெயில் பாக்ஸ் திறந்தாள்! மறுபடி ஒரு அனாமதேய கடிதம்! காலாவதியான மருந்துகளை எப்படி சுஷ்ருதா வாங்கி மறுபுழக்கத்தில் விடுகிறது என்று! சிறிய சிறிய ஆதாரத்தை கூட விடாமல் பதிவு செய்திருந்தனர்... ஸ்ரீராமை அவசரமாக அழைத்தாள் திவ்யா! ரிங் போய் கொண்டே இருக்க எடுக்கவில்லை! அவசரமாக அவளே அமர்ந்து அனைத்து எடிட்டிங் வேலையும் முடித்தவள் ஷூட் செய்வதற்காக அவளே கிளம்பினாள்!

நாளை காலை அதிர போவது தமிழகம் மட்டுமா?

## 11

**உடுக்கை இழந்தவன் கை போல் ஆங்கே**
**இடுக்கண் களைவதாம் நட்பு**

சச்சிதானந்தம் மிக தீவிரமாக வக்கீல்களிடம் பேசிக் கொண்டிருந்தார்.... உடன் அரவிந்தன்!



ஷாலினி உட்பட அனைவரும் அதிர்ந்து போயிருந்தனர்! காலையில் நிலா தொலைக்காட்சியில் ஒளிப்பரப்பான நிகழ்ச்சி அனைவரையும் புரட்டி போட்டிருந்தது! கேள்வி மேல் கேள்வி... செல்பேசியில் கேட்கும் உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் பதில் கூற முடியாமல் சலித்து போயிருந்தாள் ஷாலினி! அவளை போலவே அவளது தந்தையும்! திருமணம் சமீபத்தில் இருக்கும் போதா இப்படி ஆக வேண்டும் என்று நொந்து போயிருந்தாள் ஷாலினி... அரவிந்தனும் தன் பங்குக்கு சச்சிதானந்தத்திடம் கூறிக் கொண்டிருக்க அழுத்தம் அதிகரித்து கொண்டிருந்தது!

"இப்போ என்ன ஆகும்ன்னு சொல்றீங்க ராமசுப்பு?" ராமசுப்பு உச்சநீதிமன்ற வக்கீல்... நிமிட கணக்கில் சம்பாதிப்பவர்!

"சார்... பிரஷர் ஜாஸ்தி ஆகற மாதிரி தான் தெரியுது.... கார்த்திகேயனால எப்படி சமாளிக்க முடியும்ன்னு கணிக்க முடியலை... இப்போ நான் சென்னைல பேசின வரைக்கும் பார்த்தா அரெஸ்ட் ஆக வாய்ப்பு அதிகம் இருக்குற மாதிரி தெரியுது... மருந்துன்னா எப்படி வேணும்னாலும் சட்ட ஓட்டைல புகுந்து நான் வெளிய வந்துடலாம் சார்.... ஆனா நார்கொடிக்ஸ்... எந்த செக்ஷன்ல ஃபைல் பண்றாங்கன்னு பொறுத்துதான் சொல்ல முடியும்... ஒரு சில செக்ஷன்ல கேள்வியே கேக்க முடியாம ஒரு வருஷம் கூட உள்ள வைக்கறதுக்கு வழி இருக்கு சச்சிதானந்தம் சார்..."

"ஆனா இப்படி ஒரு விஷயத்த எனக்குமே தெரியாம எப்படி கார்த்தி பண்ணிட்டு இருந்தான்னு எனக்கும் புரியலை அங்கிள்... கடவுளே... எப்படி வெளிய வர்றதுன்னு தெரியலையே அரவிந்தன் புலம்பி கொண்டிருக்கும் போதே ராமசுப்பு,

"நீங்க ஒரு அறிவிப்பு குடுத்துடுங்க... எனக்கு சுஷ்ருதாவுக்கும் சம்பந்தம் இல்லைன்னும்... உங்களுக்கு தெரியாம இப்படி இல்லீகல் வேலைல ஈடுபட்ட கார்த்திகேயன் மேல சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க போறதா மென்ஷன் பண்ணிருங்க..."

"அப்படி அறிவிப்பு குடுத்துட்டா எனக்கு பிரச்சனை வராம இருக்குமா?" அவனது கண்கள் மின்னியது! அவனை பழிவாங்க ஒரு சந்தர்ப்பம் அல்லவா!

"மேல ஏதாவது வந்தா நான் பார்த்துக்கறேன்.... ஆனா எப்படியும் கார்த்தி அரெஸ்ட் ஆக போறது உறுதி..."

இதை கேட்கும் போதே சச்சிதானந்தத்திற்கும் ஷாலினிக்கும் முகம் கருமை படர்ந்தது! ஷாலினிக்கு உள்ளே குளிர் எடுத்தது! அடுத்து என்ன செய்வது என்ற கேள்வி பூதாகரமாக தோன்றியது! எதிர் காலத்தை எண்ணிய பயம்...

"கல்யாண டைம்ல இப்படி ஆயிடுச்சே அர்விந்த்..." ஷாலினியின் குரலில் டன் கணக்கில் வருத்தம்!



"கல்யாணத்துக்கு முன்னாடியே கார்த்தியோட முகம் தெரிஞ்சு போச்சுன்னு நினைச்சுக்கோ ஷாலினி... உனக்கென்ன தேவதை மாதிரி இருக்க... உனக்கா மாப்பிள்ளை கிடைக்காது?" அரவிந்த் நேரம் பார்த்து அடித்தான்!

"அரவிந்த் என்ன சொல்ற நீ?" என்றாள் அதிர்ச்சியாக,

"ஆமா ஷாலு... அரவிந்த் சொன்னதுதான் கரெக்ட்... நல்லவேளை இந்த விஷயம் கல்யாணத்துக்கு முன்னாடியே தெரிய வந்துட்டது... தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்னு நினைச்சுக்க வேண்டியது தான்..." சச்சிதானந்தம் ஒரேடியாக முடிக்க பார்க்க

"அப்பா... இந்த நேரத்துல தானே அத்தான் கூட..." என்று அவள் சொல்ல வர கோபமாக தடுத்து முறைத்தார்!

"ஏன் உன் அத்தான் கூட நீயும் களி திங்க போறியா?" கோபமாக அவர் கேட்கவே ஒன்றும் பேசாமல் மௌனமானாள்!

"இந்த மாதிரி வரும் போது நமக்கு சேதாரமில்லாம கழண்டுக்கறதுதான் புத்திசாலித்தனம் ஷாலினி.... இப்போ நாம தலைய குடுத்தா நம்ம தலை தான் உருளும்... இந்த பிரச்சனைல இருந்து கார்த்தி வெளிய வரட்டும் அப்புறமா பார்த்துக்கலாம்..." சட்டென்று முடிவு எடுத்து தனது பெண்ணையும் அதற்கு உடன்பட செய்து

விட்ட நிலையை என்ன சொல்ல? உறவு முறை என்றால் துன்பம் வரும்போது சிறிதாவது உதவிக்கு வர வேண்டும்... ஆனால் கஷ்டம் என்று வரும் போது தாங்கள் மட்டும் தப்பித்து கொள்வதை என்ன சொல்லுவது?

இதை கேட்கும் போதே சட்டென்று எழுந்து உள்ளே சென்றாள் ஷாலினி! போதுமடா சாமி என்றிருந்தது! இவனென்ன ஆணா என்று நிறைய முறை சந்தேகப்பட்டு இருக்கிறாள்... தான் நெருங்கி நெருங்கி போனாலும் அதற்கு விடையே கிடைக்காமல் போனது இப்போது அவளுக்கு தப்பிய உணர்வையே தந்தது!

✤ ✤ ✤

**கா**ர்த்திகேயனின் வீட்டில் கிளம்பிய புயல், வைஷ்ணவியின் வீட்டில் மையம் கொண்டு திவ்யாவின் வீட்டையும் தாக்கியது! பெரியவர்கள் அனைவரும் மாற்றி மாற்றி திட்டி கொண்டிருக்க, அந்த ஏச்சுக்கு தலைவி வீட்டிற்கே வராமல் இழுத்தடித்து கொண்டிருந்தாள்! வீட்டில் உள்ளவர்களின் கொதி நிலை எல்லையை கடந்து கொண்டிருந்தது! ஏனென்றால் ஷாலினியின் வீட்டில் இருந்து செய்தி வந்திருந்தது... திருமண ஒப்பந்தத்தை முறித்து கொள்வதாக... அதை தொடர்ந்து உற்றார் உறவினரின் கேள்விகள் வேறு.... பாண்டியில் மங்கை தனியாக நொந்து போனார்... சென்னையில் வைஷ்ணவி!



"எல்லாம் நீ குடுக்கற செல்லம் தான்" என்று ஸ்ரீயை பிடித்து உலுப்ப அவனால் ஒன்றுமே பேச முடியவில்லை! தான் வேண்டாம் என்று கூறியும் இப்படி செய்து விட்டாளே என்று கோபம் அளவு கடந்து கொண்டிருந்தது.... திவ்யாவின் வீட்டினர் அனைவரும் வைஷ்ணவியின் வீட்டிற்கு சென்று தங்களால் இயன்ற வரை ஆறுதல் கூறி சாந்தப்படுத்த முயன்றனர்... ஆனால் நாயகனான கார்த்திகேயன் வரவே இல்லை.. அவனை கெஸ்ட் ஹவுஸ் சென்று அழைக்கவும் அனைவரும் பயந்து கொண்டு தங்களுக்குள் பேசி கொண்டிருந்தனர்... நேரம் கடந்து கொண்டே இருந்தது... மதிய உணவுக்கும் திவ்யா வரவில்லை... எல்லாரையும் பார்க்க சங்கடப்பட்டு கொண்டு எங்காவது இருப்பாள் என்று நினைத்தான் ஸ்ரீ... அவளது செல்பேசியும் உயிருடன் இல்லாதது அவளுக்கு உதவியாக போனது!

வெளியே நிழலாட... திவ்யா...!

ஒவ்வொருவராக முகத்தை திருப்பி கொண்டு போக ஸ்ரீயும் வைஷ்ணவியும் அவளை உள்ளே அழைத்தனர்! எப்படியும் பிரச்சனை வெடிக்கும் என்று கணித்தே வந்து இருந்ததால் அவளுக்கு ஒன்றும் மாறாக தெரியவில்லை! வைஷ்ணவியின் மாமியார் தான் அனைத்தையும் கொட்டி விட்டார்! திருமணம் நின்றது முதற்கொண்டு... அதை கேட்டவுடன் அவளது மனம் வருத்தத்தை சுமந்தது!

"கார்த்திக் எங்க அண்ணி?" நேராக அவனையே கேட்ட முறை வைஷ்ணவியின் மனதுக்கு ஏதோ ஒன்றை உணர்த்தியது.... இவளுக்கு அண்ணனிடம் பகை என்று ஒன்றுமில்லை என்று நினைத்து கொண்டு

"அண்ணா... கெஸ்ட் ஹவுஸ்ல இருக்காங்க... காலைல இருந்து வெளியவே வரலையாம்... எங்களுக்கும் போகவே பயமா இருக்கும்..."

"நான் போய் பார்க்கட்டா?"

"ரொம்ப கோபத்துல இருப்பாங்க திவி... உனக்கு அவங்க கோபம் பற்றி தெரியாது."

"நான் சமாளிச்சுக்கறேன் அண்ணி..."

"இப்போ நீ அங்க போய் என்ன பண்ணப் போற? எல்லாத்துக்கும் காரணமே நீ தானே... சொல்ல சொல்ல கேட்காமல்..." ஸ்ரீ மற்றவர்கள் அறியாதவாறு கடித்தான்!

"ஏன் ஸ்ரீ இப்படி சொல்ற? அது என் வேலை... என் வேலைய நான் கரெக்டா செய்தேன்... இது என்னோட பிரெண்ட்ஷிப்... நீயும் புரிஞ்சுக்க மாட்டியா?" வேதனையாக கேட்டாள்!

"எனக்கு என்னவோ இது சரியா படலை திவி... நீ செய்து வச்ச வேலைக்கு அண்ணன் கிட்ட உன் முகத்த காட்டாம இருக்கறதுதான் பெட்டர்ன்னு தோணுது..." ஸ்ரீ தனது மெய்யான கவலைய வெளியிட

"இல்ல ஸ்ரீ... எப்படியும் சமாளிச்சுடுவேன்... ஒரு பிரெண்டா இப்போ நான் கூட இருக்க நினைக்கறேன்... தப்ப சுட்டி காட்டுறது கண்டிப்பா தப்பு கிடையாதே ஸ்ரீ..." அவளது மனநிலையை பார்த்து ஸ்ரீக்கு ஆச்சரியமாக இருந்தது... வரிந்து கட்டி கொண்டு அவனுக்கு எதிராக நிகழ்ச்சி கொடுத்துவிட்டு இப்போது அவனுக்கு துணையாக இருக்க நினைக்கிறாளே இவளை என்ன வென்று சொல்வது?



"என்னவோ சொல்ற... ஆனா எனக்கு பயமா இருக்கு... இப்போ தனியா அங்க போறது நல்லது இல்ல... வேணும்னா நானும் கூட வரேன் திவி..." என்று சொன்னவனை கையமர்த்தி விட்டு,

"நம்ம கார்த்திக் தானே... அதெல்லாம் அவர் எப்படி பேசினாலும் ரியாக்ட் பண்ணாலும் என்னால சமாளிச்சுக்க முடியும்டா..." சொன்னவள் கிளம்பி கெஸ்ட் ஹவுஸ் சென்றாள்... ஆத்திரத்தின் உச்சத்தில் இருந்த கார்த்திகேயனை சந்திக்க... சிங்கத்தின குகையில் சந்திக்கும் புள்ளிமானா?

✤ ✤ ✤

**கெஸ்ட்** ஹவுஸ் ஜன சந்தடி இல்லாமல் அமைதியாக வீற்று இருந்தது! சென்னை வரும் போது கார்த்திகேயன் உபயோகிக்க... விருந்தினர் வந்தால் தங்கவென்று அதுவும் ஒரு மினி பங்களா அளவில் இருந்தது... வாட்ச்மேனிடம் தன்னுடைய விபரத்தை கூறவும், கார்த்திகேயனிடம் கேட்டு உள்ளே அனுப்பினான்!

மாடியில் இருந்த அறைக்கு சென்ற திவ்யா கதவை தட்ட, தானாக திறந்து கொண்டது.... ஒரு முறை கண்களை சுழற்றி பார்த்தாள்! கார்த்திகேயன் அந்த அறையில் இருந்த சோபாவில் அமர்ந்து ரெக்கார்ட் செய்யப்பட்ட அவளது நிகழ்ச்சியை பார்த்து கொண்டிருந்தான் செல்பேசியில் பேசியபடி! கையில் சிகரெட் புகைந்து கொண்டிருக்க... உடன் மது கின்னம்... அரவம் கேட்டு திரும்பியவனின் சிவந்த கண்களில் இருந்ததென்ன? கோபமா? பழியா? இல்லை... ஏளனம்! செல்பேசியில் பேசிக் கொண்டே சைகையால் அவளை அமர சொன்னான்! இதென்ன இவ்வளவு அமைதியாக இருக்கிறான்... புயலுக்கு முன்பு வரும் அமைதியோ?

"ம்ம்ம்... கேவலமா முதுகுல குத்திட்ட போல இருக்கே...." ஏளனமாக ஒரே வார்த்தை! பதில் கூற வந்தவளை பேச வேண்டாம் என்று கையை காட்டி நிறுத்தும்படி கூறி விட்டான்! அப்போதே அவனது செல்பேசி அழைக்க,

"சொல்லுங்க சித்தார்த்..."

"சிஎம் பேசினார் சார்... எனக்கு தெரியாம நடந்துட்ட விஷயம் சார் அது..."

"அது எப்படி உங்களுக்கு தெரியாம உங்க சேனல்ல ஒரு ப்ரோக்ராம் டெலிகாஸ்ட் பண்ண முடியும்?" நிலா தொலைக்காட்சி நிர்வாக இயக்குனர் சித்தார்த்திடமா பேசுகிறான்? கேள்வியாய் பார்த்து கொண்டிருந்தாள்!



"அந்த நிகழ்ச்சியை நடத்தினது திவ்யதர்ஷினி... ப்ரோக்ராம் ஹெட் கல்யாணராமன்... ரெண்டு பேர் கிட்டயும் பேசிட்டு இருக்கேன்... இன்னைக்குள்ள கண்டிப்பா மன்னிப்பு போட்டுடுவோம்... ப்ளீஸ் சிஎம் கிட்ட சொல்லுங்க..."

"எனக்கு இந்த விளக்கமெல்லாம் வேண்டாம் சித்தார்த் சார்... ஐ நீட் ஒன்லி ஆக்க்ஷன்..."

"ஒகே சார்... கண்டிப்பா..."

"ஒகே."

செல்பேசியை வைத்து விட்டு தொடர்ந்து தொலைகாட்சியை பார்த்து கொண்டிருக்க மதுவின் அளவு கூடி கொண்டிருந்தது! தனியே வந்தது தவறோ என்று எண்ணினாள்! கிளம்பிவிடலாம் என்று எண்ணி கொண்டிருக்கும் போதே அவளது செல்பேசி இசைக்க, நிகழ்ச்சி இயக்குனர் கல்யாணராமன் அழைத்து இருந்தார்!

"எங்கம்மா இருக்க?"

"வீட்ல சார்..."

"இங்க ஒரே கலவரமா இருக்கு திவ்யா... எம்டி கத்திட்டு இருக்கார்..."

"அதுக்கு என்ன சார் பண்றது? உங்க ஒப்புதலோட தான டெலிகாஸ்ட் பண்ணினேன்..."

"இல்லைன்னு சொல்ல திவ்யா... இப்போ மன்னிப்பு கேட்டு ஒரு ப்ரோக்ராம் போட சொல்றாங்க..."

"நீங்க என்ன சார் சொன்னீங்க?"

"நான் ஒப்புக்கிட்டேன்... நீயும் ஒப்புக்கோ..."

"முடியாது சார்... நான் என்ன தப்பு செய்தேன்... மன்னிப்பு கேட்க?" அவனை பார்த்து கொண்டே அவள் கூற

"இல்லம்மா... எம்டி உன் கிட்ட பேசி மன்னிப்பு கேக்க சொன்னா என்ன செய்வ?"

"அப்படீன்னா என்னோட ஜாப ரிசைன் பண்ணிருவேன்..." ஒரேடியாக முடித்தவளை எரிக்கும் பார்வை பார்த்தான் கார்த்திகேயன்! அவளும் அவனிடம் தானாக பேச முனையவில்லை... தனது செயல்களுக்கு எங்கெல்லாம் பணம் பட்டுவாடா செய்து இந்த விஷயத்தை பெரிதாக்காமல் இருக்க முடியுமோ அத்தனையும் பார்த்து கொண்டிருந்தான்... இடை இடையே சிகரெட்டும்... மதுவுமாக... இவை அனைத்தையும் மௌனமாகவே அமர்ந்து பார்த்து கொண்டிருந்தாள்.. உள்ளூர கார்த்திகேயனின் இந்த முகத்தை பார்த்த அதிர்ச்சி... குளிறெடுத்தது!

அவளது செல்பேசி அழைத்தது! எம்டி அழைத்து இருந்தார்!

"சார்... திவ்யா ஸ்பீக்கிங்..."

"ஏம்மா... அந்த ப்ரோக்ராம்க்கு ஒரு மன்னிப்பு கேட்டு ப்ரோக்கராம் ஒண்ணு போட்டுடலாமே... ஒத்துழைக்க மாட்டியாம்மா? ரொம்ப பெரிய இடம் திவ்யா..."



"இல்ல சார்... மன்னிப்பு கேக்கற அளவு நான் தப்பா ஒண்ணும் பண்ணல... உண்மைய மட்டும் தான் சொல்லி இருக்கேன்... இதுல என்னோட ஒத்துழைப்ப எதிர்பார்க்காதீங்க... அப்படி உங்களுக்கு அந்த மன்னிப்பு கேட்கறதுதான் முக்கியம்னா நான் ராஜினாமா செய்துடறேன்..." அவள் பேச பேச கார்த்திகேயனுக்கு கோபம் பல்கிப் பெருகி கொண்டிருந்தது!

"போனை இங்க கொடு..." கோபமாக அவன் கேட்க

"ஏன்?"

"ஒழுங்கா குடுடி..." அவளது செல்பேசியை பிடுங்கியவன்,

"சித்தார்த் சார்... கண்டிப்பா திவ்யா மன்னிப்பு கேட்ப்பா... அதை நீங்க டெலிகாஸ்ட் பண்ணியாகணும்... அதுக்கு முன்னாடி உங்க சேனல்ல அபீசியலா ஒரு சாரி நோட் குடுங்க..." என்றும் உத்தரவிட அந்த புறம் பேசி கொண்டிருந்தவருக்கு அவன் கார்த்திகேயன் என்று உணர கொஞ்ச நேரம் பிடித்தது! ஆனால் அடுத்த நிமிடமே திவ்யாவை நினைத்து கவலையில்

"கார்த்திகேயன் சார்... ப்ளீஸ்... சின்ன பொண்ணு... அவளை விட்டுடுங்க..." என்று அவர் வேண்டுகோளாக வைத்தார்!

"விரோதிகள கூட மன்னிச்சுடுவேன்... ஆனா கூடவே இருந்து துரோகம் செய்த துரோகிகளை

மன்னிக்கவே மாட்டேன்... அது என்னோட கவலை... நீங்க உங்க வேலைய செய்ங்க..." ஒரே வாக்கியத்தில் அவன் முடித்த போது அந்த சித்தார்த் குப்தாவின் முகத்தில் வியர்வை அரும்புகள்! கல்யாணராமன் வேறு ஏதாவது நிகழ்ச்சி செய்து இருக்க கூடாதா? வேலியில் போகிற ஓணானை எடுத்து இப்படியா வேட்டியில் விட்டு தொலைவது? இந்த பிரச்சனை என்னதான் ஆகும்? சோர்ந்து நாற்காலியில் விழுந்தார்!

✤ ✤ ✤

"நீ போகலாம்..." ஒரே வாக்கியத்தில் அந்நியமாக முடித்தவனை பார்க்கும் போது மனதுக்குள் ஏதோ செய்தது! அவனது திருமணம் நின்ற செய்தி அவளை நிலைகுலைய செய்து இருந்தது! அதோடு சுஷ்ருதாவில் இருந்து அரவிந்தன் விலகப் போவதாக ஒரு செய்தி வந்திருந்தது... அவள் இது நடக்க வேண்டுமென்று நினைக்கவில்லையே...

"கார்த்திக்... கல்யாணம் நிற்கும்னு நான் நினைக்கவே இல்லை...." அவள் வருத்தத்தோடு

"துரோகிகளோட வருத்தம் எனக்கு தேவை இல்லை..."

"நான் துரோகம் பண்ணல..." உணர்ச்சியை தொலைத்த முகத்துடன்!

"பின்ன வேற என்ன பண்ண? உன்னை என்னோட க்ளோஸ் பிரெண்டா நினைச்சேன்... அதுக்கு நீ செய்தது



என்ன? கேவலமா முதுகுல குத்தினதுதான்... ச்சே எல்லா பக்கமும் முதுகுல தான் குத்தறாங்க... ஷிட்..." அரவிந்தனையும் ஷாலினியையும் நினைத்து விரக்தியின் விளிம்புநிலையில் இருந்தான்! ஆனால் ஷாலினியோடு நடக்க இருந்த திருமணம் நின்றது நிம்மதியை தோற்றுவித்தாலும் அவளுடைய தந்தையும் அவளும் தன்னை மறுத்த விதமும் நேரமும் அவனது ஆத்திரத்தை அதிகப்படுத்தி இருக்க,

"இல்ல... நான் முதுகுல குத்த கிடையாது... உண்மைய தான் சொன்னேன்... மக்களுக்கு அதை சொல்ல வேண்டிய கடமை எனக்கு இருக்கு..." அவளது நியாயத்தை எடுத்து கூறினாள்! அவன் புரிந்து கொள்ள வேண்டுமென்று ஏன் நினைக்கிறாள்?

"எது உண்மை?... உனக்கு பிரபலமா ஆகணும்... அதுக்காக நீ என்ன வேணுமானாலும் செய்வடி?" மரியாதை குறைய துவங்கியது!

"வேணாம் கார்த்திக்... நீங்க சொன்னது சரியான வார்த்தை கிடையாது... அதுக்கு வேற அர்த்தம்..."

"ஆமா நீ நினைக்கிற அர்த்தம் தான்... நான் எவ்வளவு கஷ்டப்பட்டு இந்த கம்பெனிய இந்த நிலைக்கு கொண்டு வந்தேன் தெரியுமா? உயிரை கொடுத்து வளர்த்த குழந்தை இது... அது தெரியுமா உனக்கு?" கோபத்தில் வார்த்தைகள் தடிக்க ஆரம்பித்தது! அப்படி வளர்த்த குழந்தையின் எதிர்காலம் இப்போது கேள்விக்குறியாக நிற்கிறதே என்ற கோபம் அவனது கண்ணை மறைத்தது!

"அதுக்காக இல்லீகலா நடக்கற விஷயத்த கண்டுக்காம நானும் போகணும்ன்னு எப்படி நினைப்பீங்க கார்த்திக்..."

"உன் கிட்ட நான் அட்வைஸ் கேக்கல... இப்போ மன்னிப்பு கேட்க முடியுமா முடியாதா?" மன்னிப்பு கேட்டு இவள் ஆரம்பித்த விஷயத்தை இவளே முடித்தால் மட்டுமே இந்த விஷயம் செயலிழக்கும் என்ற நிலையில் உறுதியாக அவன் கேட்டான்... உள்ளுக்குள் கிலியை பரப்பினாலும் உறுதியாகவே,

"நான் தப்பு செய்யல... நான் செய்ய வேண்டிய கடமைய சரியாத்தான் செய்தேன்... கண்டிப்பா அதை நான் செய்ய முடியாது கார்த்திக்..." அவளது குரலிலும் இருந்த உறுதி அவனது கோபத்தை இன்னும் அதிகப் படுத்தியது! மன்னிப்பு என்கிற ஒற்றை செயல் அவளது பிம்பத்தை உடைத்து லட்சியத்தை தூள் தூளாக்கி விடுமே! அதனால் கண்டிப்பாக முடியாது அவள் மறுத்துவிட்டாள்! கோபம் அதிகம் ஆக ஆக மதுவின் அளவும் கூட, அவளை பற்றி எப்படியெல்லாம் கற்பனை செய்து இருந்தேன் என்ற கழிவிரக்கம் அவனை ஆட்டி படைத்தது! எந்த பெண்ணிடமும் இந்த அளவு நெருங்கியதில்லையே... ஆனால் இவள் என்னை இதற்காக உபயோகப்படுத்தி விட்டாளே என்று உள்ளுக்குள் கோபம் கொதிக்க, அதோடு அரவிந்தனின் துரோகமும், ஷாலினியின் தந்தை அவனிடம் பேசிய வார்த்தைகளும் அவனை நிதானம் இழக்க வைத்து கொண்டிருந்தன!



"ச்சே துரோகிங்க... பச்சை துரோகிங்க..." முன்னாடி இருந்த கண்ணாடி டீபாயை குத்த அது உடைந்து அவனது கையை கிழித்தது!

"ஐயோ கார்த்திக் ரத்தம்..." பதறினாள் திவ்யா!

"தொடாத. மன்னிப்பு கேட்க முடியுமா முடியாதா?" அவன் அதிலேயே இருக்க

"முடியாது கார்த்திக்..." அவளும் இறுதியாக கூற,

"எனக்கு என்னோட கம்பெனி தான் முக்கியம்... உனக்கு தெரியாது திவ்யதர்ஷினி... நான் எந்த நிலைக்கு இறங்கவும் தயங்க மாட்டேன்... என்னோட ஒரு முகத்தை தானே பார்த்து இருக்க... இன்னொரு முகத்தை காட்ட வைச்சுடாதே..." வெறி அதிகமாகி ஆத்திரத்தில் மிரட்ட துவங்க... இனி இங்கிருப்பது சரி இல்லை என்று வெளியே போக எத்தனித்தாள்! கதவு தானாக மூடியது!

"ரிமோட்... எனக்கு நீ பதில் சொல்லாம வெளிய போக முடியாது திவ்யதர்ஷினி..." சிவந்து இருந்த கண்கள் அவளுள் கிலியை ஏற்படுத்தினாலும் இதற்கெல்லாம் பயந்தால் இந்த வேலையில் இருக்க முடியாதே!

"மிரட்டறீங்க கார்த்திகேயன்..."

"ஆமா மிரட்டறேன்... முடியுமா முடியாதா?"

"முடியாது?"

"அப்படீன்னா உன்னோட நியுட் போட்டோஸ் இன்னைக்கு நைட் டிவி, நெட், mms செல்போன் எல்லாத்திலையும் வரும்... எப்படி வசதி?" எழுந்து சோம்பல் முறித்து கொண்டே அவள் அருகில் வந்தான்!

"கார்த்திக்..." அதீத அதிர்ச்சியில் அவளது கால்கள் தள்ளாடின! பூமாதேவியே என்னை உன்னுள் எடுத்துக்கொள்ள மாட்டாயா?

## 12

"கார்த்திக் விளையாடாதீங்க..." திவ்யாவின் குரலில் நடுக்கம்!

"ம்ஹூம்... கண்டிப்பா இல்ல... எனக்கு என்னோட தொழில் ரொம்ப முக்கியம்... அதை பாதிக்கிற எதுவா இருந்தாலும் அதை நான் டெலீட் செய்தே ஆகணும்... அது நீயா இருந்தாலும் கூடத்தான் திவ்யா... எனக்கு வேற எதை பற்றியும் கவலை கிடையாது..." நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாக தேர்ந்தெடுத்து அவன் சொன்ன விதம் அவளை நிலைகுலைய செய்தது! ஆனால் உலகம் முழுக்க ஒளிப்பரப்பாகும் ஒரு நிகழ்ச்சியில் மன்னிப்பு கேட்பதென்பது அதுவும் உண்மையை மறுத்து பொய் கூறுவது என்பது அவளது லட்சியத்திற்கு அவளே



அடித்து கொள்ளும் சாவுமணி அல்லவா? அதை எவ்வாறு செய்ய முடியும்?

"நோ கார்த்திக்... நீங்க செய்தது தப்பு... சட்டவிரோதம் கூட இல்ல மனசாட்சி இருக்கிற எந்த மனிதனுமே செய்ய துணியாத தப்பு.... காலாவதியான மருந்தை மறுபுழக்கத்திற்கு விடுவதும் எத்தனையோ பேரோட வாழ்க்கைல விளையாடற போதை மருந்த கடத்துறதும் சும்மா சாதாரணமா செய்யற வேலையா? இதை தான் நீங்க உயிரை கொடுத்து செய்தீங்களா சொல்றீங்க?...." எப்படியாவது அவனது தவறை உணரவைக்க போராடினாள்!

"ஹே. இங்க பாரு... நீ சொல்ற மாதிரி எதுவும் என்னோட சுஷ்ருதால இல்ல... கிடையவே கிடையாது... முதல்ல சுஷ்ருதாவோட ஆனுவல் டர்ன் அவுட் என்னன்னு தெரியுமா? கிட்டத்தட்ட எண்ணூறு கோடி... அப்படி இருக்கும் போது இதெல்லாம் பண்ணி தான் நான் சம்பாதிக்கணும்ன்னு கிடையாது... எனக்கு தேவையும் இல்ல... உன்னை மாதிரி பொறுப்பு இல்லாத... லட்சியம்ன்னு சும்மா சொல்லிட்டு... கேவலமா... வெறும் புகழ் மட்டுமே தேவைப்படுற ஜென்மங்கள் சொல்றதெல்லாம் உண்மையா?"

"நான் பொய் சொல்லணும்ன்னு எனக்கு அவசியம் கிடையாது... நான் சொன்னது உண்மை தான்... ஆதாரங்கள் என்கிட்ட இருக்கு கார்த்திக்...

"என்ன ஆதாரம்? அந்த டேப்... அது மாதிரி ஆயிரம் டேப்ப நான் இப்போ உனக்கு குடுக்கட்டா...

போட்டோஸ்? இப்போ உன்னை நியுட்டா இருக்கற மாதிரி மார்ப்பிங் பண்ணி காட்டட்டா?"

"கார்த்திக்... ச்சே உன்னை போய்..." மனதுக்குள் அருவெறுப்பு... இவனிடமா நேற்று இரவு மயங்கினேன் என்று...

"ம்ப்ச்... எனக்கு எந்த விளக்கமும் தேவை இல்ல திவ்யா... இதுல நோ செண்டிமெண்ட்ஸ்... இப்போ மணி ஆறு... ஏழு மணி நியூஸ்ல உன்னோட சாரி நோட் வந்தாகணும்... இல்லைன்னா நான் சொன்னது நடக்கும்..." கல்நெஞ்சோடு தீர்மானமாக! மனதினுள் வலி... என் உயிரை தீண்டிய ஒரே பெண்ணிடம் பேச வேண்டிய வார்த்தைகளா இவை? நேற்றைய மாலை பொழுதோடு இந்த உலகம் இயக்கத்தை நிறுத்தி இருந்தாலும் சந்தோஷப்பட்டு இருப்பேன்... இவளே என்னுயை முதுகில் குத்தி துரோகம் செய்வதை பார்க்கும் துரதிஷ்டம் வாய்த்து இருக்காதே!

"நடக்காது கார்த்திக்..." அவளுமே இறுதியான தீர்மானமாக! லட்சியங்கள் கண்முன்னே எரிந்து சாம்பலாவதை பார்ப்பதை விட இறந்து விடுவதே மேல் என்று நினைத்து கொண்டே...

"அப்படீன்னா... முழுசா நீ வெளியே போக முடியாது..." நிதானமாக!

"வாட் டு யூ மீன்?" அவன் சொல்வதை ஜீரணிக்க முடியாமல்! கொஞ்சம் கொஞ்சமாக பின்னடைந்தாள்! இவன் என்ன சொல்கிறான்?



"ஐ மீன் வாட் ஐ சே! இன்னொருத்தனுக்கு மனைவியாகற தகுதிய நீ இழந்துடுவ திவ்யா..." அடுத்த மிரட்டலா இது என்று தோன்றினாலும் அவனது நிதானம் அவளது மனதில குளிரை பரப்பியது! இது உயிர் போவதை விட கொடுமை அல்லவா! மேலும் நகர முடியாமல் சுவரோடு ஒட்டினாள்!

"இப்போ நீங்க நடந்துக்கறது அதை விட த..தப்பு கா... கார்த்திக்...வ் வே... வேணாம்..." கண்களில் பயத்தோடும் குரலில் நடுக்கத்தோடும் அவள் ஒற்றை விரலை காட்டி மிரட்ட, அந்த விரலோடு கையை பற்றியவன்... நிதானமாக... அவளது மருண்ட கண்களை பார்த்துக் கொண்டே, உதட்டுக்கு எடுத்து சென்று முத்தமிட... திவ்யாவுக்கு முதுகு தண்டில் சிலீரென்றது! கொஞ்சம் கொஞ்சமாக அவளை நெருங்கி....

"சரி... நான் உன்னை ஒன்னும் பண்ணல... இதெல்லாம் போலியான ஆதாரம்ன்னு டிவில ஒப்புக்கோ..." அவளது முகத்தை நெருங்கி கொண்டே!

"ச்சே... இப்படி எல்லாம் செய்ய உனக்கு வெட்கமா இல்ல?" முகத்தை திருப்பி வேதனையோடு கூற, வலுகட்டாயமாக அவளது முகத்தை தன் பக்கம் திருப்பி,

"ம்ஹூம்... எனக்கு என் வேலை ஆகணும்... அதுக்கு என்ன வேணும்னாலும் செய்வேன்... அது

என்ன வேலையானாலும்..." என்ன வேலையானாலும் என்பதில் அழுத்தம் கொடுத்து, அவளது இடையை வளைக்க, அவளை பலம் கொண்ட மட்டும் தள்ளினாள்! ஆனால் அவனது வலுவான கரங்கள் அவளை அசைய விடாமல் செய்திருந்தது!

"ச்சே... நீ... நீ... நீயெல்லாம் ஒரு ஆம்பிளையா? இப்படி ரூம்ல அடைச்சு வச்சு மிரட்டுற..." தன்னை மீறி கத்தி, பளாரென்று அவனை அறைய... ஏற்கனவே இருந்த போதை மயக்கம், திவ்யா துரோகம் செய்து விட்டாள் என்ற அவனது வெறுப்பு, ஷாலினி தன்னிடம் திருமணம் வேண்டாம் என்று மறுத்து கூறிய விதம், அரவிந்தன் செய்த துரோகம், எல்லாவற்றுக்கும் மேலாக தான் வளர்த்த தொழில் தனது கண் முன்னரே அழிந்து விடுமோ என்ற கோபம், அதற்கு காரணம் திவ்யா என்ற கண் மண் தெரியாத ஆத்திரம், எல்லாமுமாக அவனது அறிவை மறைத்தது!

அவள் கெஞ்சியதும் கதறியதும் அதற்கு பின் அவனது காதில் விழவில்லை! இத்தனை நாளாக கொள்ளை என்று கட்டி காத்து வந்த கண்ணியம் பறந்தது! நீ ஒரு ஆணா? என்று அவள் கேட்ட வார்த்தை நின்றது! உறங்கவா விழிக்கவா என்று அவனுக்குள் கேட்டுக் கொண்டிருந்த மிருகம் விழித்தெழுந்து முழுமையாக தாண்டவமாடி விட்டது!

✤ ✤ ✤



தன்னுடன் போராடி... முடியாமல்... கசங்கிய பூவாக படுக்கையில் பக்கத்தில் மயக்கமாகி கிடந்த திவ்யாவை பார்த்தான் கார்த்திகேயன்! போதை சுத்தமாக இறங்கி இருந்தது! தனது வாழ்க்கையை அடியோடு புரட்டி போட்ட இந்த மாலை பொழுதை என்னவென்று சொல்ல? அவள் செய்தது அவளை பொறுத்தவரையில் தவறென்றால் இப்போது தான் செய்தது என்ன? ஆனாலும் இவ்வளவு அழுத்தம் உனக்கு வேண்டாம் திவ்யா என்று எண்ணிக்கொண்டி ருக்கும் போதே நீ மட்டும் என்ன குறைந்தவனா என்று மனசாட்சி எள்ளி நகையாடியது!

செல்பேசி அழைத்தது! புதுவை கமிஷனர் சபாபதி அழைத்து இருந்தார்! பிரச்சனை பெரிதாகி விட்டதோ என்று எண்ணி கொண்டே நெற்றியை தேய்த்தபடியே செல்பேசியை காதுக்கு கொடுத்தான்!

"சொல்லுங்க கமிஷனர் சார்..."

"கார்த்தி சார்... எப்படி இருக்கு நிலைமை?"

"ம்ம்ம்... ப்ராப்ளம் ஆகாதுன்னு நினைக்கிறேன்... அங்க எப்பிடி சார்?"

"கொஞ்சம்... பணம் எதிர்பார்க்கறாங்க..." தயங்கினார்!

"ம்ம்ம் எவ்ளோ வேணும்ன்னு செக்ரட்டரி கிட்ட சொல்லுங்க... வந்துடும்..."

"நான் முதல்லயே சொல்லணும்ன்னு நினைச்சேன் சார்... ஆனா எப்பிடி சொல்றதுன்னு விட்டுட்டேன்... விநாயகம் கூட சொன்னார்..." என்ன சொல்கிறார் இவர்... குழம்பினான் கார்த்திகேயன்!

"என்ன சொல்றீங்க சபாபதி சார்?"

"மாதத்துக்கு பத்து முறைக்கு மேல் சரக்கு போயிட்டு இருக்கும் போது நாம தானே ஜாக்கிரதையா இருக்கணும்..." கார்த்திகேயனின் அதிர்ச்சியை என்ன சொல்ல?

"எந்த சரக்க சொல்றீங்க?" நெற்றியை சுருக்கி கொண்டு கேட்டான்!

"இன்னைக்கு டிவில வந்ததுதானே சொல்றேன் கார்த்தி சார்..." எங்கேயோ புரிவது போல,

"சார்... அப்படீன்னா இந்த சரக்கெல்லாம் நிஜமாகவே நம்ம கம்பெனி பேர்ல போகுதா? இதை ஏன் என்கிட்டே முன்னாடியே சொல்லல?" உச்சகட்ட அதிர்ச்சியில் பேசிக் கொண்டிருந்த கார்த்திகேயனின் கவனத்தை கலைத்தது திவ்யாவிடம் இருந்து வந்த முனகல்!

"தண்ணீர்..." என்று ஹீனமாக முனக அவசரமாக தண்ணீர் எடுத்து புகட்டினான்! மயக்கம் கலையாமல் அவன் மேல் சரிந்து இருந்தாள் திவ்யா! சபாபதி தொடர்ந்தார்...



"ஆமா சார்... நம்ம கம்பெனி பேர்ல தானே போகுது... இது உங்களுக்கு தெரியாதா? அவரது குரலிலும் அதிர்ச்சி! தனக்கு தெரியாமல் இத்தனை எப்படி நடக்க முடியும்? யார் செய்திருக்கக் கூடும்? கார்த்திகேயனின் அதிர்ச்சியை அளவிட வார்த்தை இல்லையே! இதை தானே திவ்யா படித்து படித்து கூறினாள்... உன்னுடைய அவசர புத்தியை என்று அவனை கடித்து மென்று துப்பியது மிஸ்டர் மனசாட்சி!

"சார்... இந்த விஷயத்துல யார் சம்பந்த பட்டு இருக்காங்கன்னு கொஞ்சம் விசாரிங்க... நானும் விசாரிக்கறேன்... யார்ன்னு தெரிய வந்தா உயிரோட விட மாட்டேன்... ஏன்னா அவ்வளவு கோபத்துல இருக்கேன் சபாபதி சார்... விநாயகத்த எனக்கு போன் பண்ண சொல்லுங்க..." என்று அவரிடம் பேசி முடித்து விட்டு திரும்ப திவ்யாவுக்கு கொஞ்சம் கொஞ்சமாக நினைவு திரும்பிக் கொண்டிருந்தது! உடனே மதகடிப்பட்டு சர்க்கிள் இன்ஸ்பெக்டர் விநாயகத்திடம் இருந்து அழைப்பு வர, அவரிடம் பேசி முடித்த போது அவனுக்கு தெளிவாகி இருந்தது! கருப்பு ஆடு உள்ளே இருக்கிறது என்று!

செல்பேசியை எடுத்தவன் அழைத்தது தனது நண்பன் கிருஷ்ணாவுக்கு! தனியார் துப்பறியும் நிறுவனத்தை நடத்தி வருபவன்... பெரிய அளவில் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து தரும் நல்ல நண்பன்!

"ஹாய் கிருஷ்ணா...."

"சொல்லு கார்த்தி..." விஷயம் கேள்விபட்டு இருந்தவன், எப்படியும் தன்னை அழைப்பான் என்று நினைத்து இருந்தான்...

"பார்த்திருப்ப இல்லையா..."

"ம்ம்ம் ஆமாம் கார்த்தி... நீ கூப்பிடுவன்னு கெஸ் பண்ணேன்..."

"கிருஷ்ணா நீ ஒன்று செய்யணுமே..." என்று ஆரம்பித்து விஷயங்களை சொல்லி,

"இதை யார் பண்ணாங்க... பண்ணிட்டு இருக்காங்கன்னு கண்டுபிடி..."

"ஒகே கார்த்தி... இன்னும் ஒன் வீக்ல உனக்கு ரிசல்ட் சொல்றேன்... ஒகே."

"ஒகே." என்று கூறி விட்டு செல்பேசியை வைத்தவன் திவ்யாவை வைத்த கண் வாங்காமல் பார்த்து கொண்டே இருந்தான்! கசங்கிய பூவாக அவனது கைகளில் சரிந்து இருந்தவளை பார்க்கும் போது அவனுக்கு முதலில் இருந்த கோபம் கொஞ்சம் கொஞ்சமாக குறையத் தொடங்கியது! ஒருபுறம் மனம் பிரச்னையை நினைத்து கொதித்து கொண்டிருந்தாலும் மறுபுறம் ஆழ்ந்த அமைதியை நோக்கி போய் கொண்டிருந்தது! நிதானமாக யோசிக்க தொடங்கினான்!



"இந்த விஷயத்தை முதலில் என்னிடம் சொல்லி இருக்கலாமே இவள்...! இந்த ஸ்ரீயாவது இதை சொல்லி இருந்தால் நான் சுதாரித்து இருப்பேனே... சரி இருக்கட்டும்... அந்த கருப்பு ஆடு மட்டும் என் கைகளில் கிடைக்கட்டும்... ம்ம்ம்" செல்பேசி அழைக்க எடுத்து பார்த்தவன், சித்தார்த் தான் அழைத்து இருந்தார்!

"கார்த்தி சார்... திவ்யா எங்க?"

"ம்ம்ம் யா...ஷி இஸ் பைன்... டோன்ட் ஒர்ரி..."

"சார்... நான் வேணும்னா ஒரு ஐடியா சொல்றேனே..."

"சொல்லுங்க சித்தார்த் சார்..."

"ஒரு சின்ன பேட்டி... இந்த அலிகேஷன்ஸ முன் வைக்காம... நீங்க இந்த விஷயத்துல இருந்து வெளிய வர்ற மாதிரி... கேள்வி என்ன கேக்கலாம்ன்னு நீங்களே முடிவு பண்ணிக்கோங்க... அதை பெரிய அளவுல ப்ராட்காஸ்ட் பண்ணிடலாம்... அப்போ இந்த விஷயம் சரி ஆகிடும்... ஒகே வா கார்த்தி சார்..." ரொம்பவுமே யோசித்திருப்பார் போல... இதோ கொஞ்சம் நேரம் முன்னதாக இருந்தால் குதித்து இருப்பான்... நான் எதற்காக பேட்டி குடுக்க வேண்டுமென்று... இப்போதோ மனம் அமைதியடைய தொடங்கி இருந்ததால் அதே அமைதியோடு,

"ம்ம்ம்... ஓகே. அக்செப்ட் பண்ணிக்கறேன்... எப்போ ஸ்டுடியோ வரணும்...?"

"நாளைக்கே பண்ணிரலாம் கார்த்தி சார்.. ஆனா திவ்யாவோட செல் நாட் ரீச்சபில்ல இருக்கே." அவள் இன்னமும் அவர்களிடம் பேசவில்லை என்பதை மறைமுகமாக சுட்டி காட்டினார் அவர்! திவ்யாவை இவனிடம் இருந்து காப்பாற்ற வேண்டுமே... என்ற பயம்.. அவனது திறமையை அறிந்த மனிதர்!

"வேணாம்... திவ்யா வேணாம்... அவ இனிமே பேட்டி எடுக்க மாட்டா..." என்றதும் அவருக்கு தூக்கி வாரி போட்டது!

"ஏன் கார்த்தி சார்..." பதட்டமாகவே வினவினார்!

"ஏன்னா அவ என்னோட பியான்சி சித்தார்த் சார்..."

"வாட்.. அவங்க சொல்லவே இல்ல... ஆல் தி பெஸ்ட்..." ஹப்பாடா பிரச்சனை முடிந்தது என்று பெருமூச்சு விட்டார் சித்தார்த்!

"தேங்க்ஸ் சார்..." என்று கூறிவிட்டு செல்பேசியை அவன் வைக்க அவனை உறுத்து விழித்து கண்களில் நீர் வழிய முறைத்தபடி திவ்யா... அவசரமாக தன்னை சரி செய்ய முயல, அவளது கரத்தை பிடித்தவன் சட்டென்று இழுத்து தன் மேல் சரித்தான்... புன்னகையோடு!



"ச்சீ... என்னை விடு..." கோபத்தில் கண்களில் கண்ணீர் பொங்க அவனிடம் இருந்து விலக பெரும் பிரயத்தனப்பட்டு கொண்டிருந்தாள் திவ்யா!

"ம்ஹூம்... சான்ஸே இல்ல... முடிஞ்சா போய்க்க..." என்று இடையை வளைத்து கழுத்து வளைவில் முகம் புதைக்க அவளுக்கோ சொல்ல முடியாத கோபமும் ஆற்றாமையும் தன்னிடம் இருந்து வலுகட்டாயமாக பெண்மையை பறித்த அவனது திமிர்தனத்தை பார்த்த வெறுப்புமாக அவனை பார்த்து முறைத்தவள் கண்களில் அருவி வழிந்தது! கண்ணீர் அவனது கன்னத்தை நனைக்க, விழி உயர்த்தி பார்த்தவன் நெஞ்சில் வலி!"

அவளிடம் இருந்து சற்று விலகி, உச்சியோடு அவளது கன்னத்தை ஆதூரமாக தடவியவன்,

"திவி..." கிசுகிசுப்பாக அவன் அழைக்க பதிலில்லை அவளிடம்... வெறுமையாய் எங்கோ வெறித்து கொண்டிருந்தாள். அவனை தன்னோடு சேர்ந்து இறுக்கியவன்... மீண்டும் கிசுகிசுத்தான்...

"திவி... கல்யாணம் பண்ணிக்கலாமா?" நெற்றியில் முத்தமிட்டு! அதை கேட்டு இன்னமும் ரௌத்திரமாகினாள்... தனது முழு பலத்தையும் பிரயோகித்து அவனை தள்ளி விட்டவள் முகத்தில் இருந்தது கோபமா? ஏளனமா? ஆக்ரோஷமா? இல்லை அருவருப்பா...

"ச்சீ... நீயெல்லாம் அந்த வார்த்தைய சொல்லாத! அதுக்கு உனக்கு அருகதை இல்ல... என்னன்னு நினைச்சுகிட்ட? என் உணர்வுகள் கொஞ்சம் கூட மதிக்காம கால்ல மிதிச்சு கொலை செய்த உன்னை நான் கல்யாணம் பண்ணிக்கணுமா? ஷிட்... அதுக்கு வேற ஆள பாரு... என் புத்திய செருப்ப எடுத்து தான் அடிச்சுக்கணும்... தனியா போக வேண்டாம்ன்னு ஸ்ரீ சொன்னான்... நான் தான்... உன்னை போய் பிரெண்ட்ன்னு நம்பி வந்தேனே..." சொல்ல முடியாமல் துக்கம் தொண்டையை அடைத்து கொள்ள அதற்கு மேல் பேச்சு வராமல் கேவலாக வெடித்தது! அவசரமாக உடைகளை சரி செய்ய போனவளின் கண்களில் கண்ணீர் அருவியாக பொழிந்து கொண்டிருந்தது... சமாதானப்படுத்த வந்தவனை தள்ளி விட்டுவிட்டு...

"என்னை தொடாதே..." ரௌத்ரமாகியவள் உடைந்து இருந்த டீபாயின் கண்ணாடி துண்டை எடுத்து தனது கையை கிழித்தாள்!

"இனிமே தொட்ட... இப்போ என் கைய தான் அறுத்தேன்... அப்புறம் என் கழுத்த இங்கேயே அறுத்துக்குவேன்... என்ன செய்ய மாட்டேன்னு நினைச்சியா?" அவளது இந்த செயலை பார்த்து செயலற்று நின்றான்!

"ஐயோ திவி... ரத்தம்..." கையை பற்ற வந்தவனை பார்த்து...



"ச்சீ தொடாத... உன்னை பார்த்தாலே அருவருப்பா இருக்கு..." அவனால் அதற்கு மேல் பேச முடியவில்லை. செல்பேசி அழைத்தது! வைஷு அழைத்து இருந்தாள்...

"அண்ணா... திவ்யா வந்தாளா?" குரலில் மெல்லிய பதட்டம்! என்ன பிரச்சனையோ என்று...

"ம்ம்ம் இங்க தான் இருக்கா வைஷு... டோன்ட் ஒர்ரி..."

"இல்லண்ணா... இன்னமும் காணோம்ன்னு அத்தை ரொம்ப புலம்பிட்டு இருக்காங்க... அண்ணா! ஏதும் பிரச்சனை இல்லையே? சின்ன பொண்ணு அண்ணா... தெரியாம செய்துட்டா... ப்ளீஸ்ணா..." குரலில் மெய்யான வருத்தம்!

"ஹே அதெல்லாம் இல்ல... ப்ராப்ளம் ஆல்மோஸ்ட் சால்வ்ட்... இப்போ அவளை அழைச்சுட்டு நான் வர்றேன்... ஒகே வா வைஷுகுட்டி!"

"நான் சும்மா பேச்சுக்கு சொல்லலண்ணா... கல்யாணம் நின்னுடுச்சுன்னு சொல்லவும் யார் சொல்லியும் கேக்காம, கார்த்திக் என்னோட பிரெண்ட்... இந்த நேரத்துலதான் கூட இருக்கணும்ன்னு பிடிவாதமா உன்னை பார்க்க வந்தா... எதாச்சும் பிரச்சனை ஆகும்ன்னு ஸ்ரீ சொன்னப்போ கூட நம்ம கார்த்திக் தானேன்னு எல்லார் வாயையும் அடைச்சுட்டு வந்தா...

தயவு செஞ்சு அவ மேல கோபப்படாதேண்ணா... ப்ளீஸ்..."

விளக்கமாக வைஷு கூற அவன் கண்களில் காதல் கரைபுரண்டு ஓடியது! திவ்யாவின் கண்களில் நீர் தானாக வழிந்து கொண்டிருக்க அதை துடைத்த படி... தள்ளாடியபடி தன்னை சரி செய்து கொண்டு இருந்தாள்! மனம் வலித்தது! எனக்காக... நம்பிய முகங்கள் தங்களை அடையாளம் காட்டிய போதும் எனக்காக வந்தவளை... ச்சே... என்ன மனிதன் நான்? காதலோடு கலந்திருக்க வேண்டிய தருணங்களை நானே நாசம் செய்து கொண்டேனே! ஆத்திரம் கண்ணை மறைத்து விட்டதே!

"கண்டிப்பா இல்லடா.. முதுகுல குத்திட்டான்னு முதல்ல தான் நான் கோபப்பட்டேன்... ஏன்னா அந்த அளவு திவிய எனக்கு பிடிக்கும்..." திவ்யாவுக்கு கேட்காத தூரத்தில் நின்று கொண்டு!

"அண்ணா..." ஆச்சரியமாக!

"ஆமா வைஷு சச்சிதானந்தம் கல்யாணத்த நிறுத்தலைன்னா நான் நிறுத்தி இருப்பேன்.. பிகாஸ் ஐ லவ் ஹெர்..."

"அண்ணா... நிஜமாவா? ரொம்ப சந்தோஷமா இருக்கு... யாருக்கு எங்கன்னு கடவுள் தான் முடிவு பண்ணுவார்ணா... இந்த பிரச்சனைய பத்தி நினைக்காதே... அதே முகூர்த்தத்துல இந்த கல்யாணத்த



ஜாம் ஜாம்ன்னு நடத்திடலாம்ண்ணா...!" வைஷ்ணவி மகிழ்ச்சியில் தள்ளாடினாள்!

"இந்த பிரச்சனை கொஞ்சம் முடிச்சுக்கலாம் வைஷு... கொஞ்ச நாள் போகட்டும்..." உள்ளூர திவ்யாவின் கோபத்தை நினைத்து தயங்கினான்!

"பிரச்சனை அது பாட்டுக்கு இருக்கட்டும் ண்ணா... கல்யாணம் அது போக்குல முடிச்சுடலாம்... அப்போ தான் அந்த ஆள் முகத்துல கரிய பூசுன மாதிரி இருக்கும்... அரவிந்தனுக்கும் ஷாக் குடுத்தாப்ல இருக்கும்... ரெண்டு பேரும் துரோகிங்க..."

"ம்ம்ம்... அதுவும் சரியா தான் படுது... ஒரு அரை மணி நேரத்துல கிளம்பி வர்றேன் வைஷு." என்று கூறி விட்டு வைத்தான்! திவ்யா கதவை திறக்க முயன்று தோற்று கொண்டிருந்தாள்! ரிமோட் கதவாயிற்றே!

"திறந்து விடு..." எங்கோ பார்த்து சொன்னவளை பார்க்கும் போது சிரிப்பாகவே வந்தது!

"எங்க போற?" சிரித்துக் கொண்டே கேட்க

"ம்ம்ம்... சாக போறேன்... உனக்கு என்ன? திறந்து விட்டு தொலை..."

"அப்படியா... வா போலாம்..." பேச்சில் இருந்த குறும்பு அவளது கோபத்தை எகிற வைத்தது!

"நீ இல்லாத இடமா பார்த்து போக போறேன்... என்னை விட்டு தொலை..." எரிச்சலாக அவள் கூற... அவளை இழுத்து பிடித்து அணைத்தான்...

"அப்படீன்னா அதுக்கு இன்னொரு ஜென்மம் தான் எடுக்கணும் நீ... அப்பவும் உன்னை நான் துரத்திட்டு வந்துடுவேன்ல... கல்யாணம் பண்ணிக்க" குறுஞ்சிரிப்போடு கிசுகிசுப்பாக கூறியவனை பார்த்து....

"அதை மட்டும் நீ நினைச்சு கூட பார்க்காத... செத்தாலும் சாவேனே தவிர உன்னை நான் கல்யாணம் பண்ணிக்க முடியாது..." குரலில் தீர்மானமாக!

"அடுத்த மாசம் இந்நேரம் நீ என்னோட மனைவி... நான் தீர்மானம் பண்ணிட்டேன்..." முடிவாக அவன் கூற,

"ஆமா இவர் பெரிய மகாரஜா... இந்த மிரட்டலை வேற எங்கயாச்சும் வெச்சுக்கோ..."

"வேற எங்கடி வெச்சுக்கறது... இவ்வளவுக்கு அப்புறமும்?" குறும்பாக அவன் கேட்க.

"அருவருப்பா இருக்க உன்னை பார்த்து... என்னை விட்டுடு ப்ளீஸ்..."

"சரி... என்னை கல்யாணம் பண்ணிக்க மாட்டேன்னு சொல்ற? வேற யார கல்யாணம் பண்ண போற?" சரியான இடமாக பார்த்து அடிக்க அவளுக்கு அந்த நினைவே இன்னும் அருவருப்பை தந்தது!



"ச்சே..." என்று முகம் திருப்பியவளை வலுகட்டாயமாக தன் புறம் திருப்பிய கார்த்திகேயன்...

"இதுல என்னோட முடிவு தான் இறுதியானது திவி... இப்போ ஹாஸ்பிட்டல் போறோம்... கைக்கு டிரஸிங்க முடிச்சுட்டு வீட்டுக்கு போய் நம்ம விஷயத்த சொல்றோம்... இப்போ நடந்த விஷயத்த சொல்றதும் சொல்லாததும் உன்னோட விருப்பம்... எனக்கு நீ அதை சொல்றது பிடிக்கல... ஏன்னா இது நம்ம அந்தரங்கம்... நமக்கு மட்டும்தான் சொந்தம்... எனக்கு நீ தான் உனக்கு நான் தான்... இது தான் முடிவு... போலாமா?" மிக தீர்மானமாக!

"உன் பேச்சுக்கு தலையாட்ட வேற யாரைச்சும் பாரு... உன்னை பார்த்தாலே ஆயிரம் கம்பளி பூச்சி என் மேல ஊருற மாதிரி இருக்கு..." என்று மிக கடுமையாக கூறியவளை நெருங்கினான்... திவ்யா முறைத்து கொண்டே பின்வாங்க சுவர் தட்டி நின்றாள்! கையை இருபுறமும் ஊன்றி அவளது கண்களை பார்த்து,

"வேற வழியே இல்ல... நீ இந்த கம்பளி பூச்சிய சகிச்சு தான் ஆகணும்..."



## 13

**விதி** ஆட்டுவிக்கும் பொம்மலாட்டத்தில் நாம் அனைவரும் பொம்மைகளே! ஒவ்வொரு பொம்மைக்கும்

ஒவ்வொரு கதாபாத்திரம்... ஆடுவது நாமாக இருந்தாலும் ஆட்டுவிப்பது இயற்கை அல்லவா... சில நேரங்களில் நடக்கும் செயல்களுக்கு நம்மால் விளக்கம் தேட முடியாது... அதே போல் மனிதர்களும் பிறப்பு முதல் இறப்பு வரை ஒரே நிறத்தில் இருப்பவர்கள் கிடையாது... இடத்துக்கு தக்க நிறமும் சமயசந்தர்ப் பங்களுக்கு ஏற்ப மாறுவதுமே மனித இயல்பு! இதற்கு யாரும் விதிவிலக்கல்ல... அந்த பரந்தாமனே மனிதனானாலும் இயற்கையின் கட்டுபாட்டுக்குள் அதாவது விதியின் விளையாட்டுக்கு இரையாகாமல் இருக்க முடியாது! எல்லாவற்றுக்கும் விடையாய் அமைவது ரகசியங்களின் புதைகளனாக விளங்குவதும் இயற்கை மட்டுமே!

**இலக்கணம் சில நேரம் பிழையாகலாம்.**

**எழுதிய அன்பு இலக்கியம் தவறாகலாம்.**

அமைதியாக காரில் அமர்ந்து இருந்த திவ்யா உள்ளுக்குள் கொதித்து கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டிருக்க அவனை திரும்பியும் பார்க்காமல் வெளியே பார்த்து கொண்டு வந்தாள்! எவ்வளவு அழகான நட்பு! ஒரே நாளில் அத்தனையும் வீண்! இதில் யாரை குற்றம் சொல்ல? அவளது வாகனத்தில் ஏற விடாமல் வலுகட்டாயமாகவே பக்கத்தில் இருந்த மருத்துவமனைக்கு அழைத்து சென்று கைக்கு கட்டு போட்டு விட்டு அவனுக்கும் பார்த்து கொண்டு அழைத்து வந்தான்!



"திவி..." மென்மையாக அழைத்தவனை திரும்பியும் பார்க்கவில்லை! சிறிது நேரம் காத்திருந்தவன், அவளது கையை பற்றினான்!

"திவிகுட்டி..." இதை கேட்டதும் கோபமாகவே திரும்பினாள்.... அவனை எரிக்கும் பார்வை பார்த்து கையை சட்டென்று உருவியவள்,

"டோன்ட் கால் மீ ஆஸ் சச்..." கடுப்பாக கூறியவளை பார்த்து புன்னகைத்து.

"எனக்கு பிடிச்சிருக்கே..." குறும்பாகவே கூறினான்!

"எனக்கு பிடிக்கல.." முறைத்து கொண்டே கூற.

"ம்ம்ம்... கண்டிப்பா இனிமே பிடிக்கும்..." புன்னகைத்து கொண்டே.

"கண்டிப்பா பிடிக்காது... உன்னை என் பிரெண்டா நினைச்சேன்... நல்ல மனுஷன்னு தப்பு கணக்கு போட்டுட்டேன்... எல்லாமே தப்புன்னு ப்ரூவ் பண்ணிட்ட.. அத்தனையும் பண்ணிட்டு ஒண்ணும் தெரியாத மாதிரி பேசினா..." சொல்லும் போதே உடைந்தவள் மீண்டும் அழ ஆரம்பித்தாள்!

"நானும் உன்னை என்னோட க்ளோஸ் பிரெண்டா தான் நினைச்சேன்... அதுக்கு நீ செய்தது கொஞ்சமும் சரி கிடையாதே திவி... ஆனாலும் நான் செய்தது சரின்னு சொல்லல... அதை சரி செய்யத்தான் நினைக்கிறேன்..."

"நான் செய்தது தப்புன்னு நீ நினைச்சா என்னை கொலை கூட பண்ணி இருக்கலாம்... ஆனா..." முடிக்க முடியாமல் திணறி உடைந்தாள்!

"சரி நீ இவ்வளவு சொல்றியே... அந்த விஷயத்த என் கிட்ட டிஸ்கஸ் பண்ணி இருக்கலாமே திவி... அப்போ எந்த பிரச்சனையும் வந்து இருக்காதே!"

"எதை தப்பு செய்றவன் கிட்டயே வந்து நீ இதை செய்யறியான்னு கேக்க சொல்றியா? அப்புறம் அந்த ஆதாரங்களை எல்லாம் அழிக்கத்தானே பார்ப்ப... இப்போ என்னை நீ அழித்த மாதிரி...!"

"ரப்பிஷ்... முதல்ல உன்னோட வாதத்தோட அடிப்படையே தப்பு... அந்த விஷயத்துக்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்ல... நான் விசாரிக்க சொல்லி இருக்கேன்... ஒரே ஒரு விஷயத்த மட்டும் ஒப்புக்கறேன்... முதல்ல உன்னோட குற்றச்சாட்டுக்கு முகாந்திரமே இல்லை... இது போலின்னு நினைச்சேன்.. அந்த கோபம் உன் மேல ரொம்ப இருந்தது... ஆனா கொஞ்ச நேரத்துக்கு முன்னாடி கமிஷனர் பேசினப்போ தான் இது சுஷ்ருதா வழியாத்தான் நடக்குதுன்னு தெரிந்தது..."

"ஹா... முதல்ல இது நடக்கவே இல்லை, நான் வெறுமனே புகழுக்காக அடிக்கிற ஸ்டன்ட்ன்னு சொன்ன... இப்போ எனக்கு தெரிஞ்சு நடக்கலைன்னு



சொல்ற... ச்சே... பொய் சொல்றதுக்கு ஒரு அளவு வேண்டாமா?"

"நீ ஒத்துகிட்டாலும் இல்லைன்னாலும் இதுதான் உண்மை திவி... ஒரு நண்பனா நினைச்சு இருந்தா என்கிட்டே நீ சொல்லி இருக்கலாம்... அதை விட்டுட்டு சின்ன பிள்ளைத்தனமா வேலை செய்தது நீ தான்... ஆனா ஒரு விஷயம்... ஒரே நல்லது என்னன்னா..." என்று கூறி இடைவெளி விட... திரும்பி அவனை பார்த்து முறைத்து கொண்டே என்னவென்பது போல் பார்க்க

"நீ...ம்ம்ம்... ரொம்ப சந்தோஷமா இருக்கு திவி..." முகம் விகசிக்க சொன்னவனை பார்த்து

"எனக்கு கேவலமா இருக்கு..." சட்டென்று கூற அவளை பார்த்து தோளை குலுக்கினான்!

"ம்ம்ம்.. அப்படியா... பார்க்கலாம் கல்யாணத்துக்கு அப்புறம்..." உறுதியாக சொன்னவனை,

"கல்யாணம்... ம்ம்ம்... கெடுத்தவனையே கல்யாணம் பண்ணி குடும்பம் நடத்தணுமா? என்னோட உணர்வுகளுக்கு அப்புறம் என்ன மதிப்பு? என்ன சொன்ன... யார் கிட்டயும் சொல்ல கூடாதா? கண்டிப்பா சொல்லுவேன்... எல்லார்கிட்டயும் சொல்லுவேன்... என்னை கிள்ளுக்கீரையா நினைச்சு நீ பண்ண காரியத்த சொல்லி உன்னை ஒரு வழி செய்யாம விட

மாட்டேன்!" சபதமெடுப்பது போல கூற அதை கேட்டு சிரித்த கார்த்திகேயன்,

"ம்ம்ம் தாராளமா சொல்லு... எனக்கு ஒரு வேலை மிச்சம்... உங்க வீட்ல விஷயத்த சொல்லி கல்யாணம் பண்ண பர்மிஷன் வாங்குறது... ஜஸ்ட் கோ அஹெட்..." அவள் கூறுவதை ரசித்தபடியே கூறியவனை பார்த்து,

"ச்சே... அதிலேயே நிற்கிற... உனக்கு கொஞ்சம் கூட குற்ற உணர்வே இல்லையா?" என்று கேட்டவனை பார்த்து புன்னகைத்தான்! அந்த புன்னகையில் இருந்தது என்ன? அவனது செல்பேசி அழைத்தது! ஸ்ரீராம் அழைத்து இருந்தான்!

"சொல்லு ஸ்ரீ..."

"அண்ணா எங்க இருக்கா திவி?" குரலில் பதட்டம்!

"ஏன் ஸ்ரீ? இங்க தான் என் கூட தான்..."

"அவ போன் என்னாச்சுண்ணா? ரீச் ஆக மாட்டேங்குது... இங்க கொஞ்சம் நிலைமை சரி இல்லை..."

"என்னாச்சு ஸ்ரீ" அவனது குரலில் பதட்டம் தொற்றவும் அவளும் பயந்து போய் அவனை பார்த்தாள்!

"நீங்க அவ கிட்ட ஒன்னும் சொல்லாம கீழ்பாக்கம் அப்பல்லோ அழைச்சுட்டு வாங்கண்ணா... அங்க பேசிக்கலாம்..." அப்போதுதான் இருவரின் கைக்கும்



டிரசிங் செய்து விட்டு வீட்டிற்கு போய்க் கொண்டிருக்க ஸ்ரீராம் கூறியது அவனுக்கு பதட்டத்தை தோற்றுவித்தது! ஆனால் மேலும் அவன் குரலில் பதட்டத்தை காட்டாமல்,

"என்ன ஸ்ரீ... என்ன விஷயம்?" என்று கேட்கவும்,

"மாமாக்கு ஹார்ட் அட்டாக் அண்ணா... அங்க தான் அட்மிட் பண்ணி இருக்கோம்..." விஷயத்தை சொல்லவும் ஒரு கணம் அவனுக்கும் ஒன்றுமே புரியவில்லை!

"ஸ்ரீ இன்னும் டென் மினிட்ஸ்ல அங்க இருப்போம்... டோன்ட் ஒர்ரி... பாத்துக்கலாம்..." என்று அவன் முடித்து விட்டு வைத்த போது ஸ்ரீராமுக்கு ஒரு வகையில் நிம்மதியாக இருந்தது! ஹப்பாடா... நாம் நினைத்த அளவு பிரச்சனை பெரிதாகவில்லை... இல்லையென்றால் கார்த்தி இந்த அளவு இறங்கி வந்து பேச மாட்டாரே என்று தான் தோன்றியது!

"என்னாச்சு..." மொட்டையாக அவனிடம் திவ்யா கேட்க

"நந்திங்..." மொட்டையாகவே பதில் கூறினான்!

"சொல்லி தொலை..."

"ஒண்ணுமில்ல.. பேசாம வா திவ்யா" அவன் பேசும் போதே கார் படுவேகமெடுத்து இருந்தது!

✤ ✤ ✤

மருத்துவமனை வளாகம் சுறுசுறுப்பாக இயங்கி கொண்டிருந்தது! மருத்துவர்கள் இங்கும் அங்கும் போய் கொண்டிருக்க, நோயாளிகள் மருத்துவர்களை பார்க்க ஒவ்வொருவருடைய லவுஞ்சில் காத்து கொண்டிருந்தார்கள்! மருத்துவமனைக்கே உரிய வாசம்... ரிசெப்ஷனில் ராமகிஷ்ணன் பெயரை கூறி விசாரிக்கும் போதே ஸ்ரீராம் அவசரமாக வந்தான்!

"ஹப்பா.. இப்போ தான் உயிரே வருது திவி..." முதுகை தட்டி கொடுத்து கூறியவனை பார்க்கும் போதே கண்களில் கண்ணீர் தேங்கத் துவங்கியது!

"ஸ்ரீ..." நா தழுதழுக்க அழைத்தவளை தோளோடு சேர்த்து அணைத்து கொண்டு,

"ஒண்ணும் இல்லடா... ஜஸ்ட் சின்ன அட்டாக் தான்... மாமா சரி ஆகிடுவாங்க" என்று கூறும் போதே அவளுக்கு உண்மை நிலை தெரிந்தது!

"ஸ்ரீ..." அதிர்ச்சியில் பேச முடியவில்லை! இதை பற்றி ஒன்றுமே கூறவில்லையே கார்த்திகேயன்! செல்பேசியில் யாருடனோ பேசி கொண்டே இருந்தான்... திவ்யா அதன் பின்னர் எப்படி தன் தந்தையை பார்க்க அவசர சிகிச்சை பிரிவுக்கு போனாள் என்பது அந்த கடவுளுக்கே வெளிச்சம்! குணவதியோடு, விகாஷும், வைஷ்ணவியும், சஞ்சய் அதாவது வைஷ்ணவியின் கணவரும் வெளியே காத்து கொண்டிருந்தனர். ரக்ஷிதாவை காணவில்லை!



ஆனால் திவ்யா எதையும் கவனிக்கவில்லை... அவளுக்கு அப்போது தெரிந்ததெல்லாம் அந்த அவசர சிகிச்சை பிரிவு தான்!

"அம்மா..." துக்கம் வெடிக்க குணவதியின் தோளில் சாய்ந்தாள்! கண்களில் கண்ணீர் பெருகியது!

"திவி கண்ணா..." அவருமே மிகவும் பயந்து போய் இருந்தார்... அவரது கண்களிலும் கண்ணீர்... ஆனால் ஸ்ரீராமுக்கோ திவ்யாவின் செய்கை வித்யாசமாக தெரிந்தது!

எத்தகைய கஷ்டம் என்றாலும் ஒரு சொட்டு கண்ணீர் விடாதவள் திவ்யா! பொண்ணுன்னா அழனுமா என்று எதிர்கேள்வி கேட்பவள்... அவளது இன்றைய அழுகை... அவளுக்குள் இருந்த மென்மையான மனதை உணர்துகிறதா? இல்லை வேறு எதாவதுமா? அந்த கண்களில் விடையை தேடினான்! ஆனால் அதில் வலியை தவிர வேறு எதையும் கண்டுகொள்ள முடியவில்லை!

"எப்படி ஸ்ரீ... என்னாச்சு..." அறிந்து கொள்வதற்காக அவள் கண்களில் கண்ணீரோடு கேட்க சிறிது தயங்கியவன்,

"ஒண்ணுமில்ல திவி... அப்புறம் பேசிக்கலாம்..."

"ஒழுங்கா சொல்லு ஸ்ரீ..." என்று வற்புறுத்தவும் தயங்கியவாறே பேசினான்!

"முதல் காரணம்... உனக்கும் அரவிந்தனுக்கும் பேசிட்டு இருந்த கல்யாணம் நின்றது திவி, அரவிந்தன் மாமாவ கூப்பிட்டு என்னமோ சொல்லி இருக்கான்... அப்புறம் நீ கார்த்திகேயன் அண்ணாவ பற்றி பிளாஷ் பண்ணினது..."

"ஏன் அதனால என்ன?"

"எதாச்சும் பெரிய பிரச்சனை வந்துடுமோன்னு ரொம்ப குழப்பிகிட்டாங்கடா... அதெல்லாம் ஒன்றும் ஆகாதுன்னு எவ்வளவு சொல்லியும் டென்ஷனாவே இருந்தாங்க... அதோட..."

"அதோட..."

"ரக்ஷிதா உன்னை பற்றி கொஞ்சம் மோசமா பேசிடுச்சு திவி... வீட்ல கொஞ்சம் பெரிய சண்டை... நீ போனதுக்கு அப்புறம்... அது தான் மாமாவ ரொம்ப கவலை பட வச்சுட்டது..."

"என்ன பேசினாங்க?" உணர்ச்சியை தொலைத்த முகத்துடன்!

"அதை விடு.... உனக்கு அதெல்லாம் வேண்டாம்..."

"இல்ல ஸ்ரீ சொல்லு..."

"நீ மீடியால இருக்கியாம்... எப்படி வேணும்னாலும் போற பொண்ணாம்... அதுக்காக தான் நீ கல்யாணம்



வேண்டாம்ன்னு சொல்றியாம்... கல்யாணம் பண்ணா..." என்று கூற வந்து விட்டு மிகவும் தயங்கிக் கொண்டு நிறுத்தினான்!

"சொல்லு ஸ்ரீ..." உறுதியாக,

"வேணாம்டா... அதுக்கு விக்கி அடிச்சுட்டான் திவி..."

"அவங்க என்ன சொன்னாங்க ஸ்ரீ..."

"கல்யாணம் பண்ணா கூட சேர்ந்து இருக்க மாட்டியாம்... ஏன்னா ஆடின காலும் பாடின வாயும் சும்மா இருக்காதுன்னு என்னென்னமோ கேனத்தனமா பேசிடுச்சு..." வெளியே வருத்தம் உள்ளே அந்த ரக்ஷிதா பேசியதை நினைத்து கோபம் கொந்தளித்தது ஸ்ரீராமுக்கு! எப்படி எல்லாம் பேசிவிட்டாள் ராட்சசி... அதை கேட்டு நெஞ்சை பிடித்து கொண்டு விழுந்தவர்தானே! கசப்பாக புன்னகைத்தாள் திவ்யா!

"அவங்களுக்கு தீர்க்கதரிசனம் ஜாஸ்தி ஸ்ரீ..." ஒரே வாக்கியத்தில் முடித்தவள் தளர்ந்து அமர்ந்தாள்! தலை விண் விண்ணென்று வலித்தது! எதை நினைத்து கவலைப்பட? மதியமும் வயிற்றுக்கு உணவிடாதது, அதோடு சேர்த்து அவனுடன் போராடியது.... இப்போதைய தந்தையின் நிலை எல்லாமாக சேர்ந்து அவளை மிகவும் தளர செய்ய கண்களில் நீரோடு சாய்ந்து அமர்ந்தாள் திவ்யா! மருத்துவனையின் தலைமை மருத்துவரோடு பேசிக்

கொண்டு வந்தான் கர்த்திகேயன்... அருகில் வந்தவர், அனைவரையும் பார்த்து,

"ராமகிருஷ்ணன் சேப்ஃபா இருக்கார்... எதுக்கும் ஒரு ஆஞ்சியோ பண்ணிடலாம்ன்னு இருக்கோம்..." என்று கூறிவிட்டு கார்த்திகேயனை பார்த்து,

"கவலைப்படாதீங்க கார்த்திக்... உங்க மாமா எழுந்து உங்க கூட டென்னிஸ் விளையாடுவாங்க.... ஓகே." என்று தட்டி கொடுத்து விட்டு ஐசி வார்டுக்குள் நுழைந்தார்! அப்போதுதான் தளர்ந்து அமர்ந்து கைகளால் கால்களை கட்டிக்கொண்டு விட்டத்தை பார்த்துக் கொண்டிருந்த திவ்யாவை கண்டான் கார்த்திகேயன்!

"திவி..." அவளை எப்படியாவது தேற்றிவிடவே நினைத்தான் யாருமறியாமல்... அவனை எரிக்கும் பார்வை பார்த்தவள் கண்களில் கண்ணீர் வழிந்தது! கிராமங்களில் கூறுவார்கள்... பாம்பென்று தாண்டவும் முடியாமல் கயிறென்று மிதிக்கவும் முடியாமல் இருக்கிறது என்று! தந்தையின் இந்த நிலையில் கார்த்திகேயன் தன் பெண்மையை பறித்ததை கூற முடியுமா? கூறி ஏதாவது ஆனால் என்ன செய்வது? இப்படி என்னை நிறுத்திவிட்டாயே என்று அவனை கண்களால் குத்தி கிழித்து கொண்டிருந்தாள்!

வெளியே வந்த மருத்துவரிடம் காதில் ஏதோ கேட்டவன், திவியின் கையை பற்றி அழைத்துகொண்டு



மருத்துவரோடு உள்ளே சென்றான்! ஏசியின் குளிர் உள்ளே நடுங்க வைத்தது! பெரிய பெரிய மருத்துவ உபகரணங்கள் இயங்கி கொண்டிருக்க தந்தையை பார்த்தவளுக்கு வருத்தம் பொங்கியது! என்றுமே பிள்ளைகள் யாருக்கும் செல்லம் குடுத்தது இல்லை ராமகிருஷ்ணன்! விகாஷ் பிறந்து நீண்ட வருடங்களுக்கு பிறகு திவ்யா பிறந்திருந்தாலும் தனி கவனிப்போ செல்லமோ அவரிடம் இருந்து கிடைத்ததில்லை! விகாஷ், திவ்யா எப்படியோ அதே போல தான் ஸ்ரீராம் அவருக்கு! கண்டிப்பான தந்தையாக இருந்தாலும் அவரவர்க்கு என்ன திறமை இருந்ததோ அதை ஊக்குவிப்பார்! ஆனால் இந்த அளவு தன் மேல் பாசம் வைத்து இருப்பார் என்று அவளுமே நினைக்கவில்லை! ஏனென்றால் அதை அவர் என்றுமே காட்டிகொண்ட தில்லை!

"திவி..." ஹீனமாக அழைத்து கையை பிடித்தார்! கண்களில் ஒளி அருகில் இருந்த கார்த்திகேயனை பார்த்து!

"அப்பா... உங்களுக்கு ஒன்னும் இல்லப்பா... சரி ஆகிடுவீங்க பா..." வருத்தம் எதையும் சிறிதும் காட்டி கொள்ளாமல் கூற

"அதெல்லாம் கவலை படல கண்ணா... உன்னை நினைச்சுதான் கவலையா இருந்தது..." சோர்வாக கூறியவரை பார்த்து,

"அதெல்லாம் கவலைபடாதீங்க மாமா... நீங்க சரியாகி எழுந்து வாங்க... உங்க கிட்ட ஒரு நல்ல விஷயம் பேசணும்..." புன்னகைத்து கொண்டே அவன் கூற அந்த நிலையில் மறுதலிக்க கூடிய நிலையில் திவ்யா இல்லை! அந்த நேரத்தில் அவருக்கு மிகவும் தேவைப்பட்டது அவனது அந்த வார்த்தைகள் தானே!

"அந்த அரவிந்தன் போன் பண்ணி இருந்தாப்ல கார்த்தி.... என்னென்னமோ பேசிட்டாப்ல... அப்புறம் எப்படி நல்ல விஷயம்?" கனத்த வருத்தத்துடன் அவர் கூற

"ஏன் மாமா... நான் உங்க கண்ணுக்கு தெரியலையா? எனக்கு திவிய குடுக்க மாட்டீங்களா...? முதல்ல நீங்க வீட்டுக்கு வாங்க..." புன்னகையோடே கேட்ட அந்த ஒரு வார்த்தையே அவருக்கு போதுமானதாக இருந்தது! எல்லா பிரச்சனையும் முடிந்தது ஆண்டவா என்று கண்களில் மின்னல் கீற்று...

"எனக்கு இதை விட வேற சந்தோஷம் இல்லை மாப்பிள்ளை.... சீக்கிரமே ஓடி வந்துடுவேன்ல..." உற்சாகமாக! அவரது சோர்ந்த முகத்தில் டன் கணக்கில் மகிழ்ச்சி வெள்ளம்!

பெரும் ஆயாசமாக இருந்தது திவ்யாவுக்கு! விதி கூட உன் பக்கமா கார்த்திகேயா?



## 14

**அ**றையில் குளிர் பரவி இருந்தது.... கேமராமேன்களும், உதவியாளர்களும், இயக்குனரான ஸ்ரீராமும் பரபரப்பாக தங்கள் வேலைகளை பார்த்து கொண்டிருந்தனர்.... செய்தியின் போது ஒளிபரப்பாக இருக்கும் நேரடி நிகழ்ச்சி என்பதால் கூடுதல் படபடப்பு ஸ்ரீராமுக்கு... அதுவும் கார்த்திகேயனை அல்லவா பேட்டி எடுக்க போகிறார்கள்... கார்த்திகேயனும் தயங்காமல் ஒப்புக் கொண்டான்... பேட்டி அறைக்கு கொஞ்சம் கூட அலட்டி கொள்ளாமல் ஒருவித அலட்சியத்தோடே வந்தவனை பார்க்க சித்தார்த்துக்கு வயிற்றை பிறட்டியது என்னவோ உண்மை... இந்த பேட்டி சரியாக வரவில்லையென்றால் யார் அவனிடம் வாங்கி கட்டுவது என்ற பயம்!

பேட்டி ஆரம்பித்தது!

"தடை செய்யப்பட்ட சில மருந்துகளை நீங்க உற்பத்தி செய்யறதா உங்க மேல ஒரு குற்றசாட்டு நிலவுதே... அதற்கு நீங்க என்ன சொல்றீங்க?"

"தடை செய்யப்பட்ட மருந்துன்னு எதை சொல்றீங்க?" கார்த்திகேயன் சாதாரணமாகவே கேட்டான்! கண்களில் எப்போதும் தென்படும் ஆளுமையோடு கூடிய அலட்சியம்... அங்கிருந்த

பெண்களுக்கு ஒரு நிமிடம் இதயம் துடிப்பதை நிறுத்த செய்தது!

"ரோபினால், கேட்டமைன் மாதிரியான மருந்துகள் பற்றி தான் சொல்றோம் சார்....."

"ரோபினால், கேட்டமைன் எல்லாம் மன அழுத்தத் துக்கு குடுக்கற மெடிசின்ஸ்.... antihistamines வகைய சேர்ந்தது! தடை செய்யப்பட்ட மருந்துன்னா பாரஸ் கம்பெனியோட டி கோல்ட் கூட தான் தடை செய்யப்பட்ட மருந்து வகையை சேர்ந்தது... அதுல இருக்கற பிணைல் ப்ரோப்பையில் அமின் தடை செய்யப்பட்ட ஒன்று... இன்னும் ஆக்க்ஷன் 500, அனால்ஜின், நிமிசுலிட், மாதிரி எவ்வளவோ சொல்லலாம்....."

"சார் அதை சொல்லல.... போதை மருந்து சிலவற்றை நீங்க உற்பத்தி செய்யறதா கூறப்படுற குற்றசாட்ட பற்றி கேக்கறேன்...." பேட்டி எடுத்த ராஜீவ் கேட்க,

"ஒரு உதாரணம் சொல்றேன் ராஜீவ்.... fortwinன்னு ஒரு இன்ஜெக்ஷன் இருக்கு... அது ஒரு பெய்ன் கில்லர்... ஆனா அதையே அதிகமா போட்டுக்கிட்டு போதைல மிதக்கறவங்க இருக்காங்க... அதை போதை மருந்துன்னு சொல்ல முடியுமா? சாதாரணமா கோரெக்ஸ் சிரப் இருமலுக்கு எடுத்துக்கவாங்க... ஆனா அதையே பாட்டில்



கணக்குல குடிச்சுட்டு போதைல இருக்கறது உண்டு... அது போதை மருந்தா? நீங்க சொல்ல வர மருந்துகள் மன அழுத்தத்துக்கு மருத்துவர்களால பரிந்துரைக்கப் படுற மெடிசின்ஸ்.... ஆனா அதையும் தவறா உபயோகப்படுத்துவது நடக்குது.... அதை யூஸ் பண்றவங்க கைல தான் இருக்கு... நாம பூ விக்கறோம்னா அதை வாங்குறவங்க என்ன பண்றாங்கன்னு பார்க்க முடியாதில்லயா... அதை அவங்க கோயிலுக்கும் கொண்டு போகலாம்... இல்லைன்னா வேறு மாதிரியும் யூஸ் பண்ணலாம்... அது மாதிரி தான் இதுவும்... கண்காணிக்கற வேலைய அரசாங்கம் தான் பார்க்கணும்..." என்று விளக்கமாக சொல்லி முடிக்க,

"சார்... ஒரு சில மருந்துகள்... உதாரணத்துக்கு பாராசிட்டமலையே எடுத்துகிட்டா வேற கம்பெனிங்க தயாரிக்கறது முப்பது ரூபாய்க்கு கூட வருது... ஆனா அதை நீங்க வெறும் ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்யறீங்க... இதே மாதிரி தான் இன்னும் நிறைய மருந்துகள் நிலைமையும் இருக்கு... அது எப்படி உங்களால முடியுது? போலின்னு தான் எல்லாருக்கும் சந்தேகம் வரும்! இது தவறு கிடையாதா? இது போலி மருந்து தானே...."

இதைக் கேட்டதும் வாய் விட்டு சிரித்து விட்டு,

"ராஜீவ்... ஒரு மருந்தை கண்டுபிடிச்சா சம்பந்த பட்ட கம்பெனி பேட்டன்ட் ரைட்ஸ் வாங்கிடுவாங்க....

அப்போ அந்த மருந்தை அவங்க மட்டும் தான் தயாரித்து விற்பனை செய்ய முடியும்... அவங்க கண்டுபிடிக்க செலவு செய்த தொகை, மற்ற நிறைய செலவுகள் அதோட அவங்களோட அநியாய லாபம் எல்லாம் சேர்த்து வர்றதுதான் அந்த அநியாய விலை! ஆனா பேட்டன்ட் ரைட்ஸ் முடிஞ்சதுக்கு அப்புறம் யார் வேண்டுமானாலும் அந்த மருந்தை தயாரிக்க ரைட்ஸ் கிடைக்குது... அதுக்கு பேர் ஜெனரிக் ரைட்ஸ்.... நமக்கு அந்த ஆர் அண்ட் டி செலவு இல்லாததால ரேட் குறைவா வைக்க முடியுது... உண்மையா பாரசிட்டமலோட உற்பத்தி செலவு பத்து பைசாவுக்கும் குறைவு... அதை ஒரு ரூபாய்க்கு விக்கிற நாங்க குற்றவாளியா? இல்ல முப்பது ரூபாய்க்கு விக்கிற வெளிநாட்டு கம்பெனிங்க குற்றவாளியா? ஜெனரிக் மெடிசின்ஸ நாங்க மட்டும் உற்பத்தி பண்றது கிடையாது... நம்ம இந்தியாவுல தொண்ணூறு சதவிதத்துக்கும் மேல அதுதான்... உலக மருந்து உற்பத்தியில முப்பத்து ஐந்து சதவிகிதம் நம்ம இந்திய தயாரிப்புதான்... ஆப்ரிக்கா மாதிரி பின் தங்கிய கண்டங்களுக்கு குறைவான விலைல மருந்து சப்ளை செய்யறது நாம தான்... ஜெனரிக் மெடிசின்ல உலகத்துல நம்பர் ஒன் நம்ம இந்தியாதான்... இதை போலின்னு சொல்றது மிக தவறு....! மற்றபடி மருந்து கட்டுபாட்டு கழகத்துல முறையா அனுமதி வாங்கி, எல்லா விதிகளையும் பூர்த்தி செய்து, கிட்டத்தட்ட முப்பது வருஷமா இதே துறைல இருக்கற சுஷ்ருதாவ



போலி மருந்து தயாரிக்கற கம்பெனின்னு சொல்றது மிக மிக கண்டிக்கத்தக்கது!" மிக மிக கண்டிப்புடன் முடித்தவனை பார்த்து அனைவரும் கை தட்டி மகிழ்ச்சியை தெரிவித்தனர்!

இந்த பேட்டியோடு மத்திய மருந்து தர கட்டுப்பாட்டு அதிகாரிகளையும், தேசிய குடும்ப நல ஆணையத்தின் அதிகாரிகளையும் பேட்டி எடுத்து, அதையும் ஒளிபரப்பி ஒருவாறு மூச்சு விட்டார் சித்தார்த்!

பேட்டி ஆரம்பித்த போது இருந்த அலட்சியம் கலந்த கம்பீரம் கொஞ்சமும் குறையாமல் ஸ்ரீராம் அருகில் வந்தவனுக்கு, கை குடுத்து தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான் ஸ்ரீ! அவனது தோளில் கை போட்டுக் கொண்டு தன்னுடனே அழைத்து சென்ற கார்த்திகேயன்,

"ஸ்ரீ... எப்போ ப்ரீ ஆவ?"

"சொல்லுங்கண்ணா... உங்க பேட்டி தான் முடிஞ்சுதே... ஐ ஆம் ப்ரீ கார்த்தி அண்ணா...."

"கொஞ்சம் பேசணும் ஸ்ரீ...."

"சொல்லுங்கண்ணா..." ஆர்வமாகவே கேட்டான்!

"உங்க ரெண்டு பேருக்கும் எந்த வழில தப்பு நடக்கிறதா ஸ்கூப் கிடைச்சுது? கொஞ்சம் சொல்லேன் ஸ்ரீ!" நேரடியாக விஷயத்திற்கு வந்தவனை பார்த்த போது கொஞ்சம் அயர்ந்து தான் போனான்!

"அண்ணா.... அது வந்து...." தயங்கினான் ஸ்ரீ!

"ஸ்ரீ.... நான் இப்போ என் கம்பெனி பேர் கெட்டுட கூடாதுன்னு எப்படி வேணும்னாலும் சொல்லிக்கலாம்... இப்போ நான் பேசினது எல்லாம் சப்பைக்கட்டு தான்... ஆனா வெளி உலகத்துக்கு புரியாத சப்பைக்கட்டு! ஆனா தப்பு நடக்கறது உண்மைன்னு எனக்கும் புரியுது.... அதை நான் கண்டுபிடிக்கணும் ஸ்ரீ... என் கம்பெனிலையே இருக்கற அந்த கருப்பு ஆட தேடியே ஆகணும்... அதான் உன்கிட்டையும் ஹெல்ப் கேட்கறேன்..." என்று உணர்ந்து கூறியவனின் வார்த்தைகளில் பொய் இல்லை! கண்களில் கள்ளம் இல்லை.... கிருஷ்ணாவிடம் கூறி இந்த விஷயத்தை கண்டுபிடிக்க பணித்திருப்பதையும் கூறினான்... கிருஷ்ணா மேலும் ஒரு மாதம் கேட்டிருந்தான்....

"கண்டிப்பா செய்யறேன் ண்ணா.... திவி கிட்ட பேசி பார்த்தீங்களா.... இது விஷயமா?"

"ம்ஹூம்... இல்ல.... பேசவே பேசாதவ கிட்ட எதை கேக்குறது ஸ்ரீ?" வார்த்தைகளின் ஓரத்தில் வலி! ஸ்ரீக்கும் புரியவே செய்தது.... இருவருக்கும் ஏதோ பெரிய சண்டை என்று மட்டும்... ஆனால் தன்னிடமே இவ்வளவு தகைந்து பேசும் கார்த்திகேயன் அவளிடமா சண்டை போடுவான்? ஆனால் இரண்டு நாட்களாக திவ்யா இருக்கும் நிலையும் ஒன்றும் சொல்லி கொள்ள முடியவில்லையே... எதையோ இழந்தார் போல!



மாமாவையும் ஐ சி யூனிட்டில் இருந்து கொண்டு வந்ததற்கு பிறகும் அவள் இப்படியே இருப்பது ஏதோ ஒன்றை கூறியது! ஆனால் என்னவென்று புரியாமல் இருக்கும் போது என்ன செய்ய? கார்த்திகேயன் திவ்யாவை திருமணம் செய்து கொள்ள விருப்பம் தெரிவித்தது அவளுக்கு பிடிக்கவில்லையா? கார்த்திக்கை மறுக்க காரணமும் இல்லையே! இந்த பிரச்சனை ஒன்றை தவிர... அதுவும் அவள் அவசர குடுக்கையாக செயல்பட்டதால் வந்த வினை அல்லவா! கண்டிப்பாக கார்த்திகேயன் இந்த மாதிரி தவறுபவன் கிடையாது என்று தான் கூறியபோதும் ஒப்புகொள்ளாத பிடிவாதகாரி ஆயிற்றே!

"விடுங்கண்ணா... நான் பார்த்துக்கறேன்... நீங்க கல்யாண வேலைல இறங்குங்க... இன்னும் ரெண்டு வாரம் தானே இருக்கு..."

"ம்ம்ம் ஆனா ஸ்ரீ... வைஷுவோட பிடிவாதம் தான்... சச்சிதானந்தம் மாமா எந்த தேதில கல்யாணத்த பிக்ஸ் செய்தாறோ அந்த தேதில இந்த கல்யாணத்த நடத்தணும்னு... ப்ச்... நானும் கொஞ்சம் மூச்சு விட வேண்டாமா?" நொந்து போவது போல சிரித்து கொண்டே சொன்னவனை பார்த்து சிரித்த ஸ்ரீ,

"நீங்க கவலைபடாதீங்க ண்ணா... நாங்க எல்லாம் எதுக்கு இருக்கோம்... ஜமாய்ச்சுறலாம்... இந்த பிரச்சனை இதோட பினிஷ்ட்... இதுக்கு மேல நீங்க கவனிக்க வேண்டியது திவியத்தான்..." என்று கூறி

சிரிக்க, பேசிக்கொண்டே கார் பார்க்கிங் வந்து இருந்தனர்!

"ஆமா அவளை ஓவரா கவனித்ததால வந்த பிரச்சனையே போதும்பா...." என்று ஸ்ரீக்கு கேட்காதவாறு முனகிவிட்டு,

"ஓகே ஸ்ரீ... நான் கிளம்பறேன்..." கிளம்பினான்!

"அண்ணா ஒரு நிமிஷம்...."

"சொல்லு ஸ்ரீ....."

"ஆக்சுவலா என்ன ஆச்சு? ரெண்டு பேர்க்கு இடைல... திவ்யா இந்த அளவு உடைஞ்சு போய் நான் பார்த்ததே இல்லை...." என்று கேட்கவும் பெருமூச்சு ஒன்று புறப்பட்டது! கண்களை ஒரு நிமிடம் இறுக மூடி திறந்து.... மனதிற்குள் ஒரு முடிவுக்கு வந்தவனாக,

"அதெல்லாம் என்னன்னமோ நடந்துட்டுது ஸ்ரீ...." நேரடியாகவே கூறிய போது முதலில் ஒன்றும் பிடிபடவில்லை ஸ்ரீராமுக்கு! என்ன சொல்கிறான் இவன் என்று மண்டையை குழப்பி கொள்ளாத குறை!

"உனக்கு முடியும்னா ஆபீஸ்ல இன்பார்ம் பண்ணிட்டு கூட வா ஸ்ரீ...." என்று அவன் அழைத்த போது அவனுக்குமே அதுதான் சரியென்று பட்டு போனிலேயே கூறிவிட்டு அவனுடனே கிளம்பினான்!

சிறிது நேரம் பேசாமல் மௌனமாகவே வந்தவன்... காரை ஓரமாக நிறுத்தினான்! மனதுக்குள்



குழப்பம்... இதை ஸ்ரீராம் எப்படி எடுத்து கொள்வான் என்று! ஆனால் ஸ்ரீராமிடம் இருந்து மறைக்க விரும்பவில்லை கார்த்திகேயன்! அந்த மாலை பொழுதின் சம்பவத்தை நியாயப்படுத்தவும் தயாராக இல்லை... மூச்சை இழுத்து விட்டவன், எதற்கும் தயார் என்பது போல பார்த்துவிட்டு,

"ஸ்ரீ.... என்னை பற்றி என்ன நினைக்கிற?"

"ம்ம்ம்... பிசினெஸ்ல உங்களுக்கு எப்படி வேணும்னாலும் முகம் இருக்கலாம். ஆனா இயல்பில பார்த்தா நல்ல டைப்... நான் கவனித்த வரைக்கும் நிறைய விஷயங்களை நேர்மையா கையாள்றீங்க..."

"ம்ம்ம்... எனக்கு சுத்தமா பிடிக்காத விஷயம் முதுகுல குத்தறது ஸ்ரீ..... சச்சிதானந்தம் அதை தான் செய்தார்.... அரவிந்தன்... என்னால ஜீரணம் பண்ணவே முடியல..... அவனை பார்க்கவே கூடாதுன்னு தான் நினைக்கிறேன்... அந்த அளவு கோபமா இருக்கு... எனக்கு தேவைப்பட்ட சமயத்துல விட்டுட்டு ஓடுன துரோகி அவன்..." கோபமாக சொல்லி கொண்டிருக்கும் கார்த்திகேயனை பார்க்க மனதுக்கு துயரமாகவே இருந்தது! அனுபவங்கள் இடர்களை தோற்றுவிக்கின்றன... இடர்கள் அனுபவங்களை தருகின்றன என்பது எவ்வளவு சரியான வார்த்தை! மனிதர்களின் உண்மை முகங்களை அறிந்து கொள்ளும் அந்த தருணங்கள் மிக கடுமையானதாகவே அமைகின்றன!

"அந்த நேரத்தில் தான் திவ்யா வந்தா ஸ்ரீ.... அவளும் ஒரு துரோகியா முதுகுல குத்தின ஒரு தோழியா..." என்று வலியோடு கூறியபோது அவனும் அந்த வலியை உணர்ந்தான்!

"இல்லண்ணா திவி அப்படி இல்ல... அவளுக்கு கொஞ்சம் அவசர குடுக்கைத்தனம் இருக்கே தவிர என்னைக்குமே யாரையும் முதுகுல குத்த நினைக்க மாட்டா... நிறைய லட்சியம் இருக்கு... எதையாவது சாதிக்கணும்ன்னு துடிப்பு இருக்கு... ஆனா வயசுக்கேத்த வால்தனம் தான் கொஞ்சம் அதிகம்... அதுவும் போக போக சரியாகிடும்ண்ணா... உங்க கல்யாணம் நின்ற செய்தி வந்தப்போ... நான் கூட இந்த நேரத்தில போகாதன்னு எவ்வளவோ தடுத்து பார்த்தேன்... ஆனா நம்ம கார்த்திக்தானேன்னு என் வாயை அடைச்சுட்டு வந்தா... அவ அப்படி கிடையாதுண்ணா...." ஸ்ரீ கூறிய போது மனதை வருடியது கார்த்திகேயனுக்கு... எனது திவ்யா என்ற கர்வம் பிறந்தது!

"தெரியும் ஸ்ரீ.... ஆனா அந்த நியூஸ் பிளாஷ் பண்றதுக்கு முன்னாடி என் கிட்ட கொஞ்சம் பேசி இருக்கலாம் இல்லையா.... நான் அவளோட லட்சியத்தை அழிக்க மாட்டேன்... என்னோட நியாயத்தை புரிஞ்சுகிட்டு செய்திருக்கலாம்... நீயாவது அதை செய்து இருக்கலாம்... ஆனா அந்த கோபத்துல நான் செய்ததும் சரி கிடையாது...." என்று கூறிவிட்டு



தயங்கியவனை பார்க்கும் போது ஸ்ரீராம் ஆச்சரியம் அடைந்தான்! கார்த்திகேயனா தயங்குவது? அவனே தொடர்ந்தான்.....

"அந்த கோபத்துல.... நான் கொஞ்சம் தடுமாறிட்டேன் ஸ்ரீ.... அவளை செக்ஷுவலா யூஸ் பண்ணிட்டேன்...." குரல் பிசிறு தட்ட தயங்கியவாறே கூறினான்! ஸ்ரீராம் அதிர்ச்சியின் எல்லைகளை கடந்தான்! கார்த்திகேயனா... திவ்யாவையா....????

"வாட்... கம் அகைன்...." கோபத்தோடு! கை முஷ்டி இறுக.... தான் என்ன செய்கிறோம் என்பதை மறந்து அவனது சட்டையை பிடித்தான்! கார்த்திகேயன் மெதுவாக அவனது கையை எடுத்துவிட்டு,

"இன்னொரு முறை சொல்ல விரும்பலை ஸ்ரீ.... அதான் உடனே கல்யாணத்துக்கு அவசரபட்டேன்...." அவனது முகத்தில் இருந்ததென்ன?

"அப்படீன்னா நீங்க செய்தது சரி ஆகிடுமா?" கோபத்தில் கன்னம் துடிக்க,

"சரி கிடையாது... ஆனா அதை சரி செய்ய முடியுமே... இப்போவும் இந்த விஷயத்தை உன் கிட்ட மறைக்க நினைக்கலை...." என்று கூறிய போது அவனது அந்த தெளிவு ஸ்ரீராமுக்கும் புரிந்தது! ஆனாலும் சட்டென்று தெரிந்த இந்த விஷயத்தால் ஆடிபோயிருந்தான்! மௌனமானான்! கார்த்திகேயன் தொடர,

"நான் மனதார காதலித்த ஒரே பொண்ணு திவி தான் ஸ்ரீ...." முதன் முதலாக தன் மனதை ஸ்ரீராமிடம் திறந்தான்!

"அப்போ ஷாலினி...?" குழப்பமாக கேட்க,

"அம்மா கமிட் பண்ணிட்டாங்களேன்னு ரொம்ப குழப்பத்துல இருந்தேன்... அந்த பொண்ணுகூட பேச கூட எனக்கு விருப்பம் இருந்தது இல்ல ஸ்ரீ..... உனக்கே தெரியும்.... அப்போதான் திவிய பார்த்தேன்... முதல் பார்வைலயே ரொம்ப பிடிச்சு இருந்தது... ஆனா அப்போ நட்புன்னு ஒரு முகமூடிய தான் போட்டுக்க முடிந்தது. எனக்கும் புரியலை... ஆனா போக போக தான் எனக்கும் புரிந்தது ஸ்ரீ... இந்த ரிலேஷன்ஷிப் வெறும் நட்பு இல்லைன்னு...." என்று கூறிவிட்டு அவனது முகத்தை பார்த்தவன் தொடர்ந்தான்....

"இப்போ... நான் ரொம்ப லவ் பண்றேன் ஸ்ரீ.... ஐ லவ் ஹெர் எ லாட்....." தலையில் கையை வைத்து கார் ஸ்டியரிங்கில் தலைசாய்ந்தபடி கூறியவனை பார்த்த போது ஸ்ரீராம் வேதனைபட்டான்... இந்த அளவு மனம் வருந்துகிறானே என்று!

"அண்ணா.... நீங்க இந்த அளவு சொல்லும் போது நிஜமா சந்தோஷமா இருக்கு... ஏதோ ஒரு கட்டாயத்துக்கோ இல்ல சச்சிதானந்தத்துக்கு போட்டி யாவோ தான் இந்த ப்ரோபோசல சொன்னீங்கன்னு தப்பா நினைத்தேன்... ஆனா திவிய இவ்ளோ லவ் பண்ணிதான் கல்யாணம் பண்றீங்கன்னு நினைக்கும்



போது ரொம்ப சந்தோஷமா இருக்கு... நீங்க இதை எல்லாம் திவி கிட்ட பேசினீங்களா?"

"இல்ல ஸ்ரீ.... என் மேல ரொம்ப கோபமா இருக்கா... கார்னர் பண்ணி கல்யாணம் பண்றதா வேற என்னை கடிச்சுட்டு இருக்கா... அவ கிட்ட என்னால இந்த அளவு மனம் விட்டு பேச முடியலை... எங்க போய்ட போறா? ம்ம்ம்... கொஞ்சம் அவ கோபம் ஆறட்டும்...." என்று மென் புன்னகையோடு கூறிவிட்டு காரை ஸ்டார்ட் செய்தான்! எப்படியும் அவளை வென்றுவிட முடியும் என்றெண்ணி.... ஆனால்?

✤ ✤ ✤

அன்றைய தினம் பரபரப்பாக விடிந்தது... ஒவ்வொருவருக்கும் தங்கள் வாழ்க்கையில் மறக்க முடியாத நாட்கள்... திரும்பி பார்க்கும் போது பசுமை நினைவுகள் மயக்கத்தில் ஆழ்த்தும் அழகான நாட்கள்! கார்த்திகேயன் திவ்யாவின் திருமண நாள்! வைஷ்ணவி, சஞ்சய், ஸ்ரீராம் ஒரு இடத்தில் நிற்காமல் பறந்து கொண்டிருந்தனர்... ராகவேந்திரா திருமண மண்டபம் களைகட்டி இருந்தது! விஐபிக்களின் வருகையினால் மண்டபம் திணறி கொண்டிருந்தது!

முதல் நாள் பெண் அழைக்கும் வைபவத்தில் கலக்கி கொண்டிருந்தா ஸ்ரீராம் சாஹித்யா ஜோடி, திருமணத்திலும் கலக்கி கொண்டிருந்தது.... அவ்வப்போது குறும்பாக அவளை சீண்டி விட்டு வம்பு

இழுத்து கொண்டிருந்தான் ஸ்ரீராம்! இருவரின் நெருக்கத்தை பார்த்த குடும்பத்தினரின் புருவம் உயர்ந்தது! ராமகிருஷ்ணன், குணவதி, மங்கை, விஷால் என எல்லார் முகத்திலும் மகிழ்ச்சி கலந்த புன்னகை... பெருமிதம்!! ராமகிருஷ்ணன் தனது உடல்நிலையை மறந்து மனம் முழுக்க சந்தோஷ ஊற்று பாய ஒவ்வொரு சடங்கையும் செய்து கொண்டிருந்தார்! அங்கேயும் ஒட்டாமல் வெறும் அலங்கார பொம்மையாக வலம் வந்தது ரக்ஷிதா மட்டும்தான்!!

கனிஷ்கர் மனிஷா திவ்யாவை விட்டு அகலாமல் கூடவே இருந்து ஒவ்வொரு சடங்கையும் ஆர்வமாக பார்த்து பார்த்து கொண்டு இருந்தனர்.... பக்கத்தில் இருந்து திருமண சடங்குகளை பார்ப்பது அவர்களுக்கு இதுவே முதல் முறை அல்லவா... ஆனால் யாருக்கு வந்த விருந்தோ என்று இயந்திரம் போல ஒவ்வொரு வேலையையும் செய்து கொண்டிருந்தாள் திவ்யா!

உடல் முழுவதும் சரிகை ஓடிய தங்க காஞ்சி பட்டில் அழகாக அலங்கரித்த சிலை போல பக்கத்தில் வந்து அமர்ந்த திவ்யாவை ஒரு கணம் இமைக்காமல் பார்த்தான் கார்த்திகேயன்! என் மனைவி இத்தனை அழகா என்று அந்த நேரத்தில் இயல்பாக தோன்றும் கர்வம் அவன் மனதில்!

என்றும் உன்னை கைவிட மாட்டேன் என்று மந்திரம் கூறி திவ்யாவின் சங்கு கழுத்தில் மங்கல நாண் பூட்ட... அவளது கண்ணில் இருந்து கண்ணீர்



வழிந்து கொண்டிருந்தது... தனது வாழ்க்கையே முடிந்துவிட்டது என்ற கழிவிரக்கத்தில் கண்களில் அருவி! அந்த கண்ணீரை பார்த்தவனுக்கோ இதயத்தில் வலி!

அதே நேரத்தில் மனம் கொதித்து கொண்டிருந்தது இருவருக்கு இன்னொரு இடத்தில்! அது அரவிந்தன்... ஷாலினி!

## 15

**ரா**கவேந்திரா திருமண மண்டபம் திணறிக் கொண்டிருந்தது! தென்னிந்தியாவின் முக்கியமான அரசியல் தலைவர்கள், தொழிலதிபர்கள், அரசாங்க அதிகாரிகள் என்று ஒட்டுமொத்தமாக குத்தகைக்கு வாங்கியதால் மூச்சு விட கூட முடியாமல் தடுமாறி கொண்டிருந்தது! ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியே மேலாளர்கள் இருந்ததால் சிறிது கூட எங்கும் ஒரு சுணக்கம் ஏற்படாமல் மிக அழகாக நடந்தேறி கொண்டிருந்தது திருமணம்! திருமண ஏற்பாடு முன்னிருந்தே நடந்து கொண்டிருந்ததால் எந்த இடையூறும் நிகழவில்லை.... மணப்பெண் மாற்றம் மட்டும் தானே! முன்னரே திருமண அழைப்பு போனவர்களுக்கும் மறு அழைப்பும், மற்றவர்களுக்கு புதிய அழைப்பும் விடுக்கப்பட்டிருந்தது!

ஆங்காங்கே வளைத்து வளைத்து கூட்டத்தை படம் பிடித்து கொண்டிருந்த அகேலா கிரேன்களும், நிமிடத்துக்கு ஒருமுறை ஏதாவது நிகழ்ச்சியுமாக மண்டபம் பரபரத்தது! அவ்வப்போது முக்கிய பிரமுகர்களின் வருகை வேறு சலசலப்பை தோற்றுவிக்க எல்லாவற்றையும் சமாளித்து கொண்டிருந்தது சுஷ்ருதாவின் படை! மேலும் அத்தனை மேலாண்மையும் சஞ்சய், ஸ்ரீராய், விகாஷ் என அனைவரும் செய்து கொண்டு நிற்காமல் சுழன்று கொண்டிருந்தனன்!

வைதீக முறையில் திருமணம் முடிந்த கையோடு வாழ்த்த வந்த முக்கிய பிரமுகர்களை அறிமுகபடுத்தி கொண்டிருந்தான் கார்த்திகேயன், தனது மனைவிக்கு! திவ்யா ஓரக்கண்ணால் கார்த்திகேயனை பார்க்க அவனோ கொஞ்சம் கூட களைப்பே இல்லாமல் வந்தவர்களிடம் எல்லாம் பேசி சிரித்து அவ்வப்போது திவ்யாவிடம் வந்தவர்களை பற்றி கூறிக்கொண்டு வெகு சாதாரணமாக இருக்க, அவனது அந்த அலட்சியமே இன்னும் அவளுக்குள் கொதிப்பை அதிகப்படுத்தியது! ஆனாலும் அத்தனை பேர் முன்னர் காட்டிக்கொள்ளவா முடியும்? செயற்கையாக புன்னகையை ஒட்ட வைத்து கொண்டு பேச அதை பார்த்த கார்த்திகேயன் உள்ளுக்குள் பொங்கி சிரித்தான்... அவளது சிறுபிள்ளை தனத்தை எண்ணி! பேசி கொண்டிருந்தவர்கள் அகன்றபோது,

"ஹேய் தர்பூஸ்.... ரொம்ப கஷ்டப்பட்டு சிரிக்கிற மாதிரி தெரியுது..." கன்னத்து ஓரங்கள் சிரிப்பால் சுருங்க, கண்களில் குறும்பான சிரிப்போடு காதருகே கேட்டவனை பார்த்த போது ஒரு கணம் தடுமாறித்தான் போனாள்! ஆண்மையின் சின்னமாக தன்னருகே வந்து காதோரமாக கேட்ட போது, வந்து உராய்ந்த அவனது மூச்சுகாற்று அவளது இதயத்துடிப்பை எகிற வைத்த தென்னவோ உண்மை!.... ஆனால் அவளை தர்பூஸ் என்று அழைத்தது கடும் கோபத்தை கிளப்ப,



"ம்ம்ம் ஆமாம்... வேணும்னா ஒரு சப்ஸ்டியூட் கொண்டு வந்து நிறுத்தேன்?" கோபத்தை எல்லாம் விழுங்கி கொண்டு வெளியில் சிரித்து கொண்டே அவனை கடிக்க,

"உனக்கு சப்ஸ்டியூட்டா? ஹாஹா... நல்ல கதை... நாங்கல்லாம் ஒரு சொல், ஒரு வில், ஒரு இல் பரம்பரைம்மா... அது இந்நேரத்துக்கு உனக்கு புரிந்து இருக்கணுமே..." சிரித்து கொண்டே வாரியவனை மற்றவர்கள் அறியாத வண்ணம் திரும்பி முறைத்து விட்டு சட்டென்று முகத்தை மாற்றி கொண்டாள்!

"இதுல ஒண்ணும் குறைச்சலே இல்ல...." அவள் முனக,

"வேற எதுலடி குறைச்சல்?" குறும்பாகவே! அவள் தனது மனைவியாகிவிட்ட உரிமையோடு!

"வாட்.... டியா...." குரலில் அதிர்ச்சியோடு கேட்க,

"ஆமாம்டி பொண்டாட்டி....." என்று குறும்பாக கூறி விட்டு, ஹேய் தர்பூஸ்... கேமரா ரன்னிங்....." என்றும் எச்சரித்தான்!

"ம்ம்ம்..., என்ன தர்பூஸ்... தர்பூஸ்ன்னு... எனக்கு பிடிக்கல"

"எனக்கு பிடிச்சு இருக்கே!"

"ஏன் இப்படி பண்ற? இத்தனை பேர் முன்னாடி இருக்காங்களே கொஞ்சமாவது வெட்கம் இருக்கா?" மற்றவர்கள் அறியாதவண்ணணமே இந்த சொற் போராட்டம் நடந்து கொண்டிருக்க,

"நான் எதுக்கடி வெட்கப்படணும்? மப்பும் மந்தாரமுமா அப்படியே அள்ளிக்கலாம் போல ஒரு பொண்டாட்டி பக்கத்துல நிற்கும்போது அந்த அழகான தர்பூசை தர்பூஸ்ன்னு சொல்றது ஒரு தப்பா தர்பூஸ்?...." குறும்பு குரலில் கொப்பளிக்க அவளிடம் கேட்டு கொண்டிருக்கும் போதே அங்கே வந்தவன் அரவிந்தன்... தன்து தந்தையோடு! உடன் வைஷ்ணவியும்... துணி கொண்டு துடைத்தாற்போல அவனது முகத்தில் இருந்த புன்னகை காணாமற் போனது!

"ஆல் தி பெஸ்ட் கார்த்தி... நூறு வருஷம் ஷேமமா நீடூழி வாழணும்...." மனதார வாழ்த்திய மாசிலாமணிக்காக அரவிந்தனை பொறுத்துக் கொண்டான்! என்ன செய்வது? இன்னமும் தன் மேல் பாசமும் பிரியமும் வைத்திருக்கும் ஜீவனல்லவா!

"கார்த்தி... என்னை தப்பா நினைக்காதப்பா... தம்பிகிட்ட எவ்வளவோ சொன்னேன்... கேக்காம லீகல்



நோட்டீஸ் கொடுத்துட்டான்... தயவு செய்து அதை எல்லாம் கணக்குல வைக்காதேப்பா... நீ இருக்கற தெம்புல நான் அரவிந்த பற்றின கவலை இல்லாம இருந்தேன் கார்த்தி.... எப்படியும் நீ உருப்படி பண்ணி கொண்டு வந்துடுவன்னு... ஆனா இந்த பக்கி பயபுள்ள இப்படி பண்ணுவான்னு நினைக்கவே இல்ல ராஜா...." மெய்யான வருத்தத்துடன் கார்த்தியிடம் புலம்பினார்! அவருக்கு மிகுந்த மன உளைச்சலுடன் குற்ற மனப்பான்மையும் சேர்ந்து கொள்ள, அவனுக்கோ என்ன பதில் கூறுவதென்று புரியவில்லை! அரவிந்தனை மறுபடியும் உள்ளுக்குள் விட்டால் திரும்பவும் ஏதாவது பிரச்சனையின் போது பயந்து கொண்டு ஓடமாட்டான் என என்ன நிச்சயம்? ஆனால் அதையெல்லாம் பேச திருமண மேடை ஒரு தளம் இல்லையே! புலம்பவரிடம் என்ன சொல்வது?

"அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம் அங்கிள்... டோன்ட் ஒர்ரி....!" அரவிந்தனை சுத்தமாக கண்டு கொள்ளாமல் மாசிலாமணியிடம பேசிக் கொண்டிருக்க, வைஷ்ணவி கண்ணிமைக்காமல் இயங்கி கொண்டிருக்க, அரவிந்தன் திவ்யாவிடம் சென்றான்!

"நீயும் ஏமாந்து... என்னையும் ஏமாத்திட்டியே திவ்யா....." மிக மெல்லிய குரலில்! திவ்யா... அதை சிறிதும் கண்டு கொள்ளாமல்.... வாழ்த்த வந்தவனுக்கு நன்றி சொல்வது போல

"ரொம்ப தேங்க்ஸ் அரவிந்த் சார்...." பெரிய புன்னகையோடு கொஞ்சம் குரலை உயர்த்தியே கூறி

அவனை தள்ளியே நிறுத்த, அவனுக்கோ அவளது அந்த புன்னகை கோபத்தை கிளறியது! ஆனாலும் அதை காட்டி கொள்ளாமல் சகுனியின் சிரிப்போடு,

"நீ நல்லா இருந்தா போதும் திவ்யா...."

நல்லது நினைத்து சொல்பவன் போல சொல்லவும், அவளுக்கு அவனை பார்க்கவே பற்றி கொண்டு வந்தது! வெறுப்பாகவே தலையை திருப்பியவள் கண்டதென்ன? கார்த்திகேயன் கண்களில் தீப்பொறி பறக்க, அரவிந்தனை முறைத்து கொண்டிருந்தான்! இவனுக்கென்ன திவ்யாவிடம் பேச்சு வேண்டி கிடக்கிறது? அதே எண்ணம் தான் வைஷ்ணவிக்கும்... தூரத்தில் இருந்து பார்த்து கொண்டிருந்த ஸ்ரீராமுக்கும்! ஆஹா இவனிடம் பேசினால் கார்த்திகேயனுக்கு கோபம் வருகிறதே! தென்னை மரத்தில் தேள் கொட்டினால் பனை மரத்தில் நெறி கட்டுகிறதே! ஏளனமாக நினைத்தவள் இன்னும் அவனிடம் சிரித்து பேச.... அரவிந்தனோ இவை அனைத்தையும் ஒரே நொடியில் கிரகித்தவன், இன்னும் கொஞ்சம் என்ன... அதிகமாகவே அவளிடம் சிரித்து பேசி கார்த்திகேயனின் வயிற்றில் அமிலத்தை கரைத்து ஊற்றிவிட்டே கீழிறங்கினான்! அதோடு கார்த்தி கேயனின் குறும்பு பேச்சு காணாமல் போயிருந்தது!

அதன் பின் சடங்குகளும் சம்பிரதாயங்களும் முடிந்து அந்த மதியமே பெண்ணை அழைத்து கொண்டு புதுவை செல்ல தயாராக, திவ்யா மனம்



கலங்கினாள்! இதுதான் வாழ்க்கை என்று முடிவு செய்யபட்டாயிற்றே! தனது ஆசைகளும் லட்சியங்களும் எங்கே போனது? இனி இந்த குடும்பத்திற்கும் தனக்கும் உள்ள உறவு என்பது கட்டி கொடுத்த பெண் என்பது மட்டும் தானா? அம்மாவின் சேலையை பிடித்து கொண்டே சுற்றி அவரிடம் திட்டு வாங்கியதெல்லாம் அவ்வளவுதானா? ஸ்ரீராமிடம் விகாஷிடமும் சின்ன சின்ன விஷயங்களுக்கெல்லாம் சண்டை பிடித்து அடித்து கொண்டும் கொஞ்சி கொண்டும் இருந்த தெல்லாம் அவ்வளவுதானா? இருபத்து இரண்டு வருடமாக தன் வீடு என்று நினைத்தது இனி அம்மா வீடு என்று ஆகிவிடத்தான் போகிறதா? இத்தனை வருடமாக எனக்கு உற்ற தோழியாக இருந்த எனதருமை மல்லிகை கொடியே உன்னை பிரிந்து நான் போகிறேன்... வெறுப்பை மட்டுமே கணவனுக்காக சுமந்து கொண்டு!

பெண் வீடு வந்திருந்த மணமக்களுக்கு பால் பழம் கொடுக்கும் சடங்கு நடந்து கொண்டிருக்க, அவளோ ஒவ்வொரு முறையும் மற்றவர்களுக்காக பார்த்து கொண்டு விஷத்தை விழுங்குவது போல் பழத்தை விழுங்கி கொண்டிருந்தாள்! கார்த்திகேயன் அனைவரிடமும் சந்தோஷமாக சிரித்து பேசி வம்பு இழுத்து கொண்டிருக்க திவ்யாவுக்கு அனல் மேல் அமர்ந்த உணர்வு! அருகில் வந்து அமர்ந்த ஸ்ரீராம் திவ்யாவின் கையை பிடித்து,

"திவிகுட்டி... நீ நல்ல பிள்ளை தானே... நான் சொன்னா கேட்டுக்குவதானே...." பீடிகையோடு ஆரம்பிக்க கார்த்திகேயனுக்கு அதை பார்க்க சிரிப்பு தாளவில்லை!

"ஸ்ரீ.... வேணும்னா ஒரு பீடிங் பாட்டில் எடுத்துட்டு வந்து இவளுக்கு கொடு... எப்பா பில்ட் அப் தாங்கலடா சாமி..." வேண்டுமென்றே கிண்டலடிக்க,

"அண்ணா.... இருக்கற வரைக்கும் தெரியல..... ஆனா இந்த வாலு மறுவீடு போகுதுன்னு நினைக்கும் போது நிஜமாவே கஷ்டமாத்தான் இருக்குண்ணா.... கூடவே சுத்திட்டு இருந்துட்டா...." கண்களில் நீரோடு உணர்ந்தே அவன் கூற

"ஸ்ரீ... அதுக்கு நீ சந்தோஷம் தானே படணும்.. இந்த தொல்லைய நான் தான் தைர்யமா கூட்டிட்டு போறேனே... அதுக்கு நீங்க என்னை மெச்சிக்கணும்..." என்று சிரிக்காமல் கிண்டலடிக்க இருந்த அனைவரும் சோகம் மறந்து சிரிக்க, திவ்யா அவனை எரிப்பது போல முறைத்தாள்!

"பாரு விகாஷ்.... உன் தங்கச்சி இப்போவே என்னை இப்படி முறைக்கிறா... இன்னும் நாளைக் கெல்லாம் எப்படியோ...." விகாஷிடம் புகார் கூற

"மோனே என்னை எப்படி எல்லாம் கிண்ட லடிப்பீங்க... இனிமே நீயும் அதே ரேஞ்ச் தான்... போடு தோப்புகரணம்ன்னு திவி சொன்னா போட்டு தான்



ஆகணும்..." விகாஷ் போட்டு தாக்கினான்! அதை கேட்ட ஸ்ரீ,

"ஹலோ... நாங்க எல்லாம் ஆம்பிளை சிங்கம்ல... தோப்புகரணம் அவ சொல்லி கார்த்தி அண்ணா போடுறதா? சான்சே இல்ல...." என்று கூறி நிறுத்த அதை தொடர்ந்த சஞ்சய்,

"சொல்றதுக்கு முன்னாடியே எண்ணிக்கோ தாயேன்னு சரண்டர் ஆகிருவோம்ல.... எப்பூடி..." என்று தாக்க,

"சஞ்சய்... என் தங்கச்சி சூப்பரா எண்ணுவாளே.. ஆனா ஸ்ரீ... நீ சொல்லவே இல்ல.... தினம் இதுதான் நடக்குதா சகிகிட்ட...." என்று நேரம் பார்த்து போட்டு கொடுக்க இளையவர்கள் மட்டுமே இருந்த அந்த இடத்தில், ஹோவென எல்லோரும் சேர்ந்து குரல் எழுப்ப, ஸ்ரீ கொஞ்சம் கூட அலட்டிக்கொள்ளாமல்,

"ஹய்யோ குருவே.... தேங்க்ஸ் குருவே.... எப்படிடா டாப்பிக் ஓபன் பண்றதுன்னு இருந்தேன்... நீங்க இவ்ளோ நல்லவர்ன்னு இப்போ தான் தெரியுது குருவே... எங்களுக்கு பையன் பிறந்தா கண்டிப்பா உங்க பேர்தான் வைப்போம் குருவே..." என்று நக்கலாக வணங்கி கொண்டே கூற அதற்கு கார்த்திகேயன் ஆசி வழங்குவது போல காட்டி சிரித்து கொண்டே

"தான்க்யூ... தான்க்யூ..." இளையவர்களின் மத்தியில் சிரிப்பு சரவெடி கிளம்பியது!

"அடப்பாவி... கல்யாணமாச்சும் செய்துக்கு வியா.... இல்ல அதுவும் இல்லையா?" சஞ்சய்யோடு சேர்ந்து எல்லோருமாக ஓட்ட,

"ஹேய் சகி.... என்னடி சொல்ற?" என்று அங்கு முகமெல்லாம் சிவந்து நின்று கொண்டிருந்த சாஹித்யாவை பார்த்து ஸ்ரீ கேட்க,

"என்னடா...." புரியாமல் சகி கேட்டாள்!

"தாலியத்தான் கட்டிக்கிட்டு பெத்துக்கலாமா? இல்ல புள்ளகுட்டி பெத்துகிட்டு கட்டிக்கலாமா?" என்று அங்கிருந்த சஞ்சய், விகாஷ், உள்ளிட்ட இளையவர்கள் கூட்டம் பாட்டம் பாடி கலாய்க்க... அவளுக்கோ கூச்சம் மேலிட்ட ச்சீ போடா பிசாசு என்று கூறி அவன் மேல் சோபா குஷனை எடுத்து எறிந்து விட்டு சமையலறைக்கு ஓடினாள்! கார்த்திகேயன் பக்கம் ஸ்ரீயின் கவனம் திரும்ப,

"அண்ணா.... நிஜமா கஷ்டம் தான்... உங்களை சமாளிக்கிறது..." ஸ்ரீ சிரித்து கொண்டே சீண்டினான்!

"ஆஹா.... இப்படி ஒரு குற்றசாட்டை வன்மையாக கண்டிக்கிறேன் யுவர் ஆனர்.... நானே பயந்துகிட்டு இருக்கேன்... பச்சை புள்ளைய பார்த்து என்ன வார்த்தை சொல்லிட்ட ஸ்ரீ.... என்ன வார்த்தை சொல்லிட்ட...." சிவாஜியை போல நக்கலடிக்க

"ஐயோ கார்த்திக்... என் ஹார்ட்டே ப்ரேக் ஆகிடுச்சு...." விகாஷ் நெஞ்சை பிடிக்க, சஞ்சய் அதற்கு உதவுவது போல நடிக்க,



"விக்கி... உன்னோட ப்ரேக் வயர கேக்காம எப்படி உன்னோட ஹார்ட் ப்ரேக் ஆகலாம்? மோனே இரு உனக்கு அடுத்த பூஜை ரெடி ஆகுது..." என்று ரக்ஷிதாவை குறிப்பிட்டு கிண்டலடிக்க சிரிப்பால் சூழ்ந்திருந்த அந்த இடத்தின் நாயகியோ அதில் கலக்காமல் சோகமே வடிவாக அமர்ந்திருந்தாள்! அதை பார்த்த ஸ்ரீ,

"டேய் திவிக்குட்டி... இதுநாள் வரைக்கும் நீ சின்ன பொண்ணா இங்க செல்லமா இருந்து இருக்கலாம்டா.... ஆனா இனிமே நீ உன்னோட ஹஸ்பண்ட் மனச புரிஞ்சுகிட்டு நடந்துக்கோடா..." ஸ்ரீ பெரிய மனிதனாக அட்வைஸ

"ஹாஆஆஆ....ஸ்ரீ.... என் ஹார்ட்ட டச் பண்ணிட்ட.... டச்ச்ச் பண்ணிட்ட....." கார்த்திகேயன் அவனது பங்குக்கு நெஞ்சை பிடிக்க, ஸ்ரீ சிரித்து கொண்டே,

"அண்ணா கஷ்டப்பட்டு சீரியஸா பேச ட்ரை பண்றேன்... நீங்க சிரிப்பு கூட்டாதீங்கண்ணா..." அவனால் சிரிப்பை அடக்க முடியவில்லை!

"அதெல்லாம் விட்டுடு... உனக்கு அதெல்லாம் வராது..." அப்போதுதான் அங்கே வந்த வைஷ்ணவி ஒரு பிட்டை போட சஞ்சய்யும் விகாஷும் அவளுக்கு ஹை பை கொடுத்தனர்!

"ச்சே.... சுத்தி வில்ல கூட்டமா இருக்கே ஸ்ரீ.... இப்போதைக்கு நீ பதுங்கிடு ஸ்ரீ பதுங்கிடு...

இல்லைன்னா சேதாரம் உனக்குத்தான்!" அவனே அவனுக்கு கூறுவது போல நக்கலடிக்க வைஷ்ணவி பத்திரம் காட்டிவிட்டு போனாள்! ஸ்ரீ நிஜமாகவே திவ்யாவிடம் சீரியசாகத்தான் பேசிக்கொண்டிருந்தான்! கார்த்திகேயன் பக்கமிருந்து பிரச்சனை எதுவும் வராதென்பது அவனுக்கு உறுதியான ஒன்று! ஆனால் திவ்யாவின் மனதை தான் கணிக்க முடியவில்லை... அவளிடம் நேராக கார்த்திகேயன் கூறியதை எல்லாம் கூறவும் முடியவில்லை! சொல்வதென்றால் அவனிடம் முன்னமே சொல்லி இருப்பாளே... அவளே சொல்லாத போது எனக்கு தெரியும் என்று தோழியிடம் காட்டிக் கொள்ள பிடிக்கவில்லை! அவளது அந்தரங்கத்தை அந்தரங்கமாகவே வைக்க முயற்சித்தான்!

"திவிக்குட்டி.... எதுவா இருந்தாலும் விட்டு கொடுத்து போடா.... பழசு ஏதாச்சும் உனக்கு பிடிக்காம இருந்தா நினைக்காத குட்டி.... இந்த வீட்டோட மரியாதை, உன் வீட்டோட மரியாதை எல்லாம் இனிமே உன் கைல தான் இருக்கு.... முக்கியமா உன் ஹஸ்பண்டோட மரியாதை!" அவளது உன் வீடு, உன் ஹஸ்பண்ட் என்பதில் மிகுந்த அழுத்தம் கொடுத்து அவன் கூற, அவளது இமைகளோ தாழ்ந்தே இருந்தது! அதில் கண்ணீர் குளம்!

எல்லோரிடமும் பேசி விடை பெற்ற திவ்யா கண்ணீரில் கரைய, அனைவரின் கண்களிலும் கண்ணீர்! தாய், தந்தை எல்லோரிடமும் விடை பெற்ற



திவ்யா, ஸ்ரீயிடம் வரும்போது அவன் இன்முகமாகவே பேசி அனுப்ப பார்க்க,

"ஸ்ரீ...." என்று தோளை அணைத்த திவ்யா கதறினாள்! உள்ளுக்குள் இருந்த சோகம், கோபம் எல்லாம் கண்ணீராக பொழிய, அவனோ அவளை பிரியும் வேதனையில் கலங்கினான்! பிறந்தது முதல் எங்கு சென்றாலும் திவ்யா தொற்றுவது ஸ்ரீயைத்தான்... முதன் முதலாக அவளை பிரியும் வேதனை... எல்லாமுமாக சேர்த்து அவனது கண்களிலும் கண்ணீர் அணை உடைப்பெடுக்க, கார்த்திகேயன் தான் சுதாரித்து தேற்றினான்!

"ஸ்ரீ..... அவ எங்க போய்ட போறா? நினைச்சா பாண்டிச்சேரி வர போற... ஏன் நீயும் இப்படி அழற? நீதானே அவளுக்கு அட்வைஸ் பண்ணனும்...." என்று பொறுப்பாக கூற கொஞ்சமாக சமாதானமாக, மனம் முழுக்க குழப்பமும் வேதனையுமாக, கார்த்திகேயன் மேல் அதீத வெறுப்புமாக விடை பெற்றாள் திருமதி திவ்யதர்ஷினி கார்த்திகேயன்!

✤ ✤ ✤

**வெ**ண்ணிலவு வெளியே காய்ந்து கொண்டிருக்க, நட்சத்திரங்களின் ஊர்வலம் வானவீதியில் நடந்து கொண்டிருக்க, சில்லென்ற கடற்கரையின் வாடைக் காற்று பட்டு தலைவி பிறைநுதல் நொந்தாளோ இல்லையோ தலைவன் கார்த்திகேயன் நுதல் சுருங்கி

வெண்குழல் வத்தியில் காய்ந்து கொண்டிருந்தான்! வேறொன்றுமில்லை சகரெட் தான் அது! தங்களது அந்தரங்கத்தை மற்றவர் அறிய பொதுவில் கொண்டாட விருப்பமில்லாத கார்த்திகேயன், மங்கையிடம் கூறி திவ்யாவை அழைத்து கொண்டு காலாபேட்டில் இருந்த தங்களது கடற்கரை பார்ம் ஹவுஸ் வந்திருந்தான்! வைஷ்ணவி ஆட்களை விட்டு முன்னரே அனைத்து அலங்காரங்களையும் முடித்து திவ்யாவுக்கு ஆயிரம் அறிவுரைகளை சொல்லி அனுப்பி இருந்தாள்! மங்கையிடம் ஆசி பெற்று கொண்டு கணவனோடு வந்தவளுக்கு உள்ளுக்குள் கோபம் கனன்று கொண்டிருந்தது! ஆனாலும் இருவரும் பேசி கொள்ளாமலே வந்து சேர்ந்திருந்தனர்...

வெகு தனிமையான பெரிய வீடு!

சுற்றிலும் மரங்கள் சூழ்ந்திருந்த தோப்பு!

யாருமற்ற தனித்தனியான தனிமை!

சிலுசிலுவென்று வீசும் கடற்கரை காற்று!

அருகில் கேட்கும் கடற்கரையின் அலையோசை!

உடலை ஊடுருவி சென்ற வாடை குளிர்!

ஏகாந்தத்தின் இனிமையை அனுபவிக்காத இரண்டு மனம்!

அவரவருக்கான நியாயங்கள் அவரவருக்கு!

நிசப்தத்தின் பெரிய இரைச்சலை காற்றில் மிதந்து வந்த சிதார் இசை முடிவுக்கு கொண்டு வந்தது!



கார்த்திகேயனுக்கு மிகவும் பிடித்தது இந்த வீடு! தனிமை மிக அவசியமாக தேவைப்படும் போது இங்கு வந்து விடுவான்! அதை விட பிடித்தது அந்த தனிமையில் சிதாரை வழிய விடுவது! அந்த கஜல் இசையில் மனம் லயித்து ஒரு விதமான மோன நிலையில் அமர்ந்து இருப்பது அவனுக்கு மிகவும் பிடித்தது! அந்த தியான நிலையில் எடுக்கும் முடிவுகள் கொஞ்சம் கூட பிசகாமல் அவனுக்கு வெற்றியை அள்ளி தந்து இருக்கின்றன! ஆனால் இன்றோ இருவருக்கும் இடையில் இருந்த மௌனத்தின் வெம்மை தாங்காமல் இசையை வழியவிட்டு சிகரெட்டை எடுத்தான்! அவளுக்கு மாடியறையை காட்டி விட்டு கீழே ஹாலில் அமர்ந்து கண்களை மூடினான்! அவள் அரவிந்தனோடு பேசி சிரித்தது கண் முன் வந்து கடுப்பேற்றியது... தேவையான நேரத்தில் விட்டு விட்டு ஓடிய கோழையின் முகத்தை பார்க்கவே பிடிக்காதபோது அவனிடம் என்ன அப்படி ஒரு சிரிப்பு?

மௌனமாகவே மாடிக்கு சென்ற திவ்யா குளித்து முடித்து நைட்டியை மாற்றி கொண்டு அங்கிருந்த சோபாவில் அமர்ந்து கண்களை மூடினாள்! மனதுக்குள் இருந்த எக்கச்சக்க கோபம்! காலையில் இருந்து அலைந்த அயர்ச்சி! பிறந்த வீட்டை பிரிந்து வந்த சோகம்! ஆற்றாமை, துயரம், வேதனை எல்லாமுமாக அவளை அலைகழிக்க மனதின் கூச்சல் தாங்காமல் தள்ளாடினாள்!

கதவு திறக்கும் ஓசை! கண்களை திறவாமலே அமர்ந்து இருந்தாள்! அமர்ந்து இருந்தவளை பார்த்த போது அள்ளி அணைக்கத் துடித்த கரத்தை அடக்கி வைத்தான்! ஒரு புறம் தயங்க... மறுபுறம் மயங்க... அவளுடனான அந்த நிமிடங்களின் நினைவு வந்து அவனது மோகத்தை கொழுந்து விட்டு எரிய செய்ய அந்த தீயை அணைக்க வழி தெரியாமல் போராடினான்! விசித்திரமானது இந்த போராட்டம்... அவனுக்கும் அவனுக்குமான போராட்டம்! முடிவில் மோகம் வெல்ல,

"திவி...." தோளில் கை வைத்தான்!

கண்களை திறந்தபோது அதில் இருந்தது என்ன? கண்டிப்பாக காதல் கிடையாது... பழி உணர்ச்சியா? கொடும் பகை உணர்ச்சியா? வெறுமையான கண்களில் தென்பட்ட சீற்றம் கார்த்திகேயனை பாதிக்க வில்லை? இதையெல்லாம் எதிர்பாராமல் இல்லையே!

"இப்போ என்ன பண்ணனும்?... அன்னைக்கு லைசென்ஸ் வாங்காம செய்தத இப்போ லைசென்ஸ் வாங்கிட்டு செய்ய போறியா? உன்னால அவ்வளவு தான முடியும்... வா வந்து வெறிய தீர்த்துக்கோ..." தீயாக வந்து விழுந்தன வார்த்தைகள்! உனது காதலை மட்டுமே கேட்க வந்தேன் திவ்யா என்றது அவன் மனம்! மோகத்தை வடிய வைக்க மோகம் தேவையில்லை என்று கார்த்திகேயன் உணர்ந்த கணங்கள் அவை! பொங்கும் பாலில் விட்ட நீர் போல அவனது உணர்வுகள் மரித்தன!



"ச்சீ... என்ன பேசற திவ்யா நீ?"

"ஓ... இதெல்லாம் உன்னை பொறுத்தவரை குடும்பப் பெண்கள் பேசற வார்த்தைகள் இல்லை.... இல்லையா? நான் தான் உன்னை பொறுத்தவரை குடும்ப பெண்ணே இல்லையே...." எள்ளினாள் திவ்யா!

"திவ்யா... திஸ் இஸ் த லிமிட்... அளந்து பேசு!"

"சார்.... எதுல சார் அளக்கறது? கிலோ கணக்கிலா இல்ல கிராம் கணக்கிலா? அதையும் சொல்லிடுங்க...."

"வேணாம் திவ்யா... என்னோட கோபத்தை கிளராதே...."

"அப்படி கிளறினா என்ன பண்ணுவ? மறுபடி ரேப் பண்ணுவியா? ஓ.... இப்போ பண்ணா அதுக்கு பேர் ரேப் இல்ல.... புனிதமான தாம்பத்தியம்.... இல்லையா? நல்லா குடுத்து வச்சு இருக்கீங்கடா பேர.... ஷிட்...." கண் மண் தெரியாத கோபம் அவளை கொதிக்க வைத்து கொண்டிருந்தது! அதே கோபத்தில் கார்த்திகேயனும்,

"ஏய்... என்னடி விட்டா பேசிட்டே போற? உனக்கு தான் பேச தெரியுமா? ரேப் ரேப்னு சொல்றியே... உன்னை அப்படியே தத்தளிக்க விட்டுட்டா போயிட்டேன்? ஊர்ல அவனவன் தெருவுக்கு நாலு வைப்பாட்டி வெச்சு இருக்கான்... நான் தொட்டவளையே கட்டினேன் பாரு... இதுவும் பேசுவ இன்னமும் பேசுவ!"

"ஓ.... அது உங்களோட பெருந்தன்மை இல்லையாங்க மகாராஜா... ச்சே ச்சே... உங்க பெரிய மனசு யாருக்கு வரும்? ஒரு நாள் நீ செய்ததுக்கு பேர் கற்பழிப்புன்னா.... தாலின்னு ஒன்ன கட்டி... நீ தினம் தினம் செய்ய நினைக்கறதுக்கு பேரும் கற்பழிப்பு தான்... ச்சே கேவலமா இருக்கு... அருவருப்பா இருக்கு..."

"எது அருவருப்பா இருக்கு?" அவனது கண்கள் இடுங்கின!

"உன் பக்கத்துல நிற்கிறதே அருவருப்பா இருக்கு... ஆயிரம் புழு என் மேல ஊருற மாதிரி இருக்கு... உன் முகத்தை பார்க்கவே எனக்கு பிடிக்கல...." கோபத்தில் வார்த்தைகள் அதிகமாக,

"அப்படீன்னா யார பிடிச்சு இருக்கு? அந்த அரவிந்தா?" கூர்மையாக வந்து விழுந்தன வார்த்தைகள்!

"ஏன்.... உன்னோட கம்பேர் பண்ணா அவன் எவ்வளவோ மேல்... அன்னைக்கு என்ன சொன்ன? விருப்பமில்லாத பொண்டாட்டிய கூட தொடக் கூடாதா? பேஷ்... என்னம்மா சீன் போட்டு இருக்க? நான் தான் அதை எல்லாம் நம்பிட்டு... ச்சே..." அவனை நோக்கி அப்போது சரிந்த தனது மனதை நினைத்து வேதனை பட்டாள்!

"ப்ச்.... எனக்கு சீன் போட வேண்டிய அவசியம் இல்ல திவ்யா... அதுதான் என்னோட கொள்கை...



நான் தவறிப் போனதெல்லாம் உன்கிட்ட மட்டும் தான்..." உணர்ந்தே கூற

"இது மாதிரி எத்தனை பேர்கிட்ட சொன்ன? அவங்களையெல்லாம் கவிழ்த்த மாதிரி என்னையும் கவிழ்க்க திட்டம் போட்டியா? அப்புறம் ஏன்டா கல்யாணம் வேற பண்ணிகிட்ட? ஓ... அப்போதானே நீ செய்யற தப்பெல்லாம் வெளிய வராது... ஒவ்வொருத் தரையும் ஒவ்வொரு மாதிரி வாயை அடைக்க கத்து வெச்சு இருக்க கார்த்திக்..." கூரிய வாளாக குத்தி கிழித்தன அவளது வார்த்தைகள்!

"நான் யாரையும் கவிழ்த்தது இல்ல.... ஏன்.... உனக்கு மட்டும் தான் கற்பு போச்சோ? அத்தனை நாள் நான் கொண்ட கொள்கையும் போனது அன்றைக்கு தான்டி.... கல்யாணத்துக்கு முன்னாடி லவ் பண்றதே தப்புன்னு நினைச்ச கேனயன் நான்.... அந்த அர்விந்த் கூப்பிடுவான்... சூப்பர் பிகர் ஒண்ணு வந்திருக்கு... வான்னு... அப்போல்லாம் கொள்கை மண்ணாங் கட்டின்னு பேசினேன் பாரு... எனக்கு இதெல்லாம் ரொம்ப தேவைதான்! அப்புறம் என்ன? உன் வாயை அடைச்சு வைக்க உன்னை கல்யாணம் பண்ணினேனா... ரப்பிஷ்... உன்னை தொட்டுட்ட ஒரே ரீசன்தான் இந்த கல்யாணம்... வேற ஒண்ணுமில்ல... ஆனா இந்த கல்யாணத்தை உடைச்சுட்டு வெளிய போய்டலாம்ன்னு மட்டும் கனவு காணாதே... எனக்கு என்னோட பெயர் ரொம்ப முக்கியம்... ஸ்டேடஸ் ரொம்ப ரொம்ப

முக்கியம்... நீ இனிமே மிசஸ் கார்த்திகேயன்! அவ்வளவுதான்... அதுக்கு மேல உன் கிட்ட எனக்கு எதுவும் தேவை இல்லை... ஆனா இதெல்லாம் வெளிய தெரிஞ்சுது... நான் மனுஷனா இருக்கமாட்டேன்...."

மனதில் இருந்த காதலை எல்லாம் மறைத்து கோபம் மிகுந்தது வார்த்தைகளை கொட்டிவிட்டு கதவை அறைந்து மூடி சென்றான்! வேதனை மிகுந்து இருந்தது அவனது மனதில்.... உயிருக்கு உயிராக காதலித்த தன் காதலியிடம் சொல்லக் கூடிய வார்த்தைகளா இவை. காதலை கேட்ட பாவத்திற்கு எத்தனை வார்த்தைகளை கொட்டிவிட்டாள்? காதலை கூறாமல் திருமணத்தை நடத்த செய்த குற்றமா? வாழ்க்கையை நினைத்து மனம் வலிக்க வெண்ணிலவை வெறித்தான்!

அதுவரை அவனை வார்த்தைகளால் குத்தி கிழித்த திவ்யா தளர்ந்து சரிந்தாள்!

**வாலிபங்கள் ஓடும் வயதாகக்கூடும்**
**ஆனாலும் அன்பு மாறாதது**
**மாலையிடும் சொந்தம் முடிப்போட்ட பந்தம்**
**பிரிவென்னும் சொல்லே அறியாதது**
**அழகான மனைவி அன்பான துணைவி**
**அமைந்தாலே பேரின்பமே**
**மடிமீது துயில சரசங்கள் பயில**
**மோகங்கள் ஆரம்பமே**



**நல்ல மனையாளின் நேசம் ஒரு கோடி**
**நெஞ்சமெனும் வீணை பாடுமே தோடி**
**சந்தோஷ சாம்ராஜ்யமே....**



## 16

பறவைகளின் கீச் கீச் சப்தம் காதில் விழும் போதே இது என்ன இடம் என்ற கேள்வியோடு எழுந்தாள் திவ்யா! சுகமாக படுக்கையில் படுத்து கொண்டிருப்பதை சட்டென்று உணர்ந்தவளுக்கு தனக்கு திருமணமாகி கணவனோடு அவனது வீட்டில் இருப்பது உரைத்தது! முன் தினம் இரவு நடந்ததெல்லாம் நினைவுக்கு வர, தான் எங்கனம் படுக்கைக்கு வந்தோம் என்பது புரிபடவில்லை! சோபாவில் தானே அமர்ந்தவாறே உறங்கினோம் என்று நினைத்து கொண்டே அறையை சுற்றி பார்த்தாள்! பெரிய அறை இரண்டாக தடுக்கப்பட்டிருக்க சுற்றி சுற்றி பார்த்தவளுக்கு அறையில் கார்த்திகேயன் இல்லை என்பது தெளிவாகியது! எங்கே சென்றிருப்பான்? அவன் எங்கே சென்றால் உனக்கென்ன என்று அவளது மூளை வசை பாட, மெல்ல எழுந்து ஜன்னலருகே வந்து சற்று தூரத்தில் தெரிந்த கடலை வேடிக்கை பார்க்க

ஆரம்பித்தாள்! அலைகள் ஒன்றை ஒன்று துரத்தி கொண்டு ஓடியது!

மனிதர்களும் இப்படித்தானே... ஒன்றை ஒன்று துரத்துதலும் ஒன்றுக்காக ஒன்று துரத்துதலும் தானே வாழ்க்கை! ஆனால் மனிதனின் தேடல்களும் துரத்தல்களும் முடிவு பெற்றதாக சரித்திரமும் இல்லை பூகோளமும் இல்லையே! ஆனால் இந்த தேடல் பெரும்பான்மையான நேரங்களில் நல்லதாகவே முடிந்து இருக்கிறது! தேடுதல் இல்லாமல் மனித குலத்திற்கு எதுவுமே கிடைத்து இருக்காது... குரங்கு மனிதனானதும் ஒரு தேடலின் விளைவுதானே! கற்களுக்கு இடையே இருந்த நெருப்பை தேடிய மனிதக் குரங்கு மனிதனானது! இது உடல் ரீதியான பரிணாம வளர்ச்சி என்பதை விட அறிவு ரீதியான பரிணாம வளர்ச்சி என்றும் எடுத்துக் கொள்ளலாம்! அப்படியென்றால் அறிவை துரத்திக்கொண்டு இப்போது ஓடுகிற மனிதன் மேலும் இன்னொரு நிலைக்கும் போவானோ?

மனதில் ஏதேதோ எண்ணம் தோன்ற அவற்றை யெல்லாம் கடிவாளமிட்டு அடக்கி வெளியே வந்தாள்! இருளில் பார்த்தபோது வசீகரிக்காத வீடு.... இப்போது அதிகாலையில் அழகாக இருந்தது! அப்போது கோபம் அதிகமாக இருந்த காரணமாக இருந்திருக்கும்... இப்போது மனதிலிருந்ததை கொட்டிய திருப்தி! காலை கடன்களை முடித்துக் கொண்டு வெளியே வந்தவள்...



மாடிக்கு வழி இருக்க... சென்று தான் பார்ப்போமே என்று ஏறினாள்!

சிலுசிலுவென்ற காற்று.... இதமான தென்னந் தோப்பின் வாசம்.... பறவைகளின் சப்தம் என அந்த இடமே ரம்யமாகத்தான் இருந்தது! சோகத்தில் இருந்த அவளின் மனம் கூட லேசானது! குருவி, கூட்டில் இருந்த அதன் குஞ்சுகளுக்கு உணவு தேட அவைகளிடம் விடைபெற்று போக குருவி குஞ்சுகள் தங்களுக்குள் கீச் கீச் என்று கத்தி கொண்டிருந்தன! திவ்யாவுக்கு அவை என்ன பேசுகின்றன என்பது புரியவில்லை என்றாலும் அந்த காட்சி மனதை லேசாக்க.... ரசித்து பார்த்து கொண்டிருந்தாள்! சட்டென்று அரவம் கேட்க திரும்பி பார்த்தவள் ஒரு கணம் அதிர்ந்தாள்! அந்த பெரிய மொட்டை மாடியின் ஒரு பகுதியில் கார்த்திகேயன் ஆசன பயிற்சிகளை முடித்து ப்ராமரியை ஆரம்பித்து இருந்தான்! அந்த ஓம்காரம் காற்றில் கலந்து வந்து அவளையும் அதிர வைத்தது!

ஆனால் அவளை அதிர வைத்தது வெறுமனே ஷார்ட்ஸ் பனியன் அணிந்து அவன் யோக பயிற்சியை செய்ததுதான்! அவளால் நிமிர்ந்தே பார்க்க இயலாமல் கண்களை தாழ்த்தி கொண்டு சட்டென்று கீழே போக எத்தனிக்க, அவளது அரவம் கேட்டு விழித்த கார்த்திகேயன் அவளை இருக்குமாறு சைகை செய்துவிட்டு விரைந்து முடித்து முகத்தை தேய்த்து கொண்டே எழுந்தான்!

"ஹாய் பொண்டாட்டி... குட்மார்னிங்!"

பழைய குறும்பு கண்களின் குறுகுறுப்பான சிரிப்போடு மீண்டிருக்க, அதை கேட்கும் போதே அவளுக்கு கோபம் பற்றி கொண்டு வந்தது! நேற்றுத் தான் அந்த அளவு சண்டை போட்டுவிட்டு அவனுமே வார்த்தைகளை கொட்டி விட்டு சென்றிருக்க, எப்படி மறுபடியும் இது போல பேச அவனால் முடிகிறது? முறைத்து கொண்டே கீழே போக முயல,

"இருடா.... கொஞ்ச நேரம்....." என்று அவளது கையை பிடித்து இழுத்தான்! அவளது பார்வை அந்த கையை நோக்கி போனது!

"கொஞ்சம் கையை விடறீங்களா மிஸ்டர் கார்த்திகேயன்...."

"இந்த கையை விட்டுட மாட்டேன்னு சொல்லித் தான் தாலி கட்டினேன் மிசஸ் கார்த்திகேயன்...." குரலில் குறும்பு தெறித்தது!

"டோன்ட் கால் மீ மிசஸ் கார்த்திகேயன்... ஐம் மிஸ் திவ்யா...." கறாராக வந்து விழுந்தன வார்த்தைகள்!

"மிஸ்ஸ நீ மிஸ் பண்ணி ரொம்ப நாளாச்சே... மிசஸ் கார்த்திகேயன்....." கண்களை சிமிட்டி அவன் கூறியதை பார்க்கும் போது வயிற்றில் பூச்சி பறந்தது! கையை உதறி முறைப்பான பார்வையை அவன் மேல் பாயவிட்டு கழுத்தை நொடித்து திருப்பி கீழே சென்றாள்!



காபி கலந்து கொடுக்க யாருமில்லாததால் தானே பிரிட்ஜில் இருந்த பாலை எடுத்து காய்ச்சி காபி கலந்து கொண்டு வந்து உட்கார,

"ஹை காபி... தேங்க்ஸ் குட்டி..." வெகு சாதாரணமாக அவளது காபியை பிடுங்கி குடிக்க ஆரம்பித்தான்! திவ்யா கோபமாக

"அது என் காபி...." கடுப்பாக,

"ம்ம்ம்.... அப்படியா... சரி குடிச்சுக்கோ...." என்று குறும்பாக கண்களை சிமிட்டி கொண்டே அவன் குடித்ததை அவளிடம் தர,

"ச்சே....." என்று கடுப்படித்து விட்டு மீண்டும் சமையலறைக்கு சென்றாள்! இன்னொரு காபி கலக்குவதற்கு! அவள் பின்னால் சமையலறைக்கு சென்றவன் வாகாக மேடையில் அமர்ந்து கொண்டு அவளை பார்த்தவாறே காபியை சுவைக்க ஆரம்பித்தான்! அதை பார்த்தவளுக்கோ கோபம் பற்றி கொண்டு வந்தது!

"ச்சே.... உனக்கு வெட்கமே இல்லையா? நேற்று அவ்வளவு பேசின....." கடுப்பாக கூற

"ஏன் நீ பேசாமதான் நான் பேசினேனா திவி? ஏதோ சின்ன பொண்ணு கோபத்துல பேசினன்னு என்னை நானே சமாதானப்படுத்திகிட்டு இருந்தா.... ரொம்ப துள்ளறடி...." சிரித்தவாறே கூற,

"நான் தான் ரொம்ப துள்ளற ஆள்ன்னு தெரியுமில்ல... அப்புறம் ஏன் கட்டி தொலைச்ச...." வெறுப்பாகவே கேட்டாள்!

"என்ன பண்றது விதி...." என்று நக்கலாக பதில் வர நிமிர்ந்து பார்த்தவளின் கண்களில் இருந்தது என்ன? அவனால் சரியாக வரையறுக்க முடியாத அந்த உணர்வு? மௌனமாக அவள் காபியை கலக்க,

"எந்த கடையில நீ அரிசி வாங்குற...." சிரித்துக் கொண்டே பாட அவன் தான் படுக்கையில் படுக்க வைத்தான் என்பது புரிந்தது! கையில் வைத்திருந்த பாத்திரத்தை நங்கென்று மேடையில் வைத்தாள்! அதையும் பார்த்து சிரித்தவன்,

"ஓகே ஓகே திவி.... இப்போ வீட்டுக்கு போலாமா? இல்ல இங்க இருக்கலாமா?"

"போலாம்...." எங்கோ பார்த்தபடி பதில் வர.... தோளை குலுக்கியபடி,

"ஓகே ரெடி ஆகிடு..." என்று கூறிவிட்டு அறைக்கு சென்றான்! இங்கே இருவரும் திரும்பி நின்று முறைப்பதை விடவும் வீட்டில் இருந்தாலாவது மற்றவர்களிடம் பேசி கொண்டாவது இருக்கலாம் என்ற எண்ணத்தில்! எதிர்காலத்தை நினைத்து சலிப்பாக இருந்தது கார்த்திகேயனுக்கு... எப்படி இவளை தன் வழிக்கு கொண்டு வருவதென்று!

✤ ✤ ✤



"மறுபடி பார்ட்னர்ஷிப் கன்டினியு பன்றத பற்றி எனக்கு ஒன்னும் ஆட்சேபணை இல்லை அங்கிள்... ஆனா வியாபாரம்னா நல்லதும் இருக்கும் அப்போ அப்போ இந்த மாதிரி கஷ்டமும் வரும்... நல்லா இருக்கும் போது மட்டும் தான் கூட இருப்பேன்... கஷ்டம் வந்தா கழண்டுக்குவேன்னு சொல்றது தப்பு இல்லையா.... அந்த நேரத்துல அர்விந்த் உதவி செய்யாதத விட விட்டுட்டு ஓடினவன எப்படி இனிமே நம்ப சொல்றீங்க? முடிஞ்சது முடிஞ்சதாவே இருக்கட்டும் அங்கிள்... இனிமே சேரவேண்டாம்... கணக்கை முடிச்சுக்கலாம்...." கறாராக கூறியவனை பரிதாபமான பார்வையோடு எதிர்கொண்டார் மாசிலாமணி! எப்படியாவது அரவிந்தனை சுஷ்ருதாவில் மறுபடி இணைத்தே ஆக வேண்டும் என்ற எண்ணத்தோடு!

"கார்த்தி.... நீ இப்படி சொல்லகூடாதுப்பா.... நீ இருக்குற தைர்யத்துல தான் இந்த உதவாக்கரைய பற்றின பயம் இல்லாம இருந்தேன்... நிஜமா இப்படி செய்வான்னு நினைக்கவே இல்ல... எனக்காக கொஞ்சம் பாரு கண்ணா...."

பெரியவர் தன்னால் இயன்றவரை கார்த்தியிடம் கெஞ்சி கொண்டிருக்க அரவிந்தனின் பார்வை முழுக்க திவ்யாவின் மேல் மட்டுமே படிந்து இருந்தது! அவள் குளிர்பானம் கொண்டு வந்து கொடுத்த போதும் அவர்கள் இருந்த ஹாலை தாண்டி சென்ற போதும்

அவளையே தொடர்ந்து கொண்டிருந்தது! இதை கவனித்த கார்த்தியின் முகம் எள்ளும் கொள்ளும் வெடிக்க அதை உணராத மாசிலாமணி எப்படியாவது கார்த்தியை சமாதானபடுத்த முயன்றார்!

"ம்ம்ம்... பார்க்கலாம் அங்கிள்... மறுபடி பார்ட்னர்ஷிப் தொடரனும்னா அது அரவிந்தோட பிஹேவியர் பொறுத்துதான்..." என்றவன் முடித்து இருவரையும் அனுப்பவே முயன்றான்!

மாசிலாமணியை பொறுத்தவரை நட்பை மதித்தவர்! ரங்கராஜனுக்கு உண்மையாகவே இருந்தவர்! தன்னிடம் பெரிதாக வசதி இல்லாத போதும் தன்னை வொர்க்கிங் பார்ட்னராக சேர்த்து தனக்கு அந்தஸ்தை ஏற்படுத்தி கொடுத்த ரங்கராஜனின் மேல் அவருக்கு மிகுந்த மரியாதை இருந்தது! அதே மரியாதையை ரங்கராஜனுக்கு பிறகு தொழிலில் முழு மூச்சாக இறங்கிய கார்த்திக்குக்கும் கொடுத்தார்! அதை அரவிந்திடமும் எதிர்பார்த்ததில் தவறில்லையே! அந்த எதிரொலி அவனிடம் கிடைக்காததில் மனவருத்தம் இருந்தாலும் பெற்ற பிள்ளையை அப்படியே விட்டுவிடவும் முடியாதே!

கார்த்தி கூற கேட்டுக் கொண்டிருந்த அரவிந்தனுக்கு மனம் எரிந்தது! இவ்வளவு அனாயசமாக பிரச்சனையை முடிப்பான் என்று எதிர்பார்க்காத அரவிந்தன் அவசரப்பட்டு முடிவை எடுத்துவிட்டு இப்போது பொன் முட்டையிடும்



வாத்தான சுஷ்ருதாவை விட்டுவிடவும் முடியாமல் அதே சமயத்தில் கார்த்தியின் ஆதிக்கத்தையும் ஏற்க முடியாமல் மனம் குமுறி கொண்டிருந்தவன் கோடை மழையாக திவ்யாவை கண்டான்! மனதில் ஒரு மின்னல்!

"கார்த்திக்.... உனக்கு ஆப்பு வைக்கிறேன்டா..." கறுவிகொண்டவன் மெதுவாக நழுவினான்!

"ஹாய் திவ்யா...." தோட்டத்தில் பூ பறித்து கொண்டிருந்த திவ்யா முன் சென்று நின்றான் முகமெல்லாம் புன்னகையாக,

"ஹாய் அரவிந்த்...." அதே புன்னகையை அவளிடமும் கண்ட அரவிந்த் கள்ளுண்ட மந்தியாக அடுத்து என்ன பேசுவது என்றே புரியாமல் விழித்து கொண்டிருந்த போது திவ்யாவே ஆரம்பித்தாள்!

"அரவிந்த்.... ஆரோவில் எங்க இருக்கு....?" ஆர்வமாக கேட்க

"ஏன் திவ்யா.... கார்த்தி அழைச்சுட்டு போகவில்லையா?" இருவரையும் உளவறியும் எண்ணத்தோடு!

"ம்ம்ம்... அவருக்கு டைம் இல்லையாம்...." குரலில் வருத்தத்தோடு கூறியவளை பார்த்தபோது அரவிந்துக்கு அவனது வேலை மிக சுலபமாகவே முடியும் என்று தோன்றியது! திருமணமான ஒரு மாதத்தில் ஒரு நாள் கூடவா கிடைக்கவில்லை? அப்படியென்றால் இவர்களது திருமண வாழ்க்கையின்

லட்சணத்தை புரிந்து கொள்ள வேண்டாமா? அரவிந்தா... இது மிக நல்ல சந்தர்ப்பம்! இந்த அடி மரண அடியாகத்தான் விழ வேண்டும் கார்த்திகேயனுக்கு! விட்டு விடாதே... பற்றி கொள்! எச்சரித்தது மனம்! கார்த்திகேயன் என்கிற யானையை பிடிக்க திவ்யாவுக்கு குழி வெட்ட ஆரம்பித்தான்! அந்த குழியில் கார்த்திகேயன் அகப்படுவானா?

"திவ்யா... நான் எப்பவுமே ஆஸ்ரமம் போவேன்... அம்மாவுக்கு ரொம்ப இஷ்டமாம்... குருஜியை வேண்டித் தான் நான் பிறந்தேன்னு அப்பா சொல்லுவாங்க... வேணும்னா நீயும் வா...." ஒன்றும் அறியாதவன் போலவே கூற,

"ஹய்.... அப்படியா? நான் அத்தம்மா கிட்ட சொல்லிட்டு வரேன்... எப்போ கூட்டிட்டு போறீங்க?" ஆர்வமாக கண்களில் மின்னல் மின்ன கேட்டபோது அவளின் குழந்தை தனத்தை நினைத்து ஒரு பக்கம் பரிதாபமாக இருந்தாலும் இன்னொரு பக்கம் கார்த்திக்கை நினைக்கும் போது அவனுக்கு இந்த தண்டனை தேவைதான் என்று அரவிந்துக்கு தோன்றியது!

"சரி திவ்யா இப்பவே கூட கூட்டிட்டு போறேன்... ஆனா நான் ஒன்று கேட்கட்டா?" மிக சாதாரணமாகவே கேட்டான் அரவிந்த்!

"கேளுங்க அரவிந்த்...." ஹாலில் இருந்து முறைத்து பார்த்து கொண்டிருந்த கார்த்திக்கை கண்ட



போது மனம் துள்ளியது! ஒரு மாதத்தில் அவனை எந்த அளவு வெறுப்பேற்ற முடியுமோ அவ்வளவு வெறுப்பேற்றி கொண்டுதான் இருந்தாள்... சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம்!

"கார்த்திக் உன்னை நல்லா பார்த்துக்கறாப் பலையா? இல்ல... உன்னை பார்த்தா என்னமோ மிஸ் ஆகற மாதிரி தெரியுதே திவ்யா... என்னோட அவசர புத்தி அப்போ...." என்று கூறி கொண்டிருக்கும் போதே இடையிட்டது கடினமான குரல்!

"பார்த்துக்கலைன்னா என்ன பண்ணறதா உத்தேசம் அரவிந்த்?" கார்த்திகேயனேதான்! வெலவெலத்தது அரவிந்துக்கு!

"இல்ல கார்த்திக்.... ஒண்ணுமில்ல... அது வந்து சும்மா...." குரலில் நாட்டியம் ஆடினான் அரவிந்த்!

"எப்படி பார்த்துக்க போறன்னு சொல்லு அரவிந்த்... தெரிஞ்சுக்கறேன்..." கார்த்திகேயனின் குரலில் இருந்த கடினத்தன்மை அரவிந்தை ஒரு வழி செய்து இருந்தது!

"இல்ல கார்த்தி... நான் அந்த மாதிரி சொல்லல..."

"வேற எந்த மாதிரி சொன்ன?....." அவனின் இந்த நிதானமான கேள்வி அரவிந்தின் வயிற்றில் அமிலத்தை கரைத்தது!

"அதெல்லாம் ஒண்ணுமில்ல கார்த்தி... சும்மா சிஸ்டர் கிட்ட பேசிட்டு இருந்தேன்..." திக்கி திணறினான்!

"உன் சிஸ்டர் கிட்ட பேசணும்னா ஹால்ல வெச்சு பேசு.... இனிமே இந்த மாதிரி பார்த்தேன்... முழுசா நீ வீடு போய் சேர மாட்ட....." அவள் உனது தங்கை என்பதை அழுத்தந்திருத்தமாக தலையில் அடித்து புரிய வைத்து அடிக்குரலில் சன்னமாக உறுமியவனிடம் இருந்து தப்பினால் போதும் என்று ஓட்டம் பிடித்தான் அர்விந்த்! இவையெல்லாம் அறியாமல் ஹாலில் அமர்ந்து இருந்த மாசிலாமணி கார்த்திகேயனிடமும் மங்கையிடமும் விடைபெற்று கொண்டு சென்றார்! கார்த்திகேயனின் கவனம் திவ்யா பக்கம் திரும்பியது!

"அவன் கூட உனக்கு என்ன பேச்சு வேண்டி கிடக்குது?" சமையலறையில் மங்கை வேலையாட்களுக்கு இரவு உணவுக்கான பட்டியலை கூறி கொண்டு அந்த வேளையில் ஆழ்ந்து இருக்க ஹாலில் கார்த்திகேயன் திவ்யாவிடம் கொதித்து கொண்டிருந்தான்!

"அவர்கூட பேச எனக்கு ஆயிரம் இருக்கும்.... இதில் உனக்கென்ன...." முகத்தில் அறைந்தாற் போல அவள் கூறியது இன்னமும் கோபத்தை கிளறி விட்டது!

"ச்சே... கட்டின புருஷன் கிட்ட இப்படி சொல்றியே உனக்கு வெட்கமா இல்ல...."

"ஒரு சில வேலைய செய்ய நீ வெட்கபடாதப்ப நான் எதுக்கு வெட்கப்படணும்?"

"திவ்யா.... என் கோபத்தை கிளருற.... அது உனக்கு நல்லதில்ல....." கோபம் எல்லையை கடந்து கொண்டிருந்தது!



"அதை பற்றி எனக்கு கவலை இல்லை... ஐ டோன்ட் கேர்...." அலட்சியமாக வந்த பதிலில் சுத்தமாக தன்னிலை இழந்து இருந்தான் கார்த்திகேயன்!

"அப்படீன்னா அப்படித்தான் அவன் கிட்ட பழகுவேன்னு சொல்ற...." முறைப்பை தாண்டிய கடுப்பில் வந்து விழுந்தன வார்த்தைகள்!

"எக்ஸாக்ட்லி...." எதையும் கண்டு கொள்ளாத அலட்சியம்!

"இதுக்கு என்ன அர்த்தம்....." நிதானத்துக்கு வந்தது கோபம்!

"உனக்கு சொல்ல வேண்டிய அவசியம் இல்லைன்னு அர்த்தம்.... என்னோட விஷயத்துல நான் தான் டெசிஷன் எடுப்பேன்னு அர்த்தம்..... அவசியமில்லாம மூக்கை நுழைக்காதன்னு அர்த்தம்.... புரியுதா...." கொஞ்சமும் தயக்கமில்லாமல் திவ்யா கூறியபோது உள்ளுக்குள் சில்லுசில்லாக உடைந்து கொண்டிருந்தான்! எத்தனையோ பேர் அவன் முன் கை கட்டி நின்று அவன் வார்த்தைகளை எதிர்பார்க்க அவனது மனைவி கூறிய வார்த்தைகளை கேட்டு வாயடைத்து போனான்!

"மொத்தத்துல என்ன சொல்ல வர?" இறுகிய முகத்தோடு!

"என்னை கேள்வி கேட்கற உரிமை உனக்கு இல்லைன்னு அர்த்தம்..." என்று சொல்லி கொண்டி

ருக்கும் போதே காது ஞொய் என்றது! சுற்றியடித்து பக்கத்தில் இருந்த சோபாவில் விழுந்து இருந்தாள்! அப்போதுதான் அவளுக்கும் உரைத்தது... அடித்திருந்தான்! கன்னத்தில் வைத்த கையை எடுக்காமல் அடித்து வைத்த சிலையாக அமர்ந்து இருந்தாள் திவ்யா! சத்தம் கேட்டு வெளியே அவசரமாக வந்த மங்கை பதறினார்!

"திவ்யா.... என்னடா ஆச்சு?" மங்கை பதறி திவ்யாவின் கையை பற்ற.... கோபம் குறையாத கார்த்திகேயன,

"என்னை பற்றி உனக்கு தெரியாது திவ்யா.... நான் பொறுமையா இருக்கறதுனால என்னை மடையன்னு நினைச்சுடாத... என் பொறுமை எல்லை மீறினா என்ன பண்ணுவேன்னு எனக்கே தெரியாது! நீ மிசஸ் கார்த்திகேயன்... அந்த பெயரை கெடுக்க நினைச்சா என்னை மிருகமாத்தான் பார்ப்ப.... மைண்ட் இட்....." கோபத்தில் வெடிக்க, மங்கைக்கோ தலைவால் புரியாத அந்த பேச்சை.... அந்த நேரத்தில்.... அவனை மறுத்து கூறவே பயமாக இருந்தது! மகனின் இந்த கோபங்களை பார்த்தவர்தானே! சீண்டி விடும் வரை அவனை போல நல்லவனும் இல்லை.... ஆனால் சீண்டி விட்டாலோ அவனை போல ஒரு மூர்க்கனும் இல்லை என்பது அவர் அறிந்தது தானே! திருமணமாகி வந்த ஒரு மாதத்தில் இந்த பெண் இந்த முகத்தை பார்க்க வேண்டுமா என்று மனம் வருந்தினார்!



"தம்பி.... விடுப்பா.... சின்ன பொண்ணு.... போக போக சரியாகிடும்... நீ போ நான் பார்த்துக்கறேன்..." எப்படியாவது கார்த்திக்கை சமாதானப்படுத்தி அனுப்பி வைத்தால் போதுமென்றாகிவிட்டது மங்கைக்கு! கையில் இருந்த ரிமோட்டை தூக்கி எறிந்தவன் அவளை திரும்பியும் பார்க்காமல் வெளியே சென்று காரை எடுத்தான்! எறிந்த ரிமோட் சுக்கல் சுக்கலானது! கோபம் மொத்தத்தையும் அந்த பிஎம்டபிள்யு மேல் காட்ட, கடற்கரை சாலையில் பறந்தது அந்த வாகனம்!

கன்னத்தில் வைத்த கையை எடுக்காமல் சோபாவில் அமர்ந்தவாறே விட்டத்தை வெறித்து பார்த்து கொண்டிருந்தாள் திவ்யா! கண்களில் கண்ணீர் குளம்.... அருவியென இறங்கவா ஓடையென பாயவா என்று அனுமதி வேண்டி நின்று கொண்டிருந்தது!

"கண்ணா.... அவன் கொஞ்சம் முன்கோபிடா... கோபம் வந்தா கண் மண் தெரியாமத்தான் வரும்.... அதுக்காக கோபிச்சுக்காத தங்கம்.... கோபம் இருக்கற இடத்துல தான் கண்ணா குணம் இருக்கும்.... அழாதடா...." மருமகளை சமாதானப்படுத்த முயன்று கொண்டிருந்தார் மங்கை!

அவன் அடித்த அதிர்ச்சியில் இருந்து அவளால் வெளியே வர முடியவே இல்லை! கண்களை இருட்டி கொண்டு வந்தது...

"அத்தை... இப்போ அவர் மேல தப்பு இல்ல...." ஒரே வார்த்தையில் முடித்து விட்டு அறைக்கு தள்ளாடிய

படியே சென்ற தன் மருமகளை விசித்திரமாக பார்த்தார்! இதழோரத்தில் மென்புன்னகை மலர்ந்தது மங்கைக்கு!



## 17

**கா**ற்று தாலாட்டு பாட கார்த்திகேயன், கடற்கரையில் அவனுடைய இடத்தில் அமர்ந்து செல்பேசிக்கு காதை கொடுத்து இருந்தான்! அவனுக்கு இருந்த கோபத்திற்கு முன்பானால் மதுபானம் அவன் வயிற்றை நிரப்பியிருக்கும்... ஆனால் அந்த மாலை நேரத்து சம்பவத்திற்கு பிறகு பெரும்பாலும் மதுவை தொடுவதில்லை... பார்ட்டிகளின் போது கூட மதுவை வைத்திருப்பானே தவிர அருந்துவதை தவிர்த்தான்.... வானம் இடித்து கொண்டு தன் எதிர்ப்பை தெரிவித்து கொண்டிருந்தது! வாடை காற்று ஊதல் காற்றாகி மழைமகள் வருவாளோ என்ற ஊகத்தை எழுப்பியது! அவளை வரவேற்கதானோ இடியும் மின்னலும் போட்டி போட்டுக் கொண்டன?

"அண்ணா... நீ கூட இப்படி செய்வியா? என்னண்ணா கல்யாணமானவுடனே சாதாரண லோக்கல் மாதிரி இப்படி பிகேவ் பண்ணி இருக்கிற? நீ திவிய அடிச்சன்னு என்னால ஜீரணம் பண்ண முடியவே இல்லைண்ணா... அப்படியே உன்னோட பார்வைல அவ



தப்பே பண்ணி இருந்தாலும் நீ அடிக்க கூடாதுண்ணா... உன்னை நம்பி தான் அத்தையும் மாமாவும் அவங்க பொண்ணை அனுப்பி வெச்சு இருக்காங்க.... அப்படி இருக்கும் போது நீ இப்படி தான் ட்ரீட் பண்ணுவியா?" அமைதியை வேண்டி கடற்கரையில் அமர்ந்து கொண்டிருந்தவனை பிலுபிலுவென செல்பேசியில் பிடித்து உலுக்கி கொண்டிருந்தாள் வைஷ்ணவி! ஒரு வார்த்தை கூட பேசாமல் கேட்டு கொண்டிருந்த கார்த்திகேயனுக்கு கசப்பான புன்னகை மலர்ந்தது! அவளே தொடர்ந்தாள்,

"நீ அடிச்சப்போ கூட உன்னை விட்டு கொடுத்து பேசாத பொண்ணை நடத்தற விதம் இதுதானா கார்த்தி அண்ணா?" சிவகாசி பட்டாசாக பொறிந்த போது ஒன்றும் புரியவில்லை கார்த்திகேயனுக்கு!

"என்ன சொல்ல வர வைஷு குட்டி?"

"பின்ன என்னண்ணா? அம்மா அவளை சமாதானப்படுத்த உன்னை திட்டினா, இவ ரோஷமா உன் மேல தப்பு இல்லைன்னு உனக்கு வக்காலத்து வாங்குறாளாம்! எல்லாம் நம்ம நேரம்ன்னு அம்மா சிரிக்கறாங்க கார்த்தி அண்ணா.... அப்படிப்பட்ட பொண்ணை போய்... ச்சே என்னண்ணா நீ?" நொந்து போய் கூறிய வைஷு சொன்னதை நம்பவும் முடியவில்லை நம்பாமல் இருக்கவும் முடியவில்லை! வைஷு கூறுவது உண்மையாக இருக்குமா என்ற ஏக்கம் வந்த போதே வானில் பறப்பது போன்ற உணர்வு கார்த்திகேயனுக்கு!

என்னுடைய திவி என்ற இறுமாப்பு வந்தது! தான் நடந்து கொண்ட முறையினால் வந்த கோபம் தானே தவிர தன் மேல் வேறு பழி உணர்ச்சி திவிக்கு கிடையாதுதானே என்று தன் மனதை கேட்டு கொண்டிருந்தான்! மனதை மயிலிறகென வருடி சென்ற அந்த மென்மையான உணர்வில் உள்ளம் கரைந்து போனான்! அப்போதே அவளை பார்க்கும் ஆவல் மேலிட,

"ஓகே வைஷு, அப்புறம் பேசறேன்டா... கொஞ்சம் வேலை இருக்கு...." என்று பேசி முடித்து விட்டு வைத்த போது பரபரத்தது மனம்! செல்பேசியை துண்டித்து விட்டு சிறிது நேரம் யோசித்தவன், நிலா டிவி சேர்மன் சித்தார்த்தை அழைத்தான்!

"ஹாய் சித்தார்த் சார்.... எப்படி இருக்கீங்க?" உற்சாகத்தோடு பேசியவனை வியப்போடு எதிர் கொண்டார் சித்தார்த்!

"நல்லா இருக்கேன் கார்த்தி சார்.... அதிசயம் தான்... இந்த நேரத்துல நீங்க?" குரலில் வியப்போடு பேச, வாய் விட்டு சிரித்தான் கார்த்திகேயன்!

"ஏன் சார்... நாங்க இந்த நேரத்துல பேசக்கூடாதா?" என்று சிரித்து கொண்டே கேட்க சித்தார்த்துக்கு வியப்பே மேலிட்டது!

"தாராளமா..... விஷயம் இல்லாமையா நீங்க பேசுவீங்க? அதான் என்னன்னு யோசிக்கறேன்...."

"ம்ம்ம்... ஆமா சித்தார்த் சார்... போன மாதம் நீங்க ஒரு டீல் சொன்னீங்க இல்லையா... அதை பற்றி



பேசத்தான் கூப்பிட்டேன்...." என்று ஆரம்பித்தவன் சிறிது நேரம் விவாதித்து விட்டு செல்பேசியை வைத்தான்! புருவம் சுருங்க யோசித்தவன் சிறிது நேரம் கழித்து அவரை அழைத்து,

"டீல் ஓகே சார்.... எப்போ சைன் பண்ணலாம்.... நாளைக்கு பாண்டி வந்தீங்கன்னா முடிச்சுடலாமா?" என்று கார்த்தி கேட்ட போது, சித்தார்த் ஒரு கணம் அதிர்ந்து தன்னிலைக்கு வந்தார்! இவ்வளவு விரைவாக இப்படி ஒரு முடிவை எடுக்க மிகப் பெரிய தைர்யம் வேண்டுமல்லவா... அதை உணர்ந்த போது வந்த அதிர்வே அது! இதனால் தான் எடுத்து வைக்கும் அடியில் எல்லாம் வெற்றி பெறுகிறான் போல.... இந்த விஷயம் முடிந்தால் தனக்கு எவ்வளவு பெரிய நிம்மதி என்று தனக்குத்தான் தெரியும் ஏன்று சித்தார்த் எண்ணி கொண்டார்! இருபக்கமும் வெற்றியாக முடியும் ஒப்பந்தத்தை வின்வின் ஒப்பந்தம் என்பார்கள்.... அது போன்ற ஒரு ஒப்பந்தமாகவே கருதினார் சித்தார்த்!

"ஓகே கார்த்தி சார்... நல்ல நேரம் பார்த்துட்டு வச்சுக்கலாம்..." என்று அவர் முடித்தபோது பெரும் நிம்மதி அவரது மனதில்!

சித்தார்த்திடம் பேசி விட்டு நெற்றியை சுருக்கியபடி யோசித்த கார்த்திகேயன் அடுத்த அழைத்தது கிருஷ்ணாவை! ஒரு வாரம் முன்பு தான் ஒரு பெரிய குண்டை போட்டு இருந்தவன் அதற்கான ஆதாரங்கள் எதையுமே சேகரிக்க முடியவில்லை என்று தவித்து

கொண்டிருந்தான்! அவன் கொடுத்த அதிர்ச்சி இன்னமும் கார்த்திகேயனை ஒன்றுமே செய்யவிடாமல் செய்து இருந்தது! அந்த கோபம் எல்லோர் மேலும் சீறி பாய்ந்து கொண்டுதான் இருந்தது!

"ஹாய் கிருஷ்ணா... என்னடா தூங்கிட்டியா?"

"இன்னும் இல்ல மச்சான்... முக்கியமா ஒரு கேஸ பார்த்துட்டு இருக்கேன்..."

"இந்த நேரத்திலா.. ஏன்டா உன் கடமை உணர்ச்சிக்கு அளவே இல்லையா... மணி பதினொன்னுடா மாப்ள..."

"ஹலோ... கேஸ் பார்த்துட்டு இருக்கேன்னு தான் சொன்னேன்... எங்க... எந்த கேஸ்ன்னு சொன்னேனா? சிவபூஜைல கரடி மாதிரி போன பண்ணிட்டு... கடுப்பேத்தாத மச்சி..." என்று நொந்து போய் கூறவும் கார்த்திகேயனால் சிரிப்பை அடக்க முடியவில்லை... வாய் விட்டு சிரித்து,

"சரி மாப்ள நீ நல்லா கேஸ பாரு... காலைல பேசறேன்..."

"இல்ல இல்ல... நீ சொல்ல வந்தது சொல்லு.... பாலா கிட்ட அப்புறம் பேசிக்கறேன்..."

"டேய் என்னடா சொல்ற... பாலாவா... உன் மனைவி பெயர் சங்கீதா தானே..."

"ஹலோ... அவ பேர் பாலசங்கீதா... நான் கூப்பிடறது பாலா... பார் யுவர் இன்பர்மேஷன், அவ



அம்மா வீட்ல இருக்கா... சோ உன் கற்பனை குதிரைய தட்டி விடாதே புது மாப்பிள்ளை... சரி நீ என்ன இந்த நேரத்துல... உன் கேஸ பார்க்கறது விட்டுட்டு..."

"டேய்... உன் அழும்புக்கு அளவே இல்லையா... நானே இங்க தலை இடில இருக்கேன்"

"ஏன்டா... திவ்யா அதுக்குள்ளே அடிக்க ஆரம்பிச்சுட்டாங்களா? இப்போவே புலம்பற.... இன்னும் எவ்வளவோ இருக்குடா... இதுக்கே அசந்துட்டா எப்படி?" சிரித்து கொண்டே அவன் வாரி கொண்டிருக்க,

"கிருஷ்ணா... நேரம் காலம் பார்க்காம கடிச்சுட்டு இருக்காத... பதிலுக்கு நானும் கடிக்க ஆரம்பிச் சுடுவேன்... அப்புறம் உன் கேஸ நீ நைட் புல்லா பார்க்க முடியாது..."

"இப்போ மட்டும் என்ன மச்சான் வாழுது... ஆன்னா ஊன்னா அம்மா வீடு... எப்போவும் தனியா உட்கார்ந்து போன்ல குடும்பம் நடத்துறதே வேலையா போச்சு... சரி நீ விஷயத்த சொல்லு..."

"டேய் கூமுட்டை... நீ தான் சொல்லணும்... இன்னும் எந்த சாலிட் ப்ரூப்பும் கிடைக்கலியா? இன்னம் எவ்வளவு நாள் தான் பண்ண போற?"

"இன்னும் ஒரு வாரம் டைம் குடு மச்சான்... இவ்வளவு தூரம் வந்துட்டோம்... கையும் களவுமா பிடிச்சாதானே ஸ்ட்ராங் எவிடென்ஸ குடுக்க முடியும் கார்த்தி... கொஞ்சம் பொறுமை..."

"என் பொறுமை எருமையா ஆகறதுக்குள்ள குடுடா..." என்று ஆரம்பித்து சிலபல விஷயங்களை பேசி முடித்தபோது மனம் தெளிவாகி இருந்தது! வானம் பெருமழை பெய்வதற்கான அறிக்கையை தூறல் மூலமாக தெரிவித்து கொண்டிருந்தது! சடசடவென மழை பிடிக்க சற்று நேரம் அந்த மழையை அனுபவித்து நனைந்து விட்டு காரை எடுத்தான்!

✤ ✤ ✤

மெலிதாக சீழ்க்கை அடித்தவாறே வந்த மகனை ஹாலிலேயே எதிர்கொண்டார் மங்கை! எப்போதும் இது போல காத்திருப்பது இல்லை... தாயின் ஆரோக்கியத்தை முன்னிட்டு கார்த்தி அதை விரும்புவது இல்லை... வலுகட்டாயமாக படுக்க கூறி விடுவான். ஆனால் இன்று மகனை கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காகவே காத்து கொண்டிருக்க அவனோ உற்சாகமாக வந்து கொண்டிருந்தது அவருக்கு சிறிது வியப்பாகவே இருந்தது... அதோடு மழையில் வேறு நனைந்து வந்திருக்க,

"என்னப்பா விசில் தூள் பறக்குது... திவிய அடிச்சது அவ்வளவு சந்தோஷமா இருக்கா?" குரலில் கடுமையான கோபம் கலந்தே இருக்க,

"என்ன மருமகளுக்கு சப்போர்ட்டா?" சிரித்து கொண்டே அவன் கேட்க...



"பின்ன... உன்னோட மூர்க்கத்தனம் பிடிவாதம் இதையெல்லாம் காட்ட அந்த அப்பாவி பொண்ணு தான் கிடைச்சாளா?"

"அப்பாவியா யார் மா அது?" யார் என்று தீவிரமாக தேட

"என்ன கார்த்தி... அப்படியா அந்த பிள்ளைய அடிப்ப? தப்பு ராஜா..."

"அம்மா... இவ்வளவு நேரம் வைஷு இப்போ நீங்களா? அம்மா வேணாம்மா... நான் பாவம்... ஏதோ பொண்டாட்டிய அடிக்கற அளவு வீரனா இருக்கானேன்னு சந்தோஷப்படாம...."

"என்னது பொண்டாட்டிய அடிக்கறதுதான் உன் வீரமா?" நிஜமாகவே அதிர்ந்தார்!

"அன்னை ஓர் ஆலயம் மாதிரி அத்தை ஓர் ஆலயம்ன்னு திவி பாடணும்ன்னு முடிவு பண்ணிட்ட... நடத்து... இதுல நான் உங்க ரெண்டு பேருக்கும் வில்லனா?" கேட்டு சிரித்தவனை வியந்து பார்த்தார்!

கல்லூரி காலத்து கார்த்திகேயனாக தெரிந்தான்! வியாபாரத்தில் நுழைந்து அதில் மூழ்கிய பின் இதுபோல குறும்பாக பேசுவது வெகுவாக குறைந்து இருந்தது!

"ம்ம்ம்... வசனம் தூள் பறக்குது... சரி... இதென்ன இப்படி மழைல நனைந்து வந்து இருக்கற...

சின்ன பையனாட்டம்..." துவட்ட துண்டை எடுத்து கொடுத்தவாறே கேட்க

"பீச்ல உக்காந்துட்டு இருந்தேன்... மழை வந்துடுச்சு... ஜாலியா நனைஞ்சேன்.. இதுல என்ன இருக்கும்மா?" தலையை துவட்டி கொண்டே!

"ம்ம்ம்... அப்படியா" என்றவர்

"தம்பி... உன்னை ஒண்ணு கேட்கட்டா?"

"ஒண்ணென்ன... ஒன்பது வேணும்னாலும் கேளும்மா..." சாதாரணமாகவே பதிலிருத்தான்!

"உனக்கும் திவிக்கும் என்ன கண்ணா பிரச்சனை... கல்யாணத்துக்கு முன்னாடியும் சரி அப்புறமும் சரி.. உங்க ரெண்டு பேர் முகத்திலும் மருந்துக்கு கூட சந்தோஷத்தை பார்க்க முடியலை... புதுசா அடிக்கவெல்லாம் செய்ற... நீங்க விரும்பித் தானே கல்யாணம் பண்ணி வைத்தோம்... அப்புறம் என்ன ராஜா? திவியும் ரொம்ப நல்ல பொண்ணுடா கண்ணா..."

"ம்ம்ம் தெரியும்மா... அதெல்லாம் ஒரு பிரச்ச னையும் இல்ல... சந்தோஷமாத்தான் இருக்கோம்... நீயா மனதை போட்டு குழப்பி கொள்ளாதேம்மா..." சமாதானம் கூறினான்!

"அப்புறம் ஏன்டா கண்ணா அவளை எங்கயுமே கூட்டிட்டு போகலை... சின்ன பொண்ணும்மா... அவளுக்கும் ஆசை இருக்குமில்ல..."



"வேலை ஜாஸ்திம்மா... கண்டிப்பா கூட்டிட்டு போறேன்.." என்று அவர் வாயை அடைத்து விட்டு மாடிக்கு விசில் அடித்தவாறே இரண்டு இரண்டு படியாக தாவி ஏறி போனான்!

அறையில் இருந்த பிரெஞ்சு விண்டோ கதவை திறந்து வைத்து கொண்டு மாடி பால்கனியில் நின்றபடி மழையை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள் திவ்யா! பால்கனியை தாண்டினால் திறந்தவெளி சிட்அவுட் இருக்க... அங்கே பெய்து கொண்டிருந்த மழையின் வாசம் நாசியை தீண்டி சென்றது! அறைக்குள் வந்தவனை திரும்பியும் பாராமல் ஓவியமாக நின்று கொண்டிருந்தவளை பார்த்து அயர்ந்து தான் போனான்! அன்றைக்கென சேலையில் வெண்ணிலவென கைகளை கட்டி கொண்டு மழையை பார்த்து கொண்டிருந்தவளை அணைக்க துடித்த கைகளை அடக்கி குளியலறையில் புகுந்தவன் குளித்து முடித்து இரவு உடையில அவள் முன்னர் போய் நின்றான்!

அவன் வரவும் அவள் திரும்பி கீழே விரித்து வைத்திருந்த தனது படுக்கைக்கு செல்ல எத்தனித்தாள்! சட்டென அவள் கைகளை பிடித்தவன்...

திவி... சாரிடா... கையை உதறிய திவ்யா அவனது முகத்தை பார்க்காமல் அவளது படுக்கைக்கு சென்றாள்! வெளியே மழை புயல் காற்றோடு பெருமழையாக பிடித்திருந்தது!

"அடிச்சது தப்புத்தான்... ப்ளீஸ் திவி... எப்போவும் போல சண்டையாச்சும் போடுடா... உன்னோட அந்த மனோகரா வசனத்தையாச்சும் பேசு... ப்ளீஸ்..." குறும்பாக கூறியவனை முறைத்து,

"மன்னிக்க முடியாத தப்பெல்லாம் பண்றவங் களுக்கு இதெல்லாம் பெரிய விஷயமே இல்லையே..."

"சரி செய்ய முடியாத தப்புன்னு ஒன்னும் இல்லையே திவி... நான் சரி செய்துட்டேன்..." இதற்கு மேல் உனது விருப்பம் என்று உறுதியாக பதில் கூறினான்! அவனது முகத்தை நேருக்கு நேராக பார்த்தவள், புருவத்தை சுளித்து கொண்டு

"நீங்க தப்பு பண்றதுல இவ்வளவு தெளிவா இருக்கும் போது நானும் தெளிவா இருக்கணும் இல்லையா..." என்று கூறி நிறுத்த,

"அப்படீன்னா..."

"நானும் பண்ண போறது தப்பு தான்...அதையும் உங்க கிட்ட சொல்லிட்டே செய்யறேனே... அப்புறம் அதை சரி செய்ய முடியுமா, இல்ல முடியாதான்னு சொல்லுங்க..."

"உளறிட்டு இருக்காத திவ்யா..." எரிச்சலானான் கார்த்திகேயன்! திவ்யாவின் செல்பேசி மெல்லிய சப்தமிட்டது! மெசேஜ் டோன்! எடுத்து பார்த்தாள்!



"இல்லை... உண்மையைத்தான் சொல்றேன்... பாருங்க... நாளைக்கு நானும் அரவிந்தும் ஆரோவில் போறோம்... முடிஞ்சா என்ன வேணும்னாலும் நீங்க செய்துக்கலாம்..." அரவிந்திடம் இருந்து வந்த மெசேஜை காட்டி கார்த்திகேயனிடம் கூற அவனுக்கோ ரத்தம் கொதித்தது!

"என்ன தைர்யம் இருந்தா என் கிட்டேயே இப்படி சொல்லுவ..." கோபத்தோடு அவளை பிடித்து உலுக்கினான் கார்த்திகேயன்!

"உஷ்...ஷட்..அப்... என்ன அலட்டிக்கறீங்க? என்னால ஒண்ணும் பண்ண முடியாதுன்னு நினைச்சு தானே எல்லா வேலையும் செய்தீங்க கார்த்திக்.... அப்போ வேணும்னா நீங்க ஜெய்ச்சு இருக்கலாம்... ஆனா எப்போவுமே நீங்க ஜெயக்க முடியாது... புரியுதா?" நிதானமாக ஒவ்வொரு வார்த்தையாக அவள் கூற

"ஷிட்... டோன்ட் பீ ஸ்டுபிட் திவ்யா... உன்னோட தரத்தை நீயே குறைச்சுக்கற... என்னை பழிவாங்க நீ இப்படி கீழ இறங்கி போகணுமா? உனக்கே வெட்கமா இல்லை?" கோபத்தோடு கூடவே இருந்த எரிச்சலோடும்...

"தரத்தை பற்றி நீங்க பேசறீங்களா கார்த்திகேயன்?... அதை பற்றி உங்களுக்கு என்ன தெரியும்? உங்களுக்கு என்ன உரிமை இருக்கு என் தரத்தை பற்றி பேச...." கோபமாக இருந்தாலும் நிதானமாகவே வந்து விழுந்தது வார்த்தைகள்!

"உரிமை பற்றி நான் போசமா வேற யாருடி பேசுவாங்க... போனா போகுது சின்ன பொண்ணுன்னு விட்டு பிடிச்சா... ரொம்பத்தான் துள்ற? இப்போ நீ தெரிஞ்சுக்கணும் என்னோட உரிமையோட அளவை பற்றி..."

மிகவும் கோபமாக அவளை அணைத்தவன் வேறு எதையும் பேச விடாமல் அவளது உதடை சிறை செய்திருந்தான்! எப்போதும் போல தன்னிடம் சண்டை போட்டுவிட்டு போய் விடுவான் என்று எண்ணி அவனிடம் வார்த்தையாடிய திவ்யா, அவனது இந்த தாக்குதலை எதிர்பார்க்காமல் மூச்சுக்கு தள்ளாடினாள்! கோபத்தோடு அவன் உதடு அவளது முகமெங்கும் பயணம் செய்தது! அவனை தாக்குபிடிக்க முடியாமல் தத்தளித்தாள்! திவ்யாவால் அந்த அவமானத்தை தாங்க இயலவில்லை!

சிறிது நேரம் கழித்தே அவனது இறுக்கமான அணைப்பு தளர... விடுவித்தான்!

"புரிஞ்சுக்கோ... நான் கையாலாகாம உன்னை தொடாம இருக்கேன்னு பகல் கனவு காணாத... நீயா என்னை ஏத்துக்கணும்ன்னுதான் காத்துட்டு இருக்கேன் திவி!"

"அது இந்த ஜென்மத்துல நடக்காது..." என்று கூறியவள் உதடை தொட்டு பார்த்து,



"ச்சே... அருவருப்பா இருக்கு... என்ன செய்தா இந்த அருவருப்பு போகும்ன்னு தெரியலையே கண்களில் நீரோடு கூறிவிட்டு வேறெதுவும் பேசாமல் மாடி சிட்அவுட்டுக்கு போய் நின்று கொண்டு, கதவை தாள் இட்டாள்! பிரெஞ்சு விண்டோ கதவு, அவள் கைகளை கட்டி கொண்டு மழையில் நனைவதை சொல்லியது... புயல் காற்று பெருமழையோடு தாண்டவமாடி கொண்டிருக்க... மழையில் வேண்டு மென்றே நனைபவளை பார்த்து உள்ளம் துடித்தது... எப்படியும் சிறிது நேரம் கழித்து வந்துவிடுவாள் என்று எண்ணி படுக்கையில் அமர்ந்து தலையில் கை வைத்து கொண்டான்! நேரம் தான் கடந்து கொண்டு இருந்ததே தவிர அவள் வருகிற வழியை காணவில்லை! குளிர் வேறு வாட்டி எடுக்க, பற்கள் தந்தியடிக்க கைகளை கட்டியவாறே அந்த புயல்மழையில் நனைந்து கொண்டிருந்தாள்!

தட்டினால் கீழே இருக்கும் தாய்க்கு தெரிந்து விடுமே... என்ன செய்வது என்று யோசித்தான்! அறைகதவை திறந்து கொண்டு மேலே மொட்டை மாடிக்கு சென்றவன், அங்கிருந்து அவன் அறையின் சிட்அவுட்டில் குதித்தான்! மழை.... இன்னும் பேய் மழையாக கொட்டி கொண்டிருக்க, குளிர் உடலை துளைத்து கொண்டு போனது! திவ்யாவின் அழுத்தத்தை நினைத்து ஒரு கணம் தடுமாறினான் கார்த்திகேயன்!

"இவ்வளவு அழுத்தம் ஆகாது திவி உனக்கு...." கார்த்திகேயன் குரலில் வலியோடு கூற, ஒன்றுமே பேசாமல் கண்களை மூடி அதே நிலையில் நின்றாள் திவ்யா!

"வா திவ்யா... ப்ளீஸ் உள்ள வா..." அவளிடம் இருந்து பதிலில்லை!

"இனிமே இப்படி நடக்காது வாம்மா... ப்ளீஸ்..." மாற்றி மாற்றி அவன் அழைத்து கொண்டே இருக்க, அவளிடம் இருந்து சிறு அசைவு கூட இல்லாமல் செய்து வைத்த சிற்பம் போல் கைகளை கட்டி கொண்டு கண்களை மூடியவாறே உடல் வெளுத்து நின்றாள்!

இவளிடம் பேசினால் ஆகாது தூக்கி கொண்டு போய்தான் ஆக வேண்டும் என்று நினைத்து கொண்டு அவளை தூக்க போக, அந்த நிலையிலேயே மயங்கி அவன் கைகளில் சரிந்தாள்!

## 18

**தி**வ்யா எழும்போதே அவளுக்கு தலைவலி மண்டையை பிளந்தது! தலையை சுற்றி கொண்டு வந்தது! மணி என்னவென்று பார்த்தாள். எட்டாகி இருந்தது! ஐயோ இவ்வளவு நேரமா என்று பதறி எழ



முயன்றவளை முழுவதுமாக சாய்த்தது தலைசுற்றலும் சோர்வோடு வந்த காய்ச்சலும்! ஆகா மொத்தம் இரவில் அவனை கடுப்பேற்ற செய்த செயல் தனக்கே ஆப்பு வைத்து இருக்கிறது என்பதை புரிந்து கொண்டவள் எப்படியாவது எழுந்து நிற்க முயன்றாள்! கால்கள் துவண்டு விழுந்தன! அவளது சப்தம் கேட்டு ஷேவ் செய்து கொண்டிருந்த கார்த்திகேயன் அவசரமாக வந்தான்!

"திவி.... எழுந்திட்டியா?" என்று பக்கத்தில் வந்தவனை பார்த்து ஒரு அடி பின்னடைந்தாள்! இரவு மழையில் நனைந்தது தான் நினைவுக்கு வந்தது... பின் எப்படி? என்ற ரீதியில் யோசிக்க ஆரம்பித்தது மனம்! அவசரமாக தன்னை ஆராய்ந்தாள்! உடைகள் மாற்றப்பட்டு இருந்தன!

"ச்சே.... நீங்கதான் மாற்றி விட்டீங்களா?" கடுப்பாக திவ்யா கேட்க....

"பின்ன... என்ன பண்ண.... என் விதி...." குறும்பான நக்கலோடு கூற திவ்யாவுக்கு தான் கோபம் தலைக்கேறியது!

"சிச்சுவேஷன யூஸ் பண்ணிகிட்டீங்க...." வெறுப்பாக கூற,

"அடிச்சு.... பல்ல கழட்டிடுவேன் ராஸ்கல்... மயங்கி போய் கிடந்தவளை ஜன்னி வராம இருக்க டிரஸ்ஸ மாத்தி விட்டா... இதுவும் பேசுவ இன்னமும் பேசுவ...."

"ஏன்... அம்மாவ கூப்பிட்டு இருக்கலாம்ல.... ச்சே...." இதை கேட்டதும் பக்கத்தில் வந்தான்! திவ்யா மனதில் படர்ந்த பயத்தோடு பின்னடைய, கார்த்திகேயன் இன்னமும் நெருக்கமாக வர, சுவரோடு ஒட்டினாள்! சோர்வு வேறு அவளை பலவீனப்படுத்த.... அவனை எப்படி எதிர்கொள்வது என்ற பயமும் ஆட்கொண்டது! கண்ணோடு கண் பார்த்து கொண்டு மிக நெருக்கமாக வந்தவன் அவளது இருபுறமும் கைகளை ஊன்றி,

"திவி.... நீ என் வொய்ப்.... அதை அப்போ அப்போ ஞாபகப்படுத்திகிட்டே இருக்கணுமா?" என்று கேட்டு அவளை இன்னமும் நெருங்க அப்போது தான் அவளது உடம்பு சூட்டை உணர்ந்தான்! நெற்றியில் கை வைத்து பார்த்தபோது கொதித்தது!

"ஓ ஷிட்.... போதுமா... காய்ச்சல் அடிக்குது... என்னமோ பெரிய இவளாட்டம் பேச வந்துட்டா.... ஷவர்ல நிக்கற மாதிரி மழைல நிற்க வேண்டியது... சின்ன பொண்ணாடா நீ..." அக்கறையிலும் கோபத்திலும் குதித்தான்!

"உஷ்... ரொம்ப சீன் போடாதீங்க.... ஒரு மாத்திரை போட்டோ சரியா போய்டும்...." என்றபோது என்னிடமேவா என்று முறைத்து பார்த்துவிட்டு மருத்துவராக இருக்கும் அவனது தோழியான ஜானகியை அழைத்தான்!



"ஹாய் ஜானு...." ஜானுவா யார் அது என்று வியப்பாக பார்த்தாள் திவ்யா! பெரிதாக பெண் தோழிகள் யாரும் இல்லை என்று கூறினானே!

"ஹாய் கார்த்தி.... சொல்லுப்பா."

"கொஞ்சம் வீட்டுக்கு வாயேன் ஜானு.... திவிக்கு கொஞ்சம் உடம்பு சரி இல்லை...."

"ஹேய்.... என்னடா விசேஷமா?" சிரிப்போடு ஜானகி கேட்க ஆமாம் இது ஒன்றுதான் குறைந்து விட்டது என்று அவளை கடிக்க தோன்றியது!

"அட என்ன டாக்டர் நீ.... அங்க இருந்தே இப்படி சொதப்புற.... திவி மழைல நனைஞ்சுட்டா.... கொஞ்சம் பீவர்.... அதுக்குள்ளே உன்னோட கற்பனை குதிரைய பறக்க விடற...." சிரித்தவாறே கூறினான்!

"கத்தரிக்காய் முத்துனா கடைத்தெருவுக்கு வந்து தான் ஆகணும்டா...." என்று கிண்டலடித்து விட்டு செல்பேசியை வைத்தாள் ஜானகி! செல்பேசியை வைத்துவிட்டு நிமிர்ந்த போது நகத்தை கடித்துக் கொண்டே படுக்கையில் சாய்ந்து இருந்தாள் திவ்யா! ரொம்பத்தான் சிரிப்பு வேண்டி கிடக்கிறது இவனுக்கு என்று மனம் பொருமியது!

"திவி.... வா பிரஷ் பண்ணிட்டு கொஞ்சம் சூடா காபி குடி.... கொஞ்சம் நல்லா இருக்கும்..." வேலையாள் கொண்டு வந்த காபியை வைத்து

கொண்டு அக்கறையாக அழைத்தவன் மேல் பாய தோன்றியது!

"எல்லாம் எனக்கு தெரியும்.... உங்க வேலைய பார்த்துட்டு போங்க..."

"இப்போ நீ வரலைன்னா.... நான் உன்னை தூக்கிட்டு போய் பிரஷ் பண்ண வைப்பேன்... என்ன ரெடியா?" என்று தன்னை தூக்க பக்கத்தில் வந்தவனிடம் இருந்து தள்ளி,

"சரி... செய்யறேன்..." என்று கூறிவிட்டு பல் துலக்கி காபியை அருந்தியபோது உடல் தேவலாம் என்று இருந்தது! காபி அருந்தி முடிக்கவும் ஜானகி வரவும் சரியாக இருக்க, இன்டர்காமில் கேட்டவர் களிடம் மாடிக்கு அனுப்ப கூறினான்!

"ஹாய் கார்த்தி.... ஹாய் திவ்யா..." என்றபடி உள்ளே வந்தாள் ஜானகி! கார்த்தியிடம் சிரித்து பேசியபடியே திவ்யாவுக்கு பரிசோதனைகளை மேற்கொண்டாள்! அவளுக்கும் காபி வந்திருக்க, அருந்தி கொண்டே நண்பனிடம் பள்ளி கால அனுபவங்களை பேசி கொண்டிருந்தாள் ஜானகி!

"ஹேய் திவ்யா.... பார்த்து இவனை ஜாக்கிரதையா ஹேண்டில் பண்ணுடா... இல்லைன்னா நம்மளை முழுங்கி ஏப்பம் விட்டுட்டு போயிட்டே இருப்பான்!" திவ்யாவிடம் போட்டு கொடுக்க,



"அடப்பாவி.... உனக்கு நான் என்ன கொடுமை செய்தேன்.... இப்படி இவகிட்ட நல்ல வார்த்தைய சொல்றியே கிராதகி..."

"பார்த்தியா திவ்யா.... இப்பவே மிரட்டறான்.... உன்னையும் மிரட்டித்தான் வெச்சு இருக்கானா? டிவில எவ்வளவு நல்லா பேசுன பொண்ணு.... இப்போ வாயே திறக்க மாட்டேங்குதே..." ஜானகி கிண்டலடிக்கவும் இவளை தான் மிரட்ட வேறு வேண்டுமா? என்ற எண்ணம் ஓடியது கார்த்திகேயனுக்கு!

"அவ வாய திறந்தா எட்டு ஊர் கிழியும் தாயே... இப்போதான் என்னமோ வாய மூடிகிட்டு இருக்கா... அதுல மண்ணை போட்டுடாதே..." சிரித்து கொண்டே சொன்னவனை பார்த்து முறைத்தாள் திவ்யா!

"சரி நான் ஒண்ணும் மண்ணை போடல. இப்போ நீ வெளியே போ...."

"ஏன் ஏன் .... என் பொண்டாட்டிக்கு டெஸ்ட் பண்ணும் போது நான் இருக்கக் கூடாதா?" வேண்டு மென்றே கொடி பிடித்தவனை வெளியே தள்ளிவிட்டு

"படவா.... வெளியவே இரு.... நான் கூப்பிடற வரைக்கும்...." என்று கூறிவிட்டு திவ்யாவின் அருகில் வந்தாள்!

"எல்எம்பி டேட் என்ன திவ்யா...." என்று கேட்டு கொண்டே!

பரிசோதனைகளை முடித்து காய்ச்சலுக்கு ஊசி போட்டுவிட்டு வெளியே வந்தவள் கார்த்திகேயனிடம்,

"கார்த்தி.... ஊசி போட்டு இருக்கேன்..." என்று கூறி விட்டு குரலை தழைத்து

"டேட் தள்ளி போய் இருக்கு போல.... டெஸ்ட்க்கு ஆள் அனுப்பறேன்... டெஸ்ட் பண்ணிட்டு கன்பார்ம் பண்ணிக்கலாம்.... ஓகேவா..." என்று ஜானகி கூறியபோது முதலில் அவனுக்கு ஒன்றும் புரியவில்லை! தலையில் அடித்தவாறு புரிய துவங்கியது!

"குழந்தை."

தனக்கு ஒரு குழந்தை வர போகிறதா? தன்னை அப்பா என்று அழைக்க போகிறதா? என்னுடைய ரத்தம், என் வாரிசு! என்னுடைய உயிர்... எனது பிரதிபிம்பமா? இந்த சாம்ராஜ்யத்தின் இளவரசனா இளவரசியா? உலகை வென்ற உணர்வு ஆட்கொண்டது!

"ஜானு... என்ன சொல்ற நீ?" மகிழ்ச்சியில் பறந்தான் கார்த்திகேயன்!

"கன்பார்ம் ஆனா எனக்கு என்னடா தருவ?" கிண்டலாக கேட்ட தோழியிடம்,

"ஹேய்... என்ன வேணும்ன்னு கேளு.... ஐம் சோ ஹாப்பி...." என்று கார்த்தி குதிக்க,

"ம்ம்ம்... இன்னொரு கப் காபி வேணும்..." என்று சிரிக்காமல் ஜானகி கூறினாள்!



"அடச்சே... அல்பை" என்று தலையில் அடித்து சிரித்து கொண்டே மங்கையை அழைத்து விஷயத்தை கூற, அவருக்கும் சந்தோஷம் தாள முடியவில்லை!

"இப்போவெல்லாம் முப்பது நாள்லயே தெரிஞ்சுடுது ஜானு..." என்று கள்ளமில்லாமல் ஜானகியிடம் கூறியவாறே அழைத்து சென்று பட்டுபுடவை வைத்து பூ பழம் வைத்து கொடுத்தார்! கார்த்திகேயனுக்கு மனதில் ஓரத்தில் சங்கடமாக இருந்தது!

"என்னம்மா நீங்க... இதுக்கு போயா?" என்று ஜானகி பின்னடைய

"என்னடா கண்ணா.... எவ்வளவு நல்ல விஷயம் சொல்லி இருக்க...." என்று சிரித்தார் மங்கை!

"கன்பார்ம் ஆகட்டும்மா...." என்று கூறிவிட்டு மகிழ்ச்சியாக விடைபெற்று போனாள் ஜானகி! விடை கொடுத்துவிட்டு மனதில் மகிழ்ச்சி பொங்க மாடிக்கு விரைந்தான்! இனியாவது திவ்யா தன்னை ஏற்பாளா என்ற ஏக்கம் சூழ்ந்தது! அவளது மணி வயிற்றில் சூல் கொண்டிருந்த தன் குழந்தையை அப்போதே கொஞ்ச வேண்டும் என்ற ஆவலோடு கதவை தள்ளி கொண்டு போனான்!

திவ்யா தலையில் கை வைத்தவாறே கட்டிலில் அமர்ந்து இருந்தாள்! முகத்தில் டன் கணக்கில் குழப்பம்! ஜானகி கேட்ட கேள்விகளை வைத்தே தன்னுடைய நிலை சிறிது புரிந்தது! தனக்கு ஒரு

குழந்தையா? இதை கொஞ்சம் கூட எதிர்பார்க்காத திவ்யா அயர்ந்து போனாள்! கார்த்திகேயனை வேண்டாம் என்னும் போது இந்த குழந்தை தேவையா என்ற எண்ணம் அவளது மனதில்! மனதில் ஓரத்தில் ஒரு எண்ணம்.... இந்த குழந்தை ஒன்றும் இருவரின் அதீத காதலில் உருவாகி விடவில்லையே.... தனது விதிதான் இந்த குழந்தையின் ரூபத்தில் வந்திருக்கிறதோ? வயிற்றில் பட்டாம்பூச்சி பறந்தது!

"திவி...." மென்மையாக அழைக்க முயன்ற அவனது குரல் கரகரப்பாகி இருந்தது!

"ம்ம்ம்...." நிமிர்ந்தே பார்க்காமல் கேட்டாள்! அவளது கைகளை எடுத்து தன் கைக்குள் வைத்து கொண்டவனிடம் இருந்து சட்டென்று உருவினாள் திவ்யா!

"ஐம் ஹாப்பி திவ்யா.... எவ்வளவு சந்தோஷமா இருக்கு தெரியுமா?"

"எனக்கு ரொம்ப துக்கமா இருக்கு.... பிடிக்கவே இல்லை...." சட்டென்று கூறினாள் திவ்யா! பதறிய கார்த்திகேயன்,

"வேணாம் திவ்யா.... அப்படி சொல்லாதே.... அந்த குழந்தையால உன்னோட வெறுப்ப உணர முடியும்... இப்போவே நம்ம அம்மா நம்மை வெறுக்கறான்னு அந்த சிசுவும் மனசுல அழ வேணாம்... அந்த கொடுமை எல்லாம் என்னோட போகட்டும்



திவ்யா...." மனத்தால் உணர்ந்து கூறியவனை வித்தியாசமாக பார்த்தாள் திவ்யா! கண்களில் வலியை தாண்டிய சோகம்!

"நீங்களா தேடிகிட்டது கார்த்திகேயன்.... என்னோட லட்சியத்த அழிச்சு.... ஆசையெல்லாம் குலைச்சு தான் என்னை நீங்க இங்க உட்கார வெச்சு இருக்கீங்க.... அப்படி இருக்கும் போது உங்க குழந்தை எனக்கு தேவை இல்லையே..." என்று கூறிய போது அவனுக்கு அவளை இழுத்து வைத்து அறையலாம் போல இருந்தது! ஆனாலும் அவளது உடல் நிலையை கருத்தில் கொண்டு முக்கியமாக தன் வாரிசை சுமந்து இருப்பவள் என்ற நிதர்சனத்தில் தன்னிலைக்கு வந்து தணிந்தே பேசினான்!

"வேணாம் திவ்யா.... இன்னொரு முறை அப்படி ஒரு வார்த்தைய சொல்லாத.... உன்னை நான் கெஞ்சி கேட்டுக்கறேன்..." என்று கூறியவன் அவளை நெருங்கி,

"நான் செய்தது தப்புத்தான்.... அன்றைக்கு நீ தப்பு செய்துட்டன்னு ஆத்திரப்பட்டு... அந்த ஆத்திரத்துல நான் செய்தது தப்புத்தான் திவ்யா... அதுக்காக என்னை என்ன வேணும்னாலும் தண்டிச்சுக்கோ... ஆனா இந்த குழந்தைய மட்டும் மனசார வெறுக்காத திவ்யா.... ப்ளீஸ்... நமக்கு வேணும்மா" அவனது ஈகோவை மறந்து அவளிடம் கெஞ்சிய கார்த்திகேயன்

அவளுக்கு வித்தியாசமாக தெரிந்தான்! அவளது கையை பிடித்து கொண்டு,

"இது நம்ம குழந்தை திவ்யா... நம்ம ரெண்டு பேரோட வாரிசு... நம்ம ரத்தம்.... நம்மளை அம்மா அப்பான்னு கூப்பிட போற ஓவியம்... அந்த குழந்தைக்கு உயிர் இருக்கு... உணர்வு இருக்கு... அம்மா என்னை வெறுக்கறா... நாம யாரை நம்பி இந்த உலகத்துக்கு வரதுன்னு அந்த உயிருக்கு ஒரு நினைப்பு வந்துட கூடாது திவ்யா... ஐ பெக்... ப்ளீஸ் திவ்யா..." தனது கம்பீரத்தை எல்லாம் விட்டு அவளிடம் கெஞ்சிய கார்த்திகேயனை விழி விரிய பார்த்தாள் திவ்யா!

சாய்ந்து கொண்டிருந்தவளின் வயிற்றை பற்றி மென்மையாக முத்திமிட்டுவிட்டு வெளியே விரைந்தவனை கண் சிமிட்டாமல் பார்த்தாள்... அவனது கண்கள் கலங்கி இருந்ததோ? கார்த்திகேயன் தன்னை காதலித்து மணந்து இருக்கக் கூடாதா என்று மனம் எண்ண... அந்த எண்ண ஓட்டத்தை பார்த்து அதிர்ந்தாள் திவ்யதர்ஷினி!

✤ ✤ ✤

**தி**வ்யா அந்த செல்பேசி தகவலை பார்த்து கொண்டே இருந்தாள்! கார்த்திகேயன் அலுவலகம் புறப்பட்டு போய் சுமார் ஒரு மணி நேரம் ஆகி இருந்தது! காய்ச்சல் மட்டுப்பட்டு இருந்தது... லேபில் இருந்து ஒரு பெண் வந்து டெஸ்ட்க்கு சாம்பிள் வாங்கி கொண்டு



போயிருந்தாள்! ப்ளீஸ் மெசேஜும், சாரி மெசேஜுமாக கார்த்தியிடமிருந்து வந்து கொண்டிருந்த மெசேஜுக் கிடையில் வந்த இந்த தகவலை பார்த்து புருவம் சுளித்து யோசித்தாள்! கார்த்திகேயனுக்கு உணர வைக்க இந்த அளவு தான் இறங்க வேண்டுமா என்ற யோசனை வராமல் இல்லை! செல்பேசியை எடுத்து ஸ்ரீராமுக்கு அழைத்தாள்! சிறிது நேரம் பேசிவிட்டு அவனது அறிவுரைகளை கேட்டு விட்டு வைத்தாள்! எழுந்தவளுக்கு தலை சுற்றி கொண்டு வந்தது! மெசேஜ் டைப் செய்து அரவிந்தனுக்கு அனுப்பி வைத்தாள்....

"பத்து நிமிடத்தில் கிளம்பி வருகிறேன்..." மனதின் ஓரத்தில் பயம்!

மங்கையிடம் கூற அவரோ ரெஸ்ட் எடு என்பதிலேயே குறியாக இருந்தார்!

"இல்ல அத்தை... ஒரு அரை மணி நேரத்துல வந்துடுவேன்..." தன்நெஞ்சறிய பொய்யற்க பொய்த்த பின் தன் நெஞ்சே தன்னை சுடும்... சுட்டது திவ்யாவுக்கு!

"இல்லம்மா... கார்த்தி கேட்டா ரொம்ப கோபப்படு வாப்ல... வேணாம் திவ்யா... நீ ரெஸ்ட் எடு..." பல நாள் இந்த சந்தர்ப்பத்திற்காக காத்து கொண்டிருந்த கொக்கு ஒப்புகொள்ளுமா? மங்கையிடம் கெஞ்சி ஒப்புக்கொள்ள வைத்து கிளம்பியும் விட்டாள்! அரவிந்தன் வந்த போது கார்த்திக்கும் அரவிந்தனுக்கும் இடையில் நடக்கும் பனிபோரை பற்றி தெரியாத மங்கை மனதுக்குள்

அவளின் உடல் நிலையை நினைத்து பயந்து கொண்டே மருமகளை சிரித்த முகமாக ஆரோவில் அனுப்பி வைத்தார்!

✤ ✤ ✤

"ரொம்ப அமைதியா இருக்கு அரவிந்த்... இந்த பிளேஸ் எனக்கு ரொம்ப பிடிச்சு இருக்கு...." தியான மண்டபத்தை பார்த்து கொண்டே கூறினாள் திவ்யா!

"ஆமா திவ்யா... ரொம்ப அழகு...." திவ்யாவை பார்த்து கண்களில் ஆசை மின்ன கூறினான் அரவிந்த்!

"வீக்லி ஒன்ஸ் வந்துடணும் அரவிந்த் இங்க... எவ்வளவு அழகு...." தன்னை மறந்து அந்த இடத்தை ரசித்தாள் திவ்யா!

"உலக மக்கள் எல்லாம் ஒன்றா இருக்கறதுக்காக ஒரு கமியுனிட்டி லிவிங் இருக்கு திவ்யா... அந்த இடமும் நல்லா இருக்கும்...."

"அங்க போகலாமா அரவிந்த்...."

"ம்ம்ம்.... இங்க இருந்து கொஞ்ச தூரம் போகணும்.... உன்னை இன்னைக்கு கொஞ்சம் சீக்கிரம் வீட்ல கொண்டு வந்து விட சொல்லி இருக்காங்க அம்மா.... அதனால இன்னொரு தடவை கூட்டிட்டு போறேன் திவ்யா...." அடுத்த முறை வெளியே செல்ல அடிபோட்டு வைத்தான்!



"ம்ம்ம் ஓகே...." மனமே இல்லாமல் அந்த இடத்திலிருந்து வந்தவளை கண்கொட்டாமல் பார்த்தான் அரவிந்தன்! என்ன அழகு! ச்சே... தனது அவசர புத்தியை நினைத்து அவனே வருந்தினான்! அவசரப்படாமல் இருந்து இருந்தால் இந்நேரம் இந்த அழகு அனைத்தும் தனக்கே சொந்தமாகி இருக்கும் என்ற நினைவு அவனை பாடாய் படுத்தியது! அப்படி இருந்திருந்தாலும் கார்த்தி விட்டிருக்க போவதில்லை என்பது அவனுக்கு தெரியவில்லை.... செல்பேசி அழைக்க எடுத்து பேசி விட்டு வைத்தான்!

"ஐ பைவ்வா அரவிந்த்..." அந்த ஐபோனை பற்றி கேட்க உற்சாகமாக அவனும் விளக்கினான்!

"ஹேய்... ஒரு நிமிடம் கொடு... பார்த்துட்டு தரேன்..." என்று வாங்கி ஆசையாக பார்த்தாள்!

"திவ்யா.... டூ யு லைக் இட்..." அவளை தாபமாக பார்த்து கொண்டே,

"ம்ம்ம்... யா அரவிந்த்... கார்த்திக்கிட்ட சொல்லணும்..." அவன் தன்னை பார்ப்பதை உணராமல்! கொஞ்சம் பொறு அரவிந்த் என்று அவனது மனம் கடிவாளமிட்டது! இவளுக்கு திருமணமாகி விட்டது... அதில் இருந்து வெளியே கொண்டு வர வேண்டுமென்றால் எடுத்தோம் கவிழ்த்தோம் என்றால் முடியாது.... பொறுமை பொறுமை என்று அவனது மனம் கூச்சலிட்டது!

"அரவிந்த்... இந்த வால் பேப்பர் நல்லா இருக்கே... டௌன்லோட் பண்ணிக்கட்டா...." ஆசையாக கேட்டவளிடம்....

"ஹேய் திவ்யா... இதை போய் என்கிட்டே கேக்கணுமா? உன் இஷ்டம்ப்பா..." அவன் அனுமதி கொடுக்கவும் சிறு குழந்தையாக அந்த போனை வைத்து விளையாடி கொண்டிருந்தாள்!

வீட்டிற்கு வெளியே அவன் இறங்கி விட்டு சென்றபோது இரவு மணி ஏழாகி இருந்தது! மாலை வரை கார்த்திகேயனை சமாளித்த மங்கை அதற்கு மேல் மறைக்க முடியாமல் கூறி இருந்தார். அரவிந்தனுடன் வெளியே சென்று இருக்கிறாள் என்பதை கேட்ட கார்த்திகேயன் கோபத்தின் உச்சிக்கு சென்றான்! அவனது செல்பேசிக்கு அழைத்த போது சைலென்ட் மோடில் இருந்த போனை அவள் எடுக்காமல் விட, அவளது உடல்நிலையை நினைத்து கடுப்பின் எல்லைக்கு சென்று இருந்தான்! இந்த நேரத்தில் இவளுக்கு என்ன நெஞ்சு துணிவு இருந்தால் இப்படி செய்வாள் என்று கோபம் கொதித்தது கார்த்திகேயனுக்கு! அப்போதுதான் ஜானகி அழைத்து விஷயத்தை உறுதி செய்து இருந்தாள்! அந்த சந்தோஷத்தை அனுபவிக்க விடாமல்.... ச்சே என்ன வாழ்க்கை இது என்ற வெறுப்பு கரை கடந்தது!



கார்த்திக் அறையில் கோபத்தில் உறுமி கொண்டு நடந்து கொண்டிருக்க.... திவ்யா காரை விட்டு இறங்கியவுடனே ஸ்ரீராமுக்கு அழைத்தாள்!

"ஸ்ரீ.... ஆச்சா..."

"ம்ம்ம் ஆச்சு திவி..."

"ஏதாவது கிடைச்சுதா?" ஆர்வமாக கேட்டாள் திவ்யா!

"செம மேட்டர்மா...."

"என்ன சொல்லு...."

"டீலிங் வச்சு இருக்கற ஆள், அப்புறம் எங்க ஸ்டாக் வச்சு இருக்கான்... யாருக்கெல்லாம் சப்ளை பண்றான்னு எல்லாம் கலெக்ட் பண்ணியாச்சு... இனி இதை உறுதிப்படுத்தறது ஒன்றுதான் வேலை...."

"அப்புறம்... அந்த எக்ஸ்பையர்ட் மெடிசின் விவகாரம்...."

"ம்ம்ம்... அது சம்பந்தமாவும் ஸ்கூப் கிடைச்சு இருக்கு திவி.... இன்னைக்கு பேசி இருக்கான்..."

"வாவ்.... இன்னைக்கு முழுக்க இருந்தும் தனியா தனியா போய் பேசிகிட்டே இருந்தான் ஸ்ரீ... நினைச்சேன்... சரி ரெக்கார்டிங்ஸ் எல்லாம் ஒரே ஃபைலா பண்ணி எனக்கு இப்போவே அனுப்பி வை ஸ்ரீ...."

"ஓகேடா... ஒரு நிமிஷம்... அனுப்பி வெச்சுடறேன்... சரி அண்ணன் கிட்ட பர்மிஷன் கேட்டுட்டு தானே போன...."

"ம்ம்ம்... சொல்லிட்டேன் ஸ்ரீ.... அரவிந்த் கூட வெளியே போறேன்னு.... எங்க போறன்னு சொல்லி இருந்தேன்... அதான் உன்கிட்ட ஜிபிஆரேஸ் டிராக்கிங் இருந்துதுதில்ல.... அதான் கொஞ்சம் துணிச்சலா போயிட்டேன்..."

"ஆனாலும் கொஞ்சம் ரிஸ்க் எடுத்து இருக்க திவ்யா... அண்ணா கோவுச்சுக்காம இருந்தா சரி."

"சரி நீ எங்க இருக்க..."

"ம்ம்ம்... இன்னும் அரை மணி நேரத்துல உன் வீட்ல இருப்பேன் திவி..."

"ஓகே சீக்கிரம் வா...."

பேசிக் கொண்டே உள்ள வந்தவள் கார்த்தியை கவனிக்கவில்லை! அவனது முகம் கோபத்தில் சிவந்து இருந்தது!

உடல் ஓய்வை யாசிக்க, முகம் கழுவிவிட்டு வரலாம் என்று குளியலறையில் காலை எடுத்து வைத்தவளை தடுத்தது ஒரு குரல்!

"நில்லு..." கடுமையான குரலில் கூறியவனை அப்போதுதான் பார்த்தாள் திவ்யா!



"இதென்ன சத்திரமா சாவடியா? அவங்க அவங்க இஷ்டத்துக்கு வர்றதுக்கும் போறதுக்கும்... குடும்பம் நடக்கற இடம்.... அதை புரிஞ்சுக்கோ."

"இப்போ அதுல என்ன குறைஞ்சு போச்சு கார்த்திக்...."

"என்ன குறையல.... என்ன தைர்யம் இருந்தா நான் சொல்ல சொல்ல கேட்காம அவன்கூட வெளிய போயிருப்ப....." காலையில் அவ்வளவு ஆசையாக பேசி கெஞ்சியவனா இவன்? திவ்யாவின் சுயமரியாதை தானாக விழித்தது!

"யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கு இல்ல...." முகத்தை கல் போல வைத்துக் கொண்டு! தூண்டி விட்ட கோபம் கண் மண் தெரியாமல் வேலைகாட்ட அடிக்க ஓங்கிய கையை அப்படியே கீழே இறக்கினான்! அவளது உடல் நிலையை எண்ணி! எவ்வளவு கெஞ்சி இருப்பேன்.... எந்த அளவு இறங்கி போய் பேசி.... ச்சே.... பெண்ணா இவள்?

"திவ்யா ஒழுங்கா பேசு... நீ என் குழந்தைய சுமந்துகிட்டு இருக்கறதுனால தான் இவ்வளவு பொறுமையா பேசிட்டு இருக்கேன்...." அவனது கோபம் அவளையும் தூண்டிவிட்டு இருக்க,

"அது உன் குழந்தைதான்னு என்ன ஆதாரம்..." சிறுபிள்ளையாக வார்த்தையை தவற விட்டாள் திவ்யா!

பேசி முடிக்கும் போதே சுருண்டு படுக்கையில் கிடந்தாள்! அடி அவளது கன்னத்தை பதம் பார்த்து இருந்தது!

"ச்சே.... நீயெல்லாம் ஒரு பெண்ணா? என்னை பழி வாங்குறதா நினைச்சு உன்னை நீயே தரத்தை குறைச்சுகிட்டு.... ச்சே...." தலையில் கை வைத்து கொண்டு வெறுப்பின் விளிம்பு நிலையில் இருந்து பேசினான்! அப்போதுதான் அவளுக்குமே தான் பேசிய வார்த்தையின் வீரியம் புரிந்தது! ஆனாலும் அவளால் சட்டென தனது சுயமரியாதையை விட்டு கொடுக்க முடியவில்லை!

"நான் தான் பொண்ணே இல்லையே.... அப்புறம் ஏன் கார்த்திக் இன்னமும் என்னை இங்க வச்சு இருக்க.... என்னை எங்க வீட்டுக்கு அனுப்பிடலாமே...." வார்த்தைகளில் வலி!

"ஆமா... அதை தான் செய்ய போறேன்... நாளைக்கு முதல் காரியம் அதுதான்.... உன்னை கொண்டுபோய் உங்க வீட்ட விடறதுதான்.... போதும் சாமி.... போதும்.... கல்யாணம் பண்ணதும் ஆச்சு... என் உயிர் போனதும் ஆச்சு... வெறுத்து போயிட்டேன். எனக்கு வேற எதுவுமே வேணாம்.... நிம்மதி தான் வேணும்... அங்க தொழில்ல ஆயிரம் பிரச்சனை... வெளிய ஆயிரம் பிரச்சனை.... வீட்லயாவது நிம்மதியா இருக்கலாம்னா இங்கயும் பிரச்சனை.... நானும் மனுஷன் தானே." தலையில் கை வைத்து கொண்டு



படுக்கையில் அமர்ந்தவனை பார்த்தபோது மனது வலித்தது!

இன்று வேண்டுமானால் அவன் மேல் இருந்த காதல் வெறுப்பாகி இருக்கலாம்... ஆனால் ஒரு கட்டத்தில் அவனை காதலித்தவள் தானே! ஷாலினியை நினைத்து தன் மனதை அடக்கியவள் தானே! இன்று அவனே தனது கணவனாக வாய்த்தும் தன்னால் ஏற்று கொள்ள முடியாமல் இருக்க காரணம்.... கார்த்திகேயன் தன்னை மணந்ததே அவன் செய்த தவறை சரி செய்ய தானே. கடமைக்காக மணந்த தன்னிடம் எப்படி காதலை எதிர்பார்க்கலாம் என்று மனம் குரங்கு பிடிபிடித்தது!

"சரி கார்த்திக்.... உனக்கு அந்த கஷ்டம் வேண்டாம்.... நானே போயிடறேன்..." என்று நினைத்து கொண்டு கடைசியாக அவனிடம்,

"நான் ஒண்ணும் ஊர் சுத்த போகலை... என் மேல நீங்க ஒரு குற்றசாட்டு வைத்தீங்க.... ஞாபகம் இருக்கா? நான் முதுகுல குத்திட்டேன்னு...." என்று சொல்லி இடைவெளி விட்டாள்... கார்த்திகேயன் நிமிர்ந்து அவளை பார்த்தான்!

"அதை நான் தப்புன்னு நிரூபிக்கத்தான் இவ்வளவு நாள் காத்துகிட்டு இருந்தேன்... இதை கேளுங்க...." என்று அவளது செல்பேசியின் மெயில் பாக்ஸில் வந்து ஸ்ரீ அனுப்பி இருந்த ஆதாரங்களை

ப்ளே செய்தாள்! அரவிந்தனுக்கும் இன்னொரு போதை மருந்து வியாபாரிக்கும் இடையிலான உரையாடல் மற்றும் காலாவதியான மருந்துகளை மறுவிற்பனை செய்வது தொடர்பான உரையாடல்கள்... இதற்காகத் தானே கிருஷ்ணாவும் அவனும் காத்து கொண்டிருந்தது!

"இது எப்படி கிடைத்தது...." என்று அவன் நிமிர்ந்து கேட்க...

"அது உங்களுக்கு அவசியம் இல்லை கார்த்திக்... உங்களுக்கு எப்படி வெறுத்து போச்சோ.. அதைவிட அதிகமா வெறுத்து போய்தான் நானும் இருந்தேன்... இனிமே நீங்களும் வேண்டாம்... எனக்கு இந்த குழந்தையும்...." என்று கூற வந்தவள் ஒரு நிமிடம் நிறுத்தி

"வேண்டாம்....." என்று முடித்தாள்!

"அப்படின்னா...."

"எனக்கு என் லட்சியம் முக்கியம்...."

"அதுக்காக...."

"நான் போறேன்...."

"அப்போ குழந்தை...."

"எனக்கு வேண்டாம்...."

"என்ன செய்வ...." இயந்திரமாக வந்து விழுந்தன வார்த்தைகள்!



"எவ்வளவோ வழி இருக்கு...."

"உன் வாயால சொல்லு... அதை நான் காது குளிர கேட்டுக்கறேன்...." என்று உணர்ச்சியே இல்லாமல் கூறியவனிடம், மனதை கல்லாக்கி கொண்டு,

"அபார்ஷன் பண்ணிக்குவேன்...." சொல்லி முடிக்கும் போதே கண்களில் பூச்சி பறந்தது! ருத்ர மூர்த்தியாக நின்று கொண்டிருந்தான்!

## 19

வீட்டை விட்டு வெளியே வந்தவள் கால் போன போக்கில் நடக்க ஆரம்பித்தாள்! எங்கு போவது என்ன செய்வது என்ற குறிக்கோள் இல்லாத நடை. தலையை கையால் தாங்கி முகத்தை மூடி கட்டிலில் அமர்ந்து இருந்தவனை ஒரு முறை முழுக்க பார்த்து விட்டு வந்தவள் தான்! மங்கை கோயிலுக்கு சென்று இருந்ததால் திவ்யா வெளியேறியது யாருக்கும் தெரியவில்லை! செல்பேசியையும் எடுக்காமல், பணத்தையும் எடுக்காமல் வெளியேறியவளுக்கு எந்த பாதையில் செல்வது என்பது கூட புரியவில்லை.... கால் போன போக்கில் நடக்க.... சென்று முடிந்த இடம் தேவாலயம்!

தன்னையும் அறியாமல் உள்ளே சென்று அமர்ந்தாள் திவ்யா! தேவ அன்னை அவளை அணைத்து தன்னுள்ளே உள்வாங்கி கொள்வதாக ஏதோ ஓர் நினைவு ஓடியது! அன்னையின் மடி தேடியது மனது...! தேவ அன்னையின் முன் அமர்ந்து இருந்தவளுக்கு வருவோர் யார்? போவோர் யார்? என்பதும் புரியவில்லை! குமுறிக் கொண்டு வந்த அழுகையை எப்படி அடக்குவது என்று புரியாமல் அன்னையை பார்த்து கொண்டிருந்தாள்! ஏன் இந்த அழுகை என்பதுகூட புரியவில்லை.... நானாகத் தானே பேசினேன்... அபார்ஷன் செய்து கொள்வதாக கூறினேன்... பின் எதற்காக இந்த அழுகை?

அன்னையை பார்த்து கொண்டிருந்தவளுக்கு கண்களில் நீர் பெருக்கெடுக்க துடைக்கக் கூட தோன்றாமல் அமர்ந்து இருந்தாள்! பக்கத்தில் இன்னொரு பெண் இவளை போலவே வெகு நேரமாக அமர்ந்து கண்களில் நீர் வழிய ஜெபித்து கொண்டிருந்தாள்! திரும்பி அவளை பார்த்த போது அவளும் திரும்பி திவ்யாவை பார்த்தாள்!

"என்னம்மா.... உங்க வீட்டுக்காரருக்கும் முடியலையா?" அந்த பெண் கேட்க திவ்யா கசப்பாக புன்னகைத்தாள்! அந்த பெண்ணே தொடர்ந்தாள்!

"அது ஆட்டோரிக்ஷா ஓட்டுதும்மா... குடிச்சு குடிச்சு உடம்பை சீரழிச்சு, இப்போ ஜிப்மர்ல தான் இருக்கு... என்ன பண்ண விதின்னு விட முடியலையே... பேருக்காவது புருஷன் வேணுமே... அதான் மேரியம்மாகிட்ட யாசகம் கேக்க வந்தேன்...." என்று கூறி கொண்டிருந்தவள் உடைந்து அழ ஆரம்பித்தாள்!



"அது இல்லைன்னா எனக்கு இந்த உலகத்துல ஒண்ணுமே இல்லம்மா.... எல்லாத்தையும் ஏற கட்டிட்டு நானும் போய்டுவேன்... இன்னைக்கு தான் அதுக்கு ஆப்பரேஷன் பண்ணுறாங்க... அதான்..." என்று கூறி கதற...

"கவலைபடாதீங்கம்மா.... கண்டிப்பா சரி ஆயிடும்...." என்று அவளால் முடிந்த ஆறுதலை அந்த நேரத்துக்கு அளித்தாள்! இந்த பெண்கள் திருந்தவே மாட்டார்களா? என்னதான் குடித்துவிட்டு அடித்து உதைத்தாலும் அந்த ஆணுக்கு ஏதாவது ஒன்று என்றால் இப்படி தான் ஏமாளித்தனமாக இருப்பார்களா? இதற்கு பெயர்தான் பத்தினித்தனமா? இந்த மாதிரியான பத்தினித்தனத்தை தான் கார்த்திக்கும் தன்னிடம் எதிர்பார்த்தானா? தாலி ஒன்றை கட்டி விட்டால் போதும் தான் செய்த அனைத்தும் குற்றமில்லை என்ற அவனை எண்ண தூண்டிய சமூக கட்டமைப்பு இதுதானோ? இந்த மனோபாவத்துக்கு ஏழை பணக்காரன் என்ற பாகுபாடு கிடையாதோ.

அவனது அந்த ஆணாதிக்க கட்டமைப்பை தவறென்று கூறினால் இப்போது எதற்காக அழுகிறாய்

என்று புத்தி அவளை கேள்வி கேட்டது! சிறிதும் காதலில்லாமல் தொட்டு விட்ட கடமைக்காக தாலி கட்டியவனிடம் இருந்து எதை நீ எதிர்பார்க்கிறாய் என்று அந்த புத்தி எள்ளி நகையாடியது.

அவன் செய்தது குற்றமென்றாலும் அதற்கு எத்தனை முறை எவ்வாறெல்லாம் மன்னிப்பு கேட்டான்.... அதை நீ புரிந்து கொண்டாயா? அவன் செய்தது தவறென்று கூறுகையில்... நீ பேசிய வார்த்தைகளின் பொருள் உணர்ந்து தான் பேசினாயா? மனம் அவளை திருப்பி கேள்வி கேட்டது... அவனை நீ வெறுக்கிறாய் என்றால் அவனது வெறுப்பும் கோபமும் உன்னை பாதித்த காரணம் என்ன திவ்யா?.... கடைசியாக அவளது முகத்தை பார்க்காமல் அவன் கூறிய வார்த்தை....

"என் முகத்துல விழிக்காதே திவ்யா...."

இந்த அளவு அவனது வெறுப்பு தன்னை பாதிக்குமா என்ன? கண்மூடித்தனமாக அவன் தன்னை கட்டாயப்படுத்தி மணந்து கொண்டவன் என்ற வெறுப்பில் இருந்த தனக்கு அவனது வார்த்தைகள் இப்படி காயப்படுத்துமா? நடை பிணமாக அல்லவா நடந்து வந்தேன்.... அவனது விருப்பங்களை எப்போதும் மதித்ததில்லையே... ஆனால் அவன் வெறுத்து ஒதுக்கி முகத்தில் விழிக்காதே என்று கூறிய அந்த நிமிடம் உயிர் இறந்து மறுபடி உயிர்த்ததே! இதற்கு என்ன காரணம்?



நோக்கம் இல்லாமல் அவளது மனதும் புத்தியும் ஒன்றை மாற்றி ஒன்று சண்டையிட்டு கொண்டு இருந்தன!

✤ ✤ ✤

நெடுநேரம் அதே இடத்தில் அமர்ந்து இருந்தவன் நிமிர்ந்து பார்த்த போது அறையில் திவ்யா இல்லை! அவனது குழந்தையின் நிலை அவனை வாட்டியது. ஒரு வேளை நிஜமாகவே குழந்தையை கலைத்து விடுவாளோ என்ற பயம் அவனை ஆட்டிப்படைத்தது! அவளது மனநிலை அவனுக்கு புரியாமல் இல்லையே... தன்னை ஏற்றுக் கொள்ள முடியாமல் அவள் தத்தளிப்பதை பார்த்து இந்த ஒரு மாதத்தில் அவளை நெருங்காமல் தானே இருந்தேன்! ச்சே.... நேற்றும் இன்றையும் தான் ஏதோ பிசாசு புகுந்துவிட்டது போலும் தனக்குள்! அவளாக தன்னைப் புரிந்து கொள்ளட்டும் என்றே இருந்து இருக்கலாமோ? குழந்தையாவது தப்பித்து இருக்குமோ?

மனைவியை அடிப்பவன் கோழை என்று எக்காளமிடும் தான் தானா திவ்யாவை இந்த நிலையில் அடித்தது? அவளே இன்னொரு குழந்தையை போல் அல்லவா? உயிருக்கு உயிராக அவளை காதலித்து விட்டு அவள் சிறுபிள்ளை தனமாக பேசினாள் என்பதற்காக இப்படியா நடந்து கொள்வது? அவளது குணம் தான் தெரிந்ததாயிற்றே.... அதன் பின்னரும்

அவளை.... ச்சே என்று அவனது மனம் அவனை திட்டி தீர்த்தது! கிருஷ்ணாவும் தானும் ஆதாரங்களுக்காக தேடி அலைந்து கொண்டிருந்த போது மிக சாதாரணமாக சாதித்த திறமைசாலியை பாராட்டாமல் விட்டாலும் அவளை வெறுத்து பேசி இருக்கவும் கூடாது, அடித்து இருக்கவும் கூடாது.... கடவுளே... எனக்கு நீ பொறுமையை கொடுக்கவே மாட்டாயா?

இதெல்லாம் தெரிந்தால் வைஷ்ணவியும் அம்மாவும் என்ன சொல்வார்களோ? அதற்குள் அவளிடம் மன்னிப்பு கேட்க வேண்டும்.... அவளிடம் மன்னிப்பு கேட்பதற்கு ஏன் தயங்க வேண்டும்... எனது மனைவி... என் உயிருக்கு உயிரான காதலி... எனக்கு தோள் கொடுத்த தோழி. எல்லாவற்றுக்கும் மேலாக எனது குழந்தையின் தாய்!

மனதில் தீர்மானம் வந்த பின்னர் அவளை அவசரமாக தேடியது மனது! மாடியில் இருந்து இறங்கி வீடெங்கும் தேடினான்! அப்போதுதான் கோவிலில் இருந்து வந்து இருந்தார் மங்கை!

"ஹப்பா.... கோவில்ல செம கூட்டம் கார்த்தி.... திவ்யா எங்கப்பா.... பாவம் வரும் போதே தங்கம் ரொம்ப சோர்வா தெரிஞ்சா...."

"அம்மா.... நீங்க இப்போ தான் வந்தீங்களா? வீட்டுல நீங்க இல்லையா?" புரியாமல் கேட்டான் கார்த்தி!



"ஆமா கார்த்தி..... நான் உன் கிட்ட சொன்னேனே... இன்னைக்கு சதுர்த்தி... மணக்குள விநாயகர் கோயிலுக்கு போயிட்டு வரேன்னு.... அதுவும் இல்லாம நல்ல செய்தி சொல்லி இருக்கா ஜானகி... அதான் உங்க ரெண்டு பேர் பேருக்கும் அர்ச்சனை பண்ணிட்டு வரேன்னு சொல்லிட்டுதானே கண்ணா போனேன்..." சொன்னது எங்கே காதில் விழுந்தது? அவள் மேல் கோபத்தில் கண் மண் தெரியாமல் இருந்தானே.... தாயிடம் காட்டி கொள்ளாமல்!

"பாவம் வந்த குழந்தை காபியாவது குடிச்சாளோ இல்லையோ.... அவசரமா தங்கத்து கிட்ட சொல்லிட்டு போனேன்... எங்க கார்த்தி திவி? அவனிடமே கேட்டவருக்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் விழித்தான் கார்த்திகேயன்...

"தெரியலம்மா... அவளை தான் நானும் தேடிகிட்டு இருக்கேன்... பின்னாடி தோட்டத்துல இருக்காளோ என்னவோ?" அவனது பேயறைந்த முகம் எதையோ உணர்த்தியது மங்கைக்கு!

"கார்த்தி.... உண்மைய சொல்லு.... என்ன ஆச்சு?"

"ஒண்ணுமில்லமா... தோட்டத்துல இருப்பா...." மென்று விழுங்கி கொண்டு கூறியவனை பார்த்தபோது கண்டிப்பாக இவன் ஏதோ மறைக்கிறான் என்று எண்ணி கொண்டிருக்கும் போதே,

"ஹாய் அண்ணா... ஹாய் பெரியம்மா...." என்று ஸ்ரீராம் உள்ளே வந்தான்! அவனை பார்த்தபோது தான் மனதில் நிம்மதி வந்தது.... எப்படியும் ஸ்ரீயிடம் அவள் பேசாமல் இருக்க மாட்டாளே!

"வா ஸ்ரீ.... வீட்ல எல்லாரும் சௌக்கியமா?" மங்கை பாந்தமாக விசாரித்தார்!

"அங்க எல்லாரும் பரமசௌக்கியம்... அந்த கழுதை எங்கம்மா..." திவ்யாவை குறித்து கேட்க,

"டேய்... என் மருமகளை கழுதைன்னு சொல்ல எவ்வளவு தைர்யம் இருக்கணும்..." சிரித்து கொண்டே அவர் கேட்க

"ஆஹா... ஒண்ணு கூடிட்டாங்கப்பா.... ஒன்னு கூடிட்டாங்க...." என்று கிண்டலடிக்க மங்கை சிரித்து கொண்டே சமையலறைக்கு சென்றார்... சமையல் காரரிடம் காபியோடு டிபனை சேர்த்து செய்ய சொல்ல, கார்த்தியை குழப்பமாக பார்த்து கொண்டே!

"அண்ணா.... என்ன? ஏன் ஒரு மாதிரியா இருக்கீங்க? திவி எங்கே?"

"அவளை தான் நானும் தேடிகிட்டு இருக்கேன் ஸ்ரீ.... போன் ஹேண்ட்பேக் எதுவும் எடுக்காம வெளிய போய் இருக்கா..." தலையில் கை வைத்து கொண்டு கூற அவனுக்கு பகீரென்றது!



"என்ன சொல்றீங்க? சாயங்காலம் பேசும்போது கூட நல்லா தானே பேசினா. அப்புறம்.... ஏன் ண்ணா ஏதாவது சண்டையா? ஆனா இன்னைக்கு அரவிந்த ட்ரேஸ் பண்ணதுக்கு அப்புறம் கண்டிப்பா உங்க ரெண்டு பேர் இடைல இருக்க பிணக்கு சரி ஆகிடும்ன்னுல நினைச்சேன் கார்த்தி அண்ணா...."

"நீ நினைச்சுகிட்டே இரு ஸ்ரீ.... எதுவுமே சொல்லிடாதே...." கடுப்படித்தான் கார்த்தி!

"அண்ணா.... அதை அவ வாயால சொல்லணும்... உங்க ரெண்டு பேருக்கம் எல்லாம் சரியாகணும்ன்னு நினைச்சேன்.... ஏன்னா நீங்க தப்பா நினைச்சது அவளைதான்னு எனக்கு தெரியும்..."

"ம்ம்ம்.... சொன்னா.... நல்லாவே சொன்னா... எல்லாத்தையும் சொல்லிட்டு நீயும் வேணாம்.... உன் குழந்தையும் எனக்கு வேணாம்ன்னு சொல்லிட்டு போய்ட்டா...." முகத்தை கை வைத்து மறைத்து கொண்டு அவன் கூற.... கலங்குகிறானோ? ஸ்ரீராமுக்கு மனம் வலித்தது!

"என்ன சொல்றீங்க அண்ணா.... குழந்தையா? அதை அவ வேணாம்ன்னு சொல்லிட்டு போய்ட்டாளா? ஒண்ணுமே புரியலையே...."

"ம்ம்ம் ஆமா... போய்ட்டா... எங்க போனான்னு புரியலை... விட்டுட்டு போய்ட்டா...." நிமிர்ந்தே பார்க்கவில்லை அவன்... ஒரு பெண்ணின் வெறுப்பு

இந்த அளவு ஒரு மனிதனை பலவீனப்படுத்துமா? பெண்கள் பலவீனர்களா? ஆண்கள் பலவீனர்களா?

"அண்ணா.... ப்ளீஸ்... கொஞ்சம் பொறுமையா யோசிங்க.... கண்டிப்பா அவ எங்கயும் போய்ட மாட்டா... நிதானமா யோசிங்கண்ணா...." என்று கூறிவிட்டு வேலையாட்களை கேட்க அவள் கொஞ்ச நேரத்திற்கு முன் தான் வெளியே சென்றது தெரிய வந்தது! காரை எடுக்காமல் நடந்தே சென்றதாக கூற மனம் நொந்து போனான் கார்த்திகேயன்.... அதுவும் இந்த நேரத்தில்..... இப்படிபட்ட உடல்நிலையில்.... தன் மனைவி எப்படி சிரமப்படுகிறாளோ என்று எண்ணி தன்னை தானே திட்டி கொண்டான்! மங்கைக்கு தலை சுற்றி கொண்டு வந்தது! இதனால் தான் தன்னிடம் பதில் கூறாமல் மழுப்பினாயா என்று கார்த்திகேயனை உலுக்க நினைத்து கைவிட்டார்! அவனும் நொந்து போய்தானே இருக்கிறான்!

இருவருமாக காரில் ஊரை சுற்றி வந்தனர்... இந்த ஒரு மாதத்தில் அவளை எங்கும் அழைத்தும் போனதில்லையே.... வரமாட்டாளே! என்ன இடம் இந்த புதுவையில் தெரிந்து இருக்கும்? பைத்தியம் பிடித்தவன் போல ஒவ்வொரு இடமாக தேடினான்! கிருஷ்ணாவிடம் சொல்லி பத்து பேரை அழைத்து கொண்டு ஆளுக்கொரு இடமாக தேட சொல்லி ஸ்ரீயை அழைத்து கொண்டு தெரு ஒன்றுவிடாமல் தேடி கொண்டு கடற்கரையோரம் பார்த்து கொண்டே வந்தான்!



தலையை பிய்த்து கொண்டு ஓடாத நிலைமை! ஸ்ரீராம் தைரியம் கூறிக் கொண்டே வர, கடற்கரையை ஒட்டிய ரிச்சி ஸ்ட்ரீட்டில் தேடி கொண்டு வந்த போது பிளாட்பார்மில் யாரோ ஒரு பெண்ணிடம் நான்கு ஆண்கள் குடித்து விட்டு கலாட்டா செய்து கொண்டிருந்தது தெரிந்தது! காரை மெதுவாக செலுத்தி கொண்டே பார்க்க,

"திவ்யா."

கார்த்திகேயன் உயிர் மீண்டது!

அவசரமாக காரை நிறுத்தி விட்டு ஓடினான் கார்த்திகேயன், ஸ்ரீராம் பின்னால் ஓடி வர!

"திவ்யா......."

திருவிழாவில் தாயை தொலைத்த குழந்தை மீண்டும் தாயை கண்டால் எவ்வளவு சந்தோஷப் படுமோ அந்த நிம்மதியில் அவளை அழைக்க, அந்த முரடர்கள் இன்னமும் அவளிடம் வம்பு செய்து கொண்டிருந்தனர்! திவ்யா ஏதாவது பற்று கிடைக்காதா என்று அழாத குறையாக பார்த்து கொண்டிருக்க.... கார்த்தி இரண்டே எட்டில் அவர்களை நெருங்கி ஒருவனை இழுத்து வைத்து அறைந்தான்!.... கப்சிப்! அந்த கூட்டம் அப்படியே பின்வாங்கி கொண்டு ஓடியது!

"ஸ்ரீ....." கதறி கொண்டு கார்த்தியை தாண்டி ஸ்ரீராமிடம் தஞ்சம் புகுந்தாள் திவ்யா! சில்லுசில்லாக

உடைந்தான் கார்த்திகேயன்! இந்த நேரத்தில்கூட தன்னிடம் வர பிடிக்கவில்லையா? ஸ்ரீராமின் கழுத்தை கட்டிக் கொண்டு கதறி அழும் தனது மனைவியை பார்த்தான் கார்த்திகேயன்.... நெஞ்சில் வலி!

"ஸ்ரீ வேணாம் ஸ்ரீ..... வேணாம்.... இந்த வாழ்க்கையே எனக்கு வேணாம்.... நம்ம வீட்டுக்கு போய்டலாம் ஸ்ரீ.... நம்ம வீட்டுக்கு போய்டலாம்... ப்ளீஸ் கூட்டிட்டு போ.... என்னை கூட்டிட்டு போடா..." கதறி துடித்த மனைவியை பார்த்த கார்த்திகேயனுக்கு இதயத்தில் பூகம்பம்! தொலைத்த தாய் பசுவை கண்ட கன்றாக திவ்யா ஒரு நொடி விடாமல் பிதற்றி அழுது கொண்டிருந்தாள்! ஆற்றுவாரும் தேற்றுவாரும் இல்லாமல் பொங்கி பொங்கி கதறிய திவ்யாவை பார்த்து கசப்பாக புன்னகைத்து பின்வாங்கினான் கார்த்திகேயன்! இருவரையும் விட்டு தனியே மனம் போன போக்கில் நடக்க ஆரம்பித்தான்!

அவன் போய் நின்ற இடம் கடற்கரை! மணி பதினொன்றை தாண்டி இருந்த நேரத்தில் ஒன்றிரண்டு வாகனங்கள் மட்டும் அங்கும் இங்கும் போய் கொண்டிருந்தன! பிளாட்பார்மில் சரிந்து அமர்ந்தான்.... பக்கத்தில் குப்பை தொட்டி! நாய் அந்த குப்பை தொட்டியில் தன் உணவைத் தேடிக் கொண்டிருக்க... அதனருகே கார்த்திகேயன்! புதுவையின் நிழல் முதல்வன்! தொழிலில் யாராலும் அணுக முடியாத



வெற்றியாளன்.... மிகப் பெரிய சாம்ராஜ்யத்தை உருவாக்கி.... ஜெய்த்து கொண்டிருக்கின்ற பேரரசன்! எத்தகைய பிரச்சனையாக இருந்தாலும் கலங்காமல் எதிர் கொள்ளும் சிங்கம்.... இன்று...???

பிளாட்பாரமில் வசிக்கும் ஒரு குடும்பம் அருகில் படுத்து இருக்க... அவர்களுக்கு மூன்று குழந்தைகள்! நை நை என்று சிறு குழந்தை ஒன்று அழுது கொண்டிருக்க அதை சமாதானப்படுத்தும் முயற்சியில் பெற்றோரோடு சேர்ந்து மற்ற இரு குழந்தைகளும்! அந்த காட்சியை கண்கொட்டாமல் பார்த்து கொண்டிருந்தான் கார்த்திகேயன்.

இந்த மாதிரி குடும்பம் என்று ஒன்று அமையவும் குடுத்து தான் வைத்து இருக்க வேண்டுமோ? மனதை புரிந்து உடல் பொருள் ஆவியாக கலந்து இல்லறம் நடத்தும் மனையாளும், ஆசைக்கும், ஆஸ்திக்குமாக குழந்தைகளும் அமைவது இறைவனின் கையில் தானோ? யாருடைய குடும்பத்தை குலைத்தேனோ, யாருடைய கருவை கலைத்தேனோ.... யார் இட்ட சாபமோ? கைகளை பின்புறம் ஊன்றி மின்கம்பத்தில் சாய்ந்து அமர்ந்து இருந்தவனின் கண்களில் இருந்து அவனையும் அறியாமல் கண்ணீர்!

## 20

"ஹேய் ..... திவி கண்ணா.... இங்க பாரும்மா... என்னடா... ஏன் இப்படி செய்த?" ஸ்ரீராம் மாற்றி மாற்றி இந்த கேள்வியை கேட்டு சலித்துவிட்டான்... வந்த பதிலோ மௌனம் மட்டுமே... மீண்டும் மீண்டும் அவளது ஜெபம் சென்னைக்கு அழைத்து செல்ல மட்டுமே!

"இங்க பாரு திவி.... உன் இஷ்டத்துக்கு இப்படி எல்லாம் செய்தாக்கா நம்ம வீட்டோட கௌரவம் என்ன ஆகுறது? பொண்ண வளர்க்க தெரியாம வளர்த்து வெச்சு இருக்காங்க பாருன்னு எங்களை தான் திட்டுவாங்கம்மா.... உன் பிறந்த வீட்டுக்கு இப்படி பேரைத்தான் வாங்கி தர நினைக்கிறியா?" கொஞ்சம் கடுமையாக அவன் கேட்கவும்,

"என்ன நடந்துதுன்னு உனக்கு தெரியாது ஸ்ரீ... முகத்தை கல்லாக்கி எங்கோ பார்த்து கொண்டு அவள் பதில் உரைக்க...

"கார்த்தி அண்ணாவ பற்றியும் உனக்கு சரியாவே தெரியலை குட்டி...."

"உனக்கு என்ன தெரியும் அவன பத்தி?" கோபத்தில் வார்த்தை தடிக்க,



"அடிச்சு பல்ல கழட்டிடுவேன் ராஸ்கல்... என்ன அவன் இவன்னு..." அவனுக்குமே கோபம் வந்தது!

"உனக்கு கண்டிப்பா தெரியாது ஸ்ரீ.... நான் விரும்பியோ அவன்... அவர் விரும்பியோ இந்த கல்யாணம் நடக்கல... இந்த கல்யாணமே ஒரு விபத்து... அது உனக்கு தெரியுமா?" மனதில் அழுத்தி வைத்து இருந்தது வெளியே வந்தது!

"தெரியும் திவிம்மா.... எனக்கு எல்லாமே தெரியும்..." அவனை அதிர்ச்சியாக பார்ப்பது திவ்யாவின் முறையானது!

"என்ன... இப்போ உன்கிட்ட சொல்லி மன்னிப்பு கேட்டு இப்பாப்ல... இப்போ மறைக்க முடியாதில்ல... ஆம்பிளைன்னா என்ன வேணும்னாலும் செய்யலாம்... எப்படி வேணும்னாலும் போகலாம்... இல்லையா...." ஏளனமாக கூறினாள்!

"அண்ணன் சொன்னது இப்போ கிடையாது.... மாமாவ ஹாஸ்பிட்டல்ல அட்மிட் பண்ண மறுநாள்... அதாவது உன்னை பொறுத்தவரைக்கும் நீ அந்த நியூஸ் பிளாஷ் பண்ண அடுத்த நாள்... புரியுதா?" என்று அவன் கூறியதை அவள் நிச்சயமாக எதிர்பார்க்க வில்லை என்பதை அவளது முகமே உணர்த்தியது! யாரிடமும் ஒன்றையும் கூறாமல் தான் செய்த தவறை காதும் காதும் வைத்தது போல சரி செய்ய முயன்றான் என்பதுதானே அவளது முதல் குற்றசாட்டு! அடிப்படையே ஆட்டம் கண்டது!

"தெரிஞ்சுமா ஸ்ரீ.... நீயும் இந்த கல்யாணத்துக்கு ஒப்புகிட்ட? ஏற்று கொள்ள கூடாது என்ற உணர்வு!

"கார்த்தி அண்ணன பற்றி முழுசா தெரிஞ்சுகிட்டு பேசு திவி... ஆரம்பத்துல இருந்தே ஏதோ நீயா அவரை பற்றி ஒரு டெம்ப்ளேட் க்ரியேட் பண்ணி வச்சுகிட்டு இருக்க.... அப்படி கிடையாது.... அவர் ஒரு டைனமிக் பெர்சனாலிட்டி... நினைத்து இருந்தா இந்த கல்யாணத்தை நடத்தாம விட்டிருக்கலாம்.... செய்தாப்பலையா? இல்லையே..."

"அப்படீன்னா ஆம்பிளைங்கற திமிர்ல அவன்... அவர் பண்ணது தப்பே கிடையாதுன்னு சொல்லவர இல்லையா.... உன்கிட்ட வேற என்ன எக்ஸ்பெக்ட் பண்ண முடியும்? நீயும் ஆம்பிளைதானே..."

"திவிகுட்டி..... தப்பு செய்தது நிஜம்... அதை நினைச்சு கார்த்தி அண்ணா எவ்வளவு வருத்தப் பட்டாங்கன்னு எனக்கு தெரியும்டா... மன்னிப்பு கேக்கறது மனிதத்தன்மைன்னா மன்னிக்கறது தெய்வதன்மை... அதுவும் இல்லாம இப்போ அவர் யாரோ இல்லையே திவி.... உன் ஹஸ்பண்ட்... உன்னோட பெட்டர்ஹாப்.... இங்க கூட உன்னோட பெண்ணியத்தை பேசி உன் வாழ்க்கைய பாழ் பண்ணிக்காதேம்மா..." ஸ்ரீராம் அவனுக்கு தெரிந்த வரையில் கெஞ்சினான்!



"ஸ்ரீ... உனக்கு என்னோட நிலைமை புரியல.... ஒரு பெர்சென்ட் கூட காதலிக்காம... ஒரு குழந்தைய சுமக்கறது எந்த அளவு கொடுமைன்னு உனக்கு புரியலை..." மனதின் அடி ஆழத்தில் தேக்கி வைத்த உணர்வுகளை அவனிடம் கொட்ட ஆரம்பித்தாள்!

"என்ன சொல்ற திவி.... எனக்கு புரியலை...."

"கார்த்திக் என்னை கல்யாணம் செய்ததே... அந்த சம்பவத்தால மட்டும் தான் ஸ்ரீ.... அந்த தப்பை சரி செய்ய மட்டும்தான்.... மற்றபடி காதலோ மண்ணாங் கட்டியோ இல்ல..." குரல் மறுபடி தழுதழுத்து அழுகையில் முடிந்தது!

"அட லூசு... அப்படீன்னு நீயா நினைச்சு கிட்டியா? அண்ணா உன்னை எவ்வளவு லவ் பண்றாங்கன்னு அவங்க கண்ணை பார்த்து கூடவா புரிஞ்சுக்க முடியலை? என்னடா நீ..." ஒரு புதிர் விடுபட்ட உணர்வு அவனுக்கு! ஆக மொத்தம் இவளது பிரச்சனை இதுதான் என்பது புரிந்தது!

"என்ன சொல்ற ஸ்ரீ...." முகம் வியப்பில் ஆழ்ந்தது!

"பின்ன என்னவாம்... அண்ணாவே என்கிட்ட சொன்னது இது... இப்போ இல்லை... கல்யாணத்துக்கு முன்னாடி...."

"ஸ்ரீ...." உள்ளுக்குள் ஏதோ ஒரு உணர்வு... நிம்மதியா?

"அட மக்கு மண்டூகமே... அண்ணா உன்னை பார்த்த முதல் பார்வைலேயே அவுட்டாம்... அப்போ அவரும் புரிஞ்சுக்காம இருந்து இருக்கார்... ஏதோ ஒரு சந்தர்ப்பத்துல அய்யாவுக்கு புரிஞ்சு இருக்கு... ஆனா நீ அதுக்குள்ளே என்னன்னவோ வேலை செய்துட்ட ஆத்தா...." அந்த சந்தர்ப்பத்தை அவளாலும் உணர முடிந்தது.... அந்த இரவு...!

"நிஜமாவா ஸ்ரீ..... எனக்காக பொய் ஒண்ணும் சொல்லலியே... ஏன் நீ இவ்வளவு நாள் ஒண்ணுமே சொல்லல..."

"நீயும் இதை பத்தி என்கிட்ட டிஸ்கஸ் பண்ணவே இல்லையே குட்டி... நீயே சொல்லாதப்போ நான் எப்பிடிடா உன்னோட பர்சனல் உள்ள வருவேன்...." நண்பனை பெருமையாக பார்த்தாள்! **அவனே** சிரித்தவாறு தொடர்ந்தான்....

"எல்லாரும் வொய்ப்க்கு டிவி வாங்கி தருவாங்க.... இங்க ஒரு கூமுட்டை ஆசைப்படு தேன்னு ஒரு டிவி கம்பெனியவே விலை பேசி முடிச்சு இருக்காங்க கார்த்தி அண்ணா... அந்த கூமுட்டை யாருன்னு சொல்லு பார்க்கலாம்...." என்று புதிர் போடுவது போல அவளது தலையை தட்டி சொல்லவும், சட்டென்று ஏற்பட்ட மகிழ்ச்சி வெள்ளத்தை சமாளிக்க முடியாமல் திணறினாள் திவ்யா!

"நிஜமாவா ஸ்ரீ...."



"ம்ம்ம்... இங்க நட்ட நடு ராத்திரில உன்கிட்ட பொய் சொல்லணும்ன்னு எனக்கு வேண்டுதல் பாரு... சரி இப்போ அண்ணா பண்ணது தப்பு இல்லையா..." வேண்டுமென்றே சிரித்து கொண்டு ஸ்ரீ கிளற....

"சில விஷயங்களை மறக்கலாம்ன்னு நினைக்கறேன் ஸ்ரீ...."

"ரொம்ப நொந்து போய்ட்டாப்ல மனுஷன்... பாவம்டா... எவ்வளவு கம்பீரமான பெர்சனாலிட்டி... இன்னைக்கு அப்படியே அவமானத்துல குறுகிப் போய் இருந்தத பார்த்தா எனக்கு அப்படியே கோபம் பத்திகிட்டு வந்துச்சு உன்மேல... இப்படியா வீட்டை விட்டு வருவ... என்னவா இருந்தாலும் வீட்டுக்குள்ள தானே இருக்கணும்... நாலு சுவரை தாண்டிட்டாலே அது பொது பிரச்சனை ஆய்டுமே திவி... உனக்கு இது புரியாதா?"

"கொஞ்சம் தான் நொந்து போட்டுமே... ஏன் ஸ்ரீ... எதுக்கெடுத்தாலும் கைய ஓங்கினா எனக்கும் கோபம் வராதா?"

"நீ என்ன பேசின?... அண்ணன் அடிக்கற அளவு?"

"இதுதான் ஆண்களோட புத்தி... அப்படீன்னா நீங்க தப்பு செய்தா நாங்களும் அடிக்கலாமா?"

"நல்லா அடிப்பா.... யார் வேணாம்ன்னு சொல்றது? இப்போ தொண்ணூறு சதவித வீட்டுல

நடக்கறது அதுதானே... ஆனா நீ என்ன பேசின? அதை சொல்லு..."

"ஏன் அதை உன் அண்ணன் சொல்லலியா?"

"தோடா. இப்போ மட்டும் என் அண்ணனா? என்னமோ என் கார்த்திக்குன்னு சொன்ன... என்ன பிரச்சனைக்கு கேட்டதுக்கு ஒரு வார்த்தை கூட சொல்லல... திவ்யா சின்ன பொண்ணு.... அவ என்ன பேசி இருந்தாலும் நான் அடிச்சு இருக்கக் கூடாதுன்னு மட்டும் தான் சொன்னாங்க..." என்று சொல்லவும் ஒரு விதமான குற்ற உணர்வில் தவித்தாள் திவ்யா?

"அபார்ஷன் செய்துக்க போறதா சொன்னேன் ஸ்ரீ..." என்று மெதுவாக கூறவும் பற்களை நறநறவென கடித்தான்!

"அறிவு கெட்ட முண்டம்.... இதுக்கு எவனா இருந்தாலும் சாத்தி இருப்பான்..... உனக்கு என்ன இப்படி ஒரு தைர்யம்.... இப்படி எல்லாம் பேச யாரு சொல்லி கொடுத்தா? ஏன் இப்படி நம்ம வீட்டோட மானத்தை வாங்குற?"

ஸ்ரீக்கு வந்த கோபத்தை பார்த்து மிரண்டு தான் போனாள்! இதற்கே இந்த கோபம் என்றால் இன்னொரு கேள்விக்கு நிச்சயமாக இவனிடமே அடி கிடைக்கும் தான்.... உன்னுடைய குழந்தைதான் என்பதற்கு என்ன ஆதாரம் என்று தான் கேட்ட கேள்வியை நினைத்து!



"ஒரு சிலருக்கு அவங்களோட காதல உணர்த்த தெரியாம இருக்கலாம்... கொஞ்சம் கடினமானவங்களா இருக்கலாம்... ஆனா அவங்க தான் ரொம்ப நம்பிக்கைக்கு உரியவங்க திவி... பெரும்பாலான ஆண்களோட இயல்பு அதுதான்... அதுவும் ரொம்ப நேர்மையானவங்க கார்த்தி அண்ணா... உன் விஷயத்துல ... வேற யாரையும் நிமிர்ந்து கூட பார்த்தது இல்ல... நிச்சயம் பண்ண ஷாலினி கிட்டயே எப்படி நடந்து இருக்காங்கன்னு உனக்கே தெரியாதா? அப்படிபட்டவரை நீ புரிஞ்சுக்கலையே... ஒரே ஒரு வார்த்தை தான் சொல்ல முடியும்... கார்த்தி அண்ணா உனக்கு கிடைத்த பொக்கிஷம்.... அந்த பொக்கிஷத்தை பத்திரமா வெச்சுக்கறதும் தவற விடறதும் உன் கைல தாண்டா இருக்கு..."

✤ ✤ ✤

ஸ்ரீராம் திவியை அழைத்து கொண்டு வீட்டிற்கு வந்தபோது மணி ஒன்று! பதறி கொண்டு வைஷ்ணவி சென்னையில் இருந்து கிளம்பி வந்திருந்தாள் திவ்யா வீட்டினருக்கு தெரியாமல்! தெரிவிப்பதில் பிரச்சனை ஒன்றும் இருக்க போவதில்லை.... ஆனால் கண்டு பிடித்தபின் சொல்வது அவர்களுக்கு பதட்டத்தை உருவாக்காதல்லவா... அதுவும் இல்லாமல் பெரியவருக்கு இப்போதுதான் ஆஞ்சியோ செய்து இருந்தனர்! இரண்டு மாதமே கழிந்த நிலையில் அவருக்கு அதிர்ச்சி

என்றால்.... நிலைமையை நினைத்து பார்க்கவே பயமாக இருந்தது! அவள் வீட்டிற்கு வந்த போது வைஷ்ணவி கோபத்தில் கொதிக்க, மங்கையும் கார்த்திகேயனும் சைகை காட்டி பேச வேண்டாம் என்று கூற.... ஆனாலும் அவளால் ஆற்றாமை தாங்க முடியாமல்,

"திவி.... உன்னை விளையாட்டு பிள்ளைன்னு நினைச்சேன்.... ஆனா வாழ்க்கைய இப்படி விளையாட்டா எடுத்துகிட்டு விளையாடிட்டு போவன்னு நினைக்கவே இல்லடி.... ச்சே... இப்படியுமா செய்வ? எப்படிப்பட்ட குடும்பத்துக்கு மருமகளா வந்து இருக்கன்னு உனக்கு புரிந்துதான் செய்தியா? இதென்ன நீ பசங்ககூட விளையாடுற சொப்பு விளையாட்டா?" திவ்யாவிடம் பொரிந்து தள்ளி கொண்டிருந்தாள் வைஷ்ணவி! தான் வீட்டை விட்டு வெளியேறிய காரியம் மட்டுமே அறிந்திருந்த வைஷ்ணவிக்கு காரணம் தெரியாதல்லவா?

"வைஷு... தப்பு உன் அண்ணன் மேலயும் இருக்கு... திவிகிட்டயே பொறியாத..." மங்கை வைஷ்ணவியை அடக்க பார்க்க அவளோ தன் அன்னையை முறைத்தாள்!

"அம்மா நீயும் இவளுக்கு செல்லம் கொடுக்காதே... எல்லாரும் ஓவரா செல்லம் குடுத்து தான் இந்த அளவு வந்திருக்கா.... இதோ இங்க நிற்கறானே இவனை சொல்லணும் முதல்ல..." ஸ்ரீராம் மேல் பாய்ந்தாள்



வைஷ்ணவி.... எப்படியாவது திவ்யாவுக்கு அவளது தவறை புரிய வைக்க வேண்டும் என்று நினைத்து கொண்டு!

"ஐயோ... நீங்க சொல்றது ரொம்ப கரெக்ட் வைஷுக்கா... என்ன வேணும்னாலும் இவளை திட்டுங்க... இந்நேரம் வரை என்கிட்டயும் நல்லா அர்ச்சனை வாங்கிட்டு தான் வந்து இருக்கா... நீங்க திட்டறதுக்கு முழு ரைட்ஸ் இருக்குக்கா...." ஜகா வாங்கினான் ஸ்ரீராம்!

அவர்கள் வீட்டு பெண். கண்டிப்பதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்ற தொனியில்! மற்றபடி திவியை விட்டு கொடுப்பவன் அவன் அல்ல என்பதுதான் வைஷு அறிந்த ஒன்றாயிற்றே! வைஷ்ணவி திட்டுவதற்கு ஒன்றும் பேசாமல் கேட்டு கொண்டிருந்தாள் திவ்யா! அதற்குள் சாப்பிட தட்டில் இரண்டு இட்லி எடுத்து கொண்டு,

"ஹய்யோ போதும் வைஷு.... தங்கம் பாவம் களைச்சு போய் இருக்கா... ஈவினிங் கூட சாப்பிட்டாளோ இல்லையோ.... நான் கோயிலுக்கு போயிருக்கக்கூடாது... அவனோட கோபம் தெரிஞ்சும் தங்கத்தை அவன் கிட்ட தனியா விட்டுட்டு போனது என் தப்பு வைஷுகண்ணா... அவ இப்போ சாப்ட்டுட்டு போய் படுக்கட்டும்டா... விடும்மா.." என்று மங்கை கூறவும் தலையில் அடித்து கொண்டாள் வைஷ்ணவி!

"அம்மா... நீயெல்லாம் ஒரு மாமியாரா? மாமியார் பதவிக்கே லாயக்கில்லம்மா நீ... இன்னும் இந்த குழந்தைக்கு ஊட்டி விடு" என்று ஊட்டிவிட்டு கொண்டிருந்த தன் அன்னையை பார்த்து சலித்து கொள்ள, அந்த சலிப்பு வெறும் நடிப்பு என்பது மங்கை அறியாததா?

"பெரியம்மா! உங்க தலைல மிளகாய் அரைச்சுடுவா... பாத்து பாத்து..." ஸ்ரீராம் உடன் சேர்ந்து சலித்து கொண்டு சிரித்தான்! இருவருக்கும் உதட்டை சுளித்து அழகுகாட்டிவிட்டு,

"ச்சே.... என்னை பார்த்து எல்லாருக்கும் பொறாமைப்பா... அத்தை நாம சுத்தி தான் போட்டுக்கணும்..." அதுவரை ஒன்றுமே பேசாமல் மங்கை கொடுத்த இட்லிகளை விழுங்கி கொண்டிருந் தவள், முடிக்கும் போது நக்கலடிக்க, வைஷ்ணவி அவளை அடிக்க கையை ஓங்கினாள்! ஒடி போய் மங்கை பின்னால் ஒளிந்து கொண்ட திவி வெவ்வேவ்வே என்று வைஷ்ணவிக்கு அழகு காட்ட,

"அடப்பாவி... இவளை காணோம்னு சென்னைல இருந்து பதறிகிட்டு வந்தா... இட்லிய முழுங்கிட்டு செய்யற லொள்ள பாரு அண்ணா" கண்களில் உணர்வே இல்லாமல் தொலைக்காட்சி சேனல்களை மாற்றி மாற்றி பார்த்துக் கொண்டிருந்த கார்த்தியை வம்புக்கிழுத்தாள் வைஷ்ணவி!



அப்போதும் எதையும் கண்டுகொள்ளாமல் தொலைக்காட்சியோடு கண்களை ஒட்டினார் போல் பார்த்துக் கொண்டிருந்த தனது அண்ணனின் உணர்வு புரிந்தது! திருமணமாகிய ஒரே மாதத்தில் மனைவி சிறுபிள்ளைதனமாக செய்த காரியம் அண்ணனை வருத்துகிறது என்று நினைத்துக் கொண்டாள்! பொதுவாக இரண்டு வார்த்தை பேசிவிட்டு அறைக்கு சென்றவனை கூர்ந்து பார்த்தாள் வைஷ்ணவி! ஏதோ உறுத்துகிறதே....

"ஓகே... அண்ணி... குட் நைட்... சாரி அண்ணி... உங்களை எல்லாம் டிஸ்டர்ப் பண்ணிட்டேன்... ரியலி சாரி... ப்ளீஸ்..." சிறு குழந்தையாக தன்னிடம் மன்னிப்பு கேட்கும் திவியை ஆதரவாக தலையை தடவினாள்!

"திவிம்மா... நீ இப்போ சின்ன பிள்ளை கிடையாதும்மா... பார்க்க போனா எனக்கு அண்ணி முறை ஆகுது.... சின்ன சின்ன பிரச்சனை எல்லார் வீடுகள்லயும் இருக்கறதுதான்... அதுக்காக இப்படி செய்யறது ரொம்ப தப்புடா... அண்ணாவ பார்க்கவே சகிக்கல.... ஒரு வார்த்தை கூட நல்லபடியா பேசல. ப்ளீஸ் திவி... இது சாதாரண குடும்பம் இல்லை.... ஊரெல்லாம் அழைச்சு எவ்வளவு பெருமையா செய்தாங்க உங்க கல்யாணத்தை... ஒரே மாதத்துல இப்படி ஒரு சம்பவம்னா அண்ணன் பேர் எப்படி டேமேஜ் ஆகும் தெரியுமா திவி.... புரிஞ்சு நடந்துக்கோடா" நடந்த எதை பற்றியும் அறியாமல் ஒரு கார்த்திகேயனின்

தங்கையாக திவிக்கு அறிவுரை கூற, அதை சிரித்தவாறே கேட்டு கொண்டாள் திவி!

வைஷ்ணவி அறிவுரை கூறும் போதெல்லாம் எதை கூறி வைப்பாளோ என்ற பயத்தில் பார்த்து கொண்டிருந்த ஸ்ரீராம் கொஞ்சம் நிம்மதி பெருமூச்சு விட்டான்! வெளியே சொல்லக் கூடாது என்பதற்காக அல்ல... தன் தோழியின் வாழ்க்கை யாருக்குமே அவலாக இருக்கக் கூடாது என்பதற்காகவே!

"அவ தூக்கம் கெடுதும்மா... நாளைக்கு பேசேன் வைஷு கண்ணா..." என்று கூறி மருமகளை மாடிக்கு கிளப்பி விட்டு ஸ்ரீராமை விருந்தினர் அறையில் உறங்க கூறிவிட்டு தன்னறைக்கு வைஷ்ணவியை அழைத்து சென்றார் மங்கை!

பார்க்கும் போதே ஸ்ரீராமின் மனம் நிறைந்தது! இப்படி உறவுகள் கிடைக்க திவி கொடுத்து தான் வைத்திருக்க வேண்டும் என்று நினைத்து கொண்டான்! நிச்சயம் திவி சமாளித்து கரை சேர்வாள் என்ற நம்பிக்கை வந்தது!

✤ ✤ ✤

அறைக்குள் போகும் போதே படப்படப்பாக இருந்தது திவ்யாவிற்கு! எப்படி கார்த்திகேயனை எதிர்கொள்வது என்ற பயம் தான்! இவ்வளவு சீக்கிரம் நீ அவனை மன்னித்து விடுவாயா? அவன் உன்னிடம்



இருந்து பறித்தது சாதாரண ஒன்றை இல்லை திவி என்று உள்மனம் எடுத்துரைக்க அவளது புத்தியோ அவனை அப்படியே நிறைகுறைகளோடு ஏற்று கொள்ளவே நினைக்கிறேன்... எப்படி இருந்தாலும் உணர்ந்து மன்னிப்பு கேட்டவனிடம் இன்னுமென்ன வீண் பிடிவாதம் என்று மறுத்துரைத்தது!

படுக்கையில் சாய்ந்து அமர்ந்து கண்களை மூடியவாறு புருவம் சுருங்க இருந்தவனை பார்த்தபோது மனம் ஏனோ உருகும் மெழுகாக, சுளித்த அந்த புருவங்களை நீவி விட வேண்டும் போல எண்ணம் எழ, ஆனால் கால்களோ பழக்கத்தை மாற்ற மாட்டேன் என்றன! குளியலறைக்கு சென்று நைட்டி மாற்றுவதற்குள் இதை பேச வேண்டும் அதை பேச வேண்டும் என்று ஆயிரம் பட்டியல் படித்தது மனது! ஆனால் அவனது புத்தியோ இன்னமும் அவனாக வாய் திறந்து எதையும் பேசவில்லை... அதனால் அடங்கு என்று அடக்கியது! அவனை ஏற்றுக் கொள்ள நினைக்கிறேன் என்று ஸ்ரீராமிடம் கூறினாலும் அவளது ஈகோ அவளை சட்டென அனைத்தையும் மறந்து பேச விடவில்லை!

உடை மாற்றி கொண்டு வந்த போது உறங்கி இருந்தான் கார்த்திகேயன்!

✤ ✤ ✤

மங்கை காலை டிபன் வேலையில் சுறுசுறுப்பாக இயங்கி கொண்டிருக்க, வைஷ்ணவி மனிஷாவுக்கு ஊட்டி விட்டு கொண்டிருக்க கனிஷ்கர் அவனது திவி அத்தையிடம் சாப்பிட்டு கொண்டு இருந்தான்! வேலை செய்து கொண்டிருந்த ஆட்கள் பரபரப்பானார்கள். கார்த்திகேயன் தொழிற்சாலைக்கு கிளம்ப ஆயத்தமாகி வந்து கொண்டிருந்தான்! கை கழுவி விட்டு சாப்பாட்டு மேஜையில் அமர்ந்தான்.... சிறிதும் திவ்யாவை நோக்காமல்! கனிஷ்கருக்கு ஊட்டி விட்டு கொண்டிருந்த திவ்யா ஓரக்கண்ணில் கவனித்து கொண்டே,

"கனிஷ் குட்டி.... நான் ஒரு கேள்வி கேட்கட்டா உன்கிட்ட?" வாண்டுகள் அவளிடம் எப்போதுமே இது போல் கேள்வி கேட்டு விளையாடுவது சகஜம் என்பதால்,

"கேளு திவிக்கா...." அக்கா இன்னும் அத்தைக்கு மாறவில்லை அவனுக்கு!

"ஹேண்ட் வாஷ்ன்னா கை கழுவறது... பேஸ் வாஷ்ன்னா முகம் கழுவறது... அப்ப பிரைன் வாஷ்ன்னா என்ன செல்லம்?"

"ஹாஹா திவி... அது உனக்கு தெரியாதா? மூளைய கழுவறது...." மனிஷா சிரித்து கொண்டே கூற....

"வெரி குட் மோனி.... எல்லாரும் அவங்க அவங்க மூளைய நல்லா பத்திரமாக கழுவி பாதுகாப்பா



வெச்சுக்கணும்.... ஓகேவா...." சிரித்து மனிஷாவுக்கு ஹைபை குடுத்து ஓரக்கண்ணில் கார்த்திகேயனை பார்த்துக்கொண்டே கூறினாள்! அதை கேட்டு கொண்டிருந்த ஸ்ரீராம்,

"ஏய் வாலுங்களா.... மூளை இருக்கறங்க வேணும்னா கழுவி வெச்சுக்கலாம்... ஆனா நம்ம திவிக்கா பாவம்... இல்லையா.... மூளையே இல்ல...." நக்கலடித்து சிரிக்க

"ஆமா... ஆமா... உன் கூட எல்லாம் பழகினா எனக்கு எப்படிடா மூளை ஸ்டாக் இருக்கும்... உனக்கு கடன் கொடுத்தே எனக்கு தீர்ந்து போச்சு..." என்று சலித்து கொள்ளவும்,

"எப்படியோ நீ இப்போ எம்ட்டின்னு ஒப்புக்கோ... ஏன்னா எம்ட்டி வெசல்ஸ் மேக் மச் நாய்ஸ் திவி..." என்று அவன் சிரிக்க அவனை அடிக்க கை ஓங்கியவள் கார்த்திகேயன் அன்றைய டிபனான பொங்கலையும் இட்லியையும் சாப்பிட ஆரம்பித்து இருப்பதை பார்த்து,

"மனிஷ் குட்டி.... இப்போ நீ பதில் சொல்லு... பொங்கலுக்கு உனக்கு லீவ் உண்டா...." குட்டி பொண்ணை பார்த்து அவள் கேட்க, அவள் கேட்க வரும் இடம் புரிந்து ஸ்ரீராம் தலையை பிடித்து கொண்டு அமர்ந்தான்!

"ம்ம்ம் உண்டு திவிக்கா...."

"அப்போ இட்லிக்கு...." என்று கடிக்கவும் மனிஷாவும் ஸ்ரீராமும் சேர்ந்து அவளது தலையில் தட்டினர்!

"ஹய்யோ... ஏன் திவி... ஒரு மாசமா உன் கல்யாணத்துக்கு அப்புறம் நிம்மதியா இருந்தோம்... இங்க வந்ததுக்கு இப்படி சேர்த்து வைச்சு கடிக்கிறியே... எனக்கு தலை தான் சுத்துது...." என்று நொந்து போக, அவனை தட்டி,

"என்னதான் தலை சுத்துனாலும் உன் முதுகை நீ பார்க்க முடியுமா ஸ்ரீ?" என்று அதற்கும் கடிக்க.... தாங்க முடியாமல் புலம்ப ஆரம்பித்தான் ஸ்ரீராம்! கார்த்திகேயனை பார்த்து,

"ஐயோ அண்ணா... தாங்க முடியல... காப்பாத்துங்க... இவ கடிச்சு கடிச்சு தலையே வலிக்குது..." என்று அவனை சரணடைய அதற்கும் அவள்,

"ஸ்ரீ... பல்வலின்னா பல்ல புடுங்க முடியும்... ஆனா தலை வலின்னா தலைய புடுங்க முடியுமா?" என்று மிக முக்கியமான சந்தேகத்தை கேட்க,

"ஹய்யோ மரண மொக்கையா இருக்கே... ஆத்தா காப்பாத்து..." கையை தூக்கி வணங்கியவனை ஆசீர்வாதம் செய்வதை போல் திவ்யா நடிக்க ஸ்ரீராம் முறைக்க கார்த்திகேயனோ இவை அனைத்தையும்



கண்டுகொள்ளாமல் ஹாலுக்கு செல்ல, மங்கை அவசரமாக காபி எடுத்து கொண்டு விரைந்தார்!

"கனிஷ் குட்டி... இப்போ நீ ஆன்சொ பண்ணனும்... ஓகேவா?" என்றவாறு கூறிவிட்டு கார்த்திகேயனை ஓரக்கண்ணில் பார்த்து கொண்டே,

"காபி கப்ல காபி இருக்கும்.... வேர்ல்ட் கப்ல வேர்ல்ட் இருக்குமா?" நோபல் பரிசுக்கு பரிந்துரைக் கப்பட வேண்டிய சந்தேகமாக அவள் கேட்க அதை கேட்டு கொண்டிருந்த வைஷ்ணவி உட்பட வெறியானார்கள்!

"வேணாம் திவி... இன்னைக்கு உன் ராசிபலன்ல செம அடின்னு போட்டு இருக்கப் போகுது... காலைல இருந்து ஓவரா கடிச்சு குதறிகிட்டு இருக்க..." என்று வைஷ்ணவி பத்திரம் காட்ட, திவ்யா கண்ணை சிமிட்டி சிரித்தாள்! பேசிக் கொண்டிருக்கும் போதே வந்தவர் மாசிலாமணி... முகம் முழுக்க சந்தோஷமாக... தன் மகன் அரவிந்தனுடன்! திவ்யாவும் ஸ்ரீராமும் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டு வரவேற்றுவிட்டு உள் ஹாலுக்கு சென்றனர்!

"வாங்க... வாங்க அண்ணா..." வெள்ளந்தியாக மங்கை வரவேற்றார்!

"வாங்க அங்கிள்...." அழைத்துவிட்டு அவர்களிடம் சிறிதும் கவனமில்லாமல் தொலைக்

காட்சி செய்திகளில் கவனமாய் இருந்தான்! மாசிலாமணியே மங்கையிடம் ஆரம்பித்தார்!

"மங்கா... தம்பிக்கு நிச்சயமாகி இருக்கும்மா... அதை சொல்லிட்டு போகத்தான் வந்தேன்... நீங்க எல்லாரும் இருந்துதான் கல்யாணத்தை நடத்தணும்..." என்று மகிழ்ச்சியாக கூறினார்! அவருக்கு எப்படியாவது தன் மகன் திருந்தி நிலையான வாழ்க்கை அமைந்தால் போதுமென்ற எண்ணம்!

"அப்படியாண்ணா... ரொம்ப சந்தோசம்... இதைவிட வேறென்னாண்ண வேலை இருக்க போகிறது நமக்கு... ஜமாய்ச்சுடலாம்..." என்று கூறி தன்னை போலவே சந்தோஷப்படுவான் என்று கார்த்திகேயனை பார்க்க அவனோ தொலைக்காட்சி யில் ஐக்கியமாகி இருந்தான்! என்ன இவன் இப்படி இருக்கிறானே என்று எண்ணியவாறு அந்த குறையை மறைக்க இருமடங்கு சிரித்து பேசிக் கொண்டிருந்தவர்,

"பொண்ணு யாருண்ணா?" என்று கேட்க,

"நம்ம ஷாலினி தான் மங்கா.... சச்சியே கேக்கவும் உடனே முடிவு செய்துட்டேன்..."

"ரொம்ப சந்தோஷம் அண்ணா.... கண்டிப்பா நாங்க முன்னாடி இருந்து எல்லாத்தையும் பார்த்துக்கு வோம்ல...." என்று கூறி விட்டு அவர்கள் அருந்த காபி தயார் செய்ய சொல்ல உள்ளே சென்றார்!



"கார்த்தி கண்ணா... அன்னைக்கு சொன்னதுக்கு இன்னும் ஒரு பதிலும் சொல்லவே இல்லையே..." மறுபடி ஆரம்பித்தார் மாசிலாமணி... இதை பார்த்து கொண்டு அரவிந்தனின் கண்கள் அந்த வீட்டை அளவெடுத்த படியே இருந்தது... திவ்யாவை தேடியபடியே...

"என்ன சொல்ல சொல்றீங்க அங்கிள்...." அவனது நடவடிக்கையை உணர்ந்தே முகத்தில் உணர்வின்றி கார்த்தி கேட்க,

"என்ன கண்ணா சொல்ற? நீயே இப்படி கேட்டா நான் என்ன பண்றது? உன்கூட இருந்தாலாவது பொறுப்பும் திறமையும் நூற்றுல ஒரு பங்காவது வரும்ன்னு நினைச்சேன் கார்த்தி... நீ இப்படி சொன்னா எனக்கு என்ன பண்றதுன்னே புரியலை கண்ணா...." என்று ஆற்றாமையுடன் கூற,

"என்ன திறமை அங்கிள்? போதை மருந்து கடத்துறதிலையா? இந்த உலகத்துல என்ன வெல்லாம் தப்பு இருக்கோ அதையெல்லாம் செய்யறதலியா? கண்களில் கூர்மையோடு அரவிந்தனை பார்த்து கொண்டே மாசிலாமணியிடம் கேட்க,

"என்னப்பா சொல்ற? எனக்கு புரியலை..." குழப்பமாக மாசிலாமணி!

"இதை கேளுங்க...." என்று ஆதாரங்களை ஓட விட்டான்! கேட்கும் போதே முகம் வெளுத்தது

மாசிலாமணிக்கு! அதை கேட்டுக் கொண்டிருக்கும் போதே இன்னும் சில ஃபைல்களை அவர் முன்பு தூக்கி போட்டான்!

"இதெல்லாம் அரவிந்தனோட வண்டவாளம் அங்கிள்... இவனை நம்பி என்கூட வெச்சுட்டு இருந்ததுக்கு அவனோட நன்றி இது... இதுக்காகத் தான் கூட வெச்சுக்க சொல்றீங்களா?" கிருஷ்ணாவும் கார்த்திகேயனுமாக சேகரித்த ஆதாரங்கள் அரவிந்தனை முழுவதுமாக காட்டி கொடுக்க.... மகிழ்ச்சியாக வந்த மாசிலாமணி முகத்தில் ரத்த ஓட்டமே இல்லாமல் வெளுத்து போனார்! அவனது போதை மருந்து புழக்கம், காலாவதியான மருந்துகளை மறுபுழக்கத்தில் விடுவது தொடர்பான ஆவணங்களோடு கம்பெனியில் செய்திருந்த தில்லுமுல்லுகளையும் துகிலுரித்தது அந்த ஆவணங்கள்...!!! தனது மகனா இப்படி என்ற அதிர்ச்சி! இதை பார்த்துக் கொண்டிருந்த திவ்யாவுக்கும் ஸ்ரீக்குமே அந்த ஆதாரங்கள் புதிதுதான்! அதிர்ச்சி மேல் அதிர்ச்சி!

"இல்ல கார்த்தி... என்னால நம்பவே முடியல... கண்டிப்பா நம்ம அரவிந்தன் இதை செய்து இருக்க மாட்டான்... யாரோ உன்னை தப்பா வழிநடத்துறாங் கப்பா..." அதிர்ச்சியில் இருந்து மீளாமல் அவர் கூற,

"இல்ல அங்கிள்.... இதுதான் உண்மை... இதே வேற யாராவது இதை செய்து இருந்தா இந்நேரம் உயிரோட விட்டு வச்சு இருக்கவே மாட்டேன். உங்க



முகத்துக்காக ரொம்ப பொறுமையா இருக்கேன்..." முகம் முழுக்க கடுமையாக கூற அதை பார்த்த அனைவருக்குமே உள்ளுக்குள் குளிர் எடுத்தது! அது வரை மௌனமாக இருந்த அரவிந்தன்,

"ஆமா.... நான் தான் செய்தேன்... அதுக்கு இப்போ என்ன சொல்ல வர?" அதிரடியாக அவன் அப்படி கேட்கவும் ஒரு கணம் திகைத்தார் மாசிலாமணி... ஆனால் இதை எதிர்பார்த்தே இருந்த கார்த்திகேயன்,

"கம்பெனிய விட்டு வெளிய போய்டு... அவ்வளவு தான்... பாட்னர்ஷிப்ப கேன்சல் பண்ணப் போறேன்... வெளிய போய் நீ என்ன வேணும்னாலும் செய்துக்கோ... ஐ டோன்ட் கேர்..." ஒரே முடிவாக தெளிவாக உரைத்தான்!

"அது முடியாது... சுஷ்ருதா தங்க முட்டையிடற வாத்து... அதை நான் விட்டு கொடுக்க முடியாது.... அதென்ன கூட வெச்சுட்டு இருந்தேன்னு சொல்ற? ரெண்டு பேருமே பார்ட்னர்ஸ்... நான் சொல்லறேன்... நான்தான் உன்னை கூட வெச்சுட்டு இருந்தேன்னு..." சுயநலத்தின் உச்சமாக இருந்தது அவனது பேச்சு!

"இதே நினைப்பு உன்னால சுஷ்ருதாவுக்கு பிரச்சனை வந்துச்சே.... அப்போ வரலியா? மூழ்குற கப்பல்ல இருந்து தப்பிக்க நினைக்கிற மாதிரி ஓடுன?"

"சமாளிக்கத்தான் நீ இருக்கியே... கொடுத்த நோட்டிஸ்ஸ நானே கேன்சல் செய்துட்டேனே..." மிக சாதாரணமாக கூறினான் அரவிந்தன்!

"அதனால் இப்போ என்ன பண்ண போற?" முகம் கல் மாதிரி இறுக கூறினான்!

"சுஷ்ருதா ரெண்டு பேருக்கும் சொந்தம்... நீ மட்டும் சொந்தம் கொண்டாட அது உன் அப்பன் வீட்டு சொத்து இல்ல...." அவனது இந்த சுயநல ஆணவ முகம் வெளிப்பட மாசிலாமணிக்கு தான் அதிர்ச்சி மேல் அதிர்ச்சியாக இருந்தது! ஆனால் கார்த்திகேயன் இதை எதிர்பார்த்தே இருந்தான் போல,

"முடிஞ்சா கம்பெனில கால வெச்சு தான் பாரேன் அரவிந்த்... இது சேலஞ்ச் தான்..."

"பார்க்கலாமே கார்த்தி... சுஷ்ருதா யாருக்குன்னு முடிவாகற வரை அதை ரன் பண்ண விட மாட்டேன்... இதுவும் சேலஞ்ச் தான்..."

"அரவிந்த் நீ என்ன பேசிட்டு இருக்க? ஏன்டா இப்படி செய்த..." மாசிலாமணி செய்வதறியாமல் அரவிந்தன் மேல் பாய,

"அப்பா.... சும்மா இருங்கப்பா... எப்போ பாரு கார்த்தி கார்த்தி... இவன் தான் பெரிய இவனா? எதுக்கு நீங்க இவன்கிட்ட கெஞ்சிகிட்டு நிற்கறீங்க? எனக்கு உரிமையானத கொடுக்கமாட்டேன்னு சொல்ல



இவன் யாரு? இப்போ சொல்றேன் கேட்டுக்க கார்த்தி... சுஷ்ருதா எனக்கு தான்... உன்னால முடிஞ்சத நீ செய்... என்னால முடிஞ்சத நான் செய்யறேன்... யார் வின் பண்றாங்கன்னு பார்க்கலாம்..." என்று சொல்லிவிட்டு விடுவிடுவென்று வெளியே சென்றான்!

மாசிலாமணியின் நிலைமைதான் இக்கட்டில் இருந்தது! மகன் இப்படிப்பட்டவன் என்ற அதிர்ச்சியே அவரால் தாங்க முடியாமல் இருந்ததென்றால் அவன் பேசிவிட்டு போன விதத்தை பார்த்து உள்ளுக்குள் நடுங்கி போய் இருந்தார்! கார்த்திகேயனை பற்றி நன்றாக அறிந்தவரால் வேறு என்ன செய்ய முடியும்? அவருக்கு பயத்தை கொடுத்ததே கார்த்திகேயனின் மௌனம் தான்... அரவிந்தனின் நிலை என்னவாகுமோ என்ற பயத்தோடு கண்கலங்க கார்த்திகேயனிடம் கண்களால் விடைபெற்று கொண்டு வெளியேறினார் மனம் முழுக்க ரணமாக!

அவர் போனபின் யோசனையாக அமர்ந்து இருந்தவனிடம் வந்தனர் ஸ்ரீராமும் வைஷ்ணவியும்... திவ்யா அவள் இருந்த இடத்தில் இருந்தே யோசனையாக பார்த்து கொண்டிருந்தாள்... எப்படி இந்த நிலைமையை சமாளிக்கப் போகிறானோ என்ற பதட்டம் அவளுள் எழுந்தது உண்மை... ஆனால் சட்டென அனிடம் நேரடியாக பேச இயலவில்லை! அவன் தொழிற்சாலைக்கு கிளம்ப வேண்டிய நேரம்

கடந்து கொண்டிருக்க அவனோ கண்களை மூடி யோசனையில் ஆழ்ந்து இருந்தான்!

"அண்ணா...." ஸ்ரீ பக்கத்தில் அமர்ந்து அவனை அழைக்க கண்களை திறந்து பார்த்து மெலிதாக புன்னகைத்தான்!

"சொல்லு ஸ்ரீ...."

"எப்படிண்ணா சமாளிக்க போறீங்க அரவிந்த..." வைஷ்ணவி கவலையாக கேட்க... அதற்கு இன்னமும் புன்னகைத்த கார்த்திகேயன்,

"இது பெரிய விஷயம் இல்லடா... அதெல்லாம் சமாளிச்சுக்கலாம்...."

"மருந்துல ஏதாவது கலப்படம் பண்ண சான்ஸ் இருக்கேண்ணா...." ஸ்ரீராம் அவனது கவலையை வெளியிட....

"அதுக்கெல்லாம் சான்ஸ் கம்பி ஸ்ரீ... எவ்வளவோ டெக்னாலஜி இருக்க... இப்போ புதுசா ஒரு மெத்தெட் அறிமுகப்படுத்தி இருக்கோம்... எல்லா மருந்து கம்பெனிங்களும்... பின்னாடி பார்கோட் கொடுத்துரு வோம்... ஒரு கோட் நம்பரோட... வாங்குறவங்களுக்கு அந்த மருந்துல சந்தேகம் இருந்த அந்த நம்பர எஸ்எம்எஸ் பண்ணா போதும். அதை பற்றின கம்ப்ளீட் டீடெயில்ஸ் அவங்களுக்கு போய்டும்... அதே மாதிரி அந்த மருந்தை பில் போடும் போதே நமக்கு அந்த பார்கோடு மூலமா தகவல் வந்துடும்... நான் இதை



தனியா பண்ணா சரி வராதில்லையா அதான் எல்லா மருந்து கம்பெனிலயும் இந்த ப்ராசெஸ் அப்ளை பண்ணியாச்சு... கண்டிப்பா இவனால ஒண்ணும் பண்ண முடியாது வைஷூ..." ஸ்ரீக்கும் வைஷ்ணவிக்கும் பொதுவாக கூற,

"ஆனா கம்பெனிய அரவிந்த் டேக் ஓவர் பண்ணிக்குவேன்னு சொல்றது..." என்று வைஷ்ணவி இழுக்க,

"ஏன்டா உன் அண்ணன் என்ன அந்த அளவு முட்டாளா இல்ல ஏமாளியா? அது நடக்க சான்ஸ் இல்ல... அவனுக்கு வேற ட்ரீட்மெண்ட் காத்துட்டு இருக்கு... அங்கிளுக்காக பார்த்துட்டு இருந்தேன் வைஷூ...." பொறுமையாக தங்கையிடமும் ஸ்ரீராமிடமும் பேசுவதை பார்த்து கொண்டிருந்த திவ்யாவுக்கு ஒரு வகையில் பார்த்தால் பெருமையாகவும் இன்னொரு வகையில் நெருடலாகவும் இருந்தது.... அரவிந்தனின் செயலை நினைத்து!

## 21

**வீ**டு சாம்பிராணி புகையில் இதமாக மணத்து கொண்டிருந்தது! வேத விற்பன்னர்கள் பூஜையில்

ஈடுபட்டு கொண்டிருக்க மங்கை கவலையே வடிவாக அவர்கள் முன் அமர்ந்து கொண்டிருந்தார்! இதில் பெரிதாக நம்பிக்கை இல்லாத திவ்யா தனது அத்தைக் காக ஸ்ரத்தையாக உடன் அமர்ந்து இருந்தாள்!

"உங்க பையனை வச்சொல்லுங்கோ..." அய்யர் அழைக்க, மங்கை திவ்யாவை பார்த்து,

"திவி... தம்பி ரெடிஆகிட்டாப்லையா?" கேட்க,

"தெரியலத்தை... பார்த்துட்டு வரேன்..." என்று அறைக்கு விரைந்தாள்! மனம் படபட!

கதவை தள்ளி கொண்டு உள்ளே சென்றவள் கண்ணில் பட்டது எதையோ எழுதி கொண்டிருந்தவன் அவளை கண்டவுடன் சட்டென மறைத்தது தான்! கண்களோ அவளை பார்த்தும் பார்க்காதது போல திரும்பி கொண்டது!

"அத்தை கூப்பிடறாங்க..."

"ம்ம்ம்...." வெறுமனே ம்மில் முடித்தான்! திவ்யாவுக்கோ கோபம் வரவே பார்த்தது! ஏதாவது சொல்லிவிட்டால் முத்தா உதிர்ந்துவிடும் என்று மனதுக்குள் திட்டிக் கொண்டே முறைத்தாள்! அப்போது தான் கவனித்தாள்... அவனை! அழகும் கம்பீரமுமாக வேஷ்டி சட்டை உடுத்தி நெற்றியில் திருநீறோடு... எழுந்து ஞாபகமாக ஏதோ ஒன்றை செல்பில் வைத்து விட்டு வந்தான்! காந்தம் வைத்து இழுத்தது போல் அவளால் கண்களை திருப்பவே முடியாமல் போக,



அவன் அறையை விட்டு வெளியேறிய போதுதான் சுயநினைவே வந்தது திவ்யாவுக்கு! தன்னையும் கவனித்தாள்.... ஏதோ நாமும் சேலையில் நன்றாகத் தான் இருக்கிறோம் என்று மனம் நினைக்க, தலையில் ஒரு தட்டு தட்டி கொண்டாள்! திரும்பி கீழே செல்ல எத்தனிக்க அப்போதுதான் பார்த்தாள் அவனது செல்பேசியை! அங்கிருந்த சிறிய டைனிங் டேபிளில் சப்தமிடாமல் வீற்று இருந்தது!

"அடடா.... ஏதாவது கால் வந்தால் என்ன செய்வது?" என்று நினைத்து கொண்டே அதை எடுத்தாள்! இதுவரை அவனது செல்பேசியை கவனித்ததில்லை... பார்த்தபோது ஒரு நொடி இனிமையாக அதிர்ந்தாள்! ஸ்க்ரீன் சேவரில் அவளது படம்.... அதுவும் அவன் அரவிந்தனையும் தன்னையும் அழைத்து கொண்டு விருந்துக்கு போன போது கட்டி இருந்த சேலையில்.... பின்னணியில் அந்த ரெஸ்டாரன்ட்!

'திருடா... எப்போ எடுத்தது இது....' என்று நினைத்து கொண்டே செல்பேசியை நோண்ட ஆரம்பித்தாள்! அதிர்ஷ்டவசமாக செல்பேசி பூட்டப் படாமல் இருக்க... பிக்சர் கேலரியை திறந்து பார்த்தவள் இன்னமும் அதிர்ந்தாள்... விதம் விதமாக திவ்யா! திவ்யா! திவ்யா!

மனம் சந்தோஷசாரலில் நனைய... இனிமையான உணர்வில் சிக்குண்டு செல்பேசியை விட

மனமில்லாமல் கிளறி கொண்டு இருந்தாள்! ரெக்கார்ட் செய்யப்பட்ட பேச்சுக்களில் திருமணத்திற்கு முன் அவனுடனும் அரவிந்தனுடனும் விருந்துக்கு சென்று ரசாபாசமாகி காரில் திரும்பியபோது பேசிய பேச்சுக்களும் இருக்க... எதற்கு இதை ரெகார்ட் செய்திருக்கிறான் என்று புரியாமல் குழம்பினாள்! அன்றைய பொழுதை அவளாலும் மறக்கவே முடியாதே... கண்கள் என்ன அவனோடே சென்று விட்டதா என்று மனம் கேள்வி எழுப்பிய பொழுதாயிற்றே.... அந்த எதிரொலி அவனிடமும் இருந்ததை பார்த்து உணர்ந்த போது மனம் சிறகடித்தது!

'உன் திருவாயால் சொன்னால் ஆகாதா? எல்லாவற்றையும் மனதுக்குள்ளாகவே வைத்து கொள்ள வேண்டியது.... பழி அனைத்தையும் என் மேல் சுமத்த வேண்டியது...' செல்லமாக மனதுக்குள் கடிந்து கொண்டிருந்தாள் கார்த்திகேயனின் மனைவி!

'வரும்போது எதையோ ஒளித்து வைத்தானே... என்ன அது....' என்று அந்த செல்பை குடைய... அதுவோ அனுமதி இல்லாமல் நான் திறக்க மாட்டேன் என்று அடம் பிடித்தது....

'எங்கே ரிமோட்....' கண்கள் பரபரவென தேடியது.... ஏனென்றால் அது ரிமோட்டினால் திறக்கும் கதவு! சில பல நிமிட தேடலுக்கு பிறகு ரிமோட்



கிடைக்க எடுத்து அழுத்தினாள்! படக் என்ற சப்தத்தோடு திறந்தது செல்ப்!

உள்ளே அவனுடைய புத்தகங்கள் பைல்களோடு இருந்தது டைரி... திறந்து பார்த்த போது வரவேற்றது திவ்யாவின் நிழல்!

'இங்கேயுமா.... ஓவரா தான் பீல் பண்ணி இருக்காப்ல போல இருக்கே...." என்று நினைத்து கொண்டே அடுத்த பக்கங்களை புரட்டினாள்! கண்களில் சிரிப்போடு....

'ஏய்.... இன்னொருத்தர் டைரி இது....' மனம் அவளை தாக்கியது!

'ம்ம்ம்... என் புருஷன் தானே... நான் படிச்சா என்னவாம்?' என்று இன்னொரு மனம் சண்டைக்கு வர,

'ஆஹா... புருஷனா? எப்போல இருந்து.... சரி... யாரா இருந்தாலும் அவங்க டைரி ரொம்ப பர்சனல்... வைச்சுட்டு ஒழுங்கா நட...' நக்கலடித்துவிட்டு அந்த மனம் நியாயம் பேச அதை இன்னொரு மனமோ அலட்சியப்படுத்தி தன்னுடைய வேலையில் கவனமாகியது!

அவள் இங்கு வந்த தினம் முதல் அவளை பற்றிய ஏதாவது ஒரு சில வரிகள் என ஆரம்பித்து போக போக அவளை பற்றி கட்டுரையே எழுதும் அளவுக்கு

இருந்தது கார்த்திகேயனின் டைரியில்! ஷாலினியை எப்படி மணப்பது என்று ஆரம்பித்து... திவ்யாவை முதலிலேயே பார்த்து இருக்க கூடாதா என்று ஒரு சில இடங்களில் ஏங்கி இருந்தான்! அவளை தன் நண்பனுக்கு மணமுடிக்க தானே யோசனை கொடுத்ததை சாடி இருந்தான்... நிறைய இடங்களில் அவளை எண்ணி சுயபுலம்பல்கள்... நிறைய இடங்களில் திவ்யாவை பற்றி வர்ணனைகள் இருக்க... அவளுக்கோ சந்தோஷத்தில் கன்னம் கூசியது... இருவருக்கும் பிளவை உண்டாக்கிய அந்த தினத்தை பற்றியும் எழுதி இருந்தான்....

'திவி... என் வாழ்நாளில் மறக்க முடியாத இனிமையான தவறு.... இது! உனக்கு இது கொடுமையாக அமைந்துவிட்டது தான் வருத்தம்... ஏனென்றால் இரு மனம் ஒரு மனமாகி திருமணத்தில் இணைந்து உன்னில் கலந்து இருக்க வேண்டும்... ஆனாலும் என் வாழ்நாளில் மறக்கவே முடியாத இனிமையான தவறு இதுதான் கண்ணம்மா.... ஐ லவ் யூடா குட்டி!'

இதை படித்தபோது ஏனோ கன்னம் சிவந்தது! அதற்கும் மேல் அவளால் படிக்க முடியவில்லை... மனம் திறந்து அவளை பற்றி நிறைய எழுதி இருந்தான்!

'படவா... இந்த அளவு லவ்வ மனசுல வெச்சுகிட்டு ஒண்ணுமே சொல்லலியே... எதுக்கெடுத்தாலும்



முசுட்டுத்தனமா ஒரு பதில்... முரடா' மனதில் திட்டினாள் திவ்யா!

'ஆமா சொன்னாலும் கேட்டுட்டு தான் மறு வேலை பார்த்து இருப்ப....' மனசாட்சி சாடியது! ஆஹா தல கீழே போய் வெகு நேரமாயிற்றே... மேல வந்தா காரியம் கெட்டுடும் டோய்... என்று நினைத்து கொண்டே மான்குட்டியின் துள்ளலோடு பூஜை அறைக்கு விரைந்தாள்! மங்கை திவ்யாவுக்காக ஆர்வமாக காத்து கொண்டிருந்தார்....

"என்ன கண்ணா... தம்பி வந்துட்டாப்ல... உன்னை காணோம்... இப்போ தான் விஜயாவ மேல பார்த்துட்டு வர சொன்னேன்..." சிரித்து கொண்டே கேட்ட மங்கையிடம்,

"இல்லத்தை... புகைல கொஞ்சம் தலை வலிச்சது... அதான்..." பூஜை பலகையில் செல்பேசியை அவனிடம் கொடுத்தவாறே கார்த்திகேயனுடன் சேர்ந்து அமர்ந்தாள்!

"கொஞ்சம் பொறுத்துக்கோ கண்ணா... கொஞ்ச நேரம்தான்... பூஜைக்கு நீயும் இருக்கணும்டா...."

"சரித்தை..." புன்னகைத்தாள்! உலகத்திற்கு அன்னமிடும் அன்னபூரணியின் விக்ரகம் அழகாக வீற்று இருக்க அதன் முன்னர் அமர்ந்து வேத விற்பன்னர்கள் நால்வரும் மந்திரம் கூறி கொண்டிருந்தனர்.

"இவங்க என்ன செய்றாங்க...." அவனது காதுக்கு மட்டும் கேட்குமாறு நெருங்கி கேட்க,

"ம்ம்ம்..." அவளை ஒரு பார்வை பார்த்துவிட்டு பூஜையில் கவனத்தை செலுத்தினான்!

"தெரியலைன்னா தெரியலைன்னு சொல்லு கார்த்திகேயா...." அவனது பெயரை நீட்டி முழக்கி அவனிடம் வேண்டுமென்றே வம்பிழுக்க, அதற்கும் அவனிடம் இருந்து வந்த விடை ஒரே பார்வை!

"தீர்த்தத்தை வீட்டுல தெளிச்சுட்டு மீதத்தை துளசிக்கு விட்டுடுங்க... தம்பதியா செய்துடுங்க' பூஜை முடிய ஒரு அய்யர் வெள்ளி குடத்தை எடுத்து கார்த்திகேயனின் கையில் கொடுத்தார்! இருவருமாக தீர்த்தத்தை தெளிக்க சென்றனர்!

"என்னன்னே தெரியாம நான் என்னன்னு வேண்டிக்கறது?" சிறு பிள்ளையாக மறுபடி அவனிடம் சிணுங்கினாள் திவ்யா!

"என்னை எப்படி எல்லாம் வதைக்கறதுன்னு மட்டும் பிளான் பண்ணி சுவாமிகிட்ட வேண்டிக்கோ... மற்றதெல்லாம் உனக்கு தேவை இல்லை." மௌனம் கலைந்தவன் அவளை கடித்து அவளது வாயை அடைக்க நினைக்க, இதற்கெல்லாம் அசைந்தால் நான் திவ்யதர்ஷினி இல்லையே என்று,

"ம்ம்ம்... அதைத்தான் செய்துட்டு இருக்கேன் கார்த்திக்...." முகத்தை ஒன்றும் அறியாத பிள்ளை



போல வைத்து கொண்டு அவள் கூற... கார்த்திகேயன் மறுபடி மௌனகுருவானான்!

"ஆமே நண்டு கன்னி சுறா தன்னில் நல் பாம்பு வீற்றிருக்க பூ மேடை படுத்துறங்கும் ராஜயோகம்ன்னு சொல்லுவா... அது மாதிரிதான் பிள்ளையாண்டான் ஜாதகம்... கிரக மாலிகா கோடில ஒருத்தருக்கு தான் அமையும்... ராஜயோக ஜாதகம்மா... ஆனா இப்போ கொஞ்சம் நேரம் சரி இல்லை.... சமீபத்துல குலதெய்வத்துக்கு படையல் போட்டேளா?" மங்கையை பார்த்து அவர் கேட்க,

"கல்யாணத்துக்கு அப்புறம் இன்னும் போகலை."

"முதல்ல அதை செய்திடுங்கோ... பொண்ணு ஜாதகமும் அமோகமா இருக்கு... இந்த அளவு பொருத்தம் பொருந்தி வர்றது ரொம்ப விசேஷம்... ஸ்ரீராமன் ஸ்ரீதேவி மாதிரி... ரெண்டு பேரும் ஒருத்தருக்காகவே இன்னொருத்தர்..." என்று அந்த அய்யர் சிலாகித்து கூற கார்த்திகேயனின் முகத்தில் எள்ளலான கசந்த சிரிப்பொன்று தோன்றியது!

"ஆமா இது ஒண்ணுதான் இப்போ குறைச்சல்..." என்று தான் அவனுக்கு தோன்றியது! அவனது முகத்தில் இருந்து அவனது மனதில் ஓடியவற்றை ஒருவாறு ஊகித்தால் திவ்யா! பழம் வெற்றிலை பாக்கு தட்சணை அனைத்தும் வைத்து அவர்கள் அனைவரையும் வழியனுப்பும் போது சித்தார்த் வந்தார்!

"வாங்க அங்கிள்... வாங்க..." உற்சாகமாக வரவேற்றாள் திவ்யா.... உடன் கார்த்திகேயனும் வரவேற்றான்!

"என்னம்மா எப்பிடி இருக்கீங்க? எங்களை யெல்லாம் சுத்தமா மறந்துட்டாப்ல தெரியுதே...." சிரித்து கொண்டே சோபாவில் அமர்ந்தார்!

"ச்சே ச்சே அப்படி எல்லாம் இல்ல அங்கிள்..." அவளும் சிரித்துக் கொண்டே பதில் கூறிவிட்டு சித்தார்த்துக்கு குடிப்பதற்கு என்ன வேண்டும் என்று கேட்டு உள்ளே சென்றாள்! பழரசம் எடுத்து கொண்டு வந்த போது மங்கையும் அமர்ந்து பேசி கொண்டிருந்தார்!

"கார்த்தி... நம்ம வீட்டு பொண்ணுங்களுக்கு இதெல்லாம் தேவையா? எனக்கு என்னவோ சரி வரும்ன்னு தோன்றலை கண்ணா..." கார்த்திகேயனிடம் கவலையை தெரிவித்து கொண்டிருந்தார்! அவரது கவலை அவருக்கு!

"இல்லம்மா... திறமை இருக்கும் போது எதுக்கு வீண் பண்ணனும்? அதுவும் இல்லாம இந்த ஐடியா ரொம்ப நாளா எனக்கு இருக்கறதுதான் மா!" என்று அவன் முடித்தபோது மங்கையால் மறுத்தொன்றும் பேச இயலவில்லை! ஆனாலும்

"சரிப்பா... நீ சொல்றதுக்காக ஒப்புக்கறேன்.... ஆனா திவ்யாவுக்கு பேறு காலத்துல எந்த சிக்கலும்



இல்லாம நீ தான் பார்த்துக்கணும்..." அவளது உடல் நிலையை கருத்தில் கொண்டு அவர் கூற, கார்த்திகேயனுக்கு உள்ளுக்குள் கசப்பாக இருந்தது... அந்த குழந்தை இன்னும் எத்தனை நாளைக்கோ என்று மனம் வெதும்பினான்! அவனை பொறுத்த வரை அவள் பிரிந்து போவது என்ற முடிவு எடுத்தாலும் ஒரு முதலாளியாகவே பிரிந்து செல்லட்டும் என்றே நினைத்தான்! கார்த்திகேயனின் மனைவி இன்னொருவரிடம் வேலை செய்கிறாள் என்று மற்றவர் எண்ணி விட கூடாதாம்! பழரசம் எடுத்து வந்தவளுக்கு தலையும் அறியாமல் வாலும் அறியாமல் கேட்டது பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி இருந்தது! ஒரு வேளை ஸ்ரீ சொன்னதாக இருக்குமோ என்ற எண்ணம் வந்தாலும் கூட அதற்காக ஆசைப்படவேயில்லை!

"வாம்மா... இங்க வந்து உட்காரு..." சித்தார்த் அழைத்து கார்த்திகேயனின் பக்கத்தில் அமர சொன்னவர்,

"திவ்யா... உன்னை பற்றி எனக்கு நல்லா தெரியும்... அதே மாதிரி நிலா டிவியை பற்றி உனக்கும் நல்லா தெரியும்தானே...." பூடகமாக கேட்கவும்,

"தெரியும் அங்கிள்... உங்க கடின உழைப்பு தானே நாங்க எல்லாருமே பிரபலமாக காரணம்...." மனதுக்குள் எப்போதும் சித்தார்த்தை பற்றிய அந்த நல்ல அபிப்ராயம் திவ்யாவுக்கு உண்டு!

"அதுக்கு உன்னோட தனிப்பட்ட திறமையும் இருக்கு திவ்யா... நிலா டிவி வேற யார் கைக்கோ போறதைவிடவும்... அதோட அருமை தெரிந்த உன் கிட்ட வர்றது எனக்கு சந்தோஷமா இருக்கும்மா... நிம்மதியா இருக்கு..." என்று அவர் கூறவுமே அவளுக்கு விளங்கியது... ஆனாலும் அதிர்ந்தாள்!

"அங்கிள்... என்ன சொல்றீங்க? எனக்கு விளங்கலை..." கார்த்திகேயனையும் சித்தார்த்தையும் மாற்றி மாற்றி பார்த்து கேட்க.... அதற்கு அவர் சிரித்துக்கொண்டார்!

"கார்த்திக் ஒண்ணுமே சொல்லலியா உன்கிட்ட... நான்தான் அவுட் பண்ணிட்டேனா?" என்று சிரிக்க அதற்கு மங்கையும் சிரித்து கொண்டு,

"இனிமே நிலா டிவிக்கு என் மருமகள்தான் முதலாளியாம் திவி... உனக்கு அது யார்ன்னு தெரியாதா? என்று சிரிக்க... ஆனந்த அதிர்ச்சியில் கார்த்திகேயனை கேள்வியாக பார்த்தாள்! அவனது முகத்தில் இருந்து ஒன்றையும் கண்டுகொள்ள முடியவில்லை!

"அத்தை.... நிஜமாவா...." ஆனந்தத்தில் திக்கு முக்காடினாள் திவ்யா!

"இன்னைக்கு தான் திவ்யா சைன் பண்ண போறோம்.... அதுக்கு தான் வந்து இருக்கேன்...



இன்பாக்ட் என்னோட பர்சனல் ப்ராப்ளம்ஸ் இருக்கும்மா... நிறைய. ஐ நீட் மணி நவ்... டைமிங்கா கார்த்திகேயன் கேட்டாப்ல... ஏதாவது ஆபர் இருக்கான்னு... நான் பிடிச்சுக்கிட்டேன்... ஆனா செம தில்லு வேணும் திவ்யா.... டக்குன்னு முடிவு எடுக்க.... கார்த்திக்க பார்த்தா எனக்கு அதுதான் தோன்றுது...." சித்தார்த் சந்தோஷமாக கூற திவ்யா பெருமையாக தன் கணவனையும் மாமியையும் பார்த்தாள்! இவன் என் கணவன்!

"ஆனா திவ்யா... உன்னோட ஹெல்த் ரொம்ப முக்கியம் கண்ணா... அதுக்கப்புறம் தான் எதுவுமே..." மங்கை அவருடைய கவலையை வெளியிட்டார்.

"ஓகே அத்தை... என் ஸ்வீட் அத்தை..." என்று அவரது பக்கத்தில் வந்து மங்கையை இறுக கட்டியணைத்து கன்னத்தில் முத்தமிட்டாள்! ஆனால் மங்கைக்குள் ஒரு சந்தேகம் ஓடி கொண்டே தான் இருந்தது! இவள் சிறிய பெண்ணாயிற்றே எப்படி இவ்வளவு பெரிய பொறுப்பை தாங்குவாள் என்பதே அது! அதை வாய் விட்டு கார்த்தியிடம் கேட்கவும் செய்தார்!

"ஏன் கார்த்தி.... சின்ன பொண்ணும்மா... எப்படி இவ்வளவு பெரிய பொறுப்பு.... குருவி தலைல பனங்காய் இல்லையா கண்ணா!" அதற்கு அவரது மகன் வேறு பதில் வைத்து இருந்தான்!

"இல்லம்மா... இவளோட திறமைய பற்றி மற்றவங்களை விட எனக்கு நல்லாவே தெரியும்... அரவிந்தன் விஷயத்துல அவனோட நூல பிடிக்க முடியாம நாங்க தத்தளிச்சுட்டு இருந்த நேரத்துல இவ ரொம்ப கேசுவலா சால்வ் பண்ணிட்டு வந்தா.... கண்டிப்பா ஷைன் பண்ணுவாம்மா..." உறுதியாக தன்னை பற்றிய கணக்கீட்டை தாயிடம் தெரிவித்த தன் கணவனை பார்க்கும் போது அவளது பெருமை தலைக்கு ஏறியது! தன்னை பற்றி எவ்வளவு உயர்வான ஒப்பீடு! பேசிக் கொண்டிருக்கும் போதே தொலைக்காட்சி செய்திகளில் இந்த செய்தி முக்கிய செய்தியாக்கப் பட்டது!

"Pharma giant enters the media... Sushrutha Karthikeyan takes over Nila groups!"

வரிசையாக ஒவ்வொரு சேனலிலும் இந்த செய்தியே கலக்கியது! நண்பர்களிடம் செல்பேசியில் இருந்து வந்த வாழ்த்துக்களை சிரித்தபடியே பெற்று கொண்டாள் திவ்யா! கார்த்திகேயனை பெருமையாக பார்க்க, அவனோ அவள் புறம் திரும்பினால் தானே! செல்பேசியில் பேசுவதில் மும்முரமாக இருந்தான்! முகத்தில் இரும்பின் கடினம்!

"கோ அஹெட் சபாபதி சார்.... ஐ வோண்ட் கம் இன்...." என்று முடித்துவிட்டு வைத்தவன் முகம் இன்னும் இறுகியது! அதை பார்த்து கொண்டிருந்த மங்கைக்கோ வயிற்றை கலக்கியது...



"என்ன கண்ணா.... ஒரு மாதிரியா இருக்க..." என்று தயங்கி தயங்கி கேட்கவும்....

"நேத்து நைட் அரவிந்த் குடிச்சுட்டு டிரைவ் பண்ணி ஆக்ஸிடென்ட் பண்ணி இருக்கான்... வேற ஒண்ணுமில்ல...." அவன் இப்படி சொல்லும்போதே திவ்யாவுக்கு அதில் ஏதோ இருப்பதாக பட்டது! ஆனால் என்னவாக இருக்கும் என்பது புரியவில்லை!

அதற்கு பின் கார்த்திகேயன் பேசி முடித்து... சித்தார்த்தை அழைத்து கொண்டு அலுவலகம் சென்றிருந்தான்!... ஒப்பந்தம் கையெழுத்திட... மருந்துக்காக கூட அவள் புறம் திரும்பாமல்! அவனை முகத்துக்கு நேராக நோக்க தவித்து கொண்டிருந்த திவ்யாவோ இன்னமும் தவித்து போனாள்!

✣ ✣ ✣

ஒரு உயிர் இந்த உலகத்தில் பிறப்பெடுக்கும் போதே அதன் தாய், தந்தை, மனைவி, குழந்தையும் கூட யார் என்று எழுதி வைக்கப்பட்டு விடுகின்றது! நாமாக தீர்மானிக்கும் ஒரு உறவு இருக்கிறது என்றால் அது நட்புதான் நமது விதியை தீர்மானிப்பதும் நட்பு தான்... வெகுநேரங்களில்! நல்ல நட்பு... கிடைத்த வரம்! கூடா நட்பு... பெறக்கூடாத சாபம்! இதை புரிந்தவர்கள் உறவுகளை சீராக்கி கொள்கிறார்கள்... புரியாதவர்கள் சீரழித்து சீரழிந்தும் போகிறார்கள்!

அதற்கு மிகச்சிறந்த உதாரணமாக அரவிந்தன் ஆகி போனதுதான் மாசிலாமணியை மிகவும் பாதித்தது!

கார்த்தி வீட்டிலிருந்து வந்தது முதல் மனதுக்குள் உடைந்து வெறுத்து சின்னாபின்னமாகி இருந்தார்! என்ன செய்வது... அவருக்கு வாய்த்த விதி இப்படி ஆகிவிட்டதே! அவரால் முடிந்தவரை அரவிந்தனுக்கு எடுத்து சொல்ல முயன்றதெல்லாம் விழலுக்கு இறைத்த நீரானது!

"அரவிந்தா... நீ போகற பாதை கண்டிப்பா சரி இல்லப்பா... தயவு செய்து உன்னை மாற்றிக்கோ... நான் கார்த்தி கிட்ட பேசுறேன்... எப்படியாவது அவனை கன்வின்ஸ் பண்றேன் அரவிந்தா...." கிட்டத்தட்ட கெஞ்சினார் தோளுக்கு மேல் வளர்ந்த தன் மகனிடம்!

"நீங்க கன்வின்ஸ் பண்ற அளவு நான் என்ன தப்பு பண்ணிட்டேன் பா... என்னோட உரிமைய நான் விட்டு கொடுக்க முடியாதுன்னு சொல்றது தப்பா?" கோபத்தில் கொதித்தவனுக்கு எங்கனம் புரிய வைப்பது? உரிமையே ரங்கராஜன் கொடுத்ததுதான் என்பதை!

"உரிமை உரிமைன்னு சொல்றியே... என்ன உரிமை இருக்குன்னு நினைச்சுட்டு பேசற? ரங்கராஜன் முதல்ல என்னை சேர்த்துகிட்டதே வொர்க்கிங் பார்ட்டனராதான்... அது உனக்கு தெரியாதா?" உண்மையை எடுத்து கூற,



"அதை பற்றி எனக்கு கவலை இல்ல...." அலட்சியமாக பதில் இருத்தவனை என்ன செய்வது? மாசிலாமணி தலையை பிடித்து கொண்டார்!

"எதை பற்றித்தான் நீ கவலைபடர அரவிந்தா? குருவோட பேர வச்சா அவரை மாதிரியே சாத்வீகமா வருவன்னு தான் அம்மா இந்த பேர வச்சா.... ஆனா நீ... போதை மருந்து அளவு கீழ இறங்கிட்ட.... ச்சே... கார்த்தியோட குணத்துல ஒரு சதமாச்சும் வருவியா... நீயெல்லாம்...." வெறுத்து போய் அவனது தந்தை கூற,

"கார்த்தி கார்த்தி கார்த்தி.... எப்போ பாரு அவன் புராணம் தான்... ஏன் பா உங்களுக்கு வேற வேலையே இல்லையா.... எனக்கு நீங்க அப்பாவா இல்ல அவனுக்கு அப்பாவா...." என்பதை தொடர்ந்து இன்னும் சில மோசமான வார்த்தைகளை உதிர்க்க

"ஐயோ... நிறுத்துடா... நீ எனக்கு பிள்ளையே இல்ல.... இப்படி ஒரு பிள்ளைக்காக தவமே இருக்கலைன்னு நினைச்சுக்கறேன்..." என்று பதிலுக்கு கத்தவும் போலீசார் உள்ளே நுழையவும் சரியாக இருந்தது! எதற்காக வந்துள்ளனர் என்று இருவரும் யோசித்து கொண்டிருக்கும் போதே மாநகர போலீஸ் கமிஷனர் சபாபதி உள்ளே வந்தார்!

"வாங்க சபாபதி.... என்ன இந்த பக்கம்?" சாதாரணமாக மாசிலாமணி விசாரிக்க, அவர் அரவிந்தனிடம் திரும்பி

"சார் நீங்க நேற்று நைட் எங்க இருந்தீங்க?" கொஞ்சம் கடுமையாக சபாபதி கேட்கவும் அரவிந்தனின் புருவம் சுருங்கியது!

"என்ன கமிஷனர் சார்... என்ன விஷயம்?" கண்களால் அளந்து கொண்டே கேட்க,

"நீங்க நேற்று மிஷன் ஸ்ட்ரீட் போனீங்களா இல்லையா?"

"இல்ல... நைட் அண்ணாமலைஸ்ல எனக்கு ஒரு மீட்டிங்... அதை முடிச்சுட்டு நேரா வீட்டுக்கு வந்துட்டேன்... மிஷன் ஸ்ட்ரீட்ல எனக்கு வேலை இல்லையே..." முதலில் தயங்கியவன் பின் சரளமாக கூறலானான்!

"இல்ல... நேற்று நீங்க அண்ணாமலைஸ்ல இல்ல... மிஷன் ஸ்ட்ரீட்ல குடிபோதை அதிகமாகி ஒரு பொண்ணு மேல கார மோதிட்டு தப்பிச்சு வந்திருக்கீங்க..."

"இல்ல... நான் கிடையாது... மே பீ என் டிரைவரா இருக்கலாம்..." என்று படபடவென கூறி விட்டு அவனது ஓட்டுனரை சத்தம் போட்டு அழைத்தான்!

"நோ அரவிந்த் சார்... ட்ராபிக் கேமரால நீங்க ரெக்கார்ட் ஆகி இருக்கீங்க... ஆதாரம் இருக்கு..." சபாபதி ஆதாரத்தை கூறவும் அதற்கும் மேல் அரவிந்தனால் பேச முடியவில்லை! மாசிலாமணி



கலங்கிய கண்களோடு அவனை பார்த்து கொண்டிருந்தார்... அடுத்து என்ன செய்வது என்பதை யோசித்து கொண்டு! அவராக தனியாக இது போல யோசித்ததில்லை என்றே கூற வேண்டும்... ரங்கராஜன் இருந்தவரை மாசிலாமணிக்காக அவர் தான் யோசித்தார்... அதன் பின் கார்த்திகேயன்! கடலுக்கு நடுவில் தத்தளிக்கும் துடுப்பில்லாத படகாக தவித்தார்!

✤ ✤ ✤

**வீ**ட்டுக்கும் வாசலுக்குமாக நூறு முறை நடை பயின்று இருப்பாள் திவ்யா... மாலையானது முதல்! வழி மேல் விழி வைத்து காத்திருந்து கண்கள் தான் பூத்துப் போனதே தவிர கார்த்திகேயன் வந்த பாட்டை காணோமே!.... மங்கை அவளிடம் ஒரு பத்து முறை விசாரித்து சலித்து அப்போதுதான் கோவிலுக்கு கிளம்பினார்! அவளை காக்க வைத்து எட்டு மணிக்கு அவனது பிஎம்டபிள்யு வெள்ளை மாளிகையில் நுழைந்தது! கண்களில் சோர்வோடு வந்தவன்....

"அம்மா... டிபன் வை...." கைகளை கழுவி கொண்டு டைனிங் டேபிளில் அமர்ந்தான்! வேலை செய்பவர்கள் இரவு வரை இருத்தி கொள்வது அங்கு பழக்கமில்லாததால் திவ்யா அவசரமாக அவனிடம் வருவது போல ஒரு பில்ட் அப் கொடுத்தாள்! அடங்கொக்கா மக்கா... இதுக்கு தானே சாயங்காலத்துல

இருந்து குட்டி போட்ட பூனையாட்டம் நடந்துட்டு இருக்க.... மிஸஸ் மனசாட்சி பேசியது!

"அத்தம்மா கோவிலுக்கு போயிருக்காங்க... இன்னும் வரலை...." அவனது கேள்விக்கு பதில் கூறி விட்டு அவசரமாக அவனுக்கு டிபன் பரிமாறினாள் உடன் அமர்ந்து கொண்டு! அவளை கையமர்த்திவிட்டு தானே டிபன் வைத்து கொண்டான் மௌனமாக!

"ஏன்... நான் பரிமாற கூடாதா கார்த்திக்?" வார்த்தைகளில் வலி! அவளது கேள்வியை கவனித்தவன் சிறிது நேரம் விட்டு,

"எனக்கு பரிமாறி உன்னோட தரத்தை குறைச்சுக்க வேணாம்...." ஒரே வார்த்தையில் முடிக்க, அதற்கு மேல் அவளால் பேச முடியவில்லை! தான் பேசியவற்றை எனக்கே திருப்பி கொடுக்கிறானே! சிறிது நேரம் மௌனமாக அமர்ந்து இருந்தவள்... அவன் மாடிக்கு செல்லவும் அவன் பின்னே சென்றாள்! லுங்கிக்கு மாறி இருந்தான்... கையில் ஒரு புத்தகத்தை எடுத்து படுக்கையில் அமர்ந்து கொண்டான்! அவனுக்கு முன்னால் சென்று மனம் படபடக்க,

"க்கும்..." கனைத்தாள்! என்னவென்று கேட்காமல் கண்களை மட்டும் நிமிர்த்தி அவளை பார்க்க, அந்த பார்வையில் இருந்த அந்நியத்தன்மை அவளை பேசவிடாமல் செய்தது! திக்கி திணறி.....



"உங்க கி...கிட்ட பேசணும்..." என்று கூறி முடித்தாள்!

"ம்ம்ம்... சொல்லு..." எதை பற்றி பேசுவாள்... ஒன்று குழந்தையை கலைக்க போகிறேன் அல்லது இங்கே இருக்க பிடிக்கவில்லை என்று கூறுவாள் என்று எதிர்பார்த்து, அந்த கடுப்பில் கடுமையாகவே வந்து விழுந்தன வார்த்தைகள்!

"அதாவது...." பேச முடியாமல் தயங்கியவளை,

"என்ன... இந்த குழந்தைய அபார்ட் பண்ணனுமா... போ போய் செய்து தொலைச்சுக்கோ..." கடுப்படித்து வைக்க... திவ்யாவுக்கோ பதறிவிட்டது!

"ஹய்யோ இல்ல இல்ல...." கண்களில் கலக்கம்! எனது குழந்தை என்ற உரிமை உணர்வில் கண்கள் லேசாக கலங்க,

அவளை கோபமாக பார்த்து விட்டு மறுபடி அந்த புத்தகத்தில் ஆழ்ந்தான்!

"கா.... கார்த்திக்....." அவனது அந்த வார்த்தைகளுக்கு பிறகு மிகவும் தயங்கினாள்! பொறுமையற்றவனாக நிமிர்ந்தவன் ஏதாவது பேசும் முன்பே முந்தி கொள்ளலாம் என்றெண்ணி...

"தேங்க்ஸ்...." என்று கூறிவிட்டு அவனது முகத்தை ஆர்வமாக பார்த்தாள்! ஒரு இளக்கார வளைவு தோன்றியது அவனது இதழ்களில்!

"எதுக்கு...." தெரிந்தும் தெரியாதது போல கேட்க,

"க்கும்.... கா... காலைல சித்தார்த்த சார் சொன்னது... அ... அதுக்கு தான்..." கனைத்து திக்கி திணறி அவள் கூறுவதை கேட்டு,

"ஓ.... இதுக்கு தான் பரிமாறவெல்லாம் ட்ரை பண்ணியா...." ஏளனமாக அவன் கூறியது அவளது மனதை தைத்தது!

"கா.... கார்த்திக்... நா... நா... நான் உங்க வொ... வொய்ப்... பரிமாற வந்ததுக்கு இப்படி ரீசன் கண்டு பிடிக்கறீங்களே...." அவளால் பேச முடியாமல் திணற,

"ஓ.... அப்படியா.... இப்போ தான் நினைவுக்கு வந்துதா..." கோபத்தில் மிதந்தது அவனது சொல்லம்புகள்! அவளது பார்வையின் வலியை உணர்ந்தவன் மனதிலும் வலி.... ஆனால் உடைந்த மனது சட்டென்று ஒட்ட மாட்டேன் என்றது!

எனக்கு எப்பவோ நினைவுக்கு வந்துடுச்சு.... ஆனா உனக்கு தான் மறந்துடுச்சு என்று நினைத்துக் கொண்டவள் ஒன்றும் பேசாமல் தலையணையை எடுத்து கொண்டு சோபாவுக்கு போனாள்! அவளுக்கும் உள்ளுக்குள் கோபம் கனன்று கொண்டிருந்தது... கொஞ்சம் பணிந்து போனால் இப்படி எகிறுகிறானே என்று ஆயாசமாக இருந்தது!



**சிறுமை கண்டு தவித்தேன்...**
**என் சிறகில் ஒன்றை முறித்தேன்**
**ஒற்றை சிறகில் ஊனபறவை....**
**எத்தனை தூரம் பறப்பேன்!**
**அன்பே உனை அழைத்தேன்....**
**உன் அஹிம்சை இம்சை பொறுத்தேன்**
**சீதை குளித்த நெருப்பில் என்னை ....**
**குளிக்க சொன்னாய் குளித்தேன்**
**அழுத நீரில் கரைகள் போய்விடும்.... தெரியாதா...**
**குறைகள் உள்ளதே மனித உறவுகள்... புரியாதா...**
**இது கண்ணீர் நடத்தும் பேச்சுவார்த்தை....**
**உடைந்த மனங்கள் ஒட்டாதா!**
**இது கண்ணீர் நடத்தும் பேச்சுவார்த்தை...**
**உடைந்த மனங்கள் ஒட்டாதா!**

இருவருக்குமே மனம் முழுக்க ரணமும் குழப்பமுமாக! சோபாவில் படுத்தவளை கார்த்திகேயனின் செல்பேசி சத்தம் எழுப்பியது!

"சொல்லுங்க...." பேசி கொண்டிருந்தான்!

"...."

"இதுல நான் ஒண்ணும் பண்ண முடியாது அங்கிள்... உங்க முகத்துக்காக வேண்டி எவ்வளவோ செய்துட்டேன்.... நான் தலையிட மாட்டேன் அங்கிள்..." கறாராக யாரிடமோ பேசி கொண்டிருந்தான்!

"....."

"ப்ளீஸ் அங்கிள்... அரவிந்த் செய்தது தப்பு... அவ்வளவுதான்..." கடவுளே .... மாசி மாமாவிடமா பேசி கொண்டிருக்கிறான்! ஹிட் அன்ட் ரன் கேஸ் அந்த அளவுக்கு ஒன்றும் ஸ்ட்ராங் கிடையாதே.... என்று எண்ணி கொண்டிருக்கும் போதே செல்பேசியை வைத்து விட்டு மீண்டும் புத்தகத்தில் ஆழ்ந்தாள்!

"அரவிந்த் மேல ஹிட் அன்ட் ரன் கேஸ் மட்டும் தானே இருக்கு..." முகத்தை சாதாரணமாகவே வைத்து கொண்டு கேட்க.... கார்த்திகேயனின் பார்வை கூர்மை பெற்றது! புருவத்தை உயர்த்தியவன்,

"இல்ல...." ஒற்றை வார்த்தையில் முடித்தான்!

"பின்ன...." புருவம் முடிச்சிட கேட்டாள்!

"அவனை அரஸ்ட் பண்ணும் போது ஐம்பது கிராம் ஹெராயினோடதான் அரஸ்ட் பண்ணி இருக்காங்க..." சாதாரண குரலில் சொன்னதை கேட்டு சட்டென்று எழுந்தாள் திவ்யா! முகம் கேள்வியை சுமந்தது!

"அந்த அளவு அவன் முட்டாள் கிடையாது... இது உங்க வேலை தான்..." குறிபார்த்து அடித்தது அவனுக்கு வியப்பையே அளித்தது!

"ம்ம்ம்....யா."

"ஏன் கார்த்திக்...." பிரச்னையை இவன் இழுத்து கொள்கிறானே என்று மனம் அவஸ்தைபட்டது!



"பனிஷ்மென்ட்..."

"யாருக்கு...."

"அரவிந்துக்கு.... அப்புறம் அந்த ஷாலினிக்கு..."

"நீங்க யார்... பனிஷ்மென்ட் குடுக்க..." என்று கேட்டவளை வெகு கூர்மையாக பார்த்து,

"குளவியோட இயல்பு கொட்டறது... அந்த இயல்ப மறந்தா அதோட லைப் அவ்வளவுதான்... அதே மாதிரிதான் நானும்... இதுதான் நான்... மாத்திக்க மாட்டேன்..." தெளிவாக சுருக்கமாக கூறி முடித்தவனை பார்த்த போது பய பந்து அடிவயிற்றில் சுருண்டது அவனது அந்த இயல்பை நினைத்து....! எல்ல விதத்திலும் இவன் இப்படித்தானோ?



## 22

**இறுகியதை இளக வைக்கவும்**

**இளகியதை இறுக வைக்கவும்**

**அன்பினால் மட்டுமே முடியும்!**

மேட்டுப்பாளையம் தாண்டி போய் கொண்டிருந்தான் கார்த்திகேயன்! திருமணமாகி எங்கும் போகாததால் குலதெய்வ வழிபாட்டுக்காக இருவர் மட்டும் போகட்டும் என்று மங்கை கூற

கார்த்திகேயன் திவ்யாவை அழைத்து கொண்டு மேட்டுப் பாளையத்தை அடுத்த வனபத்ரகாளியம்மன் கோயிலுக்கு சென்று கொண்டிருந்தான்!

வழியில் கடந்து சென்ற பாக்கு தோப்புகளையும் சிறு ஓடைகளையும் தாண்டி இருந்தது அந்த அழகான திருக்கோயில்... இயற்கை எழில் கொஞ்சும் அந்த இடங்களை பார்வையிட்டு கொண்டே வந்த திவ்யாவுக்கு மனம் லேசாக பறப்பது போல் இருந்தது! அவ்வப்போது ஸ்டியரிங் பிடித்திருந்த வலிய கைகளையும் பார்வையிட்டு கொண்டு வந்தவளுக்கு (அதாங்கோ சைட்டு), முகத்தில் உணர்ச்சிகளை சுத்தமாக துடைத்து விட்டு இருக்கும் கணவனை பார்த்து ஒரு வகையில் ஆயாசமாக இருந்தது!

"இன்னும் எவ்வளவு தூரம்?" எதையாவது அவன் வாயிலிருந்து பிடுங்க முடியுமா என்று முயன்று கொண்டே தான் இருந்தாள்!

"ம்ம்ம்... வந்துடும்..." என்று ஒட்டாமல் முடித்தவனை பார்க்கும் போது கோபம் பற்றி கொண்டு வந்தது... கோபத்தை மறந்து அவனிடம் பேசினால் இந்த அளவு அலட்டிக் கொள்கிறானே என்று மனம் அவனிடம் சண்டையிட்டு கொண்டிருந்தது! கார் நிற்க இறங்கியவள் மயங்கினாள்.... அந்த இடத்தின் அழகை கண்டு.... குளிர் உடலை தாக்க...

"வாவ்...." கைகளை உரசி கன்னத்தை தேய்த்து விட்டு கைகளை இறுக்கமாக கட்டி கொண்டு வாய்



விட்டே கூற, அவனையும் அறியாமல் இயற்கையை ரசித்த அவளை கண்களால் விழுங்கினான்!

"இந்த இடத்துக்கு பேர் என்ன கார்த்திக்?" சுற்றிலும் பார்த்து கொண்டே கேட்க,

"நெல்லுதுறை..." என்று கூறிவிட்டு பொருட்களை இறக்க பார்க்க... அதற்குள் சின்னா என்கிற சின்னசாமி ஓடி வந்தான்! அவனது ஓட்டத்தில் பதட்டம் இருந்தது... எஜமானனை பார்த்த மரியாதை கலந்த பதட்டம்....

"அய்யா... விடுங்க நான் தூக்கிட்டு வரேன்..." என்று பையை அவன் வாங்கி கொள்ள... கார்த்திகேயன் அவனிடம் தோப்பு நிலவரத்தை விசாரித்து கொண்டு வந்தான்.

மொத்தமுள்ள இருநூறு ஏக்கர் தோப்பில் நூற்றியிருபது ஏக்கர் தென்னையும் இருந்தது.... பாக்கோடு வெனிலாவும் பயிரிடப்பட்டு இருந்தது... தென்னை மொத்தமாக வேறொருவரால் குத்தகைக்கு எடுக்கப்பட்டு இருக்க.... அங்கேயே கயிறு தயாரிக்கும் தொழிலகமும் குத்தகைக்கு விடப்பட்டு இருந்தது... ஊடு பயிராக இடப்பட்டு இருந்த வெனிலா மிகுந்த லாபத்தை அள்ளி கொடுக்க.... மங்கையின் முழு கட்டுபாட்டில் இருந்தது நெல்லுதுறை தோப்பு! இவையெல்லாம் சின்னாவிடம் கார்த்திக் பேசி கொண்டு வந்ததில் இருந்து திவ்யா அறிந்து

கொண்டது... அவளுக்கு இதில் கிஞ்சிற்றும் ஆர்வம் இல்லாமல் இருக்க அவர்களை விட்டு சற்று தள்ளி ஓடிய கல்லாறை வேடிக்கை பார்த்து கொண்டிருந்தாள்!

நீலகிரியில் இருந்து கீழிறங்கிய கல்லாறை கிட்டத் தட்ட ஒரு காட்டாறோடு தான் ஒப்பிட முடியும்... அப்போது மழைகாலமானதால் தண்ணீர் நிறைந்த பாய்ந்து கொண்டிருந்தது... அசுர வேகத்தில் மலையில் இருந்து இறங்கும் ஆறு அதே வேகத்தில் சமதளத்தில் ஓடுவதை அங்கு பார்த்தாள்... அந்த பகுதியின் வளத்திற்கும் பாக்கு மரங்களுக்கும் வற்றாத அந்த கல்லாறே காரணம் என்பதை பார்க்கும் போதே அறிந்து கொள்ள முடியும் என்று நினைத்து கொண்டு வேடிக்கை பார்த்து கொண்டிருக்க,

"போலாமா?" பக்கத்தில் அவனது குரல் கேட்கவும் ஒரு நிமிடம் உடல் தூக்கி வாரிப் போட திரும்பினாள்!

"கோயில காணோம்?" சந்தேகமாக அவள் கேட்க,

"நம்ம தோப்பு வீட்டுல கொஞ்சம் பிரெஷ் பண்ணிட்டு போக சொல்லி அம்மா சொன்னாங்க.... கோயிலுக்கு இன்னும் கொஞ்சம் தூரம் போகணும்..." எந்தபுறமோ திரும்பியபடி எனக்கென்ன என்று அவன் கூற,



"ஆமா.... எல்லாம் அம்மாவ கேட்டு தான் எல்லா செய்ற மாதிரி...." முனகி கொண்டு திரும்பி நடந்தான். அது அவனது காதில் வேறு விழுந்து வைக்க கொஞ்சமிருந்த இளக்கமும் அவனது முகத்தில் இருந்து காணாமல் போனது! அதை எல்லாம் மனைவி பதவியில் இருந்த மகாராணி கண்டுகொண்டால் தானே....

"கார்த்திக்...." கல்லாறை வேடிக்கை பார்த்த படியே அவனை அழைக்க,

"ம்ம்ம்..." வேலை செய்யும் வேலையாட்களை பார்த்தபடியே ஒற்றை வார்த்தையில் கேட்டான்,

"அந்த ஆற்றுல இறங்கலாமா?..." சிறுபிள்ளை யாக ஆசையோடு தோப்பின் எல்லையில் ஓடி கொண்டிருந்த கல்லறை காட்டி கேட்டவளை ஒரு கணம் கேலியாக பார்த்துவிட்டு,

"இந்த இடம் சரிப்படாது.... இந்த இடத்துல ஆத்துல வேகமும் அதிகம் சுழற்சியும் அதிகம்..."

"ப்ளீஸ் கார்த்திக்... ஆசையா இருக்கு... கொஞ்சம் காலை மட்டும் நனைச்சுக்கறேனே... ப்ளீஸ்..." கெஞ்சிய மனைவியை பார்த்து,

"திவ்யா... இங்க இறங்க படித்துறை கூட கிடையாது... இந்த தோப்புல இருந்து இறங்கணும்னா இடம் ரொம்ப செங்குத்தாக இருக்கும்... நாங்க வேணும்னா இறங்க முடியும்.... லேடீஸ் கஷ்டம்..."

இப்படி சொன்னதற்கு அவனே வருத்தப்பட வேண்டி இருக்கும் என்று தெரியாமல் அவன் கூற அவனது மனைவி சிலிர்த்து எழுந்தாள்!

"அதென்ன லேடீஸ் இறங்க முடியாதா? நாங்க ப்ளைட்டே ஓட்டுவோம்... இதென்ன பிசாத்து..." வெகுண்டு எழுந்து அவனிடம் சண்டை பிடிக்க... கார்த்திகேயனும் அவனை மறந்து அவளை கேலி செய்வது போல,

"ஆஹா நீ தான் சுவரேறி குதிக்கிற ஆளாச்சே... ஆனா இப்போ அந்த வேலை எல்லாம் வேணாம்..." என்று முடிக்க, அவள் விட்டால் தானே!

"ஏன்... ஏன்... ஏன்..." அவனது சட்டையை பிடித்து உலுக்காத குறையாக அவனிடம் கேட்க,

"ப்ச்... யூ ஆர் கேரியிங் திவ்யா..." என்று அவன் கூறிவிட்டு வேறுபுறம் திரும்பியபோது தான் அவளுக்கும் அவன் சொன்னது புரிந்தது... ஆனால் வாரிசை சுமந்து கொண்டு இருக்கும் தனது மனைவியின் ஆசையை அப்படியே விட்டுவிடவும் அவனுக்கு பிடிக்கவில்லை....

"சரி வா... ஆனா ரொம்ப ஜாக்கிரதையா இறங்கணும்... இப்போ வெறுமனே கால மட்டும் நனைச்சுக்கோ... கோயிலுக்கு போயிட்டு வந்துட்டு வேணும்னா குளிக்கலாம்... அதுக்கு நம்ம தோப்பிலேயே வேற இடம் இருக்கு... அங்க யாரும் வர



மாட்டாங்க. அதோட பாதுகாப்பாவும் இருக்கும்..." என்று நிதானமாக அவளுக்கு விளக்கி அவனே இறங்கி வரவும் திவ்யாவுக்கு பறப்பது போல இருந்தது!

"ம்ம்ம்... ஒகே... ஓகே..." என்று சிறுபிள்ளையாக சந்தோஷமாக தலையாட்டினாள்! இளம் சிவப்பு நிற சேலையில் பார்பி பொம்மையாக தன்னருகே துள்ளி கொண்டு வந்த மனைவியை பார்க்கும் போதே மனதில் தாபம் எழ.... அடுத்த நிமிடமே அவள் தன்னை மறுத்து பேசிய வார்த்தைகளும் அன்று இரவு ஸ்ரீராமிடம் கதறியதும் நினைவுக்கு வர தலையை உதறி கொண்டான்! அவனது மனவோட்டத்தை புரியாத திவ்யா குதூகலித்து கொண்டிருந்தாள்!

"அச்சோ... என்ன அழகு.. இந்த இடம்... கிளைமேட் சூப்பர் கார்த்திக்... இங்கேயே இருந்துடலாம் போல இருக்கு... இந்த குளிரை சென்னையிலயோ பாண்டிலையோ பார்க்கவே முடியாதில்ல..." குளிரை அனுபவித்தபடியே கைகளை இறுக்கமாக கட்டி கொண்டு அவள் கூற அந்த நிமிடம் அவனுள் உறைந்தது! என்னதான் அவள் மேல் வருத்தமும் ஆற்றாமையும் இருந்தாலும் அவனது ஆசை காதலியல்லவா! மனம் தடுமாறியது!

தோப்பில் இருந்து ஆற்றில் இறங்கியவன் தண்ணீரில் நின்றவாறே திவ்யா இறங்குவதற்கு கை கொடுத்தான்! செம்மண் தோப்பு.... தண்ணீர் சேர்ந்து வழுக்க....

"பார்த்து இறங்கு திவ்யா..." பதறினான்... ஆனால் அவனது பதற்றம் அங்கிருந்த மிஸ்டர் கல்லுக்கு தெரியாமல் போக, அந்த கல் தடுக்கி மேலிருந்து கீழே விழ போனவளை பூமாலையாக தன் மேல் தாங்கினான் கார்த்திகேயன்! அவனது வலிய கைகள் அவளது மெல்லிடையில் பரவ இருவருக்குமே மின்சாரம் பாய்ந்த உணர்வு! வெண்பளிங்கு போன்ற அந்த இடை பிரதேசத்தில் பட்ட கை இருவருக்குள்ளும் ஏதோ ஒன்றை தட்டி எழுப்ப... அந்த இடத்தின் தனிமையும் காற்றில் இருந்த மென்மையான சில்லிப்பும் மேகம் கூடியதால் கவிழ்ந்து கொண்டிருந்த இருளும் சலசலவென ஓடிய நதியின் சலசலப்பையும் கீச் கீச் என்ற பறவைகளின் சப்தத்தையும் தவிர வேறெதுவும் இல்லாத அந்த சூழ்நிலையில் மயங்கியது நெஞ்சம்...

இடையில் துவங்கிய பயணம் இனிமையாக முன்னேற இதை எதிர்பார்க்காத திவ்யாவுக்கு மனம் படபடத்தது... அவனது முகத்தை நிமிர்ந்து பார்க்க முடியாமல் வெட்கம் அவளை தடுக்க அவனது கைகளை எடுத்து விடும் தைர்யம் வராமலும் அவனது இந்த செயலை சட்டென ஏற்று கொள்ளவும் முடியாமலும் தவித்தாள்... என்னதான் யாருமற்ற தனிமை என்றாலும் அது பொது இடம் என்ற லஜ்ஜையும் அவளை அவனோடு ஒன்ற விடாமல் தடுத்தது... ஆனால் அவளது கணவனோ தன்னை மறந்து அவளுள் மூழ்கி கொண்டிருந்தான்...



"கார்த்திக்.... ப்ளீஸ்..."

"ம்ம்ம்..." அவனது தேடலை கழுத்து வளைவில் உதட்டை பதித்தபடி துவங்க... அவளது பூவுடல் நடுங்கியது... நடுக்கத்தை உணர்ந்த ஆண்மை இன்னும் வேகமாக அவளது இதழ்களில் தேட துவங்க...

"கா... கார்த்திக்... ப்ளீஸ்ஸ்ஸ்... விடுங்க..." தடுமாறியபடியே வந்து விழுந்தன வார்த்தைகள்...

"திவி... ப்ளீஸ்ஸ்ஸ்... ஐ நீட் யூ...." அவனது தடைகள் அனைத்தையும் தகர்த்தது அவனது தாபம்... ஆனால் அவன் மனைவியின் நிலையோ சங்கடமான ஒன்றாக இருந்தது... அவளது மனம்,

"ஹய்யோ... பப்ளிக் பிளேஸ்... வேணாம்..." கணவனின் நெருக்கத்தில் நெகிழ்ந்து இருந்தவளின் மனம் பொது இடம் என்று மட்டுமே குரல் கொடுக்க,

"நோ கார்த்திக்..... இதென்ன இன்டீசன்சியா... ப்ளீஸ் விடுங்க...." குரலில் கொஞ்சம் கடுமை சேர்ந்து அவனை தள்ளி நிறுத்த முயல... அவனது தாபம் அனைத்தும் பொங்கும் பாலில் பட்ட நீராக தணிந்தது! அவளை தள்ளி நிறுத்தி....

"இது இன்டீசன்சியா....?" அவளிடம் வெட்கத்தை விட்டு கூறியும் இப்படி செய்கிறாளே என்ற கோபம் அவனது முகத்தில் அப்பட்டமாக தெரிந்தது!

"இல்ல கார்த்திக்... பப்...." பப்ளிக் பிளேஸ் என்று அவனுக்கு புரிய வைத்துவிடும் நோக்கத்தில் அவள் ஆரம்பிக்க கார்த்திகேயன் கோபத்தோடு கைகளை உயர்த்தி தடுத்தான்!

"வேணாம் திவ்யா.... போதும் நான் அசிங்கபட்ட தெல்லாம் போதும்.... நான் தொட்ட புழு ஊரற மாதிரி இருக்குன்னு சொல்லியும் அதை மறந்துட்டு.... ச்சே..." என்று தலையில் கை வைத்து கொண்டான்... அந்த குரலில் அவனது அடிபட்ட வேதனை மிகுந்து தெரிய அதை தாள முடியாத திவ்யா....

"கார்த்திக்... நீங்க..." தப்பாக புரிந்து கொண்டு இருக்கீங்க என்று சொல்ல வந்தவளை அப்படியே நிறுத்த கூறிவிட்டு மர கிளையை பிடித்து மேலே ஏறினான்....

"மேலே ஏற கை குடுக்கலாம் இல்லையா.... இல்ல அதுக்கும் நீ சொன்ன மாதிரி புழு ஊறுமா?" என்று கோபத்தோடு அவன் கேட்க மௌனமாக அவனது கைகளை பிடித்து மேலே ஏறினாள்!

மௌனமாக அறைக்கு சென்றனர்.... ஒன்றும் பேசாமல் குளியலறைக்குள் புகுந்து கொண்டான் கார்த்தி... குளித்து முடித்து பாந்தமாக வேஷ்டி சட்டை அணிந்து வெளியே வந்தவன் திவ்யாவை பார்த்து ஒரு கணம் திகைத்துத்தான் போனான்.... இளம் பச்சை நிறத்தில் பட்டு புடவையுடுத்தி சிறு நகைகள் மட்டும்



அலங்கரித்த இடை தாண்டிய கூந்தலில் சின்னசாமியின் மனைவி கொடுத்த நெருக்கமாக தொடுத்த மல்லிகை சரத்தை வழிய விட முயன்று கொண்டிருந்தாள்! இயற்கையாக சிவந்த கன்ன கதுப்புக்களும் அதரங்களும் தாய்மையின் காரணமாகவோ என்னவோ மின்னியது!

"அழகு ராட்சசி... பிசாசு..." மனதில் திட்டியவாறு கோயிலுக்கு அவளையும் அழைத்து சென்றான்!

✤ ✤ ✤

புதுவை சிறைச்சாலையில் வக்கீல்களுடனும் தந்தையுடனும் ஆலோசித்து கொண்டிருந்தான் அரவிந்தன்... மொத்தமாக அரைமணி நேரம் ஒதுங்கி இருந்தனர் ஆலோசனைக்காக.... சற்று தள்ளி போலீஸ் நின்று கொண்டு கண்காணித்து கொண்டிருக்க வெளியே நிருபர்கள் செய்திக்காக ஆவலாக காத்து கொண்டிருந்தனர்... ஏதாவது பரபரப்பாக கொளுத்தி போட இது நல்ல தருணமல்லவா! அவர்களை முறைமை படுத்தி கொண்டிருந்தனர் காவலர்கள்....

காவலில் எடுத்து விசாரிக்க அனுமதி பெற்று இதோடு பத்து நாட்களாகி இருந்தது... ஜாமீன் பெறுவதற்கு எவ்வளவு முயன்றும் ஆனானப்பட்ட ராமசுப்புவாலேயே முடியவில்லை என்பதில் கடும் கோபத்தில் இருந்தான் அரவிந்தன்! கமிஷனர் வீட்டுக்கு கைது செய்ய வந்தபோது இவ்வளவு

பிரச்சனை வரும் என்று நினைக்கவில்லை... ஆனால் கேஸ் ஃபைல் பண்ணும் போது போதையில் இருந்தான் என்பதற்கு ஆதாரமாக ஐம்பது கிராம் ஹெராயின் வைத்திருந்தான் என்று குறிப்பிட்ட போது ஆடித்தான் போய்விட்டான்... இந்த பிரிவுக்கு சட்டத்தில் ஜாமீன் கூடக் கிடையாதே... எந்த கேள்வியும் கேட்க முடியாமல் ஒரு வருடம் வரை கூட காவலில் வைக்க முடியுமே. இதை செய்தது கார்த்திதான் என்பது தெளிவாக புரிந்தது அவனுக்கு....

"ராமசுப்பு சார்... இப்போ என்னதான் பண்ண முடியும்னு சொல்றீங்க?" பொறுமையை கடந்து அவரிடம் கொதித்தான் அரவிந்தன்!

"அரவிந்த் சார்.... கேஸ் ரொம்ப ஸ்ட்ராங்க பைல் பண்ணி இருக்காங்க... ஹெராயின் தவிர வேற என்னவோ எல்லாம் உள்ளார கொண்டு வர்றாப்ல தெரியுது... பெட்டர் நீங்க கார்த்தி கிட்ட தகைஞ்சு பாக்கறது நல்லது...."

"நானா? கார்த்திகிட்டயா? நெவர்... அவன்தான் என்னோட முதல் எதிரியே. அவனை...." என்று கொலைவெறி கண்ணில் தெரிய பேசிக் கொண்டிருந் தவனை பார்க்கும் போதே மாசிலாமணிக்கு உள்ளூர நடுக்கம் வந்தது! மகன் இந்த அளவு கார்த்தியிடம் பகைத்து கொண்டால் அவனது வாழ்க்கை என்ன ஆவது என்ற பயம் அவரை ஆட்டுவித்தது!



"அரவிந்த்.... கண்ணா.... தயவு செய்து கார்த்தி கிட்ட பேசுப்பா.... நீ அவன் கிட்ட பேசுனா எல்லாம் சால்வ் ஆகிடும்... நான் அழைச்சுட்டு வரேன்டா..." தந்தை மகனுக்காய் துடிக்க,

"அப்பா.... பேசாம இருக்கீங்களா? எனக்குன்னு என்ன மரியாதைய முதல்ல இருந்து கொடுத்தீங்க? உங்களுக்கு கார்த்தி தான் உசத்தி.... இப்போவும் அவனையே கட்டிட்டு அழுங்க... என்னை விட்ருங்க... போங்க... என் கண் முன்னால நிற்காதீங்க...." கோபத்தை எல்லாம் மாசிலாமணியிடம் காட்ட,

"அரவிந்த்... நீ இப்படி இருக்கறத நினைச்சா எனக்கு ரொம்ப கவலையா இருக்குப்பா...." என்று கூறி விட்டு தலையில் கை வைத்து உட்கார்ந்து கொண்டார். நெஞ்சு வலித்தது அவருக்கு... இந்த வயதில் தனக்கு இதெல்லாம் தேவையா என்று நினைக்காமல் இருக்க முடியவில்லை.... ராமசுப்புவிடம் பேசி பயனிருப்பதாக அரவிந்துக்கு தோன்றவில்லை!

"ராமசுப்பு சார்... வெளிய பாண்டியன்னு ஒருத்தன் இருப்பான்.... அவனை உள்ள அனுப்ப ஜெயிலர் கிட்ட பர்மிஷன் வாங்கிட்டு உள்ள அனுப்புங்க...." என்று கூறிவிட்டு நெற்றியில் கைவைத்து யோசித்தான்!

பாண்டியன்... அரவிந்தனின் போதை மருந்து சாம்ராஜ்யத்தின் தூண்! விநியோகிப்பதில் பெரும் பங்கு வகிப்பவன்... புதுவையில் முன்னணியில் உள்ள ரவுடி கும்பலின் தலைவன்... அரவிந்தனின் வலது கரம்!

"அண்ணே...." அரவிந்தனை பார்த்து அவசரமாக வணக்கம் வைத்தான்!

"பாண்டி... சச்சிதானந்தத்துக்கிட்ட பேசினியா? ஏதாவது ஹெல்ப் பண்றேன்னு சொன்னாரா?"

"பேசினேண்ணா... ஆனா அவர் பிடி கொடுக்கல... அவர் பொண்ணுக்குகூட வேற இடம் முடிவு பண்ணிட்டதா சொன்னாரு... அவரை காண்டாக்ட் பண்ண வேண்டாமாம்... பண்ணினா அவருக்கு தான் பிரச்சனைன்னு சொல்ல சொல்றாருண்ணா...."

ஷாலினி வீட்டில் நடந்ததை பாண்டியன் விவரிக்க அரவிந்தனுக்கு ரத்தம் கொதித்தது.... தீட்டிய மரத்திலேயே கூர் பார்க்கிறார்களா? கார்த்திக்கும் ஷாலினிக்கும் நடக்க இருந்த திருமணத்தை நிறுத்த அவனுக்கு பிரச்சனை வந்த போது தான் கொடுத்த ஐடியாவை தன்னிடமே காட்டுகிறான்... இருக்கட்டும் வெளியே வந்ததும் வைத்து கொள்கிறேன் என்று கருவி கொண்டான்... அந்த கோபம் அப்படியே கார்த்தி மேல் பாய்ந்தது.... இவனால் தானே அத்தனையும்....

சிறு வயது முதலே தன்னை விட அவனுக்கு தான் எல்லா இடத்திலும் முக்கியத்துவம்... அதற்கேற்ப படிப்பிலும் விளையாட்டிலும் அறிவு கூர்மையிலும் அவனே முந்த அரவிந்தனின் தந்தைக்கும் அவனே செல்ல பிள்ளையானான்.... தான் அமர வேண்டிய மடியில் அவன் அமர்ந்து செல்லம் கொஞ்சுவதை



பார்க்க பார்க்க அரவிந்தனுக்கு கோபம் பற்றிக் கொண்டு தான் வரும்.... ஆனால் தந்தையிடம் கோபத்தை காட்டாமல் தனிமையில் வெதும்புவான்... சில நேரம் அழுவான்!

நாள் ஆக ஆக தனது தோழனான கார்த்தி மேல் நட்புக்கு பதில் வஞ்சம் தானே வளர்ந்தது! பண்பாம் பண்பு... யாருக்கு வேண்டும் அவனது பண்பு என்று மனதுக்குள் கருவியது அந்த பிள்ளை மனம்... எடுத்து கூற தாயும் இல்லாமல் அந்த வஞ்சம் இலை விட்டு கிளை விட்டு அவனது மனதில் வளர்ந்து நின்றது அவனுக்கு ஷாலினியை பேசி முடித்தபோதுதான்! அந்த அழகு புயலின் மேல் கண்ணாக இருந்தவனுக்கு சச்சிதானந்தம் கார்த்திகேயனுக்காக பேசி முடிக்க பொறாமை தீ பற்றி கொண்டது.... அதற்கு முன்னமே அத்தனை கெட்ட பழக்கங்களையும் பழகிட சட்டத்திற்கு புறம்பான காரியங்களில் ஈடுபட்டு இருந்தவனுக்கு அந்த தீ பற்றியதில் வியப்பேது மில்லையே!

ஷாலினியை அடுத்து திவ்யாவிடம் கார்த்திக் தோழமையை காட்டியபோது அந்த தீ பலமாக எரிந்தது... ஷாலினி போனால் போகட்டும் திவ்யாவை யாவது கைப்பற்றி விடவேண்டும் என்று துடித்தான்! தனது தந்தையை வைத்தே கார்த்தியிடம் மெதுவாக ஆரம்பிக்க வைத்தான்! முதலில் தயங்கிய கார்த்திக் பின்னர் தனது நண்பனின் நல்வாழ்வுக்காக என்று ஒப்பு

கொண்டு அவனே வைஷ்ணவியை விட்டு திவ்யாவின் வீட்டில் பேச செய்ய அரவிந்துக்கு வானமே வசப்பட்ட உணர்வு. ஆனால் தனக்கு பேசிய திவ்யா தன்னை விட்டு அவனையே பிடித்து தொங்கிய பொறாமை தீ கொழுந்து விட்டெறிந்து... அவனுக்கே அத்தனை நல்ல விஷயங்களையும் தருகிறாயே இறைவா என்று கடவுளிடம் சண்டை போட்டான் அரவிந்தன்!

இடையில் அந்த பிரச்சனை வந்தபோது மிகவும் சந்தோஷித்தது அரவிந்தன் தான்.... அப்போது கம்பெனி எப்படியும் கவிழ்ந்துவிடும் நாம் தப்பித்தால் போதும் என நினைக்க நடந்தது அப்படியே உல்ட்டாவாக... சோர்ந்து போய் அமர்ந்தான்! பொன் முட்டையிடும் வாத்தாயிற்றே சுஷ்ருதா! அதையும் தாண்டி திவ்யாவை கார்த்திக் மணம் புரிந்தது.... அவனால் ஜீரணம் செய்யவே முடியாத ஒன்றாகியது... அவர்களை பிரிக்க நினைத்தான்... முனைந்தான்... அதிலும் தோல்வி கண்ட மனம் உலைகளனாக கொதித்தது!

"கார்த்தியோட நடவடிக்கைகளை கண்காணி பாண்டி...." உணர்ச்சியற்ற முகபாவத்தோடு அவன் கூற

"எதுக்குண்ணா...." குழப்பமாக அந்த பாண்டியன் கேட்க குரலை கீழிறக்கி,

"முடிச்சிடு...." கண்களில் கொலைவெறி தாண்டவமாடியது....



"அண்ணா...." அதிர்ந்தான்... கார்த்தி மேல் கை வைக்க நினைப்பவர்களையே இந்த அளவு பந்தாடும் அவனை.... பாண்டி பின் வாங்க

"உஷ்.... இந்த ஜெயில்ல உட்கார்ந்துகிட்டு நான் இதை சொல்றேன்னா நான் எதுக்கும் தயார்ன்னு அர்த்தம் பாண்டி... ஆனா அதுக்கு முன்னால அவன் இருக்கக்கூடாது... முடிச்சிட்டு வா... உனக்கு என் சொத்தையே எழுதி வைக்கிறேன்..." என்று முடித்தான்!

✤ ✤ ✤

"**வா**னிலை அறிக்கை.... தமிழகம் மற்றும் புதுவையிலும் இன்னும் இரண்டு நாட்களுக்கு மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும் என்று வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவிக்கிறது... புதுவை கடல் பகுதியில் மையம் கொண்டிருந்த புயல் வலுவடைந்து இன்று இரவு கரையை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது... இதனால் தமிழகம் மற்றும் புதுவை கடற்கரையோர பகுதியில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லும்படி அறிவுறுத்தப்படு கிறார்கள்..." நிலா செய்திகளில் அறிவிப்பு வெளியாகி கொண்டிருந்தது... நிலா தொலைக்காட்சியின் தலைமை அலுவலகம் புதுவைக்கு மாற்றப்பட்டு இருந்தாலும் தொழில் நுட்ப செயல்பாடுகள் அனைத்தும் சென்னையிலேயே இருந்தது... அனைத்தும் ஸ்ரீராமின்

கண்காணிப்பில்... அவனுக்கும் சாஹித்யாவுக்குமான திருமணம் நிச்சயிக்கப்பட்ட வேளையில் அவன் பொறுப்பெடுத்து கொண்டிருந்தான்!

கார்த்தியும் திவ்யாவும் மேட்டுப்பாளையம் சென்று வந்த பிறகு அவளிடம் முகம் கொடுத்து கூட பேசாமல் பிரான்ஸ் கிளம்பியவன் தான்... இன்று வரை அவனிடம் இருந்து ஒரு தகவலும் இல்லை அவளுக்கு..... வெளியே புயல் மழை கொட்டி கொண்டு இருக்க மனமும் அதற்கு ஈடாக தவித்து கொண்டு தான் இருந்தது...

நெருப்புக்கு எப்படி காற்று துணை புரிகிறதோ காதலுக்கு பிரிவு என்பார்கள்... சிறிய நெருப்பை காற்று அணைத்துவிடும். ஆனால் பெரு நெருப்பை இன்னும் ஊதி பெரிதாக்குவது காற்றுதான். அதுபோலத்தான் காதலுக்கு பிரிவும்.... இருவரிடையே காதல் என்பது குறைவாக இருக்கும் பட்சத்தில் பிரிவு அவர்களிடையே நிரந்தரமாகிறது. அதே வேளையில் காதல் அளவிட முடியாமல் இருக்கும் பட்சத்தில் அந்த பிரிவே அந்த காதலை இன்னமும் பெரிதாக்கி விடுகிறது... அதை இப்போது அனுபவபூர்மாக உணர்ந்தாள் திவ்யா!

அவனை பாராத ஒவ்வொரு கணமும் முள் மேல் அமர்ந்த உணர்வை தர ஒவ்வொரு முறையும் செல்பேசி அழைத்த போது ஆர்வமாக எடுத்து பார்த்து ஏமாந்து போனாள்! ஸ்ரீராமிடம் அவனை அவனது தவறுகளோடும் குறைகளோடும் ஏற்று கொள்ள நினைக்கிறேன் என்று



கூறியபோதும் அவளால் அவனுடன் ஒன்ற முடிய வில்லை என்பதை மேட்டுப் பாளையத்தில் உணர்ந்தாள்... ஏதோ ஒன்று தடுக்கிறது என்று நினைத்தவளுக்கு... இன்றோ அவனை பார்த்தால் போதுமென்றாகி விட்டது... பிரிவு துயரம்!

பார்க்குமிடமெல்லாம் நீக்கமற நிறைந்திருக்கிறாய் கண்ணா என்று பாரதி பாடியது கண்ணனுக்கு பொருந்துகிறதோ இல்லையோ இவனுக்கு பொருந்து கிறது என்று அவனிடம் மனதில் சண்டை போட்டு கொண்டிருந்தாள்... ஒரு வாரமாக தன்னிலை மறந்து அமர்ந்து இருப்பதும் மங்கை அவளை கட்டாய படுத்தி உணவு உண்ண வைப்பதும் சகஜமாகி போனது!

"அத்தை எனக்கு ராட்டு தொக்கு கத்து கொடுங்க" என்று வந்த நின்ற மருமகளை வியப்பாக பார்த்தார் மங்கை! இறால் என்றாலே மூக்கை மூடிக் கொண்டு ஓடுபவள்... அசைவம் பக்கம் தலை வைத்து படுக்காத ஆள் ஆயிற்றே!

"என்னடா கண்ணா.... புதுசு புதுசா..." என்று சிரித்தபடியே அவர் கேட்க

"அவங்களுக்கு அதுதானே அத்தை ரொம்ப பிடிக்கும்... நானும் கத்துக்கறேனே..." என்று மூக்கை சுழித்த படி செல்லமாக கேட்ட மருமகளை இருத்தி வைத்து ராட்டு தொக்கை அழகாக கற்று கொடுக்க ஆசையாக கற்று கொண்டாள் திவ்யா!

"ஏன்டா கல்யாணத்துக்கு முன்னாடி அப்படி பெண்ணியம் பேசுவ... இப்போ என்ன கிட்சன்ல... அவ்வளவுதானா உன்னோட பெண்ணியம்?" கிண்டலாக கேட்ட தனது அத்தைக்கு சிரித்தபடியே,

"அத்தை பெண்ணியம்னா எல்லாரையும் அடக்கி ஆளறதோ சமைக்க மாட்டேன்னு சொல்றதோ இல்லத்தை.... தன்னோட மனைவி தன்னை மாதிரியே ஈக்வல் பிரஜைன்னும் அவளால எல்லா விதத்திலும் சாதிக்க முடியும்ன்னு நம்ப வைக்கறதுதான் ஒரு மனைவி கணவன் கிட்ட பேசற பெண்ணியம்... கார்த்திக் என்னோட திறமைகள மதிச்சு எனக்காக யோசிச்சு செய்றவர்... அதைவிட என்னன்னா கார்த்திக் சொன்னமாதிரி ஆத்மார்த்தமா காதலிச்சா எதுவுமே தன் மேல திணிக்கப்படறதா உணர்வு வராது இல்லையாத்தை...." மங்கையிடம் தனது கருத்தை கூறி கேட்க அவரது முகம் பெருமையில் ஒளிர்ந்தது! திருஷ்டி கழித்தவர்....

"இப்படி ஒரு அறிவான பொண்ணு தான் கார்த்திக்கு சரியான ஆள்... அவனோட ஈக்வலா விவாதம் பண்ண... நான் கூட என்னமோன்னு நினைச்சேன்... கார்த்தியோட சாய்ஸ் தப்பாவே போகலை கண்ணா...." தனது மருமகளின் அறிவை மெச்சி கொண்ட மாமியாரும் இவராகத்தான் இருப்பார் என்று மனதுக்குள் நினைத்தவள் அதையே வாய்விட்டும் சொல்ல செய்தாள்!



"மருமகளோட அறிவை பாராட்டுற அத்தம்மா நீங்களா மட்டும் தானத்தை இருப்பீங்க..." என்று அவரை கட்டிக் கொண்டாள்!

"இதுல என்லடா கண்ணா இருக்கு... நீ அறிவா இருக்கறது தானே நல்லது... எனக்கப்புறம் என்னோட பொறுப்பெல்லாம் நீதானே கண்ணா பார்க்கணும்... அதோட உன்னோட அறிவு தானே என்னோட பேரன் பேத்திக்கு ட்ரான்ஸ்பர் ஆக போகுது.... எல்லாம் அந்த சுயநலம் தான்டா...." என்று சிரிக்க

"ஆஹா அத்தை... இப்படி போட்டு தாக்குறீங்களே...." என்று சிரித்த மருமகளின் அழகை கண்டு மயங்கி நின்றார்... இந்த அருமையான பெண்ணிடம் கார்த்தி மயங்கியதில் என்ன தவறு இருக்கிறது என்று அவரது உள்ளம் நினைத்தது! ஆனால் இருவரிடையே இன்னமும் ஏதோ சரியாகாமல் இருக்கிறது என்று உள்மனம் சொல்ல,

"திவி... ஒண்ணு கேட்டா தப்பா நினைக்க மாட்டியே கண்ணா?" பலமான பீடிகையோடு ஆரம்பிக்க,

"சொல்லுங்கத்தை..." என்று புன்னகையோடு கூற,

"திவி கண்ணா... கார்த்தி உன்னை சொல்லி கல்யாணம் பண்ணிக்கறேன்னு சொன்னப்போ நாங்க யாருமே ஒண்ணுமே சொல்லல.... சொல்லப்போனா

வேண்டாம்னு சொல்ற துணிச்சல் தான் இல்ல... ஏன்னா ஒரு முடிவெடுத்துட்டா அவனை மாற வைக்கறது ரொம்ப கஷ்டம்...."

"ஏன் அத்தை இதை இப்போ சொல்றீங்க?" சாதாரணமாகவே கேட்டாள் திவ்யா!

"இல்ல கண்ணா... அவ்வளவு ஆசையாத்தான் உன்னை கல்யாணம் பண்ணிகிட்டான்... ஆனா அவன் முகத்துல அந்த பழைய குறும்பும் சிரிப்பும் மிஸ்ஸிங்டா... அதான் கேக்குறேன்... உங்க ரெண்டு பேர் இடைல எதாவது பிரச்சனையா?" கேள்வி கேட்டுவிட்டு உயிரை கண்களில் தேக்கி மருமகளின் முகம் பார்த்த அந்த அன்னையை பார்த்து மனம் சிலிர்த்தாள்!

"கொஞ்சம் கொஞ்சம் பிரச்சனை இருந்தது அத்தை.... ஆனா இப்போ இல்ல... இனிமே கண்டிப்பா அப்படி இருக்காது..." என்று பொதுப்படையாக முடித்ததே போதுமானதாக இருந்தது மங்கைக்கு!

"போதும்டா... என்ன பிரச்சனை இருந்தாலும் எல்லாத்தையும் மறந்திடுமா... ரெண்டு பேருமை லைப்ல ஜெய்க்கணும்.... அது போதும் திவி கண்ணா..." என்று கூறிவிட்டு,

"இந்த கார்த்தி கடலூர் போனானே.... இன்னும் ஒரு போனை கூட காணோமே......" என்று வருத்தமாக கூற அவள் அதிர்ந்தாள்! கார்த்திகேயன் பிரான்சில்



இருந்து வந்து விட்டானா??? அதை காட்டி கொள்ளாமல்...

"எப்போத்தை வந்தார்?" சாதாரணமாக கேட்பது போல கேட்க,

"நைட் தான் திவி.... ஏன் உன் கிட்டயும் இன்னும் பேசலியா?" கேள்வியாக பார்த்து கொண்டே கேட்க,

"இல்லத்தை.... மொபைலுக்கு சார்ஜ் போட மறந்துட்டேன்... ஆப்ல இருந்துச்சு.... இப்போ தான் சார்ஜ் போட்டேன்...." ஏதோ ஒன்றை கூறி சமாளித்து கொண்டு இருக்கும் போதே அவளது செல்பேசி அழைக்க... எடுத்து பார்த்தவள் ஏமாந்தாள்! மாசிலாமணி தான் அழைத்து இருந்தார்! அவன் இல்லாத நேரத்தில் இவர் எதற்கு அழைக்கிறார் என்ற குழப்பத்தோடு செல்பேசியை காதுக்கு கொடுத்தவள்... அவர் பேச பேச முகம் மாறினாள்!

"அங்கிள்.... உங்களுக்கு ஒன்னும் இல்ல... இதோ நாங்க உடனே கிளம்பி வந்துடறோம்... டோன்ட் வொர்ரி அங்கிள்...." பதட்டமாக சமாதானம் கூறிய வார்த்தைகள் அங்கு எடுபடவில்லை!

"......"

"அங்கிள்...." என்று அதிர்ந்தவள், அவர் மேலும் கூறியவற்றை கேட்டபோது காலடியில் பூமி நழுவியது! கடவுளே... இதென்ன சோதனை! பெரிதாக கடவுள் நம்பிக்கை இல்லாதவளுக்கு அப்போது அந்த கடவுளை

அழைப்பதை தவிர வேறு வழியிருப்பதாக தோன்ற வில்லை! பேசி விட்டு வைத்தவளிடம் பதட்டமாக மங்கை என்னவென்று கேட்க.... மற்ற விஷயங்களை கூறி அவரை பதட்டப்பட வைக்காமல்,

"மாசி அங்கிளுக்கு ரொம்ப நெஞ்சு வலிக்குதாம்... ஹார்ட் அட்டாக் போல இருக்குன்னு பதட்டபடறார் அத்தை... நீங்க டிரைவர் இன்னும் ஒரு அஞ்சாறு பேர அழைச்சுகிட்டு மாசி அங்கிள் வீட்டுக்கு போங்கத்தை.... நான் கார்த்திக்க அழைச்சுகிட்டு ஹாஸ்பிடல் வந்துடறேன்..." என்று கூறி விட்டு ஒரு நொடி கூட நிற்காமல் டிரைவரை அழைத்து காரை எடுக்க கூறினாள்!

காருக்குள் அமர்ந்து இருந்தவளின் பதட்டத்தை எதை கொண்டு தணிக்க? அதற்கு காரணமானவனின் முகத்தை ஒரு நொடி பார்த்தால் கூட போதுமே.... மாசிலாமணி அங்கிள் கூறியது அவளது காதில் ஒலித்து கொண்டே இருந்தது.... அவரது நெஞ்சை பிடித்தபடி அவளிடம் பேசியதை உணர்ந்தாள்!

"திவ்யா... கார்த்திக் கிட்ட பேசுறதுக்கு எனக்கு எந்த தகுதியும் இல்லம்மா... எந்த முகத்தை வெச்சுட்டு பேசுவேன்... காப்பாத்து திவ்யா... காப்பாத்து..."

"என்ன அங்கிள்... என்ன சொல்றீங்க... புரியவே இல்லையே..."

"அரவிந்த என்னால கட்டுபடுத்த முடியலை திவ்யாம்மா.... இப்போ பாண்டியன்னு ஒருத்தனை ஏவி



விட்டு இருக்கான்... கார்த்திக்கை கொல்ல சொல்லி... அந்த பாண்டியும் இன்னைக்கு கடலூர்ல இருக்க கார்த்திய முடிச்சுடறேன்னு போய் இருக்கான். ஆளுங்களோட... அவனுங்க பேசிட்டு இருந்ததை பார்த்தா ஏதோ ஆக்சிடென்ட் மாதிரி பண்ண போற மாதிரி தெரிஞ்சுது..... கார்த்தி கிட்ட சொல்லி ஜாக்கிரதையா இருக்க சொல்லும்மா... எப்படியாவது காப்பாத்து... அவனும் எனக்கு பிள்ளை மாதிரித்தான் திவ்யா...." என்று அந்த பெரியவர் வெடித்து அழ அவளால் அந்த நொடியை மறக்கவும் கூடுமோ?

காரில் போய் கொண்டே அவனது செல்பேசியை அழைக்க... அழைப்புகள் எடுக்கப்படாமலேயே இருந்தது....

"ஹய்யோ கார்த்திக்.... பிக் அப்... பிக் அப்... கார்த்திக்...."

பதட்டத்தில் கைகள் சில்லிட கண்ணீர் கொட்ட பார்த்தது! வெளியே புயல் மழை கொட்டி கொண்டிருக்க அதே புயல் அவள் மனதில் மையம் கொண்டிருந்தது! கார்த்திக் உன்னை நான் இழந்து விடுவேனா? அதை என்னால் தாங்க முடியுமா? வேண்டாம் கார்த்திக்... இந்த நினைப்பையே தாங்க முடியவில்லையே... ஐயோ... அந்த நிலையை நினைத்து பார்க்கவே முடியவில்லையே....!!!

"அண்ணா... கடலூருக்கு எதுக்கு போயிருக் காங்க... தெரியுமா?" டிரைவரிடம் கேட்டு தெரிந்து கொள்ளும் நிலையை என்ன சொல்ல?

"கடலூர்ல புயலால ரொம்ப பாதிப்பு வந்துருச்சாம்மா... எப்போவுமே நம்ம அய்யா இந்த மாதிரி விஷயங்கள்ல முன்னாடி நிற்பார்... இப்போ கூட அந்த மக்களுக்கு சாப்பாடு... மருந்து... தற்காலிக வீடு எல்லாம் அமைச்சு தர்றது அய்யாதான்... பாண்டி, விழுப்புரம் எல்லாத்துக்கும் ஒவ்வொரு ஆள போட்டுட்டு... கடலூருக்கு அய்யாவே கிளம்பி போனாரம்மா...." என்று அந்த ஓட்டுனர் விளக்கமாக கூற, அவளுக்கு தனக்கு ஒன்றுமே தெரியவில்லையே என்ற நினைப்பும் வந்தது! அதை உணர்ந்து அவர்....

"ஆர்டர் எல்லாம் அய்யாவோட பிஏ குடுத்துடு வாப்லமா... எல்லாருமே எல்லா நேரத்திலும் அலர்ட்டா இருக்கணும்ன்னு இந்த மாதிரி நேரத்துலன்ன எல்லாருக்குமே தகவல் போய்டும்... நம்ம கம்பெனில..." என்று கூறவும் அவளது கணவனை நினைத்து பெருமையாக இருந்தது... கார்த்திக் என் கணவன்... உன்னை இழக்க கூடாது கார்த்திக்... எனக்கு நீ வேண்டும்... உன்னுடைய காதலை சிறிதும் உணராமல் உன்னை தள்ளி வைத்த எனக்கு பெரிய தண்டனையை கொடுத்து விடாதே கார்த்திக்.... ப்ளீஸ்! மனதுக்குள் மறுகினாள் திவ்யா!



"கொஞ்சம் பாஸ்டா போங்கண்ணா... சீக்கிரம்...." என்று பதட்டமாக அவள் கூறவும் கார் இன்னும் வேகம் பிடித்தது! அவள் செல்பேசியில் கார்த்திக்கை பிடிக்க முயன்று தோல்வி அடைந்துகொண்டே வந்தாள்! ஜி.எம். பிரகாஷை பிடிக்க முயன்றவளுக்கு அவரும் கிடைக்காமல் போகவே அடுத்து அவனது உதவியாளர்களுக்கு அழைக்க முயன்றாள்! ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தில் புயல் பாதிப்பு பணிகளுக்காக இருப்பதாக கூறவே... மனம் சோர்ந்தது! இன்னொரு முறை பிரகாஷுக்காவது அழைக்கலாம் என்று அழைத்த போது...

"வணக்கம் மேடம்...." என்று லைனில் வந்தார்!

"சார்... அவர் பக்கத்துல இருக்காறா?" பதட்டமாக அவள் கேட்டதற்கு அவரும் பதட்டமாகவே...

"இருக்கார் மேடம்... இதோ குடுக்கறேன்..." செல்பேசி கரகரத்தது மழையில்! அப்போது பார்த்து அவள் போய் கொண்டிருந்த இடத்தில் டவர் ரிசெப்ஷனும் சதி செய்ய,

"சொல்லு திவ்யா...." என்று அவன் சொன்னது ஒன்றுமே கேட்கவில்லை!

"கார்த்திக்... ஹலோ...." என்று கேட்பதற்காக அவள் கத்த,

"ம்ம்ம் சொல்லு...."

அவன் பேசுவது கேட்காதது அவளுக்கு இன்னும் பதட்டத்தை அதிகப்படுத்த அதே நேரத்தில் அவர்களது கார் கடலூருக்குள் நுழைந்தது! செல்பேசி இணைப்பு விட்டு போனது!

"அண்ணா... எங்க இருப்பாங்கன்னு தெரியுமா?" டிரைவரிடம் கேட்க

"காக்கா தோப்பு மண்டபம்ன்னு தான்ம்மா எங்களுக்கு சொன்னது... ஆனா அங்க இல்லாமலும் இருக்கலாம்.... என்னோட போன்ல இருந்தும் கால் போக மாட்டேங்குதும்மா..." அவரும் கால் செய்து பார்த்து தோற்றார்! புயல் மழையின் பாதிப்பு.... வழியெங்கும் மரங்கள் வேரோடு விழுந்து இருக்க கூரைகள் பியைந்தும் ஆஸ்பெஸ்டாஸ் சீட்கள் பறந்தும் இருந்தன! வழியில் பார்த்த முந்திரி தோப்புகள் முற்றிலுமாக சேதமடைந்தும் வாழை தோப்புகள் இருந்த சுவடே இல்லாமலும் இருந்தன!

ஒரு வேளை அங்கு கார்த்திக் இல்லாமல் இருந்தால்.... நெஞ்சு கூடே காலியாவது போல உணர்ந்தாள் திவ்யா! பதட்டத்தில் தலை சுற்றியது அவளுக்கு! காக்கா தோப்பில் அந்த மண்டபத்தை கண்டு பிடித்த போது அவன் இங்கே இருக்க வேண்டுமே என்று ஆயிரம் வேண்டுதல்களை மனதுக்குள் வைத்தபடியே காரில் இருந்து இறங்கினாள்.... செல்பேசியில் அவனை அழைக்க முயன்றபடி...! அவளது அழைப்பை அவன் எடுக்க,



"கார்த்திக் எங்க இருக்கீங்க?" பதட்டமாக அவள் கேட்டது அவனிடமும் பதட்டத்தை உருவாக்க,

"ஏன் திவ்யா.... என்னாச்சு..."

"ஹய்யோ கார்த்திக்... எங்க நீங்க இருக்கீங்க... அதை முதல்ல சொல்லுங்க..." அவளுக்கு பொறுமை பறந்தது!

"கடலூர்ல காக்கா தோப்பு திவ்யா... ஏன் என்னாச்சு?"

"நான் வெளிய தான் இருக்கேன்.... கொஞ்சம் வாங்களேன்... ப்ளீஸ்...." அழுதுவிடுபவள் போல அவளை அழைக்க, பேசிக் கொண்டே வெளியே விரைந்தான்! என்ன காரணமாக இருக்கும்... திவ்யா இந்த அளவு உணர்ச்சி வசப்படுகிற ஆள் இல்லையே என்று நினைத்தவாறே வந்தான்!

மழை கோட் அணிந்தபடி வெளியே வந்தவனை பார்த்த போதுதான திவ்யாவுக்கு உயிரே வந்தது... ரோட்டின் ஒரு புறத்தில இருந்து,

"கார்த்திக்..." நெஞ்சு நிறைய காதலோடும் கண்கள் நிறைய கண்ணீரோடும் அழைத்து அவனை நோக்கி போக, காத்திருந்த எமன் லாரி உருவில் கார்த்திக்கை நோக்கி விரைந்தான்... அசுர வேகத்தில்! ஒரு நிமிடம் முன்பே அந்த லாரியை கவனித்தவளுக்கு தலை சுற்றியது.... அதீத பதட்டத்தில்....

"கார்த்திக்க்க்க்க்க்க்......" என்று கத்தி கொண்டு அவள் மயக்கமாகவும் லாரி அவனை நெருங்கவும் நேரம் சரியாக இருந்தது....

திவ்யா யாருமில்லா இருட்டுக்குள் பயணிக்க ஆரம்பித்து இருந்தாள்!

## 22

ஜிப்மர் மருத்துவமனை

மருத்துவர்கள் அங்குமிங்கும் போய் வந்து கொண்டிருக்க தலையை கையால் தாங்கி உலகத்தில் உள்ள அத்தனை தெய்வங்களையும் வேண்டி கொண்டிருந்தான் கார்த்திகேயன்! உள்ளே இருப்பது அவனது உயிரல்லவா! வந்துவிடு திவி... என்னிடம் வந்துவிடு... மனதில் ஓராயிரம் முறை ஜெபித்து கொண்டிருந்தான்! விதி வலியதுதான் ஆனால் இவ்வளவு வலியது என்று அவனுமே நம்பவில்லையே! அந்த காட்சி மறுபடி மறுபடி அவனது கண்முன் வந்து அவனை சின்னாபின்னப்படுத்தியது... மறக்கவும் கூடுமோ?

மேட்டுப்பாளையத்தில் நடந்த நிகழ்ச்சிக்கு பின் அவனுக்குமே அவள் மேல் வருத்தம் மிகுந்து



இருந்தது... மனிதன் ஒரு முறை தவறினால் வாழ்நாள் முழுவதும் அதையே நினைத்து கொடுமை செய்ய வேண்டுமா என்கிற ஆற்றாமை.... இனி அவளாக அவனிடம் வந்தாலொழிய அவளிடம் பேசவே கூடாது என்கிற உறுதியோடு தான் அவன் பிரான்ஸ் கிளம்பி போனதே... அதோடு அவளுக்கு தனிமையில் சிந்திக்க நேரம் கண்டிப்பாக கிடைக்கும் என்பதில் உறுதியாகவே இருந்தான்!

அவளை அணுகியதும் கூட அவள் கண்களில் தென்பட்ட இளக்கத்தை வைத்துதான்.... ஆனால் அவள் இன்னமும் தன்னுடன் ஒன்றவில்லை என்னும் உண்மை அவனது கன்னத்தில் பலமாக அறைய அதற்கு மேல் போக அவனுக்கு விரும்பமும் இல்லை! ஏனென்றால் அவன் மேல் அவனுக்கு இருந்த நம்பிக்கை.... ஆனால் ஒன்றை முழுவதுமாக மறந்து இருந்தான்... இதுவரை அவளிடம் தன் காதலை சொன்னதே இல்லையென்பதை.... மனம் விட்டு வார்த்தைகளால் பேசப்படாத காதல் என்பது செவிடன் கேட்கும் இசையல்லவா... என்ன பயன்? அந்த அதீத நம்பிக்கை சில சமயங்களில் அகம்பாவமாக மாறியது தான் அவனிடம் இருந்த மிகப் பெரிய தவறு!

மனசாட்சி அவனை பார்த்து கேள்வி எழுப்பியது... அவள் ஒன்றவில்லை என்று அவளை குற்றம் சாட்டி கொண்டிருக்கிறாயே... நீயென்ன செய்தாய் அவள் உன்னுடன் மனம் ஒத்து வாழ்வதற்கு?

என்று எப்போதும் போல கடிந்தது... செய்த தவறுக்கு தான் நான் பிரதியுபகாரம் செய்துவிட்டேனே என்றும் மனம் வாதிட... அது அவளை பொறுத்தவரை தண்டனையாக அல்லவா ஆயிற்று என்று மனசாட்சி உண்மையை கூற அந்த நிலையில் அவனது அந்த ஒரு நாளின் தவறு பூதாகரமாகவே அவனுக்கு தெரிந்தது!

இதே தவறை உன் தங்கையிடம் எவராவது செய்து இருந்தால் அவர்களை சும்மா விட்டு இருப்பாயா? உனக்கொரு நியாயம் அவளுக்கொரு நியாயமா என்று மனசாட்சி அவனை குதறியது! அந்த தவறை செய்ய துணிந்த நீ அதன் விளைவுகளை பொறுமையாக அல்லவா கையாண்டிருக்க வேண்டும்... அதை விடுத்து கடுமையாக நடந்து கொண்டதும் இல்லாமல் அவள் உன்னை ஏற்று கொள்ள வேண்டும் என்று வேறு சொல்வது எந்த ஊர் நியாயம் கார்த்திகேயா? மனசாட்சி அவனிடம் நியாயம் கேட்க.... அதை முழுவதுமாக உணர்ந்த கார்த்தி... பிரான்ஸில் இருந்த போது அவளிடம் பேசவே தயங்கினான்! அதே தயக்கத்தோடு அவன் இந்தியா வர.... அதே நேரத்தில் கடலோரங்களை புயல் தாக்க.... அந்த பணியில் தனது ஊழியர்களை முடுக்கிவிட்டு தானும் இறங்கினான்!

அவளது முகத்தை பார்க்க முடியாததே அவன் தன்னை வேறு வேலைகளில் ஈடுபடுத்தி கொள்ள காரணம் என்று அவனுக்கும் புரியவில்லை! ஆனால் அதற்கு பின் நிகழ்ந்தது....



"கடவுளே... நான் செய்த தவறுக்கு என்ன தண்டனை வேண்டுமானாலும் எனக்கு கொடு... அவளை விட்டு விடு.... ஒன்றுமறியாத ஆன்மா அவள்.. அவளை காப்பாற்று..." மனதில் உருகி மெய் வருந்தி வேண்டி கொண்டிருந்தான்!

"சார்...." அவனது நிலைமை உணர்ந்து தயங்கி பொது மேலாளர் பிரகாஷ் அழைக்க... அதீத மன தடுமாற்றத்தில் ஆப்ரேஷன் தியேட்டர் முன் தலையில் கை வைத்து அமர்ந்து இருந்த கார்த்திகேயன் விழி உயர்த்தி என்னவென்று பார்த்தான்!

"சார் கடலூர்ல ஓரளவு நிலைமை சீராகி விட்டதாம்... பசங்கள அடுத்து என்ன பண்ண சொல்றது?" அருகில் மாரியப்பன்... மணி மற்றும் சிலர் நின்று கொண்டிருந்தனர்! தொழிற்சங்கம் உருவாக்க முனைந்த போது கார்த்திகேயனால் பல்வேறு இடங்களுக்கு தூக்கியடிக்கப்பட்டவர்கள்.

"நீ மாரியப்பன்தான...."

"ஆமா சார்... நம்ம மாரியப்பன் தான்... இங்க அவசர வேலைக்காக எல்லா கிளைல இருந்தும் ஆட்களை கொண்டு வர சொன்னீங்க சார்...." என்று பிரகாஷ் நினைவுபடுத்த... தலையாட்டி கொண்டு அங்கீகரித்தான்!

"இப்போ எங்கப்பா இருக்க...." மாரியப்பன் மணி ஆகிய இருவரிடமும் பொதுவாக கேட்டான்...

"நான் கொச்சின்ல இருக்கேன் அய்யா... மணி ஷிமோகால." பணிவாக பதில் கூறினான் அந்த மாரியப்பன்.

சிறிது யோசித்த கார்த்திகேயன்....

"சரி கடலூர் முடிஞ்சதுன்னா நீங்க வீட்டுக்கு போங்க... தேவைன்னா கூப்பிடறோம்...." என்று அவர்களை அனுப்பிவிட்டு பிரகாஷை தனியே அழைத்தான்!

"பிரகாஷ் சார்... அந்த பசங்களை இங்கயே ட்ரான்ஸ்பர் பண்ணிடுங்க...." என்று கூறவும் பிரகாஷ் ஆச்சரியமாக பார்த்து

"சார்..."

"ஆமா பிரகாஷ் சார்... அவங்க அவங்க குடும்பத்தோட இருக்கட்டும்... இன்னும் யாரெல்லாம் இந்த மாதிரி குடும்பத்தை பிரிஞ்சு இருக்காங்களோ அவங்களை எல்லாம் ஒரு கவுன்சிலிங் மாதிரி வர சொல்லி வேணும்ன்னு கேக்கற இடத்தை கொடுங்க... முடியாத பட்சத்துல குடும்பத்தை அங்க ஷிப்ட் பண்ணிக்க சொல்லுங்க..." உணர்வே இல்லாமல் சொன்ன கார்த்தியை பார்த்து

"ஒகே சார்..." தலையாட்டினார். உள்ளூர இருந்த மகிழ்ச்சி வெளிப்பட்டது.... ஆனாலும்...

"ஆனா... ஏன் திடீர்ன்னு...." கேட்க தயங்கினார் பிரகாஷ்!



"ஹும்ம்... அப்போவாவது என் திவ்யாவுக்கு..." சொல்ல வந்தவன் சொல்ல முடியாமல் திக்கினான். தன் தொழிலுக்காக மற்றவர் குடும்பங்களை பிரித்து வைத்து பாவம் செய்து இருக்கிறோமோ என்று தோன்றிவிட்டது கார்த்திக்கு!... கண்களில் கலக்கம் சூழ... தலையில் வைத்த கை அங்கேயே இருக்க... அந்த கார்த்திகேயனை சத்தியமாக பிரகாஷ் எதிர்பார்க்கவில்லை! அந்த நேரத்தில் என்ன சொல்லி அவனுக்கு ஆறுதல் கூறுவது என்பதையும் அவர் அறியவில்லை.... எல்லோரையும் பொறுத்தவரை கார்த்திகேயன் இரும்பு மனிதன்! யாராலும் அணுக முடியாத இரும்பு மனிதன்... அவனுக்கு ஆலோசனை சொல்வதே சாத்தியப்படாத போது ஆறுதல் கூறுவது என்பது???

"சார்.... ப்ளீஸ் கண்ட்ரோல்... மேடமுக்கு எதுவும் ஆகாது... ஷி வில் பீ சேப்...." என்று கூறத்தான் முடிந்தது! இருவரும் பேசி கொண்டிருக்கும் போதே மங்கை ஸ்ரீராமுடன் பதட்டமாக வந்தார்! ஸ்ரீராமின் கண்களில் முதலில் பட்டது உடைந்து போய் அமர்ந்திருந்த கார்த்திகேயன்தான்!

"அண்ணா...." ஸ்ரீராம் அழைக்க,

"தம்பி...." மங்கை அழைக்க விழி உயர்த்தி இருவரையும் பார்த்தான்! இருவரின் கைகளையும் இறுக பற்றியவனின் கைகள் சில்லிட்டு நடுங்கி

கொண்டிருந்தது! உணர்ச்சிகளை வெகுவாக அவன் அடக்கி கொண்டு இருப்பது தெரிந்தது!

"அம்மா...." குரலில் நடுக்கம்...

"தம்பி... இ... இங்க பாரு... எ... என்ன கண்ணா? தி.. திவ்... திவ்யாவுக்கு என்ன ஆச்சு...." பதட்டத்தில் மங்கைக்கு பேச்சு தடை பட... ஸ்ரீராம் நிலையோ சொல்ல முடியவில்லை... தோழியை பற்றி வாய் திறந்து கேட்க கூட பயந்து அதிர்ந்து கார்த்திகேயனின் வாய்மொழியை கண்களில் உயிரை தேக்கி கொண்டு எதிர்பார்த்தான்!

"தி... திவ்யாவுக்கு... ஆ.... ஆக்சிடெண்ட் ஆகிட்டதும்மா...." சொன்னவன் இன்னும் உடைந்தான்! குரல் நடுங்கி கொண்டு தான் வெளிவந்தது... கார்த்திகேயனை இந்த மாதிரி பார்த்தே இராத பிரகாஷ், ஸ்ரீராமை கண்களால் சைகை காட்டி அழைத்து கொண்டு மறுபுறம் நகர.... ஸ்ரீராம் உள்ளுக்குள் நடுங்கி கொண்டே அவருடன் சென்றான். அவனது தோழியை மீண்டும் எப்போது பார்ப்போம் என்றிருந்தது... ஆனாலும் இந்த நிலையில் தானாவது தைரியமாக இருக்க வேண்டுமே....

அதே நேரத்தில் வந்த திவ்யாவின் பெற்றோருக்கும், சஞ்சய் வைஷ்ணவிக்கும் பெரும் அதிர்ச்சியே காத்து இருந்தது... அனைவருக்கும் ஒரே மாதிரி தகவல் மட்டுமே சென்று இருந்தது...



திவ்யாவுக்கு உடல்நிலை சரி இல்லை... உடனே புறப்பட்டு வரவும் என்பதே அது!... அதுவும் கார்த்தி இருந்த நிலையில் எதை பற்றியும் யோசிக்க இயலாதவனாய் இருக்க... அவனுக்காக பிரகாஷ் தான் அனைவருக்கும் தகவல் கொடுத்ததே! இங்கு வந்தவர்களை வரவேற்றது... தலையில் இடி விழுந்தது போன்ற செய்தியும்... உலகத்தையே மறந்து தலையில் கைவைத்தபடி அமர்ந்து இருந்த கார்த்திகேயனும் தான்!

ஒருவரும் அவனை நெருங்கி பேச தைர்யம் இல்லாமல் அறுவை சிகிச்சை முடிவதற்காக காத்து கொண்டிருந்தனர்.... பிரகாஷ் நடந்தவற்றை ஸ்ரீராமிடம் விவரித்து கொண்டிருந்தார்...

புயல் மழையில் புதுவை, கடலூர், விழுப்புரம் என்று அந்த பகுதி முழுவதும் ஸ்தம்பித்து போயிருக்க, சுஷ்ருதா மேற்கொண்ட மீட்பு பணிகள் மக்களுக்கு மிகவும் உதவிகரமாக இருந்தன! கடலூருக்கு நேரடியாக கார்த்திகேயன் வந்ததால் தானும் உடன் வந்ததாகவும் பெருமளவில் பாதிக்கப்பட்ட கடலூர் மக்களுக்கு நிவாரண உதவிகளை விரைந்து செய்ய வைத்தது கார்த்திகேயன்தான் எனவும் கூறிய பிரகாஷ்.... அந்த கணங்களை விவரித்தார்!

❖ ❖ ❖

"ஹலோ... ஹலோ...." திவ்யாவிடம் இருந்து கால் வர எடுத்து பேச முயன்றான் கார்த்திகேயன்...

எப்போதும் போல மழை சதி செய்ய கால் துண்டிக்கப் பட்டது!

"ஷிட்...." எரிச்சலாக செல்பேசியை வைத்தான் கார்த்தி!

"என்ன சார்.... என்ன ஆச்சு?" விசாரித்தார் பிரகாஷ்!

"வீட்ல போன் பண்றாங்க... சிக்னல் கிடைக்கவே மாட்டேங்குது...." எரிச்சலாக கூறிவிட்டு வேலைகளை பார்க்க, இப்போது பிரகாஷ் செல்பேசி அழைத்தது!

"ஹலோ.... சொல்லுங்க மேடம்...." என்று மரியாதையாக அழைத்த போதே கார்த்திகேயன் கண்டு கொண்டான்... தனக்கு அழைத்து சலித்து அவரை அழைத்து இருக்கிறாள் என்று! மனம் சிறகு விரித்து பறந்தது... திவ்யாவை அப்போதே காணும் ஆவல் ஏற்பட, செல்பேசியை வாங்க கை நீட்டினான்!

"இருக்கார் மேடம்.... இதோ குடுக்கறேன்...." என்று அவனிடம் குடுக்க

"சொல்லு திவ்யா..."

"....."

"ம்ம்ம் சொல்லு...." என்ற போதே மறுபடியும் இணைப்பு துண்டிக்கப்பட்டது. எரிச்சலாக வைத்து விட்டு நாமாவது ட்ரை செய்யலாமே என்று நினைத்து திரையை தடவியபோது மறுபடி கால் வந்தது! என்ன



அவசரம்.... என்ன ஆயிற்று இந்த அளவு பதட்டமாக மறுபடி மறுபடி அவள் முயற்சிப்பது இயல்பான ஒன்று இல்லையே என்று எண்ணியவாறே செல்பேசியை காதுக்கு கொடுக்க,

"கார்த்திக் எங்க இருக்கீங்க?" பதட்டமாக அவள் கேட்டது அவனிடமும் பதட்டத்தை உருவாக்க,

"ஏன் திவ்யா... என்னாச்சு...."

"ஹய்யோ கார்த்திக்.... நீங்க எங்க இருக்கீங்க... அதை முதல்ல சொல்லுங்க...." பொறுமை இல்லாமல்... பதட்டம் தொற்றி கொண்டது கார்த்திகேயனுக்கு... யாருக்கு என்னவாயிற்றோ?

"கடலூர்ல காக்கா தோப்பு திவ்யா... ஏன் என்னாச்சு?"

"நான் வெளிய தான் இருக்கேன்... கொஞ்சம் வாங்களேன்.... ப்ளீஸ்...." அழுதுவிடுபவன் போல அவனை அழைக்க, பேசி கொண்டே வெளியே விரைந்தான்! அவனை பார்த்த போது ஏதோ ஒரு நிம்மதி தெரிந்தது அவளது முகத்தில்! இனி பார்க்கவே தேவை இல்லை போன்ற அந்த திருப்தி... திவ்யா ஆவலாக அவனை நோக்கி வர..... அதே சமயத்தில் இரு புறம் இருந்தும் வாகனங்கள் மழையில் கண் மண் தெரியாமல் வர....

"கார்த்திக்க்க்க்க்க்க்....." கத்தி கொண்டு மயங்கினாள்! பதறி அனிச்சை செயலாக அவளை

தாங்க ஓடிய போதே அசுர வேகத்தில் வந்த லாரி தன்னை கடப்பது தெரிந்தது! ஒரு கணம் அதிர்ச்சியாக பார்த்து கொண்டிருந்த போதே இன்னொரு புறம் இருந்து வந்த வாகனம் சாலை வளைவில் அவள் விழுந்த நேரத்தில் அவளை மோதி தூக்கி எறிந்தது!

சகலமும் உறைந்தது கார்த்திகேயனுக்கு!

"திவ்யாஆஆஆஆ......." அதிர்ச்சியில் குரல் வெளியே வரவே இல்லை.... வேறெதுவும் நினைக்க கூட தோன்றவில்லை! கண்களை இருட்டி கொண்டு வந்தது கார்த்திகேயனுக்கு....

✤ ✤ ✤

"பேஷண்ட்ட ஐசி ஸ்பெஷல் வார்டுக்கு ஷிப்ட் பண்ணியாச்சு கார்த்திக்..... ஒருத்தர் வேணும்னா கூட இருக்கலாம்... மற்றவங்க டிஸ்டார்ப் பண்ண வேணாம்..." என்று மருத்துவர் சொல்லிவிட்டு போக கார்த்திகேயன் உடலெல்லாம் சில்லிட அந்த ஐசி வார்டுக்குள் நுழைந்தான்... ஐசிய் வார்டுக்குள் தனியாக இருந்தது அந்த ஸ்பெஷல் வார்ட்!

தலை முழுவதும் கட்டு போடப்பட்டு இருக்க... கையில் சலைனும் ரத்தமும் உள்ளே சென்று கொண்டிருந்தது.... வாழ்வாதார கருவிகள் அவளது இயக்கத்தை கூறி கொண்டிருந்தன... அவனுமே இதே துறையில் இருப்பதால் கணக்கீடுகளை பதட்டத்தோடு ஒப்பிட்டு கொண்டிருந்தான்... தலை பக்கத்தில்



அருகில் இருந்த சேரில் அமர்ந்து கைகளை பற்றியவன்... நிமிர கூட இல்லை! அவனது உதடுகள் முனுமுனுத்து கொண்டே இருந்தது!

அவ்வப்போது ஒவ்வொருத்தராக உள்ளே வந்து பார்த்து விட்டு போக... அந்த இடத்தை விட்டு அசையாமல் அமர்ந்திருந்தான் கார்த்தி! யாரையும் கவனிக்கும் மனநிலையோ பேசும் சக்தியோ அவனுக்கு இல்லை... திவ்யாவின் பெற்றோரும் அதே நிலையில் இருந்தாலும் ஏதோ ஒரு தைர்யம் அவர்களுக்கு இருந்தது... அனைவரும் வந்து போன பின் கடைசியாக வந்த ஸ்ரீராம், கார்த்தியின் கைகளை இறுக்கமாக பிடித்து கொண்டான்....

"அண்ணா...." அழைத்த போதும் அதற்கு ஒரு எதிரொலியும் அவனிடம் இருந்து கிடைக்கவில்லை....

"அண்ணா.... கொஞ்சநேரம் அத்தை, திவி கூட இருக்கட்டும்... நீங்க சாப்பிட்டுட்டு வாங்க...." அதற்கும் சிறு எதிரொலி கூட இல்லாமல் அவளருகே அமர்ந்திருந்தவன் ஸ்ரீராமின் கைகளை மட்டும் இறுக பற்றி கொண்டான்....

"அண்ணா.... ப்ளீஸ்...." ஸ்ரீராம் கட்டாயப் படுத்தியதும் வேலைக்கு ஆகவில்லை!

அவனது கவனம் அனைத்தும் திவ்யா மேல் மட்டுமே இருந்தது... கண்களில் அவள் விபத்துக் குள்ளான காட்சி மீண்டும் மீண்டும் வந்து கலக்கத்தை

ஏற்படுத்தியது... அதற்கு மேல் ஸ்ரீராமாலும் ஒன்றும் பேச இயலாமல் திவ்யாவை பெருமூச்சோடு பார்த்து விட்டு வெளியே சென்றான்... கார்த்திகேயன் தன்னை மறந்து அவனை மட்டுமே நினைத்து ஜெபித்து கொண்டிருந்தான்....

"திவ்யா.... ஐ லவ் யூ டா.... என்னை விட்டு போயிடாதடா.... ப்ளீஸ்.... நீ எனக்கு வேணும் திவ்யா.... என் கூட சண்டை போடவாச்சும் வேணும்.... வா திவ்யா.... நீ இல்லாத இந்த உலகத்துல நான் இருப்பேன்று நினைச்சியா... கண்டிப்பா மாட்டேன்.... எழுந்துக்கோடா.... ப்ளீஸ்...." கண்களில் கண்ணீர் வழிந்து கொண்டே இருக்க இதே ஜெபத்தை தலைகுனிந்தவாறு காதருகில் சொல்லிக் கொண்டே இருந்தான் பசி தூக்கம் அனைத்தையும் மறந்து...

ஒரு வழியாக அனைவரையும் ஒரு வழியாக்கி இந்த உலகத்திற்கு மீண்டு வந்தாள்....

சிறு அசைவுடன் கண் விழித்தாள் திவ்யா!

"கார்த்திக்க்க்க்.....". ஹீனமாக கேட்டது அவளது குரல். உடல் முழுவதும் ஒரு முறை புல்லரிக்க நிமிர்ந்தான் கார்த்திகேயன்!

"திவி....." கண்கள் கலங்கி இருக்க உயிரே நீ தானென்று சொல்லாமல் சொல்லியவனை பார்த்து மெலிதாக புன்னகைத்தாள்.......



"உங்களுக்கு ஒண்ணும் ஆகலியே...." அவனை முழுக்க நோக்கி ஆராய்ந்து கொண்டு கேட்க.... என்ன மாதிரியான பெண் இவள்? அவனிடம் மிச்சமிருந்த தான் என்ற அகம்பாவம் அனைத்தும் மனதுக்குள் சுக்கல் சுக்கலாக உடைந்தது!

"திவிக்குட்டி...." உதட்டை கடித்து அழுகையை கட்டுபடுத்தியவனை மீறி வெடித்தது அவனது உணர்வுகள்... தான் ஆண் என்பதை மறந்தான்... சுற்றுபுறம் மறந்தான்... தன் படிப்பை மறந்தான்.... செல்வம் செல்வாக்கு என்ற அனைத்தையும் மறந்தான்!

"திவி... ஐ லவ் யூ டா... ஐ லவ் யூ...." வார்த்தைகள் தவிப்பாய் திக்கின.... நீ இல்லாமல் என்னால் இருக்க முடியாது என்பதை கண்களில் இருந்து வழிந்த கண்ணீர் கூறியது.... அவள் அருகில் அமர்ந்து தலைக்கு கையை கொடுத்தவன் உணர்வின் அலை தாளாமல் கண்ணீர் விட்டான்... அவள் உணர்ச்சி வசப்படக்கூடாதே என்று தன்னைத் தானே கட்டுபடுத்த முயன்றவனின் முயற்சி புரிந்தது திவ்யாவுக்கு....

"ஹேய்... நான் இன்னும் இருக்கேனா?" ஹீனமாக அந்த நிலையிலும் கிண்டலாக கேட்டவளை உணர்ச்சி பொங்க பார்த்தவன்....

"நான் செத்துட்டேன் திவி...." என்று அவளது கைகளை மென்மையாக பற்றி கொண்டவன் கண்களில் இருந்து கண்ணீர் வழிந்து கொண்டே

இருக்க.... இருவருக்கும் பேச தோன்றாமல் அங்கே மௌனமே ஆட்சிட செய்தது!

ஆண்களின் கண்ணீர் இரு வகை... ஒன்று பெண்களை ஏமாற்ற இன்னொன்று பெண்ணிடம் ஏமாற என்று நகைச்சுவையாக கூறுவார்கள்.... ஆனால் கார்த்திக்கின் கண்ணீரில் அவனது உணர்வுகள் கரைந்து இருந்தன.... அவனால் வார்த்தைகளில் தெரிவிக்க முடியாத இயலாத அவனது கணக்கி லடங்கா காதலை அவனது கண்ணீர் உரைத்தது... பொய்யாக அணிந்திருந்த ஈகோ என்ற முகமூடி கழன்று விழுந்தது.... இதுவரை ஒன்ற விடாமல் செய்திருந்த ஏதோ ஒன்று காணாமல் போக முழுமையாக.... ஆத்மார்த்தமாக... அந்த கண்ணீர் மூலமாக.... தன் உயிரை அவளது கண்களில் தேடினான் கார்த்திகேயன்!

அகந்தை எழுந்தால் சகலமும் எழும். அது ஒடுங்கினால் அனைத்தும் ஒடுங்கும். அதை கண்டறிவதே வெற்றிக்கு வழியாம். நான் யார்? என்று விசாரித்து இதயத்துள் நுழைய, அகந்தை வேரோடு சாயும். பின் வேறொன்று 'நான் – நான்' என்று இடைவிடாது ஸ்புரிக்கும். அது அகந்தை அன்று .... முழுமையான ஆத்மாவாம்!

– பகவான் ரமணர்

மருத்துவர் வந்து சோதித்து திருப்தியாக கூற அப்போதுதான் நிம்மதி மூச்சு விட்டான்... அடுத்த



இரண்டு நாட்களில் சிறிது சிறிதாக தேற ஐசி யூனிட்டில் இருந்து தனி அறைக்கு மாற்றினார்கள்... அவளது பெற்றோரும் மங்கையும் வைஷ்ணவியும் உடனிருப்பதாக கூறியும் தான் மட்டுமே தனது மனைவியை கவனித்து கொள்ள வேண்டும் என்று அனைவரையும் விரட்டி விட்டு அவளை கண்ணில் வைத்து தாங்கினான் கார்த்தி... (அதுக்கு அவன் கண் என்ன வெயிட் லிப்டிங் மெஷினா என்று காமெடி கீமடி பண்ணப்படாது சொல்லிட்டேன்) பத்து நாட்களில் ஓரளவு நன்றாக தேறி அவனுடன் வாயடிக்கும் அளவு முன்னேறினாள்! இருபது நாட்களில் உடல் நன்றாக தேற இருவருமாக சேர்ந்து மருத்துவமனையை சுற்றும் அளவு முன்னேறினாள்... பழரசத்தை அவளுக்கு கொடுக்க க்ளாசில் ஊற்றி கொண்டிருந்தவனிடம்,

"கார்த்திக்.... வலிக்குது..." சிறு பிள்ளையாக அவனிடம் செல்லம் கொஞ்சினாள் அவன் மனைவி! அவ்வப்போது அவனிடம் இப்படி செல்லம் கொஞ்சுவது தான் வாடிக்கை ஆகி இருந்ததே.... அதை கேட்டு கணவன் பதறி என்னவென்று கேட்பதை பார்க்கும் சுகமே அலாதியானதுதானே!

"ஒரே நிமிஷம் இருடா செல்லம்... டாக்டர கூப்பிடறேன்...." என்று பரபரப்பாக எழ போனவனை கையமர்த்தி....

"ச்சும்மா...." சிரித்து கொண்டே அவனது கையை பிடித்து எழுந்து எப்போதும் போல நடை பயிற்சியை

ஆரம்பித்தான்! மருத்துவர்கள் கொஞ்சம் கொஞ்சமாக நடந்து பழக வேண்டும் என்ற அறிவுறுத்த கார்த்திகேயன் அவளை சோர்வை உணராதது போல நடந்து பழக்கி கொண்டிருந்தான்... மனம் விட்டு பேசியபடி நடந்து கொண்டிருந்த போது பேச்சு மாசிலாமணியை நோக்கி திரும்பியது....

"கார்த்திக்... கேட்கவே மறந்துட்டேன்.... மாசிலாமணி அங்கிள் எப்படி இருக்காங்க...." அவள் கேட்டபோது அவனுக்கு சட்டென்று என்ன சொல்வதென்று புரியவில்லை... ஏனென்றால் அவர் இறந்து பத்து நாட்கள் ஆகி இருந்ததே... திவ்யாவுக்கு விபத்து ஏற்பட்ட அன்று அவருக்கு ஏற்பட்ட ஹார்ட் அட்டாக் அவரது உயிரை பறித்து இருந்தது....

"ஹீ இஸ் நோ மோர் திவ்யா...." என்று அமைதியாக அவன் கூறவும்.... ஒரு கணம் அதிர்ச்சியில் தடுமாறி நின்றாள் திவ்யா!

"எப்போ?"

"உனக்கு ஆக்சிடென்ட் ஆன அன்னைக்கு..."

"கடவுளே...." கண்களை மூடிக் கொண்டாள் திவ்யா... இறந்த அந்த ஆன்மாவுக்காக பிரார்த்தனை செய்வதை தவிர வேறென்ன செய்வது? அதுவும் கார்த்திகேயன் மீது அவ்வளவு பற்று கொண்ட ஆன்மா அல்லவா.... நடந்தவற்றை அவனிடம் கூறிய போது சலனமில்லாமல் கேட்டுக்கொண்டான்! அரவிந்தன்



மேல் கோபம் வருவதற்கு பதிலாக இப்போது பரிதாபம் மட்டுமே அவனுக்கு.... பெருமூச்சு ஒன்றை விட்டான்!

"மாசி அங்கிள் இல்லைன்னாலும்... அவருக்காக பார்க்க வேண்டி இருக்கு.... அரவிந்த் என்னமோ ஸ்பாயில்ட் சைல்ட்டா தான் எனக்கு இப்போ தோணுது திவி....."

"ம்ம்ம் ஆமாம் கார்த்திக்.... சரியான வழிகாட்டுதல் அவருக்கு கிடைக்கலை... இன்னமும் ஜெயில்லதான் இருக்காரா?

"ம்ம்ம்... ஆமா....." உணர்வில்லாமல் அவன் கூற

"வேணாமே கார்த்திக்.... ஒருத்தர் மாத்தி ஒருத்தர்.... பழிவாங்கி.... லாஸ் ரெண்டு பக்கமும் தான்.... ப்ளீஸ் கார்த்திக் புரிஞ்சுக்கோங்க...." கண்களாலும் வார்த்தைகளாலும் திவ்யா கெஞ்ச,

"ம்ம்ம்.... புரியுதுடா.... ஒகே ரூமுக்கு போலாமா..." சட்டென்று பேச்சை மாற்றி அறைக்கு அழைத்தான்... யோசனையாக நடந்து கொண்டிருந்தவளை ஆழமாக பார்த்தபடியே அவனும் நடந்தான்... திரும்பி அறைக்குள் நுழையும் போது அவன் கையை பற்றி.... நிறுத்தி... தயங்கி.... கண்களில் கண்ணீர் தேங்க....

"அது வந்து.... வந்து... நம்ம குழந்தை... ஒ... ஒன்னும் ஆகலையே கார்த்திக்...."

ஒன்றும் ஆகி இருக்கக்கூடாது என்று ஐசி யூனிட்டில் விழித்தது முதல் வேண்டி கொண்டே இருந்த

விஷயத்தை அவனிடம் கேட்டாள்..... அவளது அந்த நம்ம குழந்தை என்ற வார்த்தையில் உருகியது கார்த்திக்கின் நெஞ்சம்! அவளை படுக்கையில் அமர வைத்து....

"அதெல்லாம் அப்புறம் பேசிக்கலாம்டா தர்பூஸ்.... என் செல்லம்ல... இப்போ பேசாம ரெஸ்ட் எடுப்பீங்களாம்.... என்று அவளது நெற்றியில் முத்தமிட்டு அவளை சமாதானம் செய்ய முயன்றான்.

"அப்படீன்னா...." கண்கள் மீண்டும் கலங்க துவங்க... பதறியவள்....

"அச்சச்சோ.... அதெல்லாம் சின்ன குட்டி அவ அம்மா தொப்பைக்குள்ள பத்திரமா இருக்காளாம்... டோன்ட் வொர்ரி டா..."

அவளது கைகளை பற்றி முத்தமிட்டு கூறியவனின் நெஞ்சம் துடித்தது... ஏனென்றால் இந்த விபத்தில் கலைந்து போனது அவனது முதல் வாரிசும் கூடத்தானே.... தன்னை பார்க்க விருப்பமில்லாமல் போன அந்த உயிரை நினைத்து துடித்தாலும் திவ்யா இந்த அளவாவது பிழைத்தாளே என்ற உணர்வில் அந்த இழப்பை ஏற்று கொண்டிருந்தான்!

"எனக்கு தொப்பையெல்லாம் இல்ல...." மெலிதாக புன்னகைத்து கொண்டு வம்பு பேச

"இப்போ இல்ல... என் பொண்ணு வளர்ந்தா... தொப்பை பெரிசாகிடும் இல்லையா...." சிரித்து கொண்டே சொன்னவனை முறைத்தாள்.



"அதென்ன பொண்ணு.... பையன் தான்...." அந்த நிலையிலும் அவனிடம் வம்பு வளர்க்க.... வாய் விட்டு சிரித்தான் கார்த்திகேயன்!

"ம்ஹூம்... பொண்ணுதான்...." உள்ளுக்குள் மனம் கனத்தாலும் வெளியே அவளிடம் சிரித்து கொண்டு குறும்பாக மொழிந்தான்!

"நோ... பையன்தான்..." பிடிவாதமாக கூறியவளின் சிறுபிள்ளைத்தனத்தை பார்த்து மீண்டும் சிரித்தவன்.... குரலை தழைத்து அவளது கைகளை பற்றி முத்தமிட்டு,

"வேணும்னா அடுத்தது பையன பெற்றுக்கோ... நான் ரெடிப்பா...." கண்ணடித்து சிரித்தான்! திவ்யா வெட்க புன்னகை விரிய....

"ச்சீ போடா... இன்னொரு தடவை ரே...." என்று மெல்லிய குரலில் ஆரம்பித்து சட்டென்று தோன்ற நாக்கை கடித்து கொண்டு சொல்ல வந்ததை முடிக்காமல் விட்டாள்! அவளது உணர்வு புரிந்தது... எல்லாவற்றையும் தான் கடந்து விட்டானே... ஒரு கணம் முகத்தில் தோன்றிய இறுக்கம் தளர்ந்து மென்மை படர்ந்தது!

"ஐம் சாரி கண்ணம்மா... ஐம் வெரி சாரி... சாரி கேட்டுட்டா மட்டும் தப்பு கரெக்டாக போறதில்ல... வாழ்நாள் முழுக்க அந்த தப்புக்காக என் செல்லம் எனக்கு என்ன தண்டனை கொடுத்தாலும் நான் ஏத்துக்கறேன்... ப்ளீஸ் குட்டிம்மா...." சிறு குழந்தையாக

மன்னிப்பு கேட்ட கணவனை பார்த்து புன்னகைத்தாள் திவ்யா!

"ச்சே... என்னப்பா இப்படி நீ கவுத்திட்ட... இதையே சாக்கா வெச்சு இன்னும் கொஞ்ச நாள் சண்டை போடலாம்னு பார்த்தா டக்குன்னு சாரி கேட்டுட்ட... போப்பா சுவாரசியமே போச்சு...." என்று நொந்து கொண்டவளை பார்த்து சிரித்து....

"அடப்பாவி சுவாரசியம் போச்சா? சொல்லுவடி... நல்லாவே சொல்லுவ... மனுஷன போட்டு டார்ச்சர் பண்ணிட்டு... இப்போ ஒண்ணும் தெரியாத பாப்பா மாதிரி சுவாரசியம் போச்சா?" படுக்கையில் சாய்ந்து அமர்ந்திருந்த அவளின் மூக்கை திருக...

"பின்ன என்ன... கிக்கே போச்சு...." அலுத்து கொண்ட மனைவியை ஒரு மார்க்கமாக பார்த்தவன்....

"ஓகே... கிக்கா சாரி சொல்லட்டா...." கண்ணடித்து கேட்க....

"சாரி கேக்கறதுல என்ன கிக்?" குழம்பினாள் ஆசை காதலி!

கையை மென்மையாக பற்றியவன் ஒவ்வொரு விரலிலும் முத்தமிட்டு....

"S-o-r-r-y" என்று ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு முத்தமாக கொடுக்க.... ஒன்றுமே நிகழாதது போல அமர்ந்திருந்த அவன் மனைவி....



"இவ்வளவு தானா.... ப்ச்.... சாரி நாட் அக்செப்டட்...." என்று வேறு புறமாக திரும்பி குறும்பாக புன்னகைத்தாள்! அவளது குறும்புத்தனத்தை ரசித்தவன், சுற்றிலும் பார்த்து.... மென்மையாக அவளது முகத்தை பற்றி நெற்றியில் முத்தமிட்டு.....

"ம்ம்ம் சாரி...." என்று புன்னகைத்துக் கொண்டே கூற,

"ப்ச்... இவ்வளவுதானா.... இப்போவும் நாட் அக்செப்டட்...." என்று குறும்பாகவே கூற, அவனும் புன்னகைத்துக் கொண்டே அவளது கன்னத்தில் மென்மையாக முத்தமிட்டு,

"சாரி... இப்போ ஓகேவா?

"ம்ஹூம்... நாட் அக்செப்டட்.... நாட் அக்செப்டட்...." தீர்மானமாக அவனது மனைவி கூற... அவளது முகத்தை வலித்து விடுமோ என்று மென்மையாக பற்றியவன்... அவளது காய்ந்த உதட்டை ஈரப்படுத்தி தன் வசப்படுத்தினான்! நேரம் காலம் எவ்வளவு கடந்ததென இருவருமே அறியார்.... சிறிது நேரம் கழித்து அவளை மென்மையிலும் மென்மையாக விடுவித்தவனின் மார்பிலேயே சாய்ந்து கொண்டாள் திவி! இதுவரை கிடைக்காத நிம்மதியும் அமைதியும் இருவருக்குள்ளும் வந்தமர்ந்தது!

"கார்த்திக்க்க்...."

"ம்ம்ம்...."

"கல்யாணத்துக்கு முன்னால அப்படி நடக்கலைன்னா ஷாலினிய தானே கல்யாணம் பண்ணி இருப்பீங்க....? முகத்தை உயர்த்தி தனக்கு அவனது பதில் தெரியுமென்றாலும் அவனை பார்த்து கேட்க... மெல்ல அவளது முகத்தை பற்றி....

"எப்படி நடக்கலைன்னா..." புன்னகையோடு!

"ம்ம்ம்.... கொழுப்புதான்...."

"ஆமா தினம் நீ எனக்கு ஊட்டி ஊட்டி விட்டதுல வந்த கொழுப்புதான்...." என்று சிரித்தவன் அவனே தொடர்ந்தான்!

"இல்லடா.... உன்னை பார்த்த முதல் மீட்டிங்கிலையே என் மனசை நீ கொள்ளையடிச்சுட்டன்னு சொன்னா நம்பவா போற...." கேள்வியாக கேட்ட தனது கணவனை இதழோர புன்னகையோடு பார்த்தாள்!

"ம்ஹூம் நம்ப மாட்டேன்.... அப்போ என் கூட சண்டை தானே போட்டீங்க...."

"ம்ம்ம்.... ஆனா அந்த அளவு ஒரு பொண்ணு கிட்ட பேசுனதும் அதுதான் முதல் முறை கண்ணம்மா... பொதுவா எனக்கு பொண்ணுங்க ரப்பர் ஸ்டாம்ப் மாதிரி இருக்கறது பிடிக்காது..." வார்த்தைகளில் அழுத்தம்!

"ம்ஹூம் சும்மா... இப்போவுமே என்னை நீங்க அப்படித்தான் இருக்க வைக்க நினைக்கிறீங்க.... அவளது எண்ணத்தை சொல்லவும்....



"இல்லடா... நான் உன்கிட்ட பேசுன மெத்தட்ஸ் வேணும்னா கொஞ்சம் கடினமா இருக்கலாம்... ஆனா எனக்கும் தலையாட்டிகிட்டு போறது பிடிக்காது... என்கிட்டே சும்மா தலையாட்டிகிட்டே இருந்தாலும் பிடிக்காது.... இப்போ நீ வெளிப்படையா கருத்து சொல்ற பாரு..... இது பிடிச்சிருக்கு... இதனால நமக்குள்ள கிளாஷ் வந்தாலும் இதுதான் பிடிக்கும்..."

"நிஜமாவா... அப்புறம் எல்லாத்துக்கும் சண்டை பிடிப்பேன்... அப்புறம் என்னை சொல்லி குத்தமில்லை சொல்லிட்டேன்...." என்று அவனது மனைவி சிரிக்க

"நல்லா... அதை ஏன் சண்டைன்னு நினைக்கிற திவிக்குட்டி... கருத்து பரிமாற்றம்... அது நல்லது தானே..." என்று அவன் கூற அவனது முகத்தை அள்ளி பருகுவது போல் பார்த்தாள் திவ்யா!

"ம்ம்ம்..."

"அதனாலேயே ஷாலினி மேல எனக்கு அபிப்ராயம் எல்லாம் இல்ல.... உன்னை பார்க்கற வரைல... பார்த்த பின்னாடியோ ஏன் பார்த்தோம்ன்னு ஆய்டுச்சு...."

"ஏன்...." புரியாமல் திவ்யா கேட்க

"பின்ன.... நீ அன்னைக்கு போகும் போது ஒரு பார்வை பார்த்தாயே... என்னால மறக்கவே முடியலடா... ஆனா அது எனக்கு அப்போ புரியலை... அப்போ தான் மாசிலாமணி அங்கிள் உன்னை பெண் கேட்கலாமான்னு

கேட்டாங்க... உள்ளுக்குள்ள ஏதோ உறுத்துச்சு... அப்போவும் உன்னை பார்க்க ஒரு வாய்ப்பா தான் என் மனசு நினைச்சுருக்கு... அப்புறம் உன்னை பிரெண்ட் ஆக்கிகிட்டது... எல்லாமே என் மனசு போட்டுகிட்ட வெளி வேஷம் தான் திவிகுட்டி..." என்று கூறிவிட்டு நிறுத்தவும்....

"ம்ம்ம்ம்.... அப்புறம்...." என்று கேட்டவளை தன் கைகளுக்குள் இறுக்கி கொண்டே,

"அன்னைக்கு அரவிந்தோட டின்னர் போனோம் இல்லையா... அன்னைக்குத்தான்..." என்று கூறிவிட்டு இடைவெளி விட

"ம்ம்ம்... அன்னைக்குத்தான்...." எதிர்பார்ப்பாக கேட்டாள்!

"முழுசா நான் புரிஞ்சுகிட்டேன்...."

"என்னன்னு...." மெல்லிய குரலில் திவ்யா கேட்க,

"உன்னை என்னால யாருக்கும் விட்டு தர முடியாதுன்னு.... என்னாலும் வேற யாரையும் உயிரா நினைக்க முடியாதுன்னு....." என்று அவள் காதில் மயக்கத்தோடு கூறி அவளை இறுக்கி கொள்ள....

"ஹேய்.... இது ஹாஸ்பிடல்...." அவசரமாக அவள் விலக பார்க்க

"ம்ம்ம்.... தெரியுது திவி.... கதவை லாக் பண்ணி இருக்கேன்... யாராச்சும் வரதுன்னா கதவை



தட்டுவாங்க... அதுவரைக்கும்.... ப்ளீஸ்...." என்று மீண்டும் அவளை இறுக்கி கொள்ள உலகம் மறந்தது இருவருக்கும்....

"அன்னைக்கு தான் நானும்..." என்று ஆரம்பித்த திவ்யாவை சட்டென விலக்கி அவளது கண்களை ஆர்வமாக நோக்கினான்..... அவளது கண்கள் தாழ்ந்தது.... வெட்கத்தினால் முகம் சிவக்க....

"ஹேய்... என்ன சொல்ற.... யூ மீன்...." சந்தோஷத்தில் வார்த்தைகள் தடுமாறியது கார்த்திகேயனுக்கு!

"ம்ம்ம்... தடுமாறினேன்.... ஆனால் ஷாலினிய நினைச்சு கண்ட்ரோல் பண்ணிகிட்டேன்...." என்று கூறியவளை சந்தோஷம் கொப்பளிக்க இறுக்கமாக அணைத்து கொண்டான்!

"ஆனா அப்போ எனக்கு கடமை பெருசா தெரிஞ்சது... என்னோட லட்சியம்.... எல்லாம்...." என்று கூறி அவள் இடைவெளி விட....

"புரிஞ்சுகிட்டேன்டா செல்லம்... ஆனா ஒரு உண்மைய சொல்லட்டா... அந்த விஷயம்... நான் நடந்துகிட்ட முறை தப்பு தான்.... ரொம்ப தப்பு தான்... அன்னைக்கு நடந்ததுக்கு உன் கிட்ட நான் சாரி கேக்கலாம்.... ஆனா...." என்று

"ம்ம்ம்... ஆனா...." கண்களில் குறும்பு புன்னகையோடு...

"என்னால என்னைக்குமே மறக்கவே முடியாத இனிப்பான சம்பவம்.... என்னோட திவிய முழுசா என்னோட திவி ஆக்கிகிட்டேன் இல்லையா...." என்று அவளது காது மடல்களை உதடால் வருடி கொண்டே கிசுகிசுத்து விட்டு மெலிதாக முத்தமிட.... திவ்யா உடல் சிலிர்த்தாள்! படுக்கையில் அவனும் அமர்ந்திருந்து அவனது நெஞ்சில் சாய்ந்து இருந்தவளின் கைகள் கார்த்தி வசம் இருக்க.... அவனது அணைப்பு இறுகியது... இருவருமே அந்த மயக்கத்தில்... கிறக்கத்தில்... தங்களை மறந்து இருந்தனர்!

"அந்த மாலை பொழுதை நிஜமா என்னால மறக்கவே முடியாது திவி... ஹேய் உன்னை நினைச்சு கவிதையெல்லாம் கூட எழுதி இருக்கேன் தெரியுமா? என்று வெட்கமாக கூறி கழுத்தில் முத்தமிட,

"அது எனக்கு தெரியுமே..." புன்னகையோடு குறும்பாக அவள் கூறினாள்!

"தெரியுமா.... எப்படி....?" புரியாமல் கேட்டான்!

"ம்ம்ம்.... இப்படித்தான்..." என்று அவனது செல்பேசியை காட்ட...

"ஹாஹா.... உடான்சு...." சிரித்தான்!

"ம்ம்ம்.... இதுல ஸ்க்ரீன் சேவர்ல என் படத்தை பார்த்தேனா...." இழுத்தாள்!

"ம்ம்ம்... பார்த்து...." வேண்டுமென்றே குறும்பாக அவளை போலவே நடிக்க,



"அப்புறம் வேற என்னத்தான் வேலை பண்ணி வெச்சு இருக்கீங்கன்னு உங்க செல்ப்ப ஆராய்ச்சி பண்ணினேனா...."

"ம்ம்ம்.... பண்ணி....." மீண்டும் அவளை போலவே கூற,

"அங்க தான் உங்க டைரி கிடைச்சுதா...." என்று கூறிவிட்டு அவள் சிரிக்க....

"ஹேய்... அடிப்பாவி... எப்போ இந்த வேலை...." அவளை இறுக்கி கட்டி கொண்டு கேட்க...

"ஹா.... ஹய்யோ... அதெல்லாம் எப்போவோ..." என்று கூறிவிட்டு மீண்டும் சிரித்தாள்!

"உன்னோட துப்பறியர வேலைய இங்கயும் காட்டிட்டியா?...." என்று கூறிவிட்டு,

"திவி....." கிறக்கமாக அழைத்தவனின் முகத்தை பார்க்காமல்,

"ம்ம்ம்...."

"உனக்கு இன்னமும் வருத்தம் ஏதாவது இருக்கா...." எதிர்பார்ப்புடன் அவளிடம் கேட்க,

"ம்ம்ம்ம்.... இன்னமும் என்னை ஹாஸ்பிடல்ல வெச்சுட்டு இருக்கீங்களே... அதான்...." என்று மிகவும் சீரியசாக சொல்வது போல சொல்லவும்... ஒரு கணம் தாமதித்தவன்...

"ஹேய்.... வாலு...." என்று மீண்டும் அணைத்து கொண்டான்! அவளும் புன்னகை சிந்த,

"கார்த்திக்...." மென்மையாக அவனை அழைத்தாள்....

"என்னடா..."

"லவ் யூ டா...." கிசுகிசுப்பாக சொல்லி விட்டு மறுபுறம் திரும்பி கொள்ள....

"ம்ம்ம்... என்ன... என்ன சொல்ற? கேக்கவே இல்ல....." வேண்டுமென்றே சீண்டினான்....!

"ச்சீ... போடா..." என்று வெட்கமாக அவனை தள்ளி விட்டு நகர்ந்து உட்ககர்ந்தாள்!

"யாரோ வெட்கபடறது எல்லாம் ஓல்ட் பேஷன்னு எப்பவோ சொன்னாங்கப்பா...." சரியான நேரத்தில் அவளை வாரினான் சிரித்து கொண்டே.

"அப்படியா... அது யாரு கார்த்திக்.... எனக்கு தெரியலையே...." ஒன்றும் அறியாதது போல முகத்தை வைத்து கொண்டு அவள் கேட்க

"ஆஹா... அப்படி போடு...." என்று சிரிக்க

"கார்த்திக்... நீங்க சொன்னதுதான்... ஆத்மார்த்தமான காதல்ல வேற எதுவுமே தோணாது... இல்லையா...."

"ஆமாம்டா திவிக்குட்டி.... எதுவுமே தோணாது... அவங்களுக்காக எதை வேண்டுமானாலும் விட்டு



கொடுக்க தோணும்... உயிரையும் கூட..." என்று ஆழ்ந்த குரலில் அவன் கூறவும்... அவனது வாயை கை வைத்து மூடினாள்!

"நோ... கார்த்திக்.... ப்ளீஸ்...." என்றவளின் கைக்கு முத்தமிட்டான்!

அதற்கு மேல் பேசுவதற்கு வார்த்தைகளில்லாமல் அவளை தன் தோளில் சாய்த்து கொண்டு கண்களை மூடி அமர்ந்து இருந்தவனின் மனம் சலனமற்ற நதியாக பயணம் செய்து கொண்டிருந்தது. திவ்யாவுமே அந்த மோன நிலையில் ஏதுமற்ற பரவெளியில் வியாபித்து கொண்டிருந்தாள்... மனம் அனைத்தையும் தாண்டிய உணர்வுகளற்ற ஏதோ ஒரு உணர்வில் லயித்து இருந்தது... அந்த பொதுவான பிரபஞ்ச மொழியில் மனங்கள் இரண்டும் ஒட்டி உறவாட வார்த்தைகள் மௌனித்து இருந்தன!

✤ ✤ ✤

**மொ**த்தமாக இருபத்தி ஐந்து நாள் கழித்து திவ்யா மருத்தவமனையில் இருந்து டிஸ்சார்ஜ் செய்யப்பட... டாக்டர் ஜானகியும் அவளை முழு பரிசோதனை செய்ய ஜிப்மர் வந்திருந்தாள்... திவ்யா குடும்பத்திலும் சரி கார்த்திகேயன் குடும்பத்திலும் சரி ஒருவர் மாற்றி ஒருவர் வந்து பார்த்து கொண்டே இருந்தாலும் முழு நேரமும் திவ்யாவை கவனித்து கொண்டது அதாகப்பட்டது மற்றவர்களை பக்கத்தில்

விடாமல் அவளை தான் மட்டுமே தாங்க வேண்டும் என்று சதி வேலை செய்தது வேறு யார்? கார்த்தி தான்!

"ஹேய் கியூட்டீ.... ஹவ் டூ யு பீல் நொவ்...." ஸ்டெட்டை தோளில் போட்டவாறே திவ்யாவின் நாடியை பிடித்து பார்த்து கொண்டிருந்தாள் ஜானகி!

"பைன் ஜானுக்கா.... ஏன் ஒரு வாரமா இங்க வரல...." கேள்வியாக வினவினாள் திவ்யா!

"கிளினிக்ல எக்கச்சக்க வேலை திவி.... இவனை மாதிரி கண்ணை காட்டினா வேலை செய்ய ஆயிரம் பேரெல்லாம் என்கிட்ட இல்லையே.... என்னடா பண்றது?" சிரித்து கொண்டே அங்கே அமர்ந்திருந்த கார்த்தியையும் சேர்த்து வாரினாள்!

"ஏங்க அம்மணி... அப்படீன்னா கண்ணை மட்டும் காட்டுற சோம்பேறின்னு சொல்லாம சொல்றீங்களா?" பதிலுக்கு நக்கல் அடித்தவனை புன்னகைத்து கொண்டே பார்த்து....

"ஏன் சார்... இந்த் நக்கல் விக்கலெல்லாம் இத்தனை நாளா எங்க ஒளிச்சு வைச்சுட்டு இருந்தீங்க....?" என்று கண்ணை சிமிட்ட

"அதுவா.... கொஞ்ச நாள் ஊர் சுத்திட்டு வரேன்னு பர்மிஷன் கேட்டுச்சு டாக்டரம்மா... சரி போனா போகுதுன்னு பர்மிஷன் கொடுத்து அனுப்பி வைச்சேன்...." சிரிக்காமல் சொன்னவனின் முதுகில் ஒரு அடி வைத்து திவ்யாவிடம்....



"இந்த பாவி இப்போ இப்படி பேசறான்... சந்தோஷமா இருக்குடா இதுபது நாள் முன்ன பார்க்கணுமே... காண சகிக்கல... சாப்பாடு தூக்கமே இல்லாம திவ்யா மந்திரம் தான் சஹஸ்ரநாமம் அஷ்டோத்திரம் மாதிரி ஜெபிச்சுட்டு இருந்தான் திவி... ரியலி யூ ஆர் கிப்டட்டா...." உணர்ந்து கூறிய ஜானகியிடம்

"ஆமா ஜானுக்கா... நீங்க சொல்றது கரெக்ட் தான்... ஐம் கிப்டட்கா..." கார்த்திகேயனை பெருமையாக பார்த்து கொண்டே அவள் கூற... அதை கவனித்த ஜானகி....

"கார்த்தி... நீ எதுக்கு எல்லாரையும் விரட்டி விட்டுட்டு தனியா திவிய பார்த்துக்கறேன்னு சொன்னன்னு இப்போ தான் புரியுது...." சிரித்து கொண்டே

"அடப்பாவி... சொல்றத ஒழுங்கா சொல்லு ஜானு... நான் விரட்டி எல்லாம் விடல... என் பொண்டாட்டிய பார்த்துக்க நான் போதும்ன்னு தான் சொன்னேன்...." சிரிக்காமல் அவன் கூறவும்

"யாரோட டிஸ்டர்பன்சும் இல்லாம ஹாஸ்பிட்டல்ல ரொமான்ஸ் பண்ற ஒரே ஆள் நீயா தான் இருப்ப..." ஜானகியும் சிரித்து கொண்டே கூறினாள்...

"அபச்சாரம் அபச்சாரம்.... என்ன வார்த்தை சொல்லிட்ட ஜானு.... என் ஆளுக்கு இங்கிலிபீசுல

பிடிக்காத ஒரே வார்த்தை ரொமான்ஸ்... அதை போய் அவ முன்னாடி சொல்றியே...." நெஞ்சை பிடித்து கொண்டு நடித்தவன் திவ்யாவிடம் அடி வாங்கி கொண்டு...

"இங்க பாரு திவி... பேச்சு பேச்சாத்தான் இருக்கணும்.... அதை விட்டுட்டு வன்முறைல இறங்க கூடாது... சொல்லிட்டேன்..." மிகவும் சீரியஸாக சொல்வது போலவே அவன் கூறவும் ஜானகியும் திவ்யாவும் மனம் விட்டு சிரித்தனர்!

"ஜானுக்கா... குழந்தைய டெஸ்ட் செய்தீங்களா? ஒன்னும் ப்ராப்ளம் இல்லையே...." சாதாரணமாக ஜானகியிடம் கேட்ட திவியை வித்யாசமாக பார்த்தாள் ஜானகி... அதன் பின் கார்த்தியிடம் திரும்பி....

"கார்த்தி... திவ்யா கிட்ட சொல்லலையா?"

"ம்ஹூம்... இல்லப்பா...." முகம் இறுக மறுதலித்தான்! இருவரையும் குழப்பமாக பார்த்த திவ்யாவை பெருமூச்சோடு ஒரு ஆழ பார்வை பார்த்த கார்த்தி... ஜானகியிடம் திரும்பி

"நீயே சொல்லிடுப்பா..." மெல்லிய குரலில் கூறினான்! செல்பேசி அழைக்கவே வெளியே விரைந்தான்!

"என்னக்கா..." குழப்பமாக திவி ஜானகியிடம்!

"ஒண்ணும் இல்லடா... ஆக்சிடென்ட்ல உனக்கு அபார்ஷன் ஆய்டுச்சும்மா.... வேற ஒன்றும் இல்ல...."



சாதாரணமாக கூறிவிட்டு செல்வது போல ஜானகி கூற அதிர்ச்சியாக பார்த்தாள் திவ்யா....

"என்ன ஜானுக்கா...." அதிர்ந்தாள்!

"ஹேய்... இதில என்னம்மா இருக்கு... இது ஒரு பெரிய விஷயமே இல்லையே... நல்லா சாப்பிட்டுட்டு ரெஸ்ட் எடு... யு வில் பீ ஆல்ரைட்... ஒரு வருஷம் போகட்டும்... ஒகேவா... திவ்யா...." சாதாரணமாக அவள் கூற அதை ஜீரணம் செய்வதற்கு திவ்யாவுக்கு நேரம் தேவைப்பட்டது! அவள் கல்லாக சமைந்து அமர்ந்திருப்பதை பார்த்த ஜானகி,

"திவி... என்னடா.... கார்த்தி முகத்துல இப்போ தான் சிரிப்பையே பார்க்க முடிஞ்சது... நீ ஐசில இருந்தப்போ மனுஷன் நடை பிணமாத்தான் இருந்தாப்ல... இப்போ இதுக்கு நீ இந்த அளவு கஷ்டப் பட்டா இன்னும் அவன்தான் பீல் பண்ணுவான் திவி... டேக் இட் ஈசி...." அவளை வேறு வழியில் மாற்ற முயற்சித்தாள் ஜானகி! பேசிக் கொண்டிருக்கும் போதே மங்கை, வைஷ்ணவி, ஸ்ரீராம், திவ்யாவின் பெற்றோர் என்று அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வர... ஒருவர் மாற்றி ஒருவர் பேச திவ்யா ஒருவாறாக அவர்களுக்குள் கலந்தாள்....

ஸ்ரீராமுடன் சாஹித்யா வந்தது அவளுக்கு மிகுந்த சந்தோஷத்தை கொடுத்தது.... இருவருக்கும் திருமணம் நிச்சயமாகி இருந்தது தெரியுமென்றாலும்

இருவரின் சந்தோஷத்தை நேரில் பார்க்கும் போது மனம் லேசானது... ஆனால் கண்கள் என்னவோ கார்த்திகேயனை துழாவி கொண்டிருந்தது!

✤ ✤ ✤

மருத்துவமனையில் இருந்து வீட்டுக்கு வரும் வழியில் கார்த்திகேயனிடம் எதுவும் பேசாமல் மௌனமாகவே வந்தாள்... அதுவரை அவனிடம் வாயடித்து கொண்டிருந்தவளின் மௌனத்தை அவனால் புரிந்து கொள்ள முடியவில்லை... குழந்தை விஷயத்தினாலா இல்லை வேறெதுவுமா என்றும் அவனால் முடிவுக்கு வர முடியாமல் தவித்து அவ்வப்போது அவனது மனைவியின் முகத்தை பார்த்தவாறே வாகனத்தை செலுத்தினான்! வைஷ்ணவி ஆரத்தி எடுத்து வரவேற்ற போதும் யாரும் அவளுக்கு எந்த தொல்லையும் கொடுக்கக்கூடாது என்று மங்கை தனது மருமகளை ஒய்வெடுக்க கூறினார்!

ஒன்றுமே பேசாமல் அறைக்குள் நுழைந்து படுக்கையில் அமர்ந்து மௌனமாகவே விட்டத்தை பார்த்து கொண்டிருந்தவளை பார்த்தபோது மனதுக்குள் சிறிது கலவரமாக.... தோளில் கை வைத்து,

"திவி... என்னடா....." குரலில் தனது காதலை எல்லாம் தேக்கி கார்த்தி அழைக்க... சேர்த்து வைத்த துக்கம் அனைத்தும் வெடித்தது திவ்யாவுக்கு! வாய் விட்டு கதறியவளை சமாதானப்படுத்த முடியாமல் தவித்தான்!



"ஹேய்... என்னடா குட்டி... ஏன் இப்படி அழற... வேணாம்மா... அழ கூடாது... ப்ளீஸ் கண்ணா.... சொன்னா புரிஞ்சுக்கோடா செல்லம்... இப்போ தலைவலி வர கூடாதும்மா... தங்கமில்ல... ப்ளீஸ்....." பூமுகத்தை பற்றி கெஞ்சி கொண்டே இருக்க அவளது அழுகை நிற்பேனா என்றது!

"நான் தான் காரணம் கார்த்திக்... நான்தான்..." தேம்பி கொண்டே திவ்யா கூற

"அதெல்லாம் ஒண்ணும் இல்லடா... நீ எதுக்குடா அழற?"

"இல்ல... நான் தான் அச்சானியமா குழந்தைய அபார்ஷன் பண்ணிடுவேன்னு சொன்னேன்... அதான்..." முகத்தை மூடி கொண்டு கதறியவளை இழுத்து அணைத்து கொண்டான்... தன்னுடைய மன அழுத்தங்கள் எல்லாம் ஒரே நொடியில் கரைந்து காணாமல் போயின. காற்று கூட நுழைய முடியாமல் போனது அவனது இந்த இறுக்கமான அணைப்பில்! நான் இருக்கிறேன் உனக்காக.... உனது துக்கம், சந்தோஷம், லட்சியம், எதிர்பார்ப்பு, ஆசை, நேசம் என்று அனைத்திலும் கை கொடுக்க உன்னுடைய உயிராய் என்னில் நீ வசிக்க..... நான் இருக்கிறேன் என்பதை ஆத்மார்த்தமாக அறிவித்தது அந்த சில கணங்கள்!

**நான் உன்னை விட்டு விலகுவதும் இல்லை!**
**உன்னை கை விடுவதும் இல்லை!**

அந்த அணைப்பில் கொஞ்சம் கொஞ்சமாக தனது துக்கத்தை தொலைத்தவள் அந்த பரந்த மார்பின் தின்மையில் கரைந்து போனாள்! முதலில் சுதாரித்தவன் கார்த்திகேயன் தான்... மென்மையாக அவளை விளக்கி நிறுத்தியவன்... அவளது கண்களை பார்த்து...

"இப்போ உனக்கு நான் குழந்தை... எனக்கு நீ குழந்தை... ஓகே வா திவிகுட்டி... நோ கிரையிங்... என் செல்லகுட்டி தானே...." என்று அவளது கன்னத்தை பிடித்து செல்லம் கொஞ்ச... அந்த கைகளை அங்கேயே பிடித்து வைத்து கண்களில் நீர் சூழ அவனது கைகளை முத்தமிட்டு அவனை அணைத்து கொள்ள... கண்களை மூடி இருவருமே அந்த ஏகாந்தத்தை அனுபவித்தனர்! அணைப்பு எவ்வளவு நேரம் நீண்டதோ? யாமறியேன் பராபரமே!

செல்பேசி அழைக்க... சட்டென்று தன்னிலைக்கு திரும்பிய இருவரின் முகமும் சிவந்து இருந்தது... அந்த நேரத்தின் தடுமாற்றம் இருவரிலும் பிரதிபலிக்க வெட்க புன்னகையோடு அவளை பார்த்து கொண்டே செல்பேசியை காதுக்கு கொடுத்தான்! பேச பேச முகம் மாறியது....

"எப்போ...."

".........."



"சரி... நான் உடனே வந்துடறேன்..."

"........"

"ஓ..கே..."

"செல்பேசியை வைத்து விட்டு திவ்யாவை பார்த்தவன்து முகம் இரும்பாக இறுகி கிடந்தது....

"என்ன ஆச்சு கார்த்திக்.... எனிதிங் சீரியஸ்?" சிறிது பயத்தோடு திவ்யா கேட்க

"ம்ம்ம்... அரவிந்த் சூசைட் பண்ணிகிட்டானாம்..." வேதனையை மீறிய நடுக்கம் தெரிந்தது அவனது குரலில்!

"என்னப்பா சொல்றீங்க...." நம்ப இயலாத பாவனை அவளது குரலில்!

"ஆமாம் திவ்யா.... நாளைக்கு கேஸ் ஹியரிங் வரதா இருந்தது... நானும் பப்ளிக் ப்ராசிக்யுட்டர் கிட்ட சொல்லி இருந்தேன்... பெயில் அப்ஜெக்ட் பண்ண வேணாம்னு... ஆனா ஏன்... இப்படி... அவன் இந்த அளவு கோழையா.... முடியல திவ்யா...." என்ன தான் இருந்தாலும் நண்பனாயிற்றே... அந்த வேதனை இருக்குமல்லவா....!

சட்டென தோன்ற,

"கார்த்திக்... அந்த பாண்டியன்... என்ன ஆனான்?" என்று கேட்க இறுகிய அவனது முகம் இன்னமும் இறுகியது!

"ஏதோ கோஷ்டி தகராறு திவ்யா... நேரு ஸ்ட்ரீட்ல வெச்சு வெட்டிட்டாங்க... பத்து நாள் முன்னாடி..." குரலில் கடுமை சேர்ந்து இருந்தது!

"நம்ப முடியல கார்த்திக்......"

"நிஜமாடா....."

"இல்ல.... அவன் கண்டிப்பா கோஷ்டி பூசல்ல செத்து இருக்கமாட்டான்...."

"பின்ன என்ன சொல்ல வர்ரீங்க மேடம்....."

"அதுக்கும் உங்களுக்கும் சம்பந்தம் இருக்கும்... கண்டிப்பா...."

"ம்ஹூம் இல்ல... நான் அந்த வேலைய பண்ண சொல்லலை..... நம்ம பசங்களும் அந்த வேலை செய்யல.... கோ இன்சிடன்ஸ் திவ்யா...." மறுத்தான் கார்த்திகேயன்!

"அதோட...."

"அதோட..."

"ஏன் அரவிந் சூசைட் மேட்டர்லையும் நீங்க சம்பந்தப்பட்டு இருக்கக்கூடாது?" தெளிவாக குற்றம் சாட்டினாள்!

"ம்ம்ம்... உன்னோட துப்பறியும் சாம்பு வேலைய ஸ்டார்ட் பண்ணு...." நக்கலாக அவன் கூறவும்...



"கார்த்திக்.... உங்களுக்கு உயிரோட விளையாடறது ஈசியா போச்சா?" அவளது குரலில் கோபம் தெரிந்தது!

"திவ்யா... நிஜமாவே எனக்கும் இதுக்கும் சம்பந்தமில்ல... பாண்டியன் மேட்டர்ல அவனோட ஆப்போசிட் பார்ட்டிக்கு ஒரு ஹின்ட் மட்டும் தான் நம்ம ஆள விட்டு கொடுக்க சொன்னேன்... அவன் எங்க பதுங்கி இருக்கான்னு மட்டும் தான்... அவனோட பர்சனல் ப்ராப்ளம்ல வெட்டிட்டாங்க... ஆனா அரவிந்த் சூசைட் உன்னை மாதிரியே எனக்கும் ஷாக்தான்டா... ப்ளீஸ் புரிஞ்சுக்கோ...." அவன் பக்கத்து நியாயத்தை எடுத்து கூறினான் கார்த்திகேயன்!

அவள் மௌனமாகவே இருக்க....

"ஹய்யோ... இத்தனை நாளாச்சு... இந்த திருவாரூர் தேரை நிலைக்கு கொண்டு வர... இப்போ மறுபடியுமா? மறுபடி முதல் அத்தியாயத்துல இருந்து என்னால முடியாது காளியாத்தா...." தலையில் கை வைத்து கொண்டு சோபாவில் அமர... திவ்யா முறைத்தாள்!.....

"ஆத்தா... கருத்து பரிமாற்றம் தேவைதான்... ஆனா நான் சொல்றதையும் கொஞ்சம் நம்பனும்... கார்த்திகேயா.... உனக்கு தேவையா.... பெரிய உண்மை விளம்பி... விளம்பி இப்படி இந்த பிசாசு கிட்ட மாட்டிகிட்டயே...." தனது ஆள்காட்டி விரலை தன் முன்னே காட்டி கேட்பது போல கேட்க....

"என்னது பிசாசா?" என்றாள் கடுப்பாக....

"ஆமாம் பிசாசுதான்... கொள்ளிவாய் பிசாசு... ப்ரீயா கொடுத்தா கூட வேணாம்னு சொன்னானே ஸ்ரீராம்... தெரியாத்தனமா மாட்டிகிட்டேனே... ஆண்டவா... என்னை மட்டும் காப்பாத்து....." மேலே பார்த்து ஆண்டவனை வேண்டுவது போல பாவனை செய்ய.... திவ்யாவுக்கு உள்ளே எழுந்த சிரிப்போடு கோபமும் சேர்ந்து கொள்ள... சோபாவில் இருந்த சேர்பேடை எடுத்து சரமாரியாக கார்த்திகேயனை அடிக்க ஆரம்பித்தாள்!

"ஏன்டா பாவி... இந்நேரம் வரைக்கும் லவ் டயலாக் எல்லாம் அள்ளி விட்டுட்டு இப்போ பிசாசு.... கொள்ளி வாய் பிசாசா? எவ்வளவு லொள்ளு இருக்கணும் உனக்கு... ப்ரீயா கொடுத்தா கூட வேணாமா??"

"கடவுளே... என்னை மட்டும் காப்பாத்த சொன்னேனே.... உனக்கு காதே கேக்கலையா?" என்றவனின் தலையில் சேர்பேட் லேண்ட் ஆக... சட்டென்று அவளது கைகளை பிடித்து பின்னோடு அணைத்தான்!

"ஒழுங்கா விட்டுடு.... உனக்கு எதுக்கு இந்த பிசாசும் கொள்ளிவாய் பிசாசும்...." சிணுங்கினாள் அவனது மனைவி!

"என்ன பண்றது எனக்கு இந்த கொள்ளி வாய் பிசாசத்தானே பிடிச்சு இருக்கு...." என்று கூறியவாறே காது மடல்களை மெலிதாக கடிக்க....



"ஸ்ஸ்ஸ்.... ஷப்பா.... விடு.... உன்னோட எனக்கு பேச்சு இல்ல...." கார்த்தியை தள்ளி விட முயல.....

"வேணாம்... பேசவே வேணாம்....." என்று கூறி கண்ணடித்து விட்டு காதில் ரகசியம் பேச அவளது முகம் செங்கொழுந்தாகி போனது....!

"ச்சீ... போடா..." என்று அவனை தள்ளி விட்டு போனவளை குறுஞ்சிரிப்போடு பார்த்து....

"ப்ச்... நீ என்னத்தான் வெட்கப்பட்டாலும் நோ யூஸ்... இன்னும் ஒன் மன்த் நீ கம்ப்ளீட் ரெஸ்ட்ல இருக்கணுமே திவி... சோ... சோ..."

"என்ன சோ...." முகத்தை இடித்து கொண்டு திருப்பி கொண்டு போக....

"அது வரைக்கும் உன்னை எவ்ளோ வேணும்ன் னாலும் வம்பிழுத்துக்கலாம் பிசாசு...." என்று கூறிவிட்டு காதல் பிசாசே என்று பாட ஆரம்பிக்க....

"யூ..... யூ....." என்று அவனை நோக்கி வந்தவளை அணைத்து தட்டாமாலை சுற்றினான்!

அவள் அறியாத ஒன்றும் இருந்தது... பாண்டியனை முடித்தது இவன் ஆட்கள் இல்லை என்றாலும் காரணம் கார்த்திகேயனே... அதன் காரணம்... திவ்யா! அவள் சுயநினைவில்லாமல் மருத்துவமனையில் இருந்த போது அவனுக்கு சொல்லப்

பட்ட தகவல்... அந்த விபத்துக்கு காரணம் பாண்டியன் என்பதும் காரணகர்த்தா அரவிந்த் என்பதும்.... நேரடியாக இறங்க அப்போது கார்த்திகேயன் விரும்பவில்லை என்பதால் அந்த பாண்டியனுக்கு எதிரியை தூண்டி விட்டு அந்த வேலையை முடித்தான்.... அந்த தகவல் அரவிந்துக்கு செல்லும் படியும் பார்த்து கொண்டான்... இயற்கையில் அரவிந்த் ஒரு கோழை... அதனால் தான் தவறுகளை ஒளிந்து மறைந்து செய்தான்... துன்பம் என்று வந்த போது விட்டு விட்டு ஓடினான்.... மாசிலாமணி இருந்தவரை அவரது பெயரால் தப்பித்தான்... ஆனால் பாண்டியனை பற்றி கூறி அவனை பயத்தில் மட்டுமே ஆழ்த்த வேண்டும் என்பதே கார்த்திகேயனின் குறிக்கோளாக இருந்தது..... ஆனால் அந்த பயமே அரவிந்தனை அப்படி ஒரு முடிவு எடுக்க வைக்க காரணமாகிவிட்டது!

"அரவிந்த போய் பார்க்கணும் திவ்யா.... புவர் பாய்..."

"ம்ம்ம்.... டெட் பாடிய நாமளே வாங்கி சாங்கியத்தை செய்துடலாமா..."

"ம்ம்ம்... அம்மாவ கேக்கலாம்டா... என்ன பண்றதுன்னு..." என்று கூறி இருவருமாக மங்கையை பார்க்க விரைந்தனர்!



வாழ்க்கை இவ்வளவுதான்! ஒரு நிமிடம் முன்பு அரவிந்தனாக இருந்தவன் அடுத்த நிமிடம் அவன் பிணம் என்றாகி விட்டான்! நீர் குமிழி போன்ற நிலை இல்லாத இந்த வாழ்க்கைலய நிலையென கருதி மனிதன் ஆடும் ஆட்டம் தான் எத்தனை... போடும் வேஷம்தான் எத்தனை?

ஐம்புலன்களும் மனிதனுக்கும் மிருகத்திற்கும் பொதுவானவை.... மனிதன் அந்த ஐம்புலன்களையும் பயன்படுத்தி பகுத்தறிந்து உபயோகிப்பதால் அவன் உயர்வானவனாக கருதப்படுகிறான்! ஆனால் அந்த ஐம்புலன்களின் தேவைகள் நிபந்தனைக்கு உட்பட்டவை... அதாவது கண்களால் பார்க்க முடியும் ஆனால் இருளில் பார்க்க வெளிச்சம் அவசியம்... அந்த நிபந்தனைகள் தேவைகளை உருவாக்குகின்றன.... தேவைகள் ஆசைகளை வளர்க்கின்றன.... ஆசைகளும் பேராசைகளுமே மனிதனின் அத்தனை துன்பத்திற்கும் காரணமாக அமைகின்றன என்பது எவ்வளவு உண்மை!

கட்டி அணைத்திடும் பெண்டிரும் மக்களும் -<br>காலன் தச்சன்<br>வெட்டி முறிக்கும் மரம் போல சரீரத்தை<br>வீழ்த்திவிட்டால்

கொட்டி முழங்கி அழுவார் –
மயானம் குறுகி அப்பால்
எட்டி அடிவைப் பாரோ?
இறைவா! கச்சி ஏகாம்பனே!

– பட்டினத்தார்

முற்றிற்று




மாலைப் பொழுதின்
மயக்கத்திலே
சஷி முரளி